
டாம் கால்ட்



ஐக்கிய நாடுகள் இயங்கும் முறை

ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் வேலை செய்யும் முறை

(United Nations and How It Works)

டாம் கால்ட் எழுதியது

மொழிபெயர்த்தவர் :

எம். எஸ். கமலா

M-1

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

பொருளடக்கம்

பாகம் 1

பக்கம்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எப்படி ஆரம்பமாயிற்று .. 5
ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏன் ஸ்தாபிக்கப்பட்டது ? .. 7
போரிலும் சமாதானத்திலும் சகோதரர்கள் .. 17

பாகம் 2

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பல பாகங்களைத் தெரிந்து கொள்ளுதல் 31
உலகின் மாபெரும் நகரசபைக் கூட்டம் 33
சமாதானத்தை நிலைநிறுத்தும் ஸ்தாபனம் .. 46
அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த .. 65
தர்மகர்த்தா சபை 88
தேசங்களை விசாரிக்கும் நீதிஸ்தலம் 96
ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 112

பாகம் 3

அபாயம் தோன்றும்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ன செய்கிறது ? 127
சமாதான முறைகள் 129
ராணுவபலம் உபயோகிப்பதற்கு முதற்படிகள் .. 141
ராணுவபலம் அவசியமாயிருந்தால் 150
நாடுகளின் ஆயுதபரிகரணமும் அணுகுண்டு கட்டுப்பாடும் 162
ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை எப்படி மாற்றுவது? .. 173
ஒரு எச்சரிக்கை. 178

பாகம் 4

விஷயங்களும் தஸ்தாவேஜிகளும் 181
எந்த நாடுகள் அங்கத்தின நாடுகள் 183

	பக்கம்
விசேஷ பணிகளுக்கு விசேஷ ஏஜன்ஸிகள்	189
சர்வதேச ஒப்பந்தங்கள்	201
ஐக்கிய நாடுகளின் பிரகடனம்	204
ஐக்கிய நாடுகளின் சாஸனம்	206
நோக்கங்களும் கொள்கைகளும்	207
அங்கத்தினர்கள்	210
ஸ்தாபனங்கள்	211
பொதுச் சபை அமைப்பு	212
பாதுகாப்புக் கௌன்ஸில்	218
சச்சரவுகளை சமாதானமாகத் தீர்த்துவைத்தல் ..	222
சமாதானத்திற்கு அபாயம் நேரும்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்	225
பிராந்திய ஏற்பாடுகள்	231
சர்வதேச பொருளாதார சமூக ஒத்துழைப்பு ..	233
பொருளாதார சமூக சபை	235
சுயாட்சி செய்துகொள்ளும் உரிமையில்லாத பிரதேசங்கள்பற்றிப் பிரகடனம்	239
சர்வதேச தர்மகர்த்தா முறை	241
தர்மகர்த்தா சபை	246
சர்வதேச நீதிமன்றம்	248
அலுவலகம்	250
பலதரப்பட்ட விதிகள்	252
தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகள்	253
திருத்தங்கள்	254
அங்கீகரித்தலும் கையெழுத்திடலும்	255
நீதிமன்றத்தின் அமைப்புமுறை	257
நீதிமன்றத்தின் அதிகாரம்	270
முறை	274
ஆலோசனைகள்	282
திருத்தம்	284

பாகம் 1

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எப்படி ஆரம்பமாயிற்று

அத்தியாயம் 1

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏன் ஸ்தாபிக்கப்பட்டது ?

நம்முடைய நாடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்தது. உலகிலேயே இதுவரை ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களுள் ஐக்கிய நாடுகள் ஸ்தாப்னம் மிகவும் முக்யமானதாகும். இப்பொழுது உலகத்திலுள்ள எல்லா முக்ய நாடுகளும் அதில் அங்கத்தினர்.

ஆதலால், இந்தப் புதிய ஸ்தாபனம் ஏன் ஏற்படுத்தப் பட்டது, அதனுடைய பல பாகங்கள் யாவை, அது எப்படித் தன் வேலைகளைச் செய்கிறது, உங்களுக்கு அது என்ன செய்யக் கூடும், நீங்கள் அதற்கு என்ன செய்ய முடியும், என்பன போன்ற விஷயங்களை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

உலகத்தில் தற்போது நிலவியிருக்கும் மாபெரும் பிரச்னை களைத் தீர்க்கவும், மக்களைப் பீடித்திருக்கும் அபாயம், பயம் இவைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது.

முக்கியமாக இரு காரியங்களை அது செய்யும், பின் வரும் கதை, அக்காரியங்கள் ஏன் செய்யப்படவேண்டும் என்பதை விளக்குகிறது.

ஒரு நாள், மிஸ்டர் ஹெண்டர்சன் பெரியதும் கனமானது மான ஒரு சுத்தியைத் தோளின்மேல் சாய்த்துக்கொண்டு, தனக்குள் முணுமுணுத்தபடியே, வீட்டிற்குத் திரும்பி வந் தான். அவன் தலை நரைத்திருந்தாலும் மிகவும் பலசாலி யானவன்.

தானும், தன் மனைவியும், தன் நான்கு குழந்தைகளும் வசித்துக் கொண்டிருக்கும் மூன்றே அறைகள் கொண்ட பகுதிக்கு மாடிப் படிகளேறிச் சென்றான். அம்மூன்று அறைகளும் மிகவும் சிறியவைதான்.

“இது கொஞ்சமும் சரியல்ல” என்று தன் மனைவியைப் பார்த்து மிஸ்டர் ஹெண்டர்சன் கோபமாகக் கத்தினான். மேலும் “நாம் ஆறு பேர்களும் இச்சிறிய மூன்று அறைகளுக்குள்ளேயே ஒருவரையொருவர் நெருக்கிக் கொண்டு வாழ்கிறோம். ஆனால் நம்முடைய அடுத்த வீட்டுக்காரன், தன் ஒரே மனைவியுடனும், ஒரே மகளுடனும், மூன்று அறைகளைத் தங்களுக்காகவே முழுவதும் வைத்துக் கொண்டிருக்கிறான். நமக்கோ இன்னம் ஒரு அறை இருந்தால் சௌகரியமாயிருக்கும். அதற்காக, நான் இப்போது சில காரியங்களைச் செய்யப் போகிறேன்” என்றான்.

பின்னர், தன் பகுதியின் ஒரு அறையில், செங்கல் சிமன்ட் சிமிட்டி (கொல்லரு) ஆகியவைகளைச் சேர்த்தான்.

தான் கொண்டுவந்த பெரிய சுத்தியினுதவியால் சுவற்றை ஓங்கி அடித்தான். . . . . படீர்! . . . . . சுவர் இடிந்து கீழே விழுந்தது. தொடர்ந்து அவன் இடிக்கத் தலைப்பட்டான்.

அரைமணி நேரத்திற்குள், அடுத்த வீட்டின் பகுதிக்கு செல்லும் அளவிற்கு சுவற்றில் வழி ஏற்படுத்திவிட்டான். இடிந்த சுவற்றின் சிதறிய செங்கல்லும், சுண்ணாம்பும் கீழே தரையில் பரவின. தானேற்படுத்திய வழியை சுண்ணாம்பும் செங்கல்லும் கொண்டு செப்பனிட்டு, சௌகரியம் செய்து கொண்டான்.

பிறகு அவ்வழியே அடுத்த வீட்டினுள் சென்றான். அது ஓர் படுக்கையறை! அவ்வறையின் கதவைத் திறந்து வீட்டினுள் பார்த்தான். யாருமில்லை. அவ்வீட்டவர்கள் மத்தியானமே மிருக காட்சிசாலைக்குப் போயிருந்தனர்.

ஆகவே, மிஸ்டர் ஹெண்டர்சன், அப்படுக்கையறையின் கதவு நிலவுகளைப் பெயர்த்தெடுத்துவிட்டு, செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு அங்கே சுவர் எழுப்பினுன். தான் பெயர்த்த கதவை, சுவரிலேற்படுத்திய வழியில் வைத்து, அவ்வறை யையும் தன் வீட்டுப் பகுதியுடன் சேர்த்துக்கொண்டான். இப்போது, அவனுக்கு மூன்றே அறைகளுக்குப் பதிலாக நான்கு அறைகளிருந்தன.

அடுத்த வீட்டுக்காரன் தன் மனேவியுடனும் மகளுடனும், இரவு போசன வேளைக்குத் திரும்பி வந்தார்கள். தங்கள் படுக்கை அறைக்குச் செல்லும் வழியில் சுவர் எழுப்பி அடைக் கப்பட்டிப்பதைப் பார்த்தனர். அவர்கள் சன்னல் மூலமாகப் பார்த்தபோது, அவ்வறையில் யாரோ ஒருவன் தன் குழந்தை களுடன் படுத்திருப்பது தெரிந்தது. அவர்கள் தெருவிற் கோடி, ஒரு போலீஸ்காரனேக் கூவி யழைத்தனர். “ எங்கள் வீட்டின் ஒரு அறையை எவனே ஒருவன் திருடிக் கொண்டு விட்டான் ” என்று ஓலமிட்டனர். போலீஸ்காரன் முதலில் அதை நம்பாவிட்டாலும், ஸ்தலத்திற்குச் சென்று பார்த்த போது, அது உண்மைதானென்று தெரிந்ததும், ஒரு போலீஸ் படையையே வரவழைக்க வேண்டியிருந்தது. அப்போலீஸார் மிஸ்டர் ஹெண்டர்சனேக் கைது செய்து நீதிஸ்தலம் அழைத்துச் சென்றனர்.

தன்னுடைய பலமான முஷ்டியை நீதிபதிக்கு எதிரில் ஆட்டியவாறு, ஹெண்டர்சன் தன் வாதத்தைச் சொன்னுன் : “ இது கொஞ்சமும் சரியல்ல. என்னுடைய குடும்பமோ பெரியது. எனக்கு மற்றும் ஓர் அறை வேண்டியிருந்தது. எங்களுக்கு இடம் தேவை ” என்று கத்தினுன்.

அமைதியுடன் நீதிபதி அவனே நோக்கி “ உன் கஷ்டத்தை நான் அறிந்து கொண்டேன். ஒரு வேளே அரசாங்கம் உன் குடும்பத்திற்கு உதவியளிக்கலாம். பல புதிய வீடுகளே அவர்கள் கட்டிக் கொண்டிருக்கிருர்கள். அவைகளில் உன் குடும்பத்திற்கும் ஒரு வீடு கிடைக்கும். . . . . ஆனுல், அடுத்த

வீட்டுக்காரன் அறியாமல் அவன் அறையை நீ ஆக்கிரமித்துக் கொண்டது, அரசாங்க சட்டத்திற்கு விரோதமானது. என் போன்ற நீதிபதிகளும், போலீஸாரும், அச்சட்டங்களை அமுலில் வைக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்" என்றார்.

ஹென்டர்சன் தன் தலையைச் சொறிந்துகொண்டே "ஏன் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்று எனக்கு விளங்க வில்லை. ஜப்பான் தேசத்திற்கு இடம் தேவையாயிருந்த போது, சீனாவிடமிருந்து மஞ்சூரியாவைத் திருடிக் கொண்டது. இத்தாலிக்கு வளமான நாடு வேண்டியிருந்ததால், எத்தி யோப்பியாவை பலாத்காரமாகப் பறித்துக் கொண்டது. தான் சுகமுடன் வாழ அதிக இடம் வேண்டியிருந்தபோது, ஜெர் மனி நாடு, சுடேட்டன்லாண்டை செக்கோஸ்லேவாக்கியாவிட மிருந்து ஆக்கிரமித்துக் கொண்டது. அவர்களையாரும் சிறைப் படுத்தவுமில்லை, கைது செய்யவுமில்லையே ?" என்று கேட்டான்.

"அது என்னவோ உண்மைதான்" என்று சொல்லி, நீதிபதி மேலும் தொடர்ந்து, "ஆனால், ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி ஆகிய தேசங்களின் மேல் அமுல் செலுத்த யாதொரு சர்க்காரும் இருக்கவில்லை. சட்டங்கள் ஏற்படுத்த உலக சட்ட சபையோ உலக காங்கிரஸோ கிடையாது. அதனால் தான் அவைகளை ஒன்றும் செய்ய இயலவில்லை. கடைசியில் அத் தேசங்களெல்லாம் தங்களுக்கு வேண்டிய இடங்களை அபகரித்துக் கொண்டன. வரவிருக்கும் அபாயத்தை எண்ணி, மற்ற நாடுகள், அந்த நாடுகளுடன் போருக்குச் சென்றன. ஆனால் நம் நாட்டில் போலீஸும் நீதிபதிகளும் சட்டங்களும் கொண்ட ஒரு அரசாங்கம் இருக்கிறது. ஆதலால் உன் அடுத்த வீட்டுக் காரனின் அறையை நீ அபகரித்தது குற்றமேயாகும்" என்றார்.

நம்முடைய அரசாங்கம் இரு காரணங்களுக்காக ஏற்படுத்தப் பட்டது. வசிக்க வீடுகள், பள்ளிகள், பாலங்கள், மற்றும் நமக்குத் தேவையான கட்டிடங்களை அமைத்துக் கொடுப்ப தற்கும், ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கும், நம்முடைய வாழ்க்கை சுக சௌபாக்யங்கள் நிறைந்து வளமுடையதாக

விருப்பதற்கும் நம் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. கொலே, களவு, ஹிம்ஸை முதலியவைகளேப் போக்கடித்து, மக்களிடையே அமைதியை நிலவச் செய்வதும் அதன் வேலேயே ஆகும்.

1945-ம் வருஷத்திற்கு முன், ஹென்டர்சன் குடும்பத்தைப் போன்ற ஏழைக் குடும்பங்கள் நிறைந்த நாடுகளுக்கு உதவ, ஒரு உலக ஸ்தாபனமோ, உலக அரசாங்கமோ இருக்கவில்லே. அதனுல் நாடுகள் ஒன்றையொன்று தாக்குவதையோ, ஆக்கிரமிப்பதையோ தடுக்க முடியவில்லே.

மேற்கூறிய இரு காரியங்களேயும் உலகிற்குச் செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தொடங்கப்பட்டது. தன்னுடைய முயற்சியால் அது வெற்றியடைந்தால், உலக மக்களே பெரிய பயங்கரத்திலிருந்தும், போரிலிருந்தும், அது காப்பாற்றியதாகும்.

முன்னமே இந்த ஸ்தாபனம் அமைக்கப்படாததற்கு வசதியில்லாமையே காரணமாகும். பல புதிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, தற்காலத்தில் அம்மாதிரி ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்துவது சாத்தியமாயிற்று.

சாதாரணமாக, தினசரி செய்தித்தாள்களில் பிரசுரமாகும் படங்களே நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவைகளுக்குக் கீழே "அஸோஷியேடட் பிரஸ் தந்தி புகைப்படம்" (Associated Press Wire Photo), பிரிட்டிஷ் ரேடியோ புகைப்படம் (British Official Radio Photo) அல்லது அமெரிக்க ரேடியோ தந்தி புகைப்படம், (U. S. Signal Corps Radio Telephoto . .) என்பன போன்ற சொற்றொடர்களே நீங்கள் பார்த்திருக்கலாம். இவைகளின் பொருள் என்னவென்றல், அப்புகைப்படங்கள், தந்திமூலமாகவோ, ரேடியோ மூலமாகவோ, ஆறுயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தேசங்களுக்கு பத்தே நிமிஷங்களில், நவீன இயந்திர சாதனேகளால் அனுப்பப்படுகின்றன என்பதேயாகும்.

உங்களுடைய தாத்தா சிறு பையனுக இருந்தபோது, அவர், நாட்டின் ஒரு மூலேயில் வசித்துக் கொண்டிருந்திருப்பார். அங்கு

வாழ்ந்த மக்களுக்கு உலகில் வேறு நாடுகள் இருக்கின்றன என்பது கூடத் தெரிந்திருக்காது. அநேகமாக, தங்களுடன் வசிக்கும் ஒரு சிறு கூட்டத்தையே அவர்கள் அறிவார்களே தவிர, நூறு மைல்களுக்கு அப்பால் வசிக்கும் ஒரு மனிதனைக் கூட பார்த்திருக்கமாட்டார்கள்.

இயந்திரங்கள் காலத்தை மாற்றிவிட்டன. ஜெர்மனியரும், ரஷ்யரும், சீனரும், மற்றும் பற்பல நாட்டினரும், நம்மைச் சுற்றிலும் உலகெங்கிலும் வசிக்கிறார்கள் என்பதை, இன்று நம்மால் மறக்கவே முடியாது.

இது வெகு முக்கியமான விஷயம். நம் முன்னோர்களைப் போல வேறு நாடுகளிருப்பதை மறந்தோ, அவர்களுக்கு என்ன நேருகிறதென்பதை கவனியாமலோ வாழ நம்மால் முடியாது.

இரண்டாவது உலக யுத்த மேற்படுவதற்குச் சில ஆண்டு களுக்குமுன், ஜப்பானில் ஒரு பட்டுத் தொழிற்சாலையில் தீ விபத்தேற்பட்டது. அதிக விலையுள்ள பட்டு அத்தொழிற்சாலை யில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. தீ பிடித்த இருபது நிமிஷங்களுக்குள் நியூயார்க் வியாபார ஸ்தலங்களில் பட்டின் விலை உயர ஆரம்பித்தது. சில நாட்களில், உன் தாய் கூட தான் வாங்கும் பட்டுத்துணிகளுக்கு முன்னைவிட அதிக விலை கொடுக்க நேர்ந்தது. அமெரிக்காவின் வியாபாரம் ஜப்பானி லிருந்து வரும் பட்டுகளைப் பொருத்தேயிருந்தது. ரேடியோ வும், கம்பியில்லா தந்தியும் செய்திகளை அறிவிக்க உதவின.

ரேடியோ, தந்தி வியாபாரம் . . . . . . இவைகள் ஒரு நாட்டின் மக்கள் மற்ற நாட்டு மக்களின் மேல் நம்பி வாழும்படி செய்துவிட்டன.

உலகில் ஒரு முக்கியமான மாறுதலை உண்டாக்குவது, புதி தாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆகாய விமானம்.

ஒவ்வொரு நாளும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத் தாண்டி பல விமானங்கள் பறக்கின்றன. பஸிபிக் சமுத்

திரத்தைக் கடக்கவும் அவை உபயோகமாகின்றன. நூறு வருஷங்களுக்கு முன், **செயின்ட் லூயியிலிருந்து நியூ ஆர் லியன்ஸ்** நகருக்குச் செல்ல ஒரு மனிதனுக்கு வேண்டியிருந்த நேரத்தைவிடக் குறுகிய காலத்தில், உலகின் ஒரு கோடியி லிருந்து மற்றொரு கோடிக்கு இன்று மக்கள் செல்கிறார்கள். மக்கள் விருப்பமுடன் வாங்கும் மலர்கள், கடிகாரங்கள், பெண் களின் உடைகள், மற்றும் இதர தேவையான பொருள்கள்,— இவைகளை அமெரிக்காவில் வாங்கிய பிறகு, இரண்டே நாட் களில் ஆப்பிரிக்காவிலோ, சீனுவிலோ தற்காலத்தில் விற்கலாம்.

மக்கள் ஒத்து வாழ ஆகாய விமானங்கள் உதவுகின்றன.

ஆகாய விமானங்கள் பயங்கரமானவைகளும்தான். வெடி குண்டு வீசும் ஆகாய விமானங்கள், எந்த நாடும் அபாயத் திற்கப்பாற்பட்டதல்ல என்பதை நிரூபித்துவிட்டன.

உங்கள் தாத்தா சிறுவராயிருந்தபோது மக்கள் சொல் வார்கள் "எங்கள் நாடு அதனிஷ்டப்படி நடக்கும். இதர நாடுகளும் தத்தம் இஷ்டங்கள்படி நடக்கலாம். அதைப்பற்றி எங்களுக்கேன் கவலை ?" என்பார்கள். ஆனால் தற்காலத் தில் மற்ற நாடுகளைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. எக் காரியத்தையும் நாம் நம்மிஷ்டப்படி செய்ய முடிவதில்லை. மற்ற நாடுகளையும் அவைகளிஷ்டப்படி நடக்க விடுவதில்லை. வெடிகுண்டை வீசும் விமானங்களும், அணுகுண்டுகளை எறியும் விமானங்களும் கட்டுப்படுத்தப்பட்டு, நாம் பிறருடன் ஒத்துழைக்க வழி ஏற்படவேண்டியது முக்கியம். நவீன இயந்திரங்கள் அக்காரியத்தைச் செய்ய நம் எல்லோருக்கும் உதவும்.

நமக்குள் பெரிய தடையாயிருப்பது அவநம்பிக்கைதான். நான் சிறு பையனுயிருந்தபோது, என் ஆசிரியர்களும், பள் ளிப்புத்தகங்களும் "அமெரிக்க மிகச்சிறந்த நாடு கண்ணிய மானது தற்காப்புக்காக வன்றி, வேறு எக்காரணத்தை முன் னிட்டும் நாங்கள் சண்டை செய்ததில்லை. நாங்கள் மற்ற நாடுகளிடம் எப்பொழுதும் அன்புடனும் தாராளத்துடனும்

நடந்துகொண்டுள்ளோம். ஆனால் மற்ற நாட்டினர் எல்லாம் குறுகிய மனப்பான்மை யுடையவர்கள். மேலும் நம்பத் தகாதவர்கள். அவர்கள் ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டவர்கள். அவர்கள் சரிவர குளிப்பதும் கிடையாது" என்று போதித்தன.

மேலும் இந்நாட்டில் வாழும் பலர் "நாங்கள் எந்த உலக சபையிலும் மற்றவர்களுடன் ஒன்று சேரமுடியாது. அதற்குக் காரணம் நாங்கள் அவர்களிடம் நம்பிக்கை வைக்க முடியாதது தான். எங்கள் நாடு, நம்பிக்கைக்குப் பேர்போனது. ஆனால் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் எல்லோரும் எங்களை ஏமாற்றவே பார்க்கிறார்கள்" என்பார்கள்.

மெக்ஸிகோவில் சில வருஷங்களுக்கு முன் பிரயாணம் செய்த ஒருவன் என்னிடம் பின்வருமாறு சொன்னான்: "எல்லா மெக்ஸிகன் வாசிகளும் நம்பிக்கைத் துரோகிகளல்ல. உண்மையிலேயே சிலர் மிகவும் நல்லவர்கள்." தன்னருகில், பக்கத்து நாட்டில் வசிக்கும் மக்களைப்பற்றி இதைவிடப் பிரமாதமாகச் சொல்ல அவனால் முடியவில்லை.

நான் தக்க வயதடைந்த பிறகு, ஸ்பானிய பாஷையைப் பயின்றேன். சில மாதங்கள் மெக்ஸிகோவில தங்கலாம் என்று போயிருந்தேன். 1847-ல் அமெரிக்காவை எதிர்த்து, தங்கள் தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் போர்புரிந்து மாண்ட மெக்ஸிகன் தலைவர்களின் ஞாபகச் சின்னங்களை நான் பார்த்தேன். மெக்ஸிகன் பள்ளிக்கூடப் புத்தகங்களிலிருந்து, மெக்ஸிகோ ஒரு நல்ல பெருந்தன்மைவாய்ந்த நாடென்றும், தற்காப்புக்காகவன்றி, வேறு எக்காரணத்தை முன்னிட்டும் மெக்ஸிகோ வாசிகள் போர் செய்ததில்லை என்றும், அவர்கள் தங்கள் விரோதிகளிடம் கூட கருணையுடனும் தாராள மனப்பான்மையுடனும் நடந்து கொள்பவர்களென்றும் அமெரிக்கன் (Uncle Sam) நம்பத்தகாத ஒரு சுயகாரியப் புலி என்றும், 1914-ல் மெக்ஸிகோவில் மிகப் பிரபல

மாயிருந்த புரட்சித் தலைவனான வில்லா என்பவனைத் துரத்திக் கொண்டு அமெரிக்கா படையெடுத்து வந்ததாகவும், நான் படித்து அறிந்து கொண்டேன்.

வயது முதிர்ந்த மெக்ஸிகோ வாசியுடன் பேசும் சந்தர்ப்ப மொன்று எனக்கு கிடைத்தது. நான் அமெரிக்காவைச் சேர்ந் தவன் என்பதை அறிந்துகொண்ட அந்த வயது முதிர்ந்தவர், என்னிடம் மரியாதையாகப் பேச முயற்சித்தார். அவர் சொன் ஞர் "அமெரிக்காவிலிருந்து இங்கு வரும் எல்லோரும், எங் களை ஏமாற்றவே வருகிருர்கள் என்பது உண்மையல்ல. அவர் களில் சிலர் உண்மையிலேயே விரும்பத்தக்கவர்கள்."

இதைவிட அதிகமாக எங்களைப்பற்றிச் சொல்ல அவரால் முடியவில்லை.

வெளிநாட்டில் வசிக்கும் மக்கள் "நாங்கள் எல்லோரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களல்ல என்று நினைப்பது கேலிக்கிடமாயிருப்பதைப் போலவே, நாமும் பிற நாட்டின ரெல்லாம் நம்மை ஏமாற்றவே முயலுகிருர்கள் என்று நினைப்ப தும் கேலிக்கிடமான செயலேயாகும்."

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலகத்தில் சமானத்தை நிலை நிறுத்துவதற்குமுன், மேற்சொன்ன தவருன மனப்பான் மையை நம்மிடையேயிருந்து அகற்றவேண்டியது முக்கியம். இம்மாபெரும் உலக சபையில் அமெரிக்காவும் ஒரு அங்கத்தின நாடாகிவிட்டதால், அச்சபையின் முயற்சி கைகூடுவதற்கு, நீங்கள் உங்களாலான உதவியைச் செய்யலாம்.

ஒரே சமயத்தில் நீங்கள் பல அரசாங்கங்களின் கீழ் குடி களாக வாழலாம். ஒரு ஊர் அல்லது நகரத்தில் நீங்கள் வாழ்வீர்களானுல், அந்த ஊர் அல்லது நகரத்தின் அரசாங்கத் தின் பிரஜையாகிறீர்கள். உங்கள் ஊரோ அல்லது நகரமோ ஒரு தனியரசுக்கு (State) கீழ் இருந்தால், அந்த தனி யரசின் அரசாங்கத்திற்கும் நீங்கள் ஒரு பிரஜையாகிறீர்கள்.

தனியரசு ஒரு நாட்டின் பகுதி ; நாட்டுக்குத் தனி அரசாங்கமிருக்கிறது. ஆதலால் நீங்கள் நாட்டுக்கும் கூட ஒரு பிரஜை தான். உங்கள் நாடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஒரு அங்கம் வகித்தால் அதற்கும் நீங்கள் ஒரு பிரஜைதான்.

எல்லா நாட்டு மககளும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான ஒரு முறையைக்கண்டு பிடிக்க இந்த மாபெரும் ஸ்தாபனம் இயன்ற உதவியைச் செய்யும்.

ஜனாதிபதி ட்ருமன், ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு முடிவடைந்ததும் பின் வருமாறு சொன்னார்: " அமெரிக்க ஐக்கியக் குடியரசின்கீழ் எல்லா மக்களும் சுகமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வதைப் போலவே, உலகக் குடியரசின் கீழும் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு சுகமாக வாழ முடியும். உதாரணமாக, அர்க்கான்ஸாஸ் (Arkansas) நதியில் ஓடும் நீரைப்பற்றி ஒரு பிரச்னை எழும்போது, கான்ஸாஸ்களும், கொலராடோக்களும், தத்தம் சேனைகளைத் திரட்டிக்கொண்டு, ஒருவரோடொருவர் போருக்குச் செல்வதில்லை. ஆனால் அவர்கள் அமெரிக்க ஐக்கிய தேசத்தின் பிரதான (Supreme Court) நீதிமன்றத்தில் தத்தம் கட்சிகளுக்காக வாதாடி, அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே நடக்கிறார்கள். அதே போல, சர்வதேச தகராறுகளிலும் என் ஒரு சமரஸ முடிவைக் காணமுடியாது என்பதற்கு தெளிவான காரணமெதுவும் புலப்படவில்லை."

அத்தியாயம் 2

போரிலும் சமாதானத்திலும் சகோதரர்கள்

நாடுகள் எப்படி ஒன்று சேர்ந்தன ?

1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி நாற்பத்தாறு தேசங்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் கூடினார்கள். உலகில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் ஸ்தாபனம் ஒன்றை அமைப்பதற்கு ஒரு திட்டம் தயாரிக்க ஆரம்பித்தனர். அவர்கள் பல நாடுகளால் பேசப்பட்டு வந்த விவரங்களை சேகரித்துத் தங்கள் வேலையைத் தொடங்கினர்.

ஏழு நூற்றாண்டுகளாகவே, பல நல்லெண்ணங்கொண்டவர்கள், இவர்கள் எழுதப்போகும் ஐக்கிய நாடுகளின் சாஸனத்தைப் போன்ற திட்டங்களை எழுத முயன்றுள்ளார்கள். வில்லியம் பென் என்பார், அம்மாதிரி திட்டமொன்றை வகுத்தார்.

அத்திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவராததற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. அது, மக்கள் நவீன முறைகளை கைக்கொள்ளாததே யாகும்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கௌன்ஸிலில் எழும் ஒரு முக்கிய பிரச்னையின்மீது பிரிட்டனின் பிரதிநிதி தன் அபிப்பிராயத்தை தெரிவிக்க நேருகிறது என்று வைத்துக்கொள்வோம். உடனே லண்டனிலிருக்கும் பிரதம மந்திரியுடன் அவர் ' டெலிபோனி 'ல் கலந்தாலோசிப்பார். அவர்களுக்குள் ஏதேனும் வேறுபாடு இருந்தால், அப்பிரதிநிதி விமானமூல

மாய் அடுத்தநாள் லண்டனிலிறங்கி, பிரதம மந்திரியுடனும் மற்ற முக்கிய அதிகாரிகளுடன், அவ்விஷயத்தைப்பற்றிக் கலந் தாலோசிப்பார். மீண்டும் சில மணி நேரங்களில் அவர் இங்கே திரும்பிவிடமுடியும்.

இரண்டு அல்லது மூன்று நூற்றுண்டுகளுக்கு முன் இது நடக்க முடியாத காரியம். ஒரு தேசத்தின் பிரதிநிதி தன் நாட்டின் அரசாங்கத்திடம் கலந்தாலோசிக்க வேண்டியிருந்தால், 'கோச்' வண்டியிலோ, குதிரையின் மேலோ, படகுகளின் மூலமாகவோ தான் செல்லவேண்டும். அவர்கள் ஒன்று சேர்ந்து பேசுவதற்குள் மாதங்கள் பல பறந்துவிடும். அந் நாட்களில் ஒரு உலக ஸ்தாபனம் ஏற்படுத்துவது நடக்கக்கூடாத காரியம்.

மேலும் பெரும் பான்மையான மக்கள் சர்வதேசஸ்தா பனத்தின் அவசியத்தை உணராமலும், அதில் சிரத்தை காட்டாமலும் இருந்தனர். அவர்களின் பத்திரிகைகளில் 'தந்தி மூலம் கிடைக்கப்பெறும் படங்கள்' இடம் பெறவில்லை. வேறு நாடுகளில் என்ன நடைபெறுகிறது என்பதை விளக்க புகைப் படங்களோ, பேசும் படங்களோ கிடையாது. உலகச் செய்தி களை அவர்களுக்கு அறிவிக்க ரேடியோவும், டெலிவிஷனும் அக்காலத்திலில்லை. மோட்டார்களோ, ரெயில்களோ, கட லில் செல்லும் நீராவிக் கப்பல்களோ, அக்காலத்தில் கண்டு பிடிக்கப்படாததால், ஒரு சிலரால்தான், எப்பொழுதாவது எங்காகிலும் செல்ல முடிந்தது.

மற்ற நாடுகளைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தது மிகவும் சொற்பம். அதுபற்றி தெரிந்து கொள்ளவும் அவர்கள் விரும்ப வில்லை.

1789-ம் வருஷம் அமெரிக்க ஐக்கிய தேச அரசாங்கத்தின் முதல் காங்கிரஸ் கூடிய போது, சில பிரதிநிதிகள், ரெயில் வேகன்களிலும், புழுதி நிறைந்த தெருக்களில் குதிரைகளின் மேலும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. அவர்களுக்கு

ஜார்ஜியாவிலும், நியூஹாம்ப்ஷயரிலும் உள்ள தங்கள் வீடுகளிலிருந்து, காங்கிரஸ் நடைபெறும் நியூயார்க் நகருக்கு வருவதற்கு இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகியது. ஆனால் தற்காலத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக கூட்டத்திற்கு, வெகு தொலைவிலிருக்கும் தேசங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள், விமான மூலமாய் இரண்டே அல்லது மூன்றே நாட்களுக்குள் வந்து கூடிவிடுகிறார்கள்.

பார்க்கப் போனால், சில விஷயங்களில் இவ்வுலகமே, 13 அமெரிக்கன் காலனிகளும் ஒரே அரசாட்சியின்கீழ் ஒன்றாகக் கூடியபோது இருந்ததைவிட, சிறியதாகப் போய் விட்டது.

பல சங்கங்கள் கூட்டப்பட்டன. உதாரணமாக பண்டைய கிரேக்க தேசத்தில் ஒரு சங்கம்—டெல்பிக் அம்பிக்டோனி என்ற பெயருடன் கூட்டப்பட்டது. ஆறு நாடுகளின் இரோக்குவி இந்தியர்களின் சங்கம். கடைசியாக 1919-ல் சர்வ தேச சங்கம் கூட்டப்பட்டது.

வெடிகுண்டின் பயங்கரங்கள் நிறைந்த இக்காலத்தில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியதும், அமெரிக்கா போரில் ஈடுபடுவதற்கு முன்னும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தன் நடவடிக்கைகளைச் செய்யத் தொடங்கியது.

1941-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில், ஜெர்மனி தேசத்து நாஜிப் படையினர் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்துப் போராடி ஜெயமடைந்து வந்துகொண்டிருந்தனர். பிரிட்டிஷ் படைகள் தங்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். அக்காலத்தில்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி சர்ச்சில், அமெரிக்க ஜனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்டை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஒரு சண்டைக் கப்பலில் சந்தித்தார். அவர்கள் எந்த இடத்தில் சந்தித்தனர் என்பது வெளியிடப்படவில்லை. அந்தக் காலம் ஜெர்மனியர்கள் ரஷ்யாவில் முன்னேறிக் கொண்டிருந்த காலம். ஜெர்மனியையே

ஐரோப்பா முழுவதற்கும் பிரதிநிதியாக வைத்துவிட்டு, சோவியத் யூனியனும் வெகு சீக்கிரத்திலேயே தோல்வியடைந்துவிடும் போலக் காணப்பட்டது. அதன் பிறகு, மிக்க வல்லமை பொருந்திய நாஜிகளை எதிர்த்து சண்டையிட இங்கிலாந்து மட்டும் தனியே நிற்கவேண்டிவரும்போலிருந்தது.

அந்த நேரத்தில்தான் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் பிரதம மந்திரி சர்ச்சிலும் **அட்லாண்டிக் சாஸனத்தை** எழுதினர்.

இந்த நடவடிக்கையால், அமெரிக்கா இங்கிலாந்திடம் கருணை காட்டுவதாகச் சொல்லப்பட்டது. நாம் (அமெரிக்கா) நேர் முகமாக சண்டையில் இறங்காவிட்டாலும், இங்கிலாந்துக்கு உதவியாக இருந்தோம்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, இவ்விரு நாடுகளும் ஒன்றுகூடி, ஒரு விரிந்த நிலையுள்ள பாதுகாப்புத் திட்டமொன்றை கூடிய விரைவில் உலகிற்கு அளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதிகார வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகளும், ஒரு உலக ஸ்தாபனம் ஏற்படுவதற்கான அறிகுறியே தென்படுகிறதென ஊர்ஜிதம் செய்தன.

ஐந்து மாதங்கள் சென்றன. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் ஏழாம் தேதி ஜப்பானிய விமானங்கள் வெகு சீற்றத்துடன் ‘பெர்ல் (ஹார்பர்) துறைமுக’த்தில் தங்கியிருந்த அமெரிக்கக் கடற்படையைத் தாக்கி நம்முடைய பல கப்பல்களை மூழ்க்கடித்தன. உடனே ஜெர்மனியும் அமெரிக்காவின்மீது யுத்த முழக்கம் செய்தது.

சில தினங்களில் லத்தீன் அமெரிக்க நாடுகளும் இச்சம்பவங்களுக்குப் பதிலுரைப்பதேபோல, ஜெர்மனி மீதும் ஜப்பான் மீதும் போர் முழக்கம் செய்தன.

இன்னும் சில தினங்களுக்குப் பிறகு, அமெரிக்க நாட்டிலிருந்து வந்த பிரதிநிதியுள்பட இருபத்தாறு தேசப் பிரதிநிதிகள், வாஷிங்டன் நகரில் கூடி, அட்லாண்டிக் சாஸனத்தை

அனுசரித்து ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டார்கள். அவர்கள் தங்களை "ஐக்கிய நாடுகள்" என்று பெருமையுடன் அழைத்துக்கொண்டார்கள்.

தாம் ஒன்று சேருவதற்கு பதிமூன்று வருஷங்களுக்கு முன்பே, 1776-ல், நம் நாட்டின் பதிமூன்று பிரிவுகளும் ஒன்று சேர்ந்து தங்களை "அமெரிக்க ஐக்கிய தேசங்கள்" என்றழைத்துக்கொண்டன. அதற்குப் பிறகு 1942-ல் ஜனவரி முதல் தேதியன்று மேல் சொல்லிய இருபத்தாறு தேசங்களும், தாங்கள் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு முன்பே தங்களை "ஐக்கிய நாடுகள்" என்று கூறிக்கொண்டன. உண்மையில், அந்தக் காலத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்துவிடவில்லை. பின்னொரு நாள் அவர்கள் ஒன்று சேரக்கூடும்.

எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிரியை எப்படி எதிர்ப்பது என்பதை ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, பெரும்பாலான மக்கள் 'யோருக்குப் பின் சமாதானத்தை நீங்கள் எப்படி நிலைநிறுத்தப் போகிறீர்கள்?' என்று கேட்க ஆரம்பித்தார்கள். நம்முடைய காங்கிரஸின் மேல் சபைகளும், தாங்கள் உலக ஸ்தாபனமொன்றை அமைத்ததற்குச் சாதகமாயிருக்கின்றதாகத் தெரிவித்துக்கொண்டன. இன்னும் பலர் இதே விதமாய்க் கூறினார்கள். அமெரிக்கா, பிரிட்டன், சீனா, சோவியத் குடியாசு ஆகிய நாடுகளின் அயல் நாட்டு மந்திரிகள் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மாஸ்கோ நகரில் கூடி இவ்விஷயத்தைப்பற்றி விவாதித்தனர்.

உலக ஸ்தாபனமொன்றை நிறுவுவதற்காக ஒரு திட்டம் வகுக்க, ஒரு குழுவை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூட்டினார். அதில் காங்கிரஸின் இரு சபைகளிலிருந்தும் அறிவாளிகளும் ராஜாங்கக் காரியாலயத்திலிருந்த திறமைசாலிகளும் பங்கெடுத்துக்கொண்டனர். பல மாதங்களுக்குப் பிறகு, அவர்கள் தயாரித்த திட்டங்கள், இங்கிலாந்து, சீனா, சோவியத் குடியரசு ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இங்கு அமைக்கப்

பட்டது போன்ற குழுக்கள் அந்த நாடுகளிலும் அமைக்கப்பட்டு, அவைகள் தயாரித்த திட்டங்களும் இங்கு அனுப்பிவைக்கப் பட்டன.

அடுத்தபடியாக, செய்யவேண்டியது, இந்த நான்கு திட்டங் களையும் ஒன்று சேர்க்க வேண்டியதேயாகும். அதைச் செய்வ தற்கு இரண்டு முக்கிய கூட்டங்கள் ஏற்பாடு செய்ய வேண்டி யிருந்தது.

1944-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி, "டம்பர்ட்டன் ஒக்ஸ்" மகாநாடு தொடங்கியது. அப்போது நேசதேசப் படை கள் பாரிஸ் நகரையும், பிரான்சு தேசத்தின் வடமேற்குப் பகுதியையும் ஜெயித்து விட்டார்கள். அமெரிக்க ஜி. ஐக்கள் (United States G. I.s) ஆயிரக் கணக்கில், இத்தாலி தேச மலைப் பிராந்தியங்களில் மாய்ந்துகொண்டிருந்தனர். அவர்க ளில் ஒரு பகுதியினர் தெற்கு பிரான்சில் இறங்கி இருந்தனர். நம்முடைய ரஷ்ய நேசப் படைகள் 'வார்ஸா' நகரின் கோட்டை வாயிலுக்கருகில் இருந்தனர். ஜெர்மனியர் எல்லா பக்கங் களிலும் தோல்வியடைந்து கொண்டிருந்தனர். அவர்கள் மெதுவாகத் தங்கள் நாட்டின் உட்பகுதிக்குப் பின்வாங்கிக் கொண்டிருந்தனர். தென் பஸிபிக் கடலில் தளபதி மக் ஆர்தரின் துருப்புகள் மிகவும் கோரமாய் ஒவ்வொரு தீவிலும் ஜப்பானியருடன் போர் செய்துகொண்டிருந்தன.

'டம்பர்ட்டன் ஒக்ஸ்' என்பது வாஷிங்டன் நகரின் எல்லைக்கு சமீபத்திலுள்ள ஒரு வயல்வெளியான இடம். ஒரு நூற்றாண் டிற்கு முன் கட்டப்பட்ட அழகிய கட்டிடம் ஒன்று அங்கே உளது. அதன் சொந்தக்காரர்களான பணம் படைத்த பிரபுக்கள் அதிக செலவு செய்து, வேண்டிய பொருள்களை அதில் சேகரித்து அழகு பெற நல்ல நிலையில் வைத்திருந்தனர். அதனால் 1940-ல் ஹார்வர்டு சர்வ கலாசாலையினர் அதைத் தங்கள் மேற்பார்வை யில் வைத்துக்கொண்டு பொது மக்களின் நன்மைக்காக, ஒரு பொருட்காட்சிசாலையை அங்கு திறந்து வைத்தார்கள்.

பதினேழு பேர்களைக்கொண்ட அமெரிக்க தேசத்துப் பிரதி நிதிகள் கூட்டம், ஒரே மாதிரி உடைகள் அணிந்து, நரைத்தலை யுடையவராயிருந்தாலும் திடகாத்திரமான ஸ்டெட்டினியஸ் (Mr. Stattinius) என்ற இளைஞரால் நடத்தப்பட்டது. ஆங்கிலப் பிரதிநிதிகளுக்குத் தலைவராய் வந்த, நீண்ட மெல் லிய மீசையுள்ளவரான சர் அலெக்ஸாண்டர் கடோகன் (Sir A. Cadogan), தன்னுடன் வந்த மற்றவர்களைக் காட்டிலும் கடின சித்தமுள்ளவராயிருந்தார். ரஷ்யப் பிரதிநிதிகளுக்குத் தலைவராய் வந்த மிஸ்டர் க்ரோமிகோ (Mr. Gromyko) தனக்கு ஒன்றும் தெரியாதவர்போல நடித்து, பிறரை முட் டாள்களாக்கிக் கொண்டிருந்தார். [பிறகு இம்மூவரும் தங்கள் தேசங்களின் பிரதிநிதிகளாக பாதுகாப்பு கௌன்ஸிலில் அங் கத்தினரானார்கள்]. சீன தூது கோஷ்டியினரும், மேல் நாட்டு உடையணிந்து கொண்டு காரிய சித்தராய் வந்து இறங்கினார்கள்.

டம்பர்ட்டன் ஒக்ஸ் மகாநாடு கவனித்த முக்கியமான விஷயம் யாதெனில், நான்கு நாடுகளும் ஒன்றுசேர்ந்து, அனைவருக்கும் சம்மதமான ஒரு திட்டத்தை உலக ஸ்தாபனத்திற்கு வகுக்க முடியுமா என்பதுதான்.

முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு, பாரிஸ் நகரில் கூடிய ஒரு குழுவினரால் உலக சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டது. அமெரிக்க தேசத்து 'செனட்' சபை, அவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமா அல்லது ஏற்றுக்கொள்ளாதா என்பது பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. அவ்வுடன்படிக்கை கையெழுத்தான பிறகு, நம்முடைய 'செனட்' சபை அதை நிராகரித்து, சர்வ தேச சங்கத்திலும் சேராமலே நின்றது.

அச் சர்வ தேச சங்கத்தினால் ஏற்பட்ட அனுபவம், ஒரு பெரிய நாடு பங்கு எடுத்துக்கொள்ளாத எச்சங்கமும், உலகில் அமைதியை நிலைநிறுத்த முடியாது என்ற விஷயத்தை தெளி வாக்கியது.

டம்பார்ட்டன் ஓக்ஸ் மகாநாட்டின்போது, நான்கு பெரிய நாடுகளும், உலக ஸ்தாபனம், எல்லோரும் விரும்பிச் சேரும் ஒரு சபையாக இருக்குமென்று நினைத்தன.

அவர்கள் எழுதிய திட்டங்கள் : 'டம்பார்ட்டன் ஓக்ஸ் திட்டங்கள்' என்று பெயர் பெற்றன. அவைகள் பல்லாயிரக் கணக்கில் பிரதிகள் அச்சிடப்பட்டு எல்லோரும் படித்தறியும்படி செய்யப்பட்டன.

ஜனங்களும் அவைகளை நன்றாகப் படித்தனர்.

ஆயிரக் கணக்கானவர்கள், அத்திட்டங்களை எவ்வெவ்வழிகளில் திருத்த முடியும் என்பதைப் பற்றி அந்த நான்கு அரசாங்கங்களுக்கும் எழுதினார்கள். 'டம்பார்ட்டன் ஓக்ஸ்'வில் கூடிய நிபுணர்கள் வேறு சில விஷயங்களையும் விவாதித்தனர். ஆனால் அவைகளில் ஒரு முடிவும் காணவில்லை. முக்கியமாக ஒவ்வொரு பெரிய நாடும் பாதுகாப்புக் கௌன்ஸிலில் எவ்வளவு அதிகாரம் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விஷயத்தில் அவர்களுடைய முடிவுகள் மாறுபட்டிருந்தன.

அடுத்த பிப்ரவரி மாதத்தில் போரின் கடைசி பகுதி நெருங்கி கொண்டிருந்தது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரதம மந்திரி சர்ச்சில், சோவியத் குடியரசுத் தலைவர் மார்ஷல் ஸ்டாலின்— இம் மூவரும் ரஷ்யாவின் தென் பகுதியிலிருக்கும் **யால்டா** என்னும் இடத்தில் சந்தித்தனர் (யால்டா என்பது கிரிமியா தேசத்திலுள்ள ஒரு சிறு சமுத்திரக் கரைப் பட்டிணம். ஜெர்மனியர்களிடமிருந்து சமீப காலத்தில்தான் மீட்கப் பட்டது). தங்களுடைய ஆலோசகர்களின் உதவியால் இம்மூவரும், தாங்கள் ஒத்துக்கொள்ளக் கூடிய சில திட்டங்களைத் தயாரித்தார்கள். உலகிலுள்ள மற்றெல்லோரும் அவைகளை ஒத்துக்கொள்வார்களென அவர்கள் எதிர் பார்த்தனர். இத்திட்டங்களும் டம்பார்ட்டன் ஓக்ஸ் திட்டங்களுடன் சேர்க்கப்பட்டன.

கடைசியாக, எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்த பிறகு, நான்கு பெரிய நாடுகளின் அரசாங்கங்களும் ஐக்கிய நாடுகளின்

பிரகடனத்தில் கையொப்பமிட்ட எல்லா நாடுகளுக்கும், ஸான் பிரான்ஸிஸ்கோவில்' நடைபெறப் போகும் மகாநாட்டிற்கு வரும்படி அழைப்பு அனுப்பின. அம் மகாநாட்டில், உலகத்தில் சமாதானத்தை நிறுவ ஒரு திட்டத்தை வகுக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த அழைப்பு ஜெர்மனி அல்லது ஜப்பான் ஆகிய நாடுகளுடன் போர் செய்யும் நாடுகளுக்கு மாத்திரமே உரியதென்று தெரிந்து கொண்டதும் தென் அமெரிக்காவும், சமீபக் கிழக்கு நாடுகளும் விழித்துக்கொண்டன. நடைபெறப் போகும் மகாநாடு வெகு முக்கியமானது. ஆதலால் இன்னும் 10 தேசங்கள் ஜெர்மனி, ஜப்பான் மீது போர் முரசை சரியான சமயத்தில் கொட்டின. அக்காரணத்தால் அவைகளுக்கும் ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கையெழுத்திட வாய்ப்பு கிடைத்ததுமன்றி ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கும் அழைப்பு கிடைத்தது. முடிவில் அந்த மகாநாட்டில் ஐம்பது நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன ; அங்கெழுதப்பட்ட சாஸனத்தில் ஐம்பத்தோரு நாடுகள் கையொப்பமிட்டன.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் "ஒ பே ரா ஹௌஸி"ல் நானூறு பிரதிநிதிகள் கூடிய அந்த நாளில் ரஷ்ய சைன்யம் பெர்லினைச் சுற்றி வளைத்துக்கொண்டிருந்தது. நாஜிகள் தங்கள் உயிருக்காக கடும் போர் செய்துகொண்டிருந்தனர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, வெற்றி கொண்ட அமெரிக்கர்களும் சோவியத் படையினரும், ஜெர்மனி தேசத்தின் மத்தியில் சந்தித்து முதன் முறையாகக் கைகுலுக்கிக் கொண்டனர். அதே சமயத்தில், நம்முடைய போர் வீரர்களும் ஜப்பானுக் கருகிலுள்ள 'ஒகினுவா' எனும் தீவில் சண்டை செய்து நிதானமாக முன்னேறிக்கொண்டிருந்தனர்.

ஸான்பிரான்ஸிஸ்கோ கூட பாதுகாப்புக்கு உகந்த இடமல்ல. சிவப்புத் துணி போர்த்தி தைக்கப்பட்டிருந்த தங்களுடைய சுகமான ஆசனங்களிலிருந்து ஒபேரா ஹௌஸில் கூடியிருந்த

பிரதிநிதிகள், நான்கு சுதந்திரங்களை விளக்கும் வண்ணம் நான்கு வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையை நோக்கிக்கொண்டிருந்தனர். எல்லா நாடுகளின் கொடிகளும், நீலத்திரைக்கு முன்னும், நான்கு வர்ணங்களுக்கிடையேயும் தொங்கிக்கொண்டிருந்தன. அங்கு கூடியிருந்தவர்களின் எண்ணங்களைப் போலவே, அக் கொடிகளும் ஓசைப் படுத்தாது தொங்கிக்கொண்டிருந்தன. மேலே ஆகாயத்தில் ஜப்பானிய வெடிகுண்டுகள் பலூன்களால் தாக்கப்பட்டு, அதிருஷ்ட வசமாக சில மைல்களுக்கு அப்பாலுள்ள மலைகளின்மீது வீழ்ந்து வெடித்தன.

அம் மகாநாட்டில் பிரகாசமாயிருந்தவை, இந்தியப் பிரதி நிதிகள் அணிந்திருந்த தலைப்பாகையும், சௌடி அரேபியாவி லிருந்து வந்த பிரதிநிதிகள் அணிந்திருந்த வெள்ளைக் கபியா வும் தான். நிசப்தமான அக் கூட்டத்தில் போரின் நிழல் படிந்திருந்தது. நாலாயிரம் ஜனங்கள் ஒபேரா ஹௌஸில் கூடியிருந்தார்கள்—அரசாங்கப் பிரதிநிதிகளும், உதவியாளர் களும் துணைவர்களும், பத்திரிகைக்காரர்களும்,—இவ்வளவு பேரும் கூடியிருந்தும், கை தட்டலோ, உணர்ச்சி பொங்கும் சர்ச்சைகளோ அங்கு ஏற்படவில்லை. அவர்கள் அங்கு வேலை செய்வதற்கு வந்துள்ளவர்களே தவிர சத்தம் செய்வதற்காக வரவில்லை.

அவர்களில் பலர் தங்கள் உயிரைத் துரும்பாய்க் கருதிய வர்கள். சிலர் அயல் நாட்டுப் படையினரிடமிருந்து, தங்கள் நாட்டைக் காப்பாற்றும் கொரில்லாப் படையைச் சேர்ந்தவர்கள். தங்களுக்குள் ஏற்பட்டுள்ள மன வித்தியாசங்களிலிருந்து விடு பட வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். அவ்வாறே எல்லோரும் விரும்பினார்கள். தினந்தோறும் பத்திரிகைகளில் வெளியாகும் போரைப் பற்றிய பயங்கர செய்திகளை அவர்கள் படித்து வந்தனர். மூன்றுவது உலக யுத்தம் ஒன்று ஏற்பட் டால், 'ராக்கெட்' வெடிகுண்டுகள் எல்லா தேசங்களிலு முள்ள ஒவ்வொரு நகரத்தையும் பாழ்படுத்திவிட முடியும்

என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அச் சம்பவத்தைத் தடுப்பதற்காகவே ஸான்பிரான்ஸிஸ்கோவில் தாங்கள் கூடி யிருப்பதையும் அவர்கள் அறிவார்கள்.

சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளும் ஒன்று சேரக்கூடிய ஒரு சர்வ தேச ஸ்தாபனத்தின் வலிமை பொருந்திய ஸாஸ னத்தை எழுதுவதற்காக அவர்கள் அங்கே கூடி முயலுகிறார் கள்.

இதை மிகவும் சுலபமாக செய்துவிடலாம். எப்படியெனில், மற்றெல்லோரைக் காட்டிலும் திறமைசாலிகள் என்று சொல் லிக்கொள்ளும் இரண்டு அல்லது மூன்று பேர்கள் தனியே ஒரு அறையில் கூடி, தங்களுக்குள் விவாதித்து ஒரு திட்டத்தை எழுதி முடிப்பதாகும். இதை செய்ய அவர்களுக்கு மூன்று, நான்கு நாட்கள் போதுமானது.

இதில் தவறென்னவென்றால் பெரும்பான்மையோருக்கு விருப்பமில்லாத சில விஷயங்களை அவர்கள் சேர்த்து விடலாம். அல்லது வேறு சிலர் மிக நல்லதென்றும் முக்கியமானதென் றும் நினைப்பவைகளை விட்டுவிடும்படி நேரலாம். ஆதலால் சரியான முறை என்னவென்றால், எவ்வளவு பேர்களை கலந்து ஆலோசிக்கக் கூடுமோ, அவ்வளவு பேரையும் கலக்க வேண்டியதுதான்.

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு ஆரம்பமாவதற்கு முன், மக்கள் இந்த நாட்டைப் பற்றி மட்டுமே மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள். நம்முடைய ராஜாங்க காரியாலயத்திற்கு ஒரு வாரத்திற்கு இருபதினாயிரம் கடிதங்கள் வந்துகொண் டிருந்தன. இவ்வளவு கடிதங்களும் படிக்கப்பட்டு பலவகை களாகப் பிரிக்கப்படும். ஆகையால் அதிகாரத்தில் இருப்பவர்க ளுக்கு, எந்தமாதிரியான விஷயங்களை சாஸனத்தில் புகுத்த மக்கள் விரும்புகிறார்கள் என்பதும், எவ்வளவு மக்கள் ஒரு விஷயத்தில் சாதகமாக இருக்கிறார்கள் என்பது பற்றியும் தெரிந்திருந்தன.

ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகளும், தாங்கள் செவ்வனே தயாரித்த குறிப்புகளுடனும், உதவியாளர்களுடனும், ஆலோசகர்களுடனும், சட்ட நிபுணர்களுடனும், மொழி பெயர்ப்பாளர்களுடனும் வந்து கூடினர். நம்முடைய கோஷ்டியில், எழு அரசாங்க பிரதிநிதிகளும், 29 ஆலோசகர்களும், 7 காங்கிரஸ் அங்கத்தினர்களும், 107 உதவியாளர்களும், 47 பத்திரிகைக்காரர்களும், நிர்வாக காரியதரிசிகளும், நூல் நிலைய அதிகாரிகளும் சாஸனத்தில் விசேஷ அக்கரை கொண்டுள்ள 42 பொது சபைகளின் உத்தியோகஸ்தர்களும் இருந்தனர். மேலும் வர்த்தக விற்பன்னர்களும், தேசீய கல்வி ஸ்தாபனங்களிலிருந்து ஆசிரியர்களும், கஷ்டப்பட்டுழைத்து தொழிலாளர் இயக்கங்களுக்குத் தலைவர்களாய் வந்தவர்களும், மதத் தலைவர்களும், மற்றும் அழைக்கப்படாதிருந்தும், ஆலோசனை கூறவேண்டுமென்று தாங்களாகவே வந்தபோதிலும் அன்புடன் வரவேற்கப்பட்டவர்களும் நிறைந்திருந்தனர். எல்லோருமாக, மொத்தம் 2,000 பேர்களுக்கு மேல் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் இரண்டு மாதம் ஒருநாள் காலத்திற்கு கஷ்டப்பட்டு சாஸனம் ஒன்றைத் தயாரிக்கும் வேலையிலீடுபட்டனர்.

வந்திருந்த பிரதிநிதிகள் சிறு சிறு குழுக்களாகத் தங்களைப் பிரித்துக்கொண்டனர். ஒரு குழு வாரக் கணக்கில் சாஸனத்தின் பூர்வ பீடிகை (preamble) யைத் தயாரிப்பதில் ஈடுபட்டது. மற்றொரு குழு பாதுகாப்புக் கௌன்ஸிலைப் பற்றிய பகுதியை ஆராய்ந்தது. மற்றொன்று தர்மகர்த்தா சபையைப் பற்றிய பகுதியில் வேலை செய்தது. அச் சாஸனத்தின் ஒவ்வொரு பகுதியைக் கவனிக்கவும் ஒவ்வொரு தனிக் குழு இருந்தது.

டம்பர்ட்டன் ஒக்ஸ் திட்டங்கள் எல்லோரும் படித்தறியும்படி அச்சடிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதியும் அப் பிரதிகளில் ஒன்றை வைத்துக்கொண்டிருந்தனர்.

மேலும், ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதியும், தன் நாட்டினர் செய்ய விரும்பிய திருத்தங்களையோ அல்லது புகுத்தப்பட

வேண்டிய புது விஷயங்களையோ கையில் கொண்டுவந்திருந் தனர். உதாரணமாக ஆஸ்திரேலியப் பிரதிநிதி தாம் கொண்டுவந்திருந்த முப்பத்தாறு திருத்தங்களைச் சமர்ப்பித் தார். அதில் இருபத்தாறு திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. எல்லா குழுவினரும் தங்கள் தங்கள் வேலை முடிந்த பிறகு ஒன்றுகூடி ஒரு பத்திரத்தைத் தயாரித்தனர். அதன் பெயர்தான் **ஐக்கிய நாடுகளின் சாஸனம்** என்பது.

இரண்டு மாதங்கள் தொடர்ந்து விவாதம் நடததிய பிறகு, தங்கள் மன வேறுபாடுகளை அவர்கள் சமரஸமாகத் தீர்த்துக் கொண்டனர். அதன்பின் உலகின் பல பாகங்களிலிருந்து வந்த ஆண் பெண் பிரதிநிதிகள் எல்லோரும் ஒபேரா ஹௌஸில் கடைசி முறையாகக் கூடினார்கள். ஒரு பெரிய வட்ட மேஜையின்மீது ஆங்கிலம், சீனம், பிரஞ்சு, ருஷ்ய, ஸ்பானியம் —ஆகிய ஐந்து பாஷைகளில் தனித்தனியாக எழுதி முடிக்கப் பட்டுள்ள சாஸனத்தின் அதிகார பூர்வமான நகல்கள் வைக்கப் பட்டிருந்தன. சபைத் தலைவர் கூடியிருந்தவர்களின் அபிப் பிராயங்களைக் கூறும்படி கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு பிரதிநிதி கோஷ்டியும் அவைகளை ஒப்புக்கொள்ளுவதற்காக எழுந்து நின்றார்கள். யாரும் அவைகளை எதிர்க்கவில்லை.

சீனா தேசத்திலிருந்து வந்த பிரதிநிதிகளும் படிகளின் மீதேறி தங்கள் தலைவர்களுடன் நின்றனர். அவர் ஒரு சிறு பிரசங்கம் செய்தபோது அவர்கள் யாதொரு சப்தமும் செய் யாது நின்றனர். அதன் பிறகு தலைவர் மட்டும், தனியே, அப் பெரிய மேஜை முன்னமர்ந்து, ஐந்து நகல் பிரதிகளிலும் தன் கையெழுத்தைச் செய்தார். ஒருவர் பின் ஒருவராக, மற்றவர்கள் அனைவரும் அதில் கையொப்பமிட்டனர். அப் பொழுது ஒவ்வொருவரும், அத்தனை பெரிய கூட்டத்தின் மத்தி யில், மனித சரித்திரத்திலேயே முக்கியமான அந்த நேரத்தில், தங்களை மிகவும் சிறியவர்களைப் போல எண்ணிக் கொண்டு, சிறிது நடுக்கத்துடனேயே கையொப்பமிட்டார்கள்.

148 பிரதிநிதிகள் கையொப்பமிட்டார்கள். சாஸனம் அச்சடிப்பதற்குத் தயாராகி விட்டது. அச்சிட்ட பிரதிகளை ஐக்கிய நாடுகளின் எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்ப வேண்டியது அடுத்த வேலை.

ஒரு மாதத்திற்குப் பிறகு, காரசாரமான விவாதம் செய்து நம்முடைய 'செனேட்' சபை, ஐக்கிய நாடுகளின் சாஸனத்தை அமெரிக்க தேசம் அதிகார பூர்வமாய் ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்தது. ஒன்றன் பின் ஒன்ருக மற்ற நாடுகளின் அரசாங்கங்களும் அச் சாஸனத்தை ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்தன. அக்டோபர் மாதம் 24-ம் தேதிக்குள்ளாக, அந்த சாஸனத்தை ஒரு சர்வ தேச சட்டமாகவும், எல்லா நாடுகளும் கீழ்ப்படிய வேண்டிய திட்டமாகவும் அமுலில் கொண்டுவரக் கூடிய அளவுக்குப் பல நாடுகளின் சம்மதங்களும் கிடைத்து விட்டன.

அடுத்த மூன்று மாதங்களில் எஞ்சியிருந்த ஐம்பத்தோரு நாடுகளும் சாஸனத்தை முழு மனதுடன் ஒப்புக்கொண்டன. அதன் பிறகு 1946-ம் வருஷம் ஜனவரி மாதம் பத்தாம் தேதி பொதுச் சபை முதன் முறையாக லண்டன் மாநகரில் கூடியது. அப்போது சூழ்நிலை மிகவும் திருப்திகரமாயிருந்தது. சீதோஷ்ண நிலையும் சாதகமாகவேயிருந்தது. சபையே புத்துயிர் பெற்று விளங்குவதாயிற்று.

வெகு சீக்கிரத்திலேயே பாதுகாப்பு கௌன்ஸில், அலுவலகம், மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வேறு பிரிவுகளை தத்தம் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கின. அந்த சாஸனம் இப்போது வெறும் திட்டம் மட்டுமல்ல. அது ஜீவனுள்ள, செயல் திறனுள்ள ஸ்தாபனத்திற்கு வழி காட்டும் சாஸனமாகும்.

பாகம் 2.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பல பாகங்களைத் தெரிந்து கொள்ளுதல்

அத்தியாயம் 3.

உலகின் மாபெரும் நகரசபைக் கூட்டம்

பொதுச் சபை

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபைத் தலைவர், மூன்று முறை மேஜையைத்தட்டி எல்லோரையும் அமைதியா யிருக்கும்படி சொல்லி, கூட்டம் ஆரம்பமாகிவிட்டதென்பதை அறிவிக்கிறார்—மிகவும் எளிய முறையில் தற்கால நாகரீகத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் அந்த அவையில் மிகவும் பிரகாச மான விளக்குகள் தங்கள் ஒளியைப் பரப்பிக் கொண்டிருக் கின்றன. ஒரு சிறு ஓய்ச்சலுக்குப் பிறகு அங்கு கூடியுள்ள ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் நிசப்தமா யிருந்தனர்.

தலைவரும், தலைமைக் காரியதரிசியும், அவருடைய உதவி யாளர்களும், நீண்ட மேஜை முன்னால் அரங்கின்மீது அமர்ந் திருந்தனர். மொழி பெயர்ப்பாளர்களும், குறுக்கெழுத்துக் காரர்களும், அரங்கிற்கு முன்னால் கீழே தத்தம் சிறிய மேஜை களின் முன் உட்கார்ந்திருந்தனர். ஐம்பதுக்கும் அதிகமான நாடுகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. ஒவ்வொரு மேஜையிலும் பத்துப் பேர் உட்காரும்படியிருந்தது. அப்படியாக அவை முழுவதும் " நாடுகளின் மேஜை " களாகவே ("Tables of Nations") நிரம்பிவிட்டது. சுவற்றின் ஓரமாகப் போட் டிருந்த மேஜைகளில் பலநாடுகளிலிருந்தும் வந்திருந்த 20 அல்லது 30 ஆலோசனையாளர்கள் அமர்ந்திருந்தார்கள்.

உலகின் அமைதியும் ஆனந்தமும் இந்தக் கூட்டத்தின் நட வடிக்கைகளின் மேலேயே ஆதாரப்பட்டிருந்ததை ஆயிரக்கணக் கான ஜனங்கள் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்,

ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதியும் பேசிக் கொண்டிருந்த போது உலகமே அதைக் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த அவையின் பெரிய உப்பரிகை முழுவதும் நானூறுக்கு மேற் பட்ட பத்திரிகைக்காரர்களால் நிரம்பியிருந்தது. ரேடியோ, டெலிவிஷன், பேசும் படங்கள் முதலியவைகள் அங்கே பேசப் பட்ட பேச்சுக்களையும், பேசுபவர்களின் முகபாவங்களையும், உலகில் எங்குமுள்ள மக்கள் கண்டறியும் படி எடுத்துச் சென்றன. [அதனாலேயே சில அரசாங்கங்கள் தங்களைப்பற்றி மற்ற நாடுகள் என்ன சொல்லிவிடுமோ என்று பயந்தன. அத்தகைய ஒரு சபையில் **உங்களைப்பற்றி** பலர் பேசுவது எப்படியிருக்கும் ?].

ஏதாவது ஒரு விஷயம் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டால், அதை உடனே பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கவேண்டும். அதேமாதிரி பிரெஞ்சில் சொல்லப்பட்டவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டும். சபையின் முதல் தலைவராக பெல் ஜியத்தைச் சேர்ந்த மெஸியர் ஸ்பாக் (Monsieur Spaak) தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் "மன்னிக்கவும்; நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பது என் காதில் விழவில்லை" என்று பிரஞ்சு மொழியில் சொன்னதை கூட, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. அங்கு கூடியிருந்த பிரதிநிதிகள் ரஷ்ய, ஸ்பானிய, சீன மொழிகளில் பேசிய போது, மொழி பெயர்ப்பாளர்கள், அப்பேச்சுக்களை முதலில் பிரஞ்சிலும் பிறகு ஆங்கிலத்திலும் சொல்லவேண்டியிருந்தது.

அங்கே கூடியிருந்த மொழி பெயர்ப்பாளர்கள் மிகவும் நுண்ணிய அறிவு படைத்தவர்கள். ஒருவர் பேசியதை அவர் பேசியதைபோலவே வேறு மொழியில் திருப்பிச் சொன்னார்கள். ஒருமுறை ஒரு பிரதிநிதி வெகு ஆத்திரத்துடன் தன்னுடைய ஆவேசமான பேச்சை முடித்ததும், அவர் பின் எழுந்த மொழி பெயர்ப்பாளர் அப்பேச்சை ஆங்கிலத்தில் அதேமாதிரி உரத்த குரலில் கைகளை ஆட்டிக்கொண்டு பேசி, மேஜையின் மேல் வைத்திருந்த ஒரு கூஜா தண்ணீரையும் கீழே தள்ளி விட்டு, பிரெஞ்சில் பேசிய பிரதிநிதி செய்ததைப்போலவே செய்து காட்டினார்.

எல்லாக் கூட்டங்களும் பகிரங்கமாகவே இருக்காது. பொதுச் சபையோ அல்லது அதன் முக்கிய குழுக்களில் ஒன்ருே தனிப்பட ஒரு கூட்டத்தை நடத்திக்கொள்ளலாம். அத்தகைய கூட்டங் கள் எதாவது முக்யமான அல்லது உபயோகமான விஷயங்களை ஆலோசிப்பதற்காகவே நடக்கும். ஆனல் அத்தகைய தனிப் பட்ட கூட்டங்களில் தீர்மானிக்கும் விஷயங்களை எல்லோர் முன் னிலையும் பிறகு தெறிவிக்கவேண்டும்.

ஒவ்வொரு வருஷமும் செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதிக்கு அடுத்த செவ்வாய்க்கிழமையன்று பொதுச்சபை கூடி ஐந்து அல்லது ஆறு வாரங்கள் தொடர்ந்துதான் நடவடிக்கை களைச் செய்யும். ஒவ்வொரு வருஷமும் தனக்கென ஒரு தலைவரையும், எழு உப தலைவர்களையும் வெவ்வேறு தேசங் களிலிருந்து தேர்ந்தெடுக்கும். சாஸனத்தில் கூறியிருப்பதை அனுசரித்து "ஒரு நாளில் எப்பொழுது கூடுவது?" ஒவ் வொரு பேச்சாளரும் எத்தனை நேரம் பேசலாம்? ஒவ்வொரு குழுவும் என்ன செய்யவேண்டும்?" என்பன போன்ற மற்ற பிரச்சினைகளுக்கும் தனிச் சட்டங்களை தானே இயற்றிக்கொள் ளும்.

ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில், பாதுகாப்புக் கௌன்சி லின் வேண்டுதலின் பேரிலோ, அல்லது அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரின் விருப்பத்தின் பேரிலோ, விசேஷ கூட் டத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.

அங்கு கூடியுள்ள பிரதிநிதிகள் முக்கிய அலுவல்களை ஆராய்ந்து, நிறைவேற்ற வேண்டிய சில காரியங்களைத் தீர் மானிப்பார்கள். அதன்பிறகு அவைகளை ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் மற்ற கிளைகளிடம் விட்டு விட்டு தங்கள் நிலை யான வாசஸ்தலங்களுக்குப் போய்விடுவார்கள்.

பொதுச்சபையில் வேலை செய்வதற்கு அங்கத்தின நாடுகள் ஒவ்வொன்றும் ஐந்து பிரதிநிதிகளை அனுப்பும். தவிர, மற்றும் ஐந்து பேர்களை, அசல் பிரதிநிதிகள் இல்லாத சம

யத்தில் அவர்களுக்குப் பதிலாக பணிபுரிய, அவர்களுடன் அனுப்பும். தவிர, அவர்களுக்கு உதவியாக ஆலோசகர்களையும் நிபுணர்களையும் அனுப்பும்.

தாங்கள் அனுப்பும் ஒவ்வொருவருக்கும் அந்தந்த நாடு களே சம்பளம் கொடுக்கின்றன. பொதுச் சபை கூடியிருக்கும் காலங்களில், நம்முடைய பிரதிநிதிகளுக்கு மாதமொன்றுக்கு 1,000 டாலர்களை நாம் கொடுக்கிறோம்.

ஒவ்வொரு நாடும் தங்கள் பிரதிநிதிகளைப் பொறுக்குவதி லும், அவர்களுடன் அனுப்பும் மற்றும் ஐவரை பொறுக்கு வதிலும், தனக்கென சட்டங்களையும் வழிகளையும் செய்து கொள்கின்றன. அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படும் பிரதி நிதிகள், நம்முடைய ஜனாதிபதியால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள். அவர் அப்பெயர்களை நம்முடைய 'செனட்' டிற்கு அனுப்பி வைக்கிறார். 'செனட்' அப்பெயர்களை அங்கீகரித்தால், அவர் கள் பொதுச் சபையில் நம் பிரதிநிதிகளாகிறார்கள். அவர் களில் யாராவது ஒருவரை 'செனட்' அங்கீகரிக்காவிடில், அவர்கள் அங்கீகரிக்கும்படியான வேறு ஒரு நபரை நம் ஜனாதிபதி குறிப்பிடவேண்டும்.

அவர்களில் ஒருவர் "பிரதம பிரதிநிதி" என்றழைக்கப் படுவார். இதனால் அவர் மிகவும் வயதானவர் என்பது பொருளல்ல. அந்த கோஷ்டிக்கு அவரே தலைவர் என் பதும், பொதுச் சபையின் பல குழுக்களில் வேலை செய்ய அங்கத்தினர்களைப் பொறுக்குவது அவருடைய வேலைதான் என்பதுமே அர்த்தம்.

இந்த உலகமக்கள் கூட்டத்தின் எல்லா அலுவல்களும் அதனுடைய பன்னிரெண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக் களாலேயே செய்யப்படும். ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதி களைக்கொண்டு, சில குழுக்கள் பெரியனவாயிருக்கும். உணர்ச்சி யூட்டும் விவாதங்களும், சர்ச்சைகளும், பேச்சுக்களும் சாதாரண மாக குழுக்களின் கூட்டங்களிலேயே நடைபெறும். வேலை

களை எளிதாக்கிகொள்ள ஒவ்வொரு குழுவும் ஏதாவது ஒரு விஷயத்திலேயே கவனம் செலுத்தும். ஒன்று பொருளாதாரத்தைப்பற்றியும், மற்றொன்று ஒரு நாட்டைப்பற்றி மற்றொரு நாடு தொடரும் வழக்குகளைப் பற்றியும், வேறொன்று கல்வி ஸ்தாபனங்களை அதிகரிப்பதுபற்றியும், உலகெங்கும் நிறைந்துள்ள எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவது பற்றியும் கவனிக்கும். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் ஒவ்வொரு காரியத்தைக் கவனிக்கவும் ஒரு தனிக்குழு இருக்கும்.

ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிய விவாதமும் நீண்டநேரம் நடைபெருமலிருக்க, பொதுச்சபை, அவ்விஷயத்தைப்பற்றி ஆலோசித்து அதன் முடிவுகளை தெரிவிக்குமாறு ஒரு குழு விடம் விட்டுவிடும். அதன்பிறகு அதை மேலெழுந்த வாரியாக விவாதித்து, அம்முடிவுகளை ஏற்றுக்கொள்வதா, இல்லையா, என்பதை முடிவாகத் தீர்மானிக்கும்.

இம்முறையில்தான் அங்கு ஒவ்வொரு காரியமும் நடைபெற்று வருகிறது. உதாரணமாக, தலைவர் "பாதுகாப்பு கௌன்சிலுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தைப்பற்றி இப்போது விவாதம் நடக்கும்" என்று அறிவிப்பார்.

உடனே ரஷ்யப்பிரதிநிதி கோஷ்டித்தலைவர் தம் கையை உயர்த்துவார்.

உடனே அவைத்தலைவர் "சோவியத் குடியரசின் பிரதிநிதி இப்பொழுது பேசுவார்" என்று சொல்வார்.

மிஸ்டர் க்ரோமிகோ (Mr. Gromyko) மேடைமீதேறி, பிரதிநிதிகள் யோசிப்பதற்காக சிறிது அவகாசம் கொடுக்க வேண்டுமென்றும், அதனுல் இந்தத் தேர்தலை அடுத்த திங்கட்கிழமை பிற்பகல் வரை தள்ளிப்போடவேண்டுமென்றும் பிரேரேபிப்பார்.

மற்ற பேச்சாளர்கள் அவர் சொன்னதை எதிர்ப்பார்கள். அவைத்தலைவர் " இனிமேல் இவ்விஷயத்தின் மேல் பேச எவரும் விரும்பாவிடில், அவரவர்கள் தங்கள் சம்மதம் அல்லது ஆட்சேபங்களைத் தெரி விக்கலாம் " என்று கூறுவார்.

இது ஒரு சாதாரண காரியம். அடுத்த திங்கட்கிழமை வரை அவர்கள் காத்திருக்க வேண்டுமா ? வேண்டாமா ? . . . . இதை ஆமோதிப்பவர்கள் எழுந்து நின்று தங்கள் சம்மதத்தைத் தெரிவிப்பார்கள்.

உடனே ஒருவருக்கொருவர் மெதுவாய்ப் பேசிக்கொள்ளவார் கள். அவர்கள் பேச்சுக்கள் பத்து அல்லது அதற்கும் மேற் பட்ட மொழிகளில் இருக்கும். ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு ஓட்டுத்தான் உண்டு. அந்தப் பிரச்னையை அனுசரித்து ஓட்டுக் கொடுப்பதா, வேண்டாமா, என்பதுபற்றி ஒவ்வொரு கோஷ்டித் தலைவரும் தன் இதர பிரதிநிதிகளைக் கலந்தா லோசிப்பார்.

அடுத்து ஒன்பது நாட்டுக் கோஷ்டிகளின் தலைவர்கள் எழுந்து நிற்பார்கள்.

இத்தீர்மானத்தை எதிர்ப்பவர்களெல்லாம் எழுந்து நிற்க லாமென்று ஒரு குமாஸ்தா சொல்வார். முப்பத்திநான்கு கோஷ்டிகளின் தலைவர்கள் எழுந்து நிற்பார்கள்.

ஒன்பதும் முப்பத்திநான்கும் நாற்பத்தி மூன்றுதான் ஆயிற்று. இன்னும் பல தேசங்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்காமலே இருந்துவிட்டன. வலிவுள்ள பெரிய நாடுகள் கொண்டுவரும் சில பிரச்னைகள் மீது தங்கள் எதிர்ப்பைப் பகிரங்கமாய்த் தெரிவிக்க சில சிறிய நாடுகள் பயப்படுவது வழக்கம்.

இருந்தும், இவ்விஷயத்தில் தள்ளிப்போடவேண்டும் என்ற கோரிக்கை தோல்வியுற்றது. கடைசியாக அவைத்தலைவர்

" எல்லோரும் இப்பொழுது ஓட்டுப்போடவேண்டும். பிரதிநிதிகள் தங்கள் ஓட்டுக்களைப் போடலாம் " என்றறிவிப்பார். மீண்டும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் சப்தமும், தேர்தலுக்கு நிற்கும் நாடுகளைப்பற்றிய விவாதமும், அங்கங்கே நடைபெறும். இது ஒரு நடைமுறை வழக்கமாகும். இது ஒரு தேர்தல். இது ரகசிய ஓட்டுகளின் மூலம் நடைபெற்றாக வேண்டும்.

ரகசிய ஓட்டு முறை மிகவும் முக்கியமானது. எல்லா சிறிய நாடுகளும் ஒரு பயமுமின்றி தங்கள் இஷ்டம்போல் ஓட்டுப் போடலாம்.

குமாஸ்தா ஒவ்வொரு பெயராகப் படித்துக்கொண்டு வர, ஒவ்வொரு பிரதிநிதியும் தங்கள் கையிலுள்ள ஓட்டைப் பெட்டியில் போடுகிறார்கள்.

" பொதுச்சபை சனிக்கிழமைகளில் கூடலாமா ? " என்பது போன்ற சாதாரண பிரச்னைகளுக்கு பாதிக்கும் மேலான அங்கத்தினர்கள் சாதகமாக ஓட்டுச் செய்தால் போதுமானது. ஆனால் சில முக்யமான பிரச்னைகளுக்கு இம்மாதிரி சலுகை காட்டப் படுவதில்லை. துப்பாக்கிகள் வெடிகுண்டுகள் இவைகள் மீது நாடுகள் செலவிடும் பொருளை கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றை ஆராயும்போது, குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினராவது சாதகமாக இருந்தால்தான், அத்தீர்மானம் நிறைவேற்றப்படும்.

இருந்தாலும், வெகு முக்யமான பிரச்னைகள், அவைகளுக்கு எதிராக 18 ஓட்டுகளிருந்தாலும் நிறைவேற்றப்படும். இதிலிருந்து அங்கு நிறைவேற்றப்படும் முடிவுகள், சில நாட்டினரால் விரும்பத் தகாதனவாகவே யிருக்குமென்பது தெரிகிறது. உதாரணமாக, அமெரிக்கா வெகு தீவிரமாக எதிர்க்கும் சில பிரச்னைகளைக் கூட, பொதுச் சபையில் நிறைவேற்றி விடலாம்,

அமெரிக்க ஐக்கிய தேசம், ஐ.நா.வில் சங்கம் வகிக்கும் 21 சிறிய நாடுகளுக்கு ஈடானதாகவிருக்கிறது. இருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றுக்கும் உள்ளதுபோலவே அமெரிக்காவுக்கும் ஒரு ஓட்டுத்தான் உண்டு. ஆங்கில அரசாட்சியின் ஆறு 'காமன்வெல்த்' நாடுகள் ஆன இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கானடா, இந்தியா, நியூஜிலண்ட், தென் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய இவையாவும் அங்கத்தின நாடுகள் தான். அவர்களெல்லோரும் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கும்போது, அவைகள் ஒருபக்கமாகவே இருந்தால், ஆங்கில ஆட்சிக்கு ஆறு ஓட்டுகள் ஆயிற்றே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நடைமுறையில் அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகவில்லை என்பதும், ஒருவருக்கொருவர் முரண்பாடாகவே தங்கள் முடிவுகளைத் தெரிவித்தார்கள் என்பதும் உண்மை.

சோவியத் குடியரசில் மூன்று நாடுகளிருக்கின்றன— சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கியக் குடியரசு, பைலோ ரஷ்யா (வெள்ளை ரஷ்யா) யூக்ரேன், என்பனவாகும்.

பொதுச் சபைக்கு சட்டமியற்றும் அதிகாரம் இல்லை. விஷயங்களை விவாதிக்கும் உரிமையும் சிபார்சு செய்யும் உரிமையுமே உண்டு.

பொதுச் சபையின் பிரதிநிதிகள், உலகிலுள்ள நாடுகள் ஒன்றையொன்று நடத்தும் முறைகளைப்பற்றி விவாதிக்கலாம். உள்நாட்டு விவகாரம் என்பது தவிர மற்றெல்லா விஷயங்களும், இவைகளுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன. உதாரணமாக, அடுத்த வருஷத்திற்கு முற்போக்கு வாதியா அல்லது குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவரா ஒரு மாகாணத்திற்கு கவர்னராக நியமிக்கப்படவேண்டும் என்ற விஷயத்தையோ, அல்லது நியூ ஜர்ஸி நகரத்தின் பாதைகளில் எத்தனை மைல் வேகத்தில் தான் செல்லவேண்டும் என்பது போன்ற விஷயங்களையோ, பொதுச்சபை விவாதிக்கக்கூடாது. இதுபோன்ற உள்நாட்டு

விவகாரங்கள் அச்சபை கவனிக்கும் விஷயங்களல்ல. ஆனல் ஒரு தேசத்திலிருந்து மற்ருெரு தேசத்திற்குப் போதைப் பொருள்கள் கொண்டுபோய் விற்ருலோ, அல்லது 'பெரு' என்ற தேசத்திலிருந்து சில ஆசான்களை வேறு ஒரு தேசத் திற்கு அங்குள்ள பள்ளிக்கூடங்கள் நன்முறையில் நடப்பதற் காக ஒருவருஷ காலத்திற்கனுப்ப ஒருவர் ஏற்பாடு செய் தாலோ, அவ்விஷயங்களைப்பற்றி சபை விவாதிக்கலாம். ஏனெ னில் அவைகள் நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயங்களாகும்.

பொதுச் சபையின் முக்கியமான அலுவல்களைப்பற்றிக்கூட விவாதங்கள் நடக்கும். ரேடியோவின் மூலமாகவும், பத்திரி கைகளின் மூலமாகவும், உலகெங்கும் பத்திரிகைகள் வாயிலாக வும், திரைப்படங்களின் மூலமாகவும், இந்தச் சபையில் செய் யப்படும் காரியங்களெல்லாம் மற்ற நாட்டு மக்களுக்கு தெரிவிக் கப்படுகின்றன.

உலகிலுள்ள எல்லா நாட்டினரும் அடிபணியக்கூடிய சட்டங் களை பொதுச் சபை இயற்றமுடியாது. நம்முடைய காங்கிரஸ் சொல்லுவது போல " நீங்கள் இதைத்தான் செய்யவேண்டும் " என்றும் சொல்லமுடியாது. அவ்வளவு அதிகாரத்தைப் பொதுச் சபைக்களிக்க அரசாங்கங்கள் விரும்பவில்லை. ஒரு நாட்டிலிருந்து மற்ருெரு நாட்டிற்கு அபினி கொண்டுசெல்வது கூடாது என்று அது கூறலாம். இத்தீர்மானத்தை அழகான காகிதத்தில் அச்சிட்டு எல்லா அரசாங்கங்களுக்கும் அனுப்பும். சில நாடுகள் அபினி வியாபாரத்தைத் தடுக்கும். சில நாடு கள் தடுக்காது.

பொதுச்சபை திட்டமிட்ட ஒரு காரியத்தை ஒரு நாடு செய்ய மறுத்துவிட்டால்—உதாரணமாக, ஒருநாடு அபினி விற்பதை அனு மதித்தாலோ, அல்லது ஆசான்களை மாற்றும் விஷயத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்தாலோ,—இதர நாடுகளின் அங்கத் தினர்களும் பிரதிநிதிகளும், அதுபற்றி பொதுச் சபையில் பிரஸ்தாபிக்கலாம். அந்நாடுகளுக்கு நிலைமைகளைப்பற்றிப்

போதித்து, தங்களுடன் சேரும்படி சொல்லலாம். பல பிரச்னைகள் இதே முறையில் சமரஸமாகத் தீர்க்கப்பட்டுவிடுகின்றன. நாடுகளும், பொதுச் சபைச்சொல்வதுபோலவே நடக்கின்றன.

மூன்று பெரிய காரியங்களில் பொதுச்சபை தன் கவனத்தைச் செலுத்துகிறது.

(1) எல்லோரும் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கை நடத்துவது.
(2) உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவது.
(3) ஸ்தாபனத்தை நல்ல முறையில் நடத்துவது.

ஜனங்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்பதற்காகப் பாடுபடுவதில், பொதுச்சபை பொருளாதார சமூக சபையின் உதவியைப் பெரும் அளவில் பெற்றிருக்கிறது. அந்த சபையைப் பற்றியும், மக்கள் ஒன்றுகூடி உழைப்பதற்கு எவ்வாறு அச்சபை உதவுகிறதென்பதுபற்றியும், பின்னால் தனி அத்தியாயத்தில் சொல்லப்படும். மேலும் கீழ்காணும் விஷயங்களும் அங்கே விளக்கப்படும் :—

நல்ல உணவு, உடை, வீடு இவைகளை ஜனங்கள் அடைய உதவும் வழிகள்.

எல்லோருக்கும் வேலை கிடைக்கும் வழிகள்.

ஒரு நாட்டு மக்கள் மற்ற நாட்டுப் பொருள்களை சுலபமாய்ப் பெறுவதற்கான வழிகள்.

பல நாடுகளில் வசிக்கும் மக்களை சித்திரம், புத்தகம், திரைப்படம், ரேடியோ, பாடசாலைகள், கல்லூரிகள் இவற்றின் உதவியால் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும்படி செய்தல்.

நோய்களைத் தொலைத்து, மக்கள் வனப்புடன் வாழ வழி செய்தல்.

மக்களுக்கு அதிக சுதந்திரமளித்தல்.

மேலே சொல்லியவைகளில் இரண்டாவதாகக் கூறப்பட்ட நாடுகளுக்குள் ஏற்படும் சண்டைகளை சமாதான முறையில் தீர்ப்பது பாதுகாப்புக் கௌன்சிலின் வேலையாகும். அதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம். ஆனால், இவ் விஷயங்களிலெல்லாம், பொதுச் சபை உதவி செய்யும். இரண்டு நாடுகள் சண்டைக்காரம்பித்தாலோ, அல்லது சண்டை ஏற்படும் அறிகுறிகள் தொன்றும்போதோ, உடனே பாதுகாப்பு கௌன் ஸில் அவ்விஷயத்தைக் கவனிக்கவேண்டும். அப்படிச் செய் யத்தவறினால், பொதுச்சபை அவ்விஷயத்தைப்பற்றி விவா தித்து, தன்னுடைய முடிவுகளை அதற்குச் சிபார்சு செய்யும்.

ஐக்கிய நாடுகள் சாஸனத்தின் பன்னிரண்டாம் பகுதியில், பாதுகாப்புக் கௌன்ஸிலில் அவ்விஷயம் விவாதிக்கப்படும் போது, பொதுச் சபை ஒரு நடவடிக்கையும் எடுக்கக்கூடாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நியாயமானதே. ஏனென்றால் **பாக்லண்டு**, தீவுகள் அர்ஜண்டைனாவுக்குச் சேர்ந்தவை என்று பொதுச்சபை முடிவு செய்யும்போது, பாதுகாப்புக் கௌன்சில், அத்தீவுகள் இங்கிலாந்தைச் சேரவேண்டுமென்று முடிவு செய் தால், அம்முடிவுகள் ஒரு போரை நிறுத்துவதற்குப் பதிலாக மற்றொன்றை ஆரம்பித்துவைப்பதாகிறது. ஆதலால் கௌன் ஸில் செய்யத் தவறிவிட்ட ஒரு விஷயத்தைத் தான் பொதுச் சபை ஆராய வேண்டும்.

பொதுச் சபையின் முக்கியமான காரியம் சமாதானம் நிலவு வதற்கான பொது வழிகளை தீர்மானிப்பதே ஒழிய, தகராறு களைத் தீர்த்து வைக்க முயலுவதல்ல. அங்கத்தின நாடு களுக்குள் ஏற்பட்டிருக்கும் விரும்பத்தகாத சட்டங்களை அகற்ற வும், உணவு, எண்ணெய், ரப்பர் ஆகிய பொருள்களை தன் நாட்டிற்குமட்டுமே இறக்குமதி செய்துகொள்ளும் சுயநலத்தைத் தடுக்கவும், சண்டைகள் மூள்வதற்கு அடிப்படைக் காரணங் களான நியாயமற்ற உடன்படிக்கைகள் ஏற்படாமலிருக்க முயலு வதும் அதன் வேலைகளாகும்.

துப்பாக்கிகள், 'டாங்கிகள்,' யுத்தக் கப்பல்கள் இன்னும் இதர பயங்கர ஆயுதங்கள் இவைகளின்மீது உலகத்திலுள்ள நாடுகள் செலவிடும் பொருளை எவ்வெவ்வழிகளில் குறைக்க முடியும் என்று விவாதிப்பார்கள்.

எல்லாமக்களும் எளிதில் அறிந்துகொள்ளும்படியானதும், எல்லா நாடுகளுக்கும் பொதுவானதுமான ஒரு சட்டத்தை எவ்வாறு இயற்றுவது, எப்படி அமுலுக்குக் கொண்டுவருவது என்பன போன்ற விஷயங்களில் அவர்கள் முயலவேண்டும் [இவ்விஷயத்தைப்பற்றி 'சர்வதேச நீதி மன்றம்' என்ற அத்தியாயத்தில் விரிவாகச் சொல்லப்படும்].

எல்லா நாடுகளின் அங்கத்தினர்களும் பிரதிநிதித்துவம் பெறும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒரு பிரிவே பொதுச் சபையானபடியால், அந்த ஸ்தாபனத்தின் மற்ற கிளைகளையும் அதுவே நிர்வகிக்க வேண்டும். இதைச் செய்வதில், விவாதம் செய்வதோடும், தன் சிபாரிசுகளைச் செய்வதோடும் அது நிற்காது. முடிவான சில தீர்மானங்களையும் அது செய்யும்.

ஒரு நாடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் சேரவேண்டு மென்றாலோ, அல்லது அதனின்றும் விலகவேண்டுமென்றாலோ, பொதுச் சபையின் அனுமதி வேண்டும்.

பாதுகாப்புக் கௌன்சிலுக்கும் பொருளாதார சமூக சபைக்கும் தர்மகர்த்தா சபைக்கும், நீதி மன்றத்திற்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அதனுடையதே. [இவ் விஷயங்கள் சந்தர்ப்பம் நேரும்போது அங்கங்கே விரிவாகக் கூறப் படும்]. பரிபாலன உடன்பாடுகளை ஒப்புக்கொள்வது குறித்து அது ஓட்டுச் செய்யும். அலுவலகம் வேலை செய்ய வேண்டிய வழிகளையும் அதுவே தீர்மானிக்கும்.

ஒவ்வொரு வருஷமும் மற்ற கிளைஸ்தாபனங்கள் என்ன காரியங்களைச் செய்தன என்பதுபற்றி ஒரு அறிக்கை அனுப்ப வேண்டும். அவைகளை பொதுச் சபை ஆராயும்.

அடுத்தபடியாக அவைகள் என்ன செய்யவேண்டும் என்பது குறித்தும் பொதுச்சபை அவைகளுக்குச் செய்திகளையனுப்பும். அநேகமாக அவைகளும் அதன்படியேதான் நடக்கும்.

ஸ்தாபனத்தை எவ்வழிகளில் சீர்திருத்தவேண்டும் என்று பிரதிநிதிகள் விவாதிப்பார்கள். சாஸனத்திற்குக் கொண்டு வரப்படும் ஒவ்வொரு திருத்தத்தின்பேரிலும் ஓட்டுச் செய்வார்கள்.

பண விவகாரத்தையும் பொதுச்சபையே கவனிக்கிறது. போதிய அளவு பொருள் சேகரிப்பது அதற்குக் கஷ்டமாயிருக்கலாம். அது ஒரு காங்கிரஸோ, பார்லிமெண்டோ அல்ல. ஜனங்களின்மீது வரிவிதிக்க முடியாது. ஸ்தாபனத்திற்கு எவ்வளவு பொருள் கொடுக்க நாடுகள் கடமைப்பட்டுள்ளன என்பதை விளக்கி, அவைகள் கொடுக்கத்தவறினால், அவைகளின் ஓட்டுரிமையைப் பறித்துக்கொள்ளலாம்.

ஸ்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவும், வருஷத்தில் எவ்வளவு செலவு செய்யவேண்டும், எதற்காக செய்யவேண்டும், என்பனவற்றையும் பொதுச் சபையே முடிவு செய்கிறது.

இது மிகவும் முக்யமானது. ஏனெனில், ஒரு பிரிவு செய்ய எண்ணும் காரியங்கள் பணச் செலவிலேயே முடிகின்றது. பொருளுதவி செய்ய மறுத்து, ஒரு காரியம் நடைபெறாமல் பொதுச் சபை தடுக்கமுடியும். இவ்வதிகாரம், ஸ்தாபனத்தின் மற்ற கிளைகளை அடக்க, அதற்கு உதவுகிறது.

அத்தியாயம் 4.

சமாதானத்தை நிலைநிறுத்தும் ஸ்தாபனம்

பாதுகாப்புக் கௌன்சில்.

பொதுச் சபையில் ஆண்களும் பெண்களும் சர்ச்சை செய்து தீர்மானித்து, உடனடியாகச் செய்ய வேண்டிய சில காரியங்களை வெளியிடுவார்கள். அதன் பிறகு அச்சபை கலைந்துவிடும். அதன் பின்னரும், சிறியதாயிருந்தாலும் சக்திவாய்ந்த பாதுகாப்புக் கௌன்சில் வேலை செய்துகொண்டேயிருக்கும். உலகத்தில் எந்தப் பகுதியில் சமாதானத்திற்குப் பங்கம் நேரிட்டாலும், அதை கவனிக்கப் பாதுகாப்புக் கௌன்சில் உடனே தயாராகிறது.

பள்ளிச் சிறுவர்கள் ஒருவரோடொருவர் சிறு சச்சரவுகள் செய்துகொள்ளும்போது, ஒரு நல்ல ஆசிரியர் அவர்கள் சச்சரவை சமாதானமாகத் தீர்த்துவைக்க முயலுவார். அம்மாதிரி ஒரு ஆசானுக்கு இப்பாதுகாப்புக் கௌன்சிலை ஒப்பிடலாம். அது சச்சரவிலீடுபடும் நாடுகளைக் கண்டித்து, அவர்களின் தகராறுகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளும்படி சிபார்சுகளைச் செய்யும்.

ஆனால் ஒருநாடு மற்றொரு நாட்டைத் தாக்கப் பிரயத்தனம் செய்தால், பாதுகாப்புக் கௌன்சில் ஒரு போலீஸ் அதிகாரியைப் போலத் தன் காரியங்களைச் செய்ய வாரம்பிக்கும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பலத்தையெல்லாம், சச்சரவுக் காரணமான நாட்டிற்கெதிராக ஒன்று சேர்க்கும். ஆதலால், பாதுகாப்புக் கௌன்சில் தன் வேலைகளைச் செய்வதில், ஒரு நற்புத்தியுள்ள ஆசான்போல நடக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

அரைவட்ட வடிவமுள்ள நீண்ட மேஜைமுன் எழுந்து நின்று ஒரு தேசப் பிரதிநிதி, "எங்களுக்கு அடுத்த நாட்டிலிருக்கும் பலம் மிக்க . . . . . தேசத்தவன் எங்கள் நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறான்" என்று சொல்வார். உடனே கைப்பிடிபோட்டுப் பச்சை நிறமுள்ள பதினேரு நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் பிரதிநிதிகள் துணுக்குற்று எந்த உதவியை அவர் கேட்கப் போகிறாரோ என்ற கேள்விக் குறியுடன் நோக்குவார்கள்.

அவர் தொடர்ந்து "இவ்விஷயத்தை இப்பாதுகாப்புக் கௌன்சிலின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். ஏனென்றால், தற்போதுள்ள நிலைமையைப் பரிசீலித்து இத்துன்பத்திலிருந்து நாங்கள் விடுபட ஒரு வழியை இக்கௌன்சில் வகுத்துக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று சொல்வார்.

கௌன்சிலின் தலைவர் தன்னருகில் வீற்றிருக்கும் பொதுக் காரியதரிசியிடம் ஒரு நிமிஷம் காதுடன் பேசுகிறார். அதே சமயம் அவருக்கருகில் மற்றொருபுறம் அமர்ந்திருக்கும் உதவிப் பொதுக் காரியதரிசி, தான் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறிய புத்தகத்தில் சில குறிப்புகளை எழுதிக்கொள்கிறார்.

பதினேரு பிரதிநிதிகளுக்கும் பின்னால், அவர்களின் உதவியாளர்கள் இருவரிசைகளாக அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னால் நான்கு மொழி பெயர்ப்பாளர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவர் டி-வடிவமான ஒரு மேஜையின் முன் நின்று, அவர் சொன்னதை பிரஞ்சு பாஷையில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். மொழிபெயர்ப்பாளர்களுக்குப் பின்னால், ஸ்தாபனத்தில் வழங்கும் பாஷைகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய, ரஷ்ய ஆகிய பாஷைகளில் திறமை பெற்ற சுருக்கெழுத்துக்காரர்கள் சிலர் அமர்ந்திருந்தனர்.

அவைத் தலைவர், "வேறு யாரேனும் இவ்விஷயத்தைப்பற்றி பேச விரும்புகிறீர்களா ?" என்று கேட்டார்.

ஒரு பிரதிநிதி தன் கையிலிருந்த மஞ்சள் பென்சிலை உயரத் தூக்கி ஆட்டினார். உடனே பிரகாசமான விளக்குகள் எரிய ஆரம்பித்தன. கௌன்சில் கூடியுள்ள அறை, எதிரொலி செய்யாதபடி, அமைதி நிலவும் விதத்தில், நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு பொருத்தியிருந்தது. எல்லோரும் மௌனமாயிருந்தனர். பிரதிநிதிகளுக்குப் பின்னால் சப் தத்தை கட்டுப்படுத்தும் நவீன இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. சபையே மௌனமாயிருந்தது. சுவர்களெல்லாம் தீ விபத்தி லிருந்து காப்பாற்றப்படும் ஒருவகைத் துணியினால் மூடப்பட் டிருந்தது. கீழே தரையில் விரிக்கப்பட்டிருந்த கனமானதும் மிருதுத் தன்மையுடையதுமான பச்சை நிறக்கம்பளம், அங்கு நிலவியிருந்த மௌனத்தைப் பிரதி பலிக்கச் செய்வதே போலிருந்தது.

அந்தப் பிரதிநிதி பேசி முடிந்ததும், மொழி பெயர்ப்பாளர் அதை வேறு மொழியில் விளக்கிச் சொன்னார். அவைகள் ஒலி பரப்பிகளின் உதவியினால் அந்த அவையின் நாற்புறங் களுக்கும் பத்திரிகையாளர்கள் அமர்ந்திருந்த '**காலரி**'க்கும் கொண்டுபோகப்பட்டன.

எழுநூற்றுக்கு மேற்பட்ட ஜனங்கள் அங்கு கூடியிருந்தாலும் கூட, சொற்பொழிவுகளுக்குப் பிறகு கைத்தட்டலோ, எக்க ளிப்போ, இருக்கவில்லை. அங்கே நடைபெறும் காரியம் இதை விட முக்கியமானது. அக்கௌன்சிலில் பத்திரிகைக்காரர் களும், கௌன்ஸிலில் அங்கத்தினராயிராமல் பொதுச் சபை யில் மட்டும் அங்கம் வகிக்கும் நாற்பது தேசங்களிலிருந்து வந்த பார்வையாளர்களும் நிரம்பியிருந்தனர். மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள இடங்களே உங்களுக்கும், எனக்கும், மற் றும் கௌன்சில் நடவடிக்கைகளை காணவேண்டும் என்று வரு பவர்களுக்காகவும் காலியாகவிருந்தன.

அங்கு கூடியிருந்த நவீன பிரதிநிதிகள், சாதாரண உத்தி யோக உடையணிந்திருந்தாலும், அவர்களின் ஓட்டுகளுக்கு

மிக்க பலமிருந்தது. உலகில் மிகுந்த பலம் பொருந்திய சேனு பலத்தை அவர்களின் ஓட்டுகள் கட்டுப்படுத்தின. அவசியம் நேர்ந்தால், போருக்காக தயார் செய்யும் ஒரு அரசாங்கத்தை எதிர்த்து, அதை ரத்த வெள்ளத்தில் நசுக்கிவிட முடியும்.

நீண்ட வளைவான மேஜையின் கடைசியில் சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் கௌன்சிலில் அங்கத்தினரல்லாத சிலர் வீற்றிருந்தனர். அவர்களின் முகங்கள் வாட்டமடைந்து காணப்பட்டன. தங்கள் நாடுகளை பயமுறுத்தும் பலமிக்க பெரிய நாடுகளிடமிருந்து தங்கள் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று பாதுகாப்புக் கௌன்சிலிடம் வேண்டிக்கொள்ள அவர்கள் வந்திருந்தனர். மனைவிகள் குழந்தைகள் இவர்களின் எதிர்கால எண்ணங்களும், தந்தைமார்களின் உணர்ச்சிகளும் அவர்களுடனே அவ்வவையில் புகுந்து, அப்பிரதிநிதிகள் வெளியேறும்போது, அங்கேற்பட்ட முடிவுகளின்படி, புத்துணர்ச்சியுடனே அல்லது தோல்வி மனப்பான்மையுடனே திரும்பிச் சென்றன.

பாதுகாப்புக் கௌன்சில் பதினொரு பேர்களைக்கொண்டது. அப்பதினொரு பேர்களும், பாதுகாப்புக் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் பதினொரு தேசங்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள்.

உலகிலேயே மிக்க பலம் பொருந்திய ஐம்பெரும் வல்லரசுகள், கௌன்சிலில் நிரந்தர அங்கம் வகிக்கின்றன. அவை : சீனு, பிரான்சு, சோவியத் குடியரசு, கிரேட் பிரிட்டன், அமெரிக்கா இவையான. [கிரேட் பிரிட்டன் என்ருல், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து, இவ்வளவும் சேர்ந்த ' யுனைடெட் கிங்டெம் ' (United Kingdom)].

பாதுகாப்புக் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் மற்ற ஆறு நாடுகளும் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படுவனவாகும். பொதுச்சபை ஒரு ஆண் அல்லது பெண்ணை கௌன்சிலுக்கு

அங்கத்தினராகத் தேர்ந்தெடுப்பதில்லை. . அது ஒரு நாட்டையே தேர்ந்தெடுக்கிறது.

ஒவ்வொரு வருஷமும் மூன்று நாடுகளை இரண்டு வருஷ காலத்திற்குப் பொதுச்சபை தேர்ந்தெடுக்கும். ஒரு நாட்டின் கால வரையறை முடிந்துவிட்டால் அதை மீண்டும் தேர்ந்தெடுக்க முடியாது. மற்றவர்களுக்கும் வாய்ப்பு அளிப்பதற்காக, குறைந்தபக்ஷம் ஒரு வருஷத்திற்காவது அந்நாடு வெளியே யிருக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஆறு நாடுகளும் சிறு நாடுகளாகவே யிருக்கும்; அல்லது நிரந்தர அங்கம் வகிக்கும் ஐந்து வல் லரசுகளைப்போல அத்தனை பெரியதாகவோ, வன்மையுடைய தாகவோ இராது. ஆகையால் ஐந்து 'பெரிய' அங்கத்தினர் களும், ஆறு 'சிறிய' அங்கத்தினர்களும் அங்கிருக்கிறார்கள் என்று நாம் சொல்லலாம்.

அங்கத்தினரான ஐம்பெரும் வல்லரசுகளில் வசிப்பாரின் ஜனத்தொகை, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக் கும் மற்ற எல்லா நாடுகளிலும் வசிக்கும் கூட்டு ஜனத்தொகை யைவிட அதிகமேதான் என்பதை நீங்கள் அறிந்துகொண் டால், அப்பெரிய ஐந்து நாடுகளும் மிக்க கருணைபடைத்தவை என்று நீங்கள் சொல்வீர்கள். ஏனென்றால் அதிகமான ஜனத்தொகை பெற்றிருந்தும், அவர்கள் பாதுகாப்புக் கௌன் சிலில் பாதிக்கும் குறைவான ஸ்தானங்களையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கௌன்சில் அறையில் கூடியுள்ள பிரதிநிதிகள், ஒரு முறை சொல்லப்பட்ட விஷயங்களை மீண்டும் வேறு பாஷைகளில் சொல்லப்படுவதால் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் விடுகிறார்கள். அப்பதினோரு பிரதிகளும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாஷைகளில் பாண்டித்யம் பெற்றவர்கள். ஆதலால் அவர் கள், மொழி பெயர்ப்பாளர் சிறு தவறுகள் செய்யும்போதும் அவர்களுடன் பேதங்கொண்டு, அவர்களின் மொழிபெயர்ப்பின்

போது குறுக்கிட்டனர். அவர்கள் "நான் சொல்லியதை நீங்கள் சரிவர மொழி பெயர்க்கவில்லை" என்று கூறுவார்கள். மொழி பெயர்ப்பாளர்கள் திரும்பவும் மொழிபெயர்க்க முயலு வார்கள்.

கூட்டம் நடைபெறும்போது ஒரு பிரதிநிதி பத்திரிகை படித் துக் கொண்டிருப்பதாக படங்களில் நீங்கள் பார்க்க நேரிட்டால் அவர் தன்னுடைய காரியங்களில் அசிரத்தையாக இருக்கிறார் என்று நீங்கள் முடிவுகட்டிவிடக் கூடாது. ஒரு நீண்ட சொற் பொழிவைப் பிரதிநிதிகள் முதலிலேயே புரிந்து கொண்டு விட்டார்களானால் மொழி பெயர்ப்பு ஆரம்பமானதுமே அவர் களில் சிலர், அவ்வறையை விட்டு வெளியேறி உலாவுவது வழக்கம்.

ஒவ்வொரு பிரதிநிதி பேசும்போதும், அவர் தலைக்கு மேலுள்ள பிரகாசமான விளக்குகள் எரிந்து, கேமராக்களும், டெலிவிஷன்களும் தங்கள் வேலைகளைச் செய்வதற்கும் அவர் களுடைய முகபாவங்களைப் படம்பிடித்துக் காட்டுவதற்கும் உதவு கின்றன. ஒவ்வொரு பிரதிநிதிக்கு முன்பும் தனித் தனியாக ஒலி பரப்பும் கருவிகள் (Microphone) அவர்கள் பேச்சை உலக முழுவதும் உள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் கேட்கும்படி செய்கின்றன. காலரிகளில் கூடியுள்ள நூற்றுக் கணக்கான பத்திரிகைக்காரர்கள் அங்கு நடக்கும் நடவடிக் கைகளை ஒவ்வொரு நகரத்திற்கும் தந்தியில்லாக் கம்பிமூலம் அனுப்புவார்கள்.

ஒரு நாட்டிலிருந்து ஒருவராக பதினேரு அங்கத்தின நாடுகளிலிருந்தும் (தேர்ந்தெடுக்கப்பட்ட) பதினேரு பேர்களைக் கொண்டது **நிபுணர்கள் குழு** என்று சொல்லப்படும். அவர்கள் ஒன்று சேர்ந்து கௌன்சில் கூட்டங்களுக்கு நடை முறையை யும், மற்ற சட்டங்களையும் வகுப்பார்கள். எந்தக் காரியத் தையும் முடிவாகத் தீர்மானிக்கும் சக்தி இக்குழுவுக்கு இல்லை என்றாலும், தன் ஆலோசனைகளை கௌன்சிலுக்கு அது கூற லாம்.

வளைந்த மேஜைமுன் அமர்ந்திருக்கும் பிரதிநிதிகள் பேசும் விஷயங்களை ஜனங்கள் உன்னிப்பாய் கவனிப்பார்கள். அந் நிபுணர்களின் பேச்சு, அவ்வளவு வெளிப்படையாக உலகமே இதுவரை கேட்டிராத வகையில் அமைந்திருக்கும். காரசார மான விவாதம் நடந்தாலும், பிரதிநிதிகள் சிறிதும் கலங் காமல் எப்போதும் போல் அமைதியாகவே யிருப்பார்கள்.

இப்பதினேரு பேர்களும் எப்பொழுதும் மேஜையருகில் அமர்ந்து விவாதித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனல் சாதாரணமாக அவர்கள் தங்களுக்கென ஒதுக்கிவிடப்பட்ட தனி அறையில் அமர்ந்து, உலகிலேற்பட்டிருக்கும் கஷ்டங்களை தீர்க் கும் வழிகளைப்பற்றி ஆயிரக்கணக்கான மக்கள் எழுதியுள்ள வைகளைப் படித்து ஆராய்ந்து கொண்டிருப்பார்கள்.

இரு கூட்டங்களுக்கு இடையேயுள்ள காலத்தில், பெரும் பகுதியை, கௌன்சிலில் நடைபெறும் விவாதங்களின்மீது சர்ச்சை செய்து செலவிடுவார்கள். ஆதலால் கௌன்ஸில் அறையில் பேசப்படும் சொற்பொழிவுகளெல்லாம் சாதாரண மாக அங்கு நிகழும் விவாதத்தின் ஒரு சிறு பகுதியேயாகும்.

உதாரணமாக, ஒரு கூட்டத்தின்போது, பிராங்கோவின் ஸ்பெயினை ஐக்கிய நாடுகள் விசாரிக்கவேண்டுமென்று ஆஸ் திரேலியப் பிரதிநிதி பிரேரேபித்தார். மற்ற எவரும் எவ்வித அபிப்பிராயமும் வெளியிடவில்லை. கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் இருவர் மூவராக ஒன்றுகூடி அவ்விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினர். அதன்முடிவாக, அவர்கள் எல்லோரும் பிராங்கோ ஸ்பெயினை விசாரிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். ஆனல் ஆஸ்திரேலியாவின் அந்த கோரிக்கையின்பேரில் கூட்டத்திலேயே ஓட்டு எடுத்திருந்தால், அது தோற்றுப்போயிருக்கும். ஏனென்றல் பல கோஷ்டிகள், அப்பிரேரேபணையின் வாசகங்கள் சரியில்லை என எதிர்த்தன. அடுத்த ஐந்து தினங்களில், திரைக்குப் பின் நடந்த சம் பாஷணைகளினுல், ஒரு புது திட்டத்தை அவர்கள் தயாரித்தார்

கள். கடைசிநாள், ஆரஞ்சுப்பழ ரஸமும், முட்டையும், காப்பியும்கூடிய தங்கள் காலை உணவை முடித்த பிறகு, மூன்று பேர்கள் அத்திட்டத்தை முடித்தார்கள். இப்போது பகிங்கரமாக அத்திட்டத்தை பொதுக் கூட்டத்தில் விவாதிக்கலாம்.

சில நாட்களுக்கொருமுறை அவர்கள் கூடினுர்கள். எந்த இரண்டு வாரங்களும் அவர்கள் ஒருமுறையேனும் கூடாமல் கழிந்ததில்லை. ஒரு அங்கத்தினர் விரும்பியபோதும் கூட்டம் கூட்டப்பட்டது.

எல்லாக் கூட்டங்களும் அநேகமாக பகிரங்கமாகவேயிருந்தன. ஒளிபரப்புக் கருவிகளோ, கேமராக்களோ, பத்திரிகைக்காரர்களோ இல்லாமல் எப்பொழுதேனும் ஒரு முறை கௌன்சில் கூடியது. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் மற்ற நாடுகளுக்குக் கூட, கௌன்ஸிலில் அன்று என்ன நடந்தது என்பதைப்பற்றித் தெரியாது. ஸ்தாபனத்தின் எல்லாக் கூட்டங்களும் அதன் தலைநகரமான நியூயார்க்கிலேயே அநேகமாக நடக்கும். ஆனுல் பாதுகாப்புக் கௌன்ஸில் மட்டும் தன் விசேஷக் கூட்டங்களை உலகில் எங்கு வேண்டுமானுலும் நடத்திக் கொள்ளலாம். உதாரணமாக, தென் அமெரிக்காவில் சண்டை நடக்குமானுல், அவர்கள் அங்கு கூட்டம் போடுவார்கள்.

கௌன்சில் ஆரம்பித்தபோது, அதன் தலைமையை மாதத்திற்கொருவராக அக்ஷரக் கிரமமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்கள். முதல் மாதம் நடந்த கூட்டத்திற்கு ஆஸ்திரேலியா தலைமை வகித்தது. பிறகு பிரேஸில் நியூயார்க்கில் நடந்த முதல் கூட்டத்திற்கு சீனு தலைமை தாங்கவேண்டும். தன் முறைவரும்போது எந்த நாடும் தன் பிரதிநிதிகளில் ஒருவரைத் தலைவராக நியமிக்கலாம்.

பாதுகாப்புக் கௌன்சிலில் ஓட்டு எடுக்கும் முறை மிகவும் சாதாரணமானது. குமாஸ்தா தீர்மானத்தைப் படித்துவிட்டு, அதற்குச் சாதகமாக உள்ளவர்கள் கைகளைத் தூக்கலாம் என்று சொல்லுவார். எவ்வளவு பேர்கள் கைகளை தூக்கியிருக்

கிறார்கள் என்பதை குமாஸ்தாவே எண்ணுவார். அதை அனு சரித்துத் தலைவரும், முடிவைத் தெரிவிப்பார்.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் அங்கம் வகிக்கும் நாடுகள், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையைத் தாங்களே வகுத்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய பிரதிநிதிக்கு அயல்நாட்டு தூதர்களுக்குள்ள அந்தஸ்து உண்டு. நம்முடைய அரசாங்கமே அவருக்குச் சம்பள மும் கொடுக்கிறது (வருஷத்திற்கு 20,000 டாலர்கள்). அமெ ரிக்க ஜனாதிபதி, தாம் பிரதிநிதியாக யாரை நியமிக்க விரும்புகி றாரோ அப்பெயரை 'செனட்'டுக்கு அனுப்புவார். 'செனட்' அவர் பெயரை அங்கீகரிக்க வேண்டும். அதை 'செனட்' அங்கீகரிக்காவிடில், ஜனாதிபதி வேறு ஒருவரை குறிப்பிட வேண்டும். [காபினெட் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படு வதைப் போலவே, நம்முடைய பிரதிநிதியும் பொறுக்கப்படுகி றார் என்றும் சொல்லலாம். குறிப்பிட்ட ஒரு காபினெட் அதி காரியின் பெயருக்கு எதிராகவே 'செனட்' ஓட்டு செய்து வந்ததை நடைமுறையில் கண்டிருக்கிறோம். சில சமயங்களில் 'செனட்' ஒப்புக்கொள்ளும் ஒருவரை ஜனாதிபதி குறிப்பிடுவ தற்கு முன்பாக நாலு அல்லது ஐந்து பெயர்களை அவர் கூற வேண்டியிருக்கும்.]

பாதுகாப்புக் கௌன்சிலில் உள்ளவர்கள் தாங்கள் களிப்புட னிருக்கும்போது சாதகமாகவும், மற்றபோது பாதகமாகவும் ஓட்டுப் போடுவது கிடையாது. ஒவ்வொரு பிரதிநிதியும் தங்கள் அரசாங்கம் எப்படி ஓட்டு செய்ய வேண்டுமென்று சொல்லு கிறதோ, அப்படியே செய்கிறார்கள்.

இராஜாங்க இலாகா அதிகாரிகளுடனும், 'செனட்' அங்கத் தினர்களுடனும் சில காங்கிரஸ் அதிகாரிகளுடனும் நம் ஜனாதி பதி கலந்தாலோசித்துத் தெரிவிக்கும் முடிவின்படியே, பாது காப்புக் கௌன்ஸிலில் உள்ள நம் பிரதிநிதி ஓட்டுச் செய்வார். அவருக்கு எதாவது சந்தேகமேற்பட்டு விட்டால், அவர் ஓட்டுச்

செய்வதற்கு முன்னால், ' டெலிபோன் ' மூலமாக நம் இராஜாங்க இலாகா காரியதரிசியைக் கலந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய பிரதிநிதிக்குப் பதிலாக, நம் இராஜாங்கக் காரிய தரிசியோ, அல்லது நம் தேச ஜனாதிபதியோ, பாதுகாப்புக் கௌன்ஸிலில் அமர்ந்து பணிபுரிய சாஸனம் இடமளிக்கிறது.

எல்லோரும் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறி முடித்த பின்னர், கௌன்ஸிலின் தலைவர், நீண்ட வளைந்த மேஜை யை மேலும் கீழும் ஒரு பார்வை பார்த்துவிட்டு " இவ்விஷயத் தின்மீது வேறு எவரும் எதுவும் பேச விரும்பாவிட்டால், எல் லோரையும் ஓட்டுச் செய்வதற்காக அழைக்கிறேன் . . . . இரானிலிருந்து மே மாதம் ஆறும் தேதிக்குள் தங்களுடைய சேனை வெளியேறிவிடுமென்று உத்திரவாதமளிக்கும் சோவியத் அரசாங்கத்தின் கடிதம் நம் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொள்வதா, கூடாதா என்பதே பிரச்னை " என்று சொல்வார். மேலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று சொல்பவர்களை கைகளை உயர்த்தும்படி கேட்டுக்கொள் வார்.

ஒன்பது கைகள் மேலுக்கெழும்பின. குமாஸ்தா அவைகளை எண்ணினார். இது ஒரு சாதாரண அன்றாட சம்பவம். அந்த சோவியத் கடிதத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டால், மே மாதம் ஆறும் தேதிவரை இப்பிரச்னையைப்பற்றி ஆராய வேண்டுவதில்லை. குமாஸ்தா எண்ணிய பிறகு, தலைவர் பிரே ரேபணை ஆமோதிக்கப்பட்டதென்று முடிவைச் சொல்கிறார். "**நடைமுறை காரியங்க**"ளுக்கு (Procedural) ஏழு வோட்டுகள் இருந்தால் போதும். அவைகளை அங்கீகரித்துவிடலாம். நடைமுறை காரியம் என்பது கௌன்ஸில் அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பொறுத்து இருக்கிறது.

ஆனால் பின் ஒருநாள் தன் நீண்ட சொற்பொழிவை, " ஆதலால் எந்த நாடும் எண்ணெய், நிலக்கரி, ஆயுதங்கள் இவைகளை அந்த நாட்டிற்கு விற்பனை செய்யக்கூடாது என்று நாம் முடிவு செய்கிறோம் " என்று ஒரு பிரதிநிதி சொல்லி முடித்தார்.

இம்முறையும் ஒன்பது கைகள் உயர எழும்பின. குமாஸ் தாவும் எண்ணினுர். ஆனுல் சீனு, அமெரிக்கா தேசங்களின் பிரதிநிதிகள் தங்கள் கைகளைத் தூக்கவில்லை.

பிரேரபணை தோல்வியுற்றுப் போனதாகத் தலைவர் அறிவித்தார்.

இம்மாதிரியாக, பாதுகாப்பு கௌன்ஸில் ஒரு நாட்டின்மீது எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய விஷயங்களுக்கு எழு வோட்டுகள் இருந்தால் போதும். ஆனுல் அத்தீர்மா னத்தை அனுசரித்து ஒட்டு செய்யும் தேசங்களில், சீனு, பிரான்சு, சோவியத் குடியாசு, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இந்த ஐந்து நாடுகளும் இருக்க வேண்டும். இவ்வைந்தில் வதேனும் ஒன்றுதான் ஒட்டுச் செய்யாமலிருந்து, சபை முன் வரும் எவ்விஷயத்தையும் தோற்கடித்து விடலாம்.

இந்தத் தனி அதிகாரத்தை எவ்விதமான பிரச்னைகளிலும் செலுத்தலாம். 'பெரு' ராஜ்யம் செய்யும் ஒரு காரியத்தை ஈக்வடார் அரசாங்கம் எதிர்த்துக்கொண்டேயிருந்தால், பாது காப்புக் கௌன்சிலிலுள்ள மூன்று நபர்கள் ஒன்று சேர்ந்து உத்தியோக பூர்வமான முறையில் " இச் சச்சரவு முற்றிவிட்டது. ஆதலால் நீங்கள் இருவரும் சமாதான முறையில் உங்கள் சச்சரவைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புக் கௌன்ஸில் சிபார்சு செய்கிறது " என்று எழுதி அனுப்பு வார்கள். அதன் பிறகு பாதுகாப்புக் கௌன்ஸிலில் ஒட்டு எடுக்கப்படும். ஆனுல் சில காரணங்களுக்காக இங்கிலாந்து ஒட்டு செய்யாமல் இருந்துவிட்டால் அச் செய்தி அனுப்பப் படாது.

எச் சச்சரவையும் திர்க்கும் வழியைப் பாதுகாப்புக் கௌன் சில் விவாதிக்கும்போது, ஐந்து வல்லரசுகளில் எதேனும் ஒன்று ஒட்டு செய்யாமல் இருந்து, அதன் தீர்மானத்தைத் தோல்வியுறும்படிச் செய்யும்.

ஒரு சிறு சச்சரவு ஒரு போர் மூள காரணமாகிவிடுமென்று சில அங்கத்தினர்கள் எண்ணிஞல், ஐந்து வல்லரசுகளில் ஒன்று, " இல்லே, இல்லே. அது ஒரு சர்வ சாதாரண விஷயம். பயப்படும்படியாக ஒன்றுமில்லே " என்று சொல்லிவிடலாம். இம்மாதிரி விஷயங்களில் விதிவிலக்கு ஒன்றுமில்லே. அம் மாதிரி சிறு சச்சரவுகளில் தான் சம்பந்தப்பட்டிருந்தாலும் அந்த ஐந்து வல்லரசுகளில் ஒன்று தீர்மானத்தைத் தோற் கடிக்க தன் விசேஷ அதிகாரத்தை உபயோகிக்கலாம்.

ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் உரிமைகளேத் தடுத்தோ, அதற்கு முட்டுக்கட்டை போட்டோ அல்லது 10-ம் அத்தியாயத்தில் சொல்லியுள்ள விரும்பத்தகாத முறைகளே கையாண்டு கௌன் சில் ஒரு நாட்டைத் தண்டிக்க முற்பட்டாலோ, மேற் சொன்ன பிரத்தியேக அதிகாரத்தினுதவியால், ஐந்து வல்லரசுகளில் ஒன்று, அத்தீர்மானத்தைத் தடுத்துவிட முடியும்.

அமெரிக்காவோ அல்லது ஐந்து வல்லரசுகளில் மற்ற எதுவுமோ தங்களுக்கெதிராக ராணுவ பலம் உபயோகிக்க வேண்டும் என்று கொண்டுவரப்படும் தீர்மானங்களேத் தகர்த்து விடலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் சேர விரும்பும் ஒரு நாட்டை பகிஷ்கரிக்கவும் இந்த சக்தியை உபயோகிக்கலாம். உதாரண மாக, ஜெனரல் பிராங்கோவின் ஸ்பானிய அரசாங்கம் ஒரு பாஸிஸ நாடென்றும், கொடுங்கோலாட்சியென்றும், ஐக்கிய நாடு கள் ஸ்தாபனத்தின் சாஸனத்திற்கு எதிராகப் பல காரியங்களேச் செய்கிறதென்றும் நம் அரசாங்கம் தீர்மானித்தால், நம் ஜனாதி பதி பாதுகாப்புக் கௌன்ஸிலிலுள்ள நம் தேச பிரதிநிதியிடம், தீர்மானத்திற்கெதிராக ஓட்டுச் செய்யுமாறு சொல்லி விடுவார். நாம் அம்மாதிரி சொல்லிக்கொண்டிருக்கும் வரையில், பிராங்கோ ஸ்பெயின் ஐக்கிய நாடுகளுடன் சேர முடியாது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டை அது தவருக நடந்தது என்பதற்காக சிறிது காலம்

விலக்கவோ, அல்லது ஒதுக்கிவிடவோ செய்யும் முயற்சியைத் தடுப்பதற்கும் இவ்வதிகாரம் உபயோகிக்கப்படும். அர்ஜண்டைனு வெளியேற்றப்பட வேண்டும் என்று ரஷ்யா சொல்லும் போது, இங்கிலாந்து கூடாதென்றால், அர்ஜண்டைனு அங்கத்தினராகவேயிருக்கும்.

ஸ்தாபனத்தில் மாறுதலேற்படுத்த வேண்டுமென்று கொண்டு வரப்படும் எத்திருத்தங்களும், ஐம்பெரும் வல்லரசுகளில் ஒன்று ஒப்புக்கொள்ளவில்லையேயானால் சாஸனத்துடன் இணைக்க முடியாது. அரசனையுடைய எந்த நாடும் ஸ்தாபனத்தில் சேரக் கூடாதென்று நாம் திருத்தம் கொண்டு வந்தால் இங்கிலாந்து அதைத் தோற்கடிக்க முடியும். பொதுவுடைமைக் கொள்கையுள்ள நாடுகள் அங்கத்தினராகக் கூடாதென்று இங்கிலாந்து கொண்டுவர விரும்பும் ஒரு திருத்தத்தை ரஷ்யா தோற்கடித்துவிடும். ஒரு நாடும் காலனிகள் வைத்துக்கொள்ளக்கூடாது என்று ரஷ்யா தீர்மானம் கொண்டு வந்தால், பிரான்ஸோ, இங்கிலாந்தோ அதைத் தோற்கடிக்கலாம்.

ஆனால் சில சமயங்களில் இவ்வதிகாரத்தை உபயோகிக்க முடியாது.

இருபத்தைந்து ஆங்கிலேயர்களை சில ஐரிஷ்காரர்கள் கொன்றுவிடவே, இங்கிலாந்து தன் சேனையை அயர்லாந்துக்கனுப்பி அதன் கிராமங்களை எரித்து அழிக்க முற்பட்டால், அது பற்றிய விவாதம் நடக்கும்போது கௌன்சிலில், " அது எங்களுடைய தனிப்பட்ட விஷயம். அதுபற்றி கௌன்சில் விசாரித்து தவறு யாருடையதென்று கண்டுபிடிக்க வேண்டியது அதன் வேலையல்ல " என்று இங்கிலாந்து சொல்லுவதற்கு முடியாது. இம்மாதிரி விவாதத்தைத் தடுக்க அவ் விசேஷ அதிகாரம் உபயோகிக்க முடியாது.

அரசாங்கங்களும் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை கௌன்சிலுக்கு கொண்டுபோவதைவிட தங்களுக்குள்ளாகவே தீர்த்துக் கொள்ள முயலுகின்றன என்பது முக்யமான விஷயம்.

பழைய உடன்படிக்கையின்படி ஆங்கில ராணுவம் எகிப்தில் தங்கியிருக்கலாம். இதுபற்றி தன் குறையை கௌன்சிலில் வெளியிடப் போவதாக எகிப்து பயமுறுத்திஞல், இங்கிலாந்து ஒரு புது உடன்படிக்கையை எகிப்தியர்களுடன் செய்து கொள்வ தற்காக, உடனே மிஸ்டர் பெவினே அலெக்ஸாண்டிரியாவுக்கு நேராக அனுப்புவார்கள்.

அங்கத்தினரல்லாத ஒரு நாட்டை, அதனுடைய பிரதிநியை பாதுகாப்புக் கௌன்ஸிலில் நடக்கும் விவாதத்தில் கலந்து கொள்ள அனுப்புமாறு கேட்டுக் கொள்ளும் ஒரு பிரச்னையின் மீது ஓட்டு எடுக்கும்போது இவ் விசேஷ அதிகாரத்தைச் செலுத்த முடியாது. ஸிரியாவும் லெபனுனும் தங்கள் நாட்டிலுள்ள ஆங்கில பிரெஞ்சு துருப்புகள் உடனே வெளியேறவேண்டு மென்று வற்புறுத்தின. இங்கிலாந்தும் பிரான்சும் பல சாக்கு போக்குகள் கூறின. ஆனுல் சோவியத் குடியரசும், அமெரிக் காவும் வெகு தீவிரமாக, சிரியா லெபனுன் தேசங்களின் வற் புறுத்தலை ஆதரித்துப் பேசின. இங்கிலாந்தும் பிரான்சும் பணிந்து தங்கள் துருப்புகளை வாபஸ் பெறுவதற்கு ஒப்புக் கொண்டன. கடைசியாகக் கௌன்சிலில் ஓட்டு எடுத்தபோது இங்கிலாந்து, பிரான்ஸ், சிரியா, லெபனுன் ஆகிய தேசங்களின் பிரதிநிதிகள் அங்கே அமர்ந்திருந்தும், அவர்களால் ஓட்டுச் செய்ய முடியாமல் போய்விட்டது. ஏனென்ருல் இங்கிலாந்தும் பிரான்சும் தகராறில் பங்கு பெற்றிருந்தன. சிரியாவும் லெப னுனும் கௌன்ஸிலில் அங்கத்தினர்களல்ல.

சமாதான முறைகளில் ஒரு சச்சரவை தீர்த்துவைக்கப் பாது காப்புக் கௌன்ஸிலில் ஓட்டு எடுக்கப்படும்போது, சச்சரவில் சம்பந்தப்பட்ட நாடுகள் ஓட்டு செய்ய முடியாது. [அச் சமயங்களில், சச்சரவில் கலந்துகொள்ளாத ஐந்து வல்லரசு களின் ஓட்டுக்களைச் சேர்த்து மொத்தம் ஏழு ஓட்டுகள் கிடைத்தால் அத்தீர்மானம் நிறைவேற்றப்படும்.]

ஐக்கிய நாடுகளின் சாஸனத்தில் இந்த விதமான விசேஷ அதிகாரம் ஏன் சேர்க்கப்பட்டது? இதற்குக் காரணம் மிகவும்

சாதாரணமானது. ஐக்கிய தேசத்தின் (அமெரிக்காவின்) 'செனட்' சபையோ, க்ரெம்லினிலுள்ள சோவியத் அரசாங்கமோ, அவ்விசேஷ அதிகாரம் சாஸனத்தில் சேர்க்கப்படாவிட்டால், தாங்கள் சாஸனத்தை ஒப்புக்கொள்ள முடியாதென தெளிவாகக் கூறிவிட்டன. மிகப் பலம் பொருந்திய அவ்விரு நாடுகளை விட்டுவிட்டு, ஒரு ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைக் கூட்டுவது ஒரு மடத்தனமான முயற்சியாகும் என்பதை மற்ற நாடுகள் தெரிந்துகொண்டிருந்தன.

பாதுகாப்புக் கௌன்ஸிலின் காரியங்கள் பொதுச் சபையின் காரியங்களைப் போன்றதன்று. நோய்களிலிருந்து விடுபடும் திட்டங்களையும், ஏழை மக்களின் நிலைமைகளை மாற்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்க வழிகள் செய்யவும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும்—இது போன்ற காரியங்களுக்காக கொண்டுவரப்படும் திட்டங்களைப் பொதுச் சபை விவாதிக்கும். பாதுகாப்புக் கௌன்சிலின் வேலை என்னவென்றால் சண்டை ஏற்படாமலிருக்க வழி செய்வதேயாகும்.

ஆம்! சண்டை ஏற்படுவதைத் தடுப்பதுதான் அதனுடைய வேலை.

இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் எந்த சிறு சச்சரவும், அபாயமான முடிவையடையலாம். இது மிகவும் சிக்கலான விஷயம். சாதாரண பேச்சுகள் முடிவில் கூக்குரலாக முடியும். அதன் பின் ஒன்றையொன்று பகிஷ்கரிக்க ஆரம்பிக்கும். ஒன்று மற்றதின் வியாபாரத்தைப் பறிக்க முயலும். கடைசியில் ஒன்றின் எல்லையைத் தாண்டி, மற்றொன்று குண்டுகளை வீசும். அப்பொழுது நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது, சண்டை அவர்களுக்குள் மூண்டுவிட்டது என்பதே.

ஆதலால், இரு நாடுகளுக்குள் சிறு பிணக்குகள் ஏற்படும் போதெல்லாம், அவை முக்கியமானவையாயிருந்தால், அவைகளை உடனே தீர்க்கப் பாதுகாப்புக் கௌன்சில் முயல வேண்டும்.

சில சமயங்களில் இக் காரியங்களில் தலையிட்டுப் பொதுச் சபை உதவி செய்யும். ஆனால் பாதுகாப்புக் கௌன்சிலுக் குள்ள அதிகாரம் பொதுச் சபைக்குக் கிடையாது. பள்ளி ஆசானைப்போல் நியாயமாகப் பேசி சண்டைக்குப் போகாமல் தடுக்கும். ஆனால் நிர்ப்பந்தப்படுத்தி அடக்கும் போலீஸ் அதி காரம் அதனிடம் கிடையாது. கௌன்ஸிலில் விவாதித்த ருசி கரமான விவாதங்களில் ஒன்று, ஈரானில் ரஷ்ய துருப்புகள் இருப்பது ஒரு "முக்கியமற்ற நிலையா" அல்லது "சச்சரவா" என்பதுதான். அபாயத்தில் முடியக் கூடிய சிறு பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதில் உதவி செய்வதே கௌன்சிலின் வேலை யாகும். ஒரு சாதாரண நிலையில் தலையிட்டு, ஒருவருக்கும் சண்டை பிடிக்கும் எண்ணமில்லாதபோது, நிலைமையைக் குழப் புவது அதனுடைய வேலையல்ல. ஆனால் நிலைமை எப்படி யிருக்கிறது ? இந்த நிலைமை ஒரு யுத்தம் மூள காரணமாகுமா? என்ற விஷயங்களைக் கௌன்ஸிலில் விவாதிக்கலாம். ஆனால் ரஷ்யப் பிரதிநிதியோ, இந்த முக்யமற்ற நிலை ஒரு யுத்தம் மூள காரணமாகாதென்று வற்புறுத்திச் சொன்னார்.

மேலும் பிரசங்கங்களை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த சபையில், யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டினார். 27-ம் பகுதியில் சொல்லி யுள்ளபடி தகராறில் சம்பந்தப்பட்ட எந்த நாடும் அதுபற்றி ஓட்டு செய்ய முடியாது என்பதை யாவருமறிவர். ஆனால் ஈரான் பிரதிநிதி, ரஷ்யத் துருப்புகள் தங்கள் நாட்டிலிருப்பதை ஒரு "அசாதாரண நிலை" என்று குறிப்பிட்டார். ஆகையால் இந்த நிலை ஒரு யுத்தத்தை விளைவிக்கக் கூடியது என்று பாதுகாப்புக் கௌன்சில் முடிவு செய்தாலொழிய, ரஷ்யாவுக்குப் பிடிக்காத எந்த முடிவையும், ரஷ்ய பிரதிநிதி நிராகரிக்கலாம்.

இவையெல்லாம் மிகவும் முக்யமான விஷயங்கள். பொதுச் சபை இம்மாதிரியான நிலைமைகளை ஆராய்ந்து தன்னு டைய முடிவுகளைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் பாதுகாப்புக் கௌன்சில் இன்னும் குறைந்த அதிகாரமுடையது. ஒரு

நாட்டை மற்றொரு -நாடு வெளிப்படையாகப் பயப்படுத்தாத போது அது ஒன்றும் செய்வதற்கில்லை.

மூன்றும் பாகத்தில் ஸ்தாபனம் இன்னல்களை எப்படிச் சமாளிக்கிறது என்னும் விஷயம் விரித்துரைக்கப்படும். அப் போது, பாதுகாப்பு கௌன்ஸிலுக்கு இன்னும் அதிகமான வேலைகளிருப்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். ஒன்று, இரண்டாம் பகுதிகளில் சொல்லப்பட்டுள்ள அடிப்படைகளுக்குக் கட்டுப்பட்டேதான், பாதுகாப்புக் கௌன்சில் செய்யும் தீர்மானங்கள் இருக்க வேண்டும் என்று இருபத்தி நாலாம் பகுதியில் கண்டிருக்கிறது. கீழே காணப்படும் விஷயங்களும் அவைகளில் சேர்ந்திருக்கும்.

உலகில் சமாதானத்தை நிலைநிறுத்துவது.

ஒரு நாடு மற்றொரு நாட்டின்மேல் படையெடுப்பதைத் தவிர்ப்பது.

தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை சமாதான முறையில் நியாயமாகவும், சர்வதேச சட்டங்களுக்குட்பட்டும், எல்லா நாடுகளும் தீர்த்துக்கொள்ள வேண்டியது.

எல்லா மக்களுக்கும் ஒருவித வித்தியாசமின்றி ஒரே விதமான உரிமைகளை அளிப்பது.

ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தங்களுக்கு வேண்டிய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையை அளிப்பது.

எந்த நாட்டின் சுயாட்சி உரிமையையும் ஆக்கிரமிக்கலாகாது.

உள்நாட்டுக் கலவரங்களில் தலையிடக் கூடாது.

பாதுகாப்புக் கௌன்சில் மேற்சொன்ன அடிப்படை விஷயங்களை மறந்துவிடக்கூடாதென்பதற்காக ஸான் பிரான்ஸிஸ்கோவில் கூடி சாஸனமெழுதியவர்கள் அதற்கு ஒரு கடமையை

ஒப்படைத்தனர். அதன்படி இருபத்திநாலாம் பகுதியில், பாது காப்புக் கௌன்சில் தான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பொதுச் சபையிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் தீர்மானிக்கப்படும் விஷயங்களெல்லாம், சாஸனத்தில் சொல்லப்பட்டுள்ளன. உயர்ந்த லக்ஷ்யங்களுக்கு மாறுபடாமல் அமைந்திருக்கிறதா என்று கவனிப்பது, எல்லா நாடுகளின் அங்கத்தினர்களும் பிரதிநிதித்துவம் பெறும் பொதுச் சபையின் வேலையாகும்.

பாதுகாப்புக் கௌன்ஸில் மேற் சொல்லிய விதிகளுக்கு முரண்பாடாக நடந்து கொண்டால், பொதுச் சபை அது பற்றி விவாதிக்கலாம். மேலும், பாதுகாப்புக் கௌன்சில் செய்த தீர்மானத்தை ஆராய்ந்து, தன் யோசனைகளை அதற்குக் கூற முற்படலாம். "நீங்கள் செய்த முடிவு ஐக்கிய நாடுகளின் லக்ஷ்யங்களுக்கு விரோதமானது. ஆதலால் நீங்கள் மீண்டும் இவ் விஷயத்தைத் திர்க்காலோசனை செய்து, உங்கள் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அனுப்பலாம்.

பாதுகாப்புக் கௌன்சில் பொதுச் சபை கூறியபடி தீர்மானத்தை, விவாதங்கள் செய்து மாற்றிக் கொள்ளலாம் அல்லது, அப்படியே விவாதிக்காமலும் விட்டு விடலாம். பின்னுல் கூறப்பட்டபடி செய்தால், பல இடங்களிலிருந்தும் அதற்கு எதிர்ப்புகள் தோன்றும்.

நம்முடைய பிரதிநிதி பாதுகாப்புக் கௌன்சிலில் ஓட்டுச் செய்தது சரியல்ல என்று நம் மக்களுக்குத் தெரிந்தால், அவர்கள் நம் ஜனுதிபதிக்கு அதைப்பற்றி எழுதுவார்கள். அதுபோல் ஏராளமான கடிதங்கள் எழுதப்பட்டால், நம்முடைய பிரதிநிதி தம்முடைய ஓட்டை மாற்றிக் கொள்ள வேண்டும், ஏனென்றுல், அவர் நம்முடைய தேசத்தின் ஜனுதிபதி சொல்

ிரும்படி நடக்க வேண்டியவர். நம்முடைய ஜனாதிபதியோ, தேச மக்கள் சொல்வது போல நடக்க வேண்டும். அப்படி அவர் செய்யாது போனால், அடுத்த தேர்தலில் அவரால் ஜெயம் பெற முடியாது.

அத்தியாயம் 5

அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த

பொருளாதார சமூக சபை

பொருளாதார சமூக சபை, உலகின் நல்வாழ்க்கைக்கு சேவை செய்யும் ஒரு ஸ்தாபனம். தெருக்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், எல்லோரும் திடகாத்திரராய் வாழ்வதற்கும், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் இச்சபை பாடுபடுகிறது. உங்கள் நகர சபை, மேற்சொல்லிய காரியங்களைச் செய்யத் தவறினால், உங்கள் நகர மக்கள் பல இன்னல்களுக்குள்ளாவார்கள். அதனால் குழப்பம் ஏற்படும்.

பொருளாதார சமூகசபை, நந்தவனங்கள், பள்ளிக்கூடங்கள் விமான நிலையங்கள் மற்றும் இதர உற்சாகமளிக்கக் கூடிய இடங்கள் முதலியவைகளைக் கவனிக்கும் ஒரு ஸ்தாபனம்.

இரண்டு உலக யுத்தங்கள் நடைபெற்று விட்டன. அவைகளுக்கு இடைக்காலத்தில் இருபது வருஷங்கள் பறந்தோடி விட்டன. அக்காலத்தில் நம் நாடு உட்பட பல நாடுகளிலும் உள்ள மக்கள், நல்ல உணவு, உடை, வீடு முதலியவைகளைப் பெற போதிய பணமில்லாமலும், தங்கள் குழந்தைகளுக்குப் பள்ளி வசதியில்லாமலும், தங்களுக்கு வேலையில்லாமலும், கையிலிருந்த சொற்ப பணத்தையும் இழந்து கஷ்டப்பட்டார்கள்.

இக் காரணங்களே இரண்டாவது உலக யுத்தமேற்பட வழி செய்தன என்பதை நாம் இப்போது அறிகிறோம்.

எங்கு மக்கள் சந்தோஷமில்லாமலும் சௌகரியமில்லாமலும் வாழ வேண்டியிருக்கிறதோ, அங்கு மக்கள் போதிய

உணவைப்பெற பொருள் இல்லாமலிருக்கிறார்களோ, படுத்து உறங்க தகுந்த வீடுகளின்றி இருக்கிறார்களோ, பல முயற்சிகள் செய்தும் பயனின்றி நோய்களால் பீடிக்கப்பட்டு உயிர் துறக்கிறார்களோ, அந்த நாடுகளில் அக்காலங்களில் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். இதைக் காலம் நமக்குத் தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

மிகவும் தரித்திரதசையிலுள்ள ஒரு மக்கள் கூட்டத்திடையில் ஒரு தேசீயவாதி "நான் சொல்லுவதைக் கேளுங்கள். உங்களுக்கு உண்ண உணவு தாராளமாய்க் கிடைக்கும். மற்றும் நம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களும் கிடைக்கும். நமக்குப் பதிலாய் நம் எதிரிகளைப் பட்டினியாய் வாடும்படி விட்டுவிடலாம்" என்று உறக்கக் கத்தினால், என்ன நடக்குமென்பதை எண்ணிப் பாருங்கள்.

இம்மாதிரி மீண்டும் நடக்குமா? இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த இருபது வருஷங்களுக்குப் பின் மீண்டும் 1965-ல் மூன்றாவது உலக யுத்தம் ஏற்படின், மனித குலத்தையே நாசமாக்கிவிடுமா?

நியூயார்க்கிலுள்ள, ஆடம்பரமும் சௌகரியமுமான தங்கள் தலைமைக் காரியாலத்திற்கு, பொருளாதார சமூக சபையின் பிரதிநிதிகள், கம்பீரமாகவும் நிம்மதியாகவும், தங்கள் முகத்தில் சிந்தனை பிரதிபலிக்க, உள் செல்லுகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் தீவிர வாக்கு வாதங்கள் செய்யவோ, அதனால் தங்கள் பெயர்கள் பத்திரிகைகளில் வெளிவருவதைப் பார்க்கவோ அங்கு வரவில்லை. எனினும், பசியால் வாடுபவர்களுக்கும் இல்லங்கள் இல்லாதவர்களுக்கும், நோயாளிகளுக்கும், ஒரு நாட்டினராலும் வரவேற்கப்படாத அகதிகளுக்கும், சென்ற யுத்தத்தில் பல கஷ்டங்களுக்கும் உள்ளான மக்களுக்கும், இன்னொரு யுத்தம் மூளுவதற்குக் காரணமான ஏழ்மை நிலையில் வசிக்கும் மக்களுக்கும், தாங்கள் செய்துவரும் நிரந்தர

உதவியைப்பற்றி, பத்திரிகையின் ஒரு மூலையில், ஒரு சில வரிகளை பிரசுரிக்கப்பட்டாலும், அதையே தங்களின் பெரும் பாக்கியமாக அவர்கள் கருதுவார்கள்.

பதினெட்டுப் பிரதிநிதிகளும், பொதுக் காரியதரிசியும், உதவிப் பொதுக் காரியதரிசியும், நீண்ட வளைந்த மேஜைகளின் முன் நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்குப் பின்னால் சுமார் ஐம்பது ஆலோசனையாளர்களும், அவர்களுக்கு முன்னால் ஒரு டஜன் மொழி பெயர்ப்பாளர்களும், சுருக்கெழுத்துக்காரர்களும் இருப்பார்கள்.

இம்மாதிரி மக்களுக்கு உதவும் பற்பல ஸ்தாபனங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள், அந்த சபையிலுள்ள எழுநூறு ஆசனங்களிலும் அமர்ந்திருப்பார்கள். டாக்டர்களும், பள்ளி ஆசான்களும், குழுக்களின் பிரதிநிதிகளும், மாதா கோவில் குருமார்களும், வர்த்தக சங்கங்களிலிருந்தும் தொழிலாளர் இயக்கங்களிலிருந்தும் பிரதிநிதிகளும் அங்கு குழுமியிருப்பார்கள்.

இவைகளில் நான்கு ஸ்தாபனங்களுக்குத் தனிச்சலுகையுண்டு —**தொழிற் சங்கங்களின் உலக சம்மேளனம் (W. F. T. U.) அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் (A. F. L.) சர்வதேச கூட்டுறவு ஸ்தாபனம் (I. C. A.) சர்வதேசப் பொருளாதார சபை,** இவையே யாகும். பொருளாதார சமூக சபையில் விவாதிக்க வேண்டிய விஷயங்களை மேற்சொல்லிய நான்கு ஸ்தாபனங்களும் தீர்மானிக்கும். அதன் பின்னரே சபையில் விவாதம் தொடங்கும். விவாதங்கள் காரசாரமாய் நடந்தாலும், ஒருவருக்கொருவர் மரியாதையுடனேயே நடந்துகொள்வர்.

ஒரு கூட்டத்தின்போது, அமெரிக்காவைச் சேர்ந்த விைனண்ட் (Mr. Winant) என்பவர், செய்திச் சுதந்திரமே முதல் சுதந்திரம் என்று குறிப்பிட்டார். அவர் சோவியத் யூனியன் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், ரஷ்யாவிலுள்ள பத்திரிகை

கள் தாங்கள் விரும்பிய செய்திகளைப் பிரசுரிக்கமுடியாதபடி கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பது எல்லோரும் அறிந்ததே. இம்மாதிரி கட்டுப்பாடு அமெரிக்கப் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டால், மக்கள் வாளாவிருந்து விடமாட்டார்கள்.

சோவியத் குடியரசைச் சேர்ந்த மிஸ்டர் பியானோவ் **(Mr. Feonov)** பதில் சொல்லும்போது, 'செய்தி சுதந்திரம் அவ்வளவு முக்கியமானதல்ல' என்று கூறினார். எல்லா வர்க்கத்தினருக்கும் சரிசமானமான உரிமைகள் வாங்கிக் கொடுப்பதற்குப் பாடுபடுவதே முதல்வேலை என்று அவர் சொன்னார். அவர் அமெரிக்காவின் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் இங்குள்ள பல நாடுகளில், வெள்ளை மனிதர்களுக்கு இருக்கும் சுதந்திரத்தைவிட, மற்றவர்களுக்குள்ள உரிமைகள் சட்ட பூர்வமாக குறைக்கப்பட்டுள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும். பலவிடங்களில், வேறு நிறத்தவர்கள் பொதுக் கல்லூரிகளுக்குப் போகவோ, தாம் விரும்பும் ஒருவரை மணம் செய்து கொள்ளவோ, முக்கிய தெருக்களில் நடந்துசெல்லவோ முடியாதபடி சட்டங்கள் தடை செய்கின்றன. இம்மாதிரி சட்டங்கள் சோவியத் குடியரசில் தலைகாட்ட முடியாது.

நாடுகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்து இவ்வேறுபாடுகளை நீக்க முயல வேண்டும். இது மிகவும் கடினமான காரியமாகும். எனினும் இக்காரியத்தை நிறைவேற்றுவதற்கே பொருளாதார சமூக சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து கீழ் சொல்லப்படும் காரியங்களைச் செய்வதற்கு அது முயலுகிறது.

எல்லா நாடுகளிலும் வசிக்கும் மக்கள் நல்லுணவு பெறவும், வேண்டிய உடைகளைப் பெறவும், வசதியான வாசஸ்தலங்களையடையவும் சபை பாடுபடும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் உகந்தவேலை கிடைக்க வழி செய்யும்.

ஒரு நாட்டின் கப்பல்கள் மற்றொரு நாட்டிற்குக் கடல் கடந்து செல்லவும், ஒரு நாட்டின் மக்கள் மற்றொரு நாட்டி

லிருந்து தங்களுக்கு வேண்டிய பொருள்களை வரவழைத்துக் கொள்ளவும், அந்த நாட்டார் வேண்டும் தம் நாட்டுப் பொருள்களை அங்கு விற்பனை செய்யவும் வசதிகள் செய்து தருதல் (தங்கள் நாட்டிற்குவரும் பொருள்கள்மீது போடப்படும் வரிகளைக் குறைக்கும்படி சபை சிபார்சு செய்யவேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள பதினெட்டுப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி ஆலோசித்து எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான ஒரு திட்டத்தைத் தயாரித்தால், அது சாத்தியமாகலாம்).

தொழிலாளர் முதலாளிகளுக்கிடையே நடக்கும் சச்சரவுகளையும், வேலை நிறுத்தங்களையும் தடுக்கவும், தொழிலாளர்கள் வேலைகள் செய்யும்போது ஆனந்தமாகவும் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கும் வழி வகுப்பதற்கும், குறைவான கூலி கொடுக்கப்படுமிடங்களில் அவைகளை உயர்த்தவும், சபை பாடுபடுகிறது. தாங்கள் விரும்பும் நாடுகளுக்குச் சென்று அங்கேயே வேலை தேடிக்கொள்ளவும், அங்கேயே தங்குவதற்கும் ஆள வசதிகளை சபை செய்து கொடுக்கவேண்டுமென பலர் வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். [1930-ம் வருஷத்திற்குப் பிறகு, வெளி நாட்டார் தங்கள் நாடுகளில்வந்து தங்குவதையும் வேலை தேடுவதையும் அனுமதிக்க பலநாடுகள் மறுத்து இருக்கின்றன].

வேறு மதத்தினரையும் வேறு நிறத்தவர்களையும் மதித்து மக்கள் நடக்கவேண்டும். அவர்களையும் நல்ல முறையில் நடத்த வேண்டும்.

மக்களின் சுகாதார வசதிகளை அதிகரிப்பது. இது ஒரு சர்வதேசப்பிரச்னை. ஆகாய விமானங்களும் கப்பல்களும் உலகின் பல பாகங்களிலிருந்தும் நோய்களைக் கொண்டுவருகின்றன. வெறுக்கத்தக்க நோய்கள், படிப்பறிவில்லாத ஏழை மக்களிடையே தோன்றி, நாகரீகமிக்க மக்கள் வாழும் இடங்களுக்கும் பரவுகிறது. இந்த நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு பொருளாதார சமூக சபை முயல்கிறது.

நல்ல விளைபொருள்களை விதைத்து, உழவர்கள் சுகமாக வாழும் வழியைத் தன்னால் முடிந்தவரையில் அது சொல்லிறது.

எல்லா மக்களுக்கும் உயர்தர கல்வி போதிக்கப்படுகிறது.

விஞ்ஞான அறிவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பரவும்படி செய்து உபயோகமான வழிகளில் அதை செலவிடுவது. நாடுகளிடையே, ரேடியோ டெலிபோன் போக்குவரத்துகளை விஸ்தரிப்பது.

இவ்வளவு விஷயங்களும் சாஸனத்தின் 54-ம் பகுதியில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர இன்னும் முக்கியமான விஷயங்கள் ஏதேனும் விடுபட்டுப்போயிருந்தால், அவைகளையும் சேர்த்துக் கொள்வதற்காக 2-ம் பிரிவில் "மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்னைகள்" என்ற சொற்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

மேற்சொன்ன பிரச்னைத்தீர்ப்பது தவிர, முக்கிய துறைகளில் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடைய பொருளாதார சமூக சபை வேலை செய்யவேண்டுமென்று அந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த சூழ்நிலைகளில் நம்முன்னோர்கள் திருப்தியாய் வாழ்ந்து வந்தனரோ, அவைகள் தற்கால மக்களுக்குச் சலித்துப்போய்விட்டன. அவைகளை வெறுக்கவும் ஆரம்பித்துவிட்டனர். ஒவ்வொரு வருஷமும் புதுப்புது முன்னேற்றங்களை நாம் காண்கிறோம். அவைகளை நாமும் அடைய வேண்டுமென நாம் விரும்புகிறோம். மக்களின் இயல்பே அப்படித்தான்—அப்படித்தானிருக்கும். முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான இவ்விஷயங்களே மனித வாழ்க்கையை ருசியுள்ளதாகச் செய்கின்றன.

ஒரு நாட்டிற்கு இக்காரியங்கள் மிகவும் அதிகமான பொறுப்பை யளிக்கும் என்பது உண்மைதான். அது தனிப்பட இக்காரியங்களைச் செய்வதை விட, மற்றும் பலநாடுகளுடன் சேர்ந்து உழைத்தால் இக்காரியங்களை சுலபமாக நிறைவேற்ற முடியும்.

உங்கள் நாட்டிலுள்ள கொசுக்களை ஒழிக்க நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்கிறீர்கள். கொசுக்கள் வியாதிகளைப் பரப்பும் இருமிகள். உங்களுக்கு அடுத்த நாட்டில் வசிப்பவர்கள் அது பற்றி ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால், உங்கள் முயற்சியினால் யாதொரு பயனுமில்லை. பிரமாதமான நன்மைகள் எற்பட்டுவிடாது. எனென்றால் அடுத்த நாட்டிலுள்ள கொசுக்கள் உங்கள் நாட்டிற்கு வந்துகொண்டுதானேயிருக்கும்; அதனால் உங்கள் நாட்டில் வியாதி மீண்டும் பரவவே ஆரம்பிக்கும்.

ஒரு ஆற்றின்மீது பாலம் அமைத்து, அங்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு ஒரு சிறு நாடு பொருள் பெற்றிருக்க முடியாது. ஆனால் இன்னொரு நாடுடன் சேர்ந்து, இரண்டுமாக அக்காரியங்களைச் செய்து, மின்சாரசக்தியை இருவரும் உபயோகித்துக்கொள்ளலாம்.

பருத்தித்துணி தயார் செய்யும் நெசவாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், சங்கங்கள் ஏற்படுத்தி, தங்களுடைய தினக்கூலியை உயர்த்தவேண்டுமென்று நம் நாட்டில் கிளர்ச்சி செய்கிறார்கள். வேலை நிறுத்தமும் நடைபெறுகிறது. அப்போது 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு நாட்டிலிருந்து துணிகள் இங்கு வந்து குவிகின்றன. ஆயிரக்கணக்கான 'டன்' களில் துணிகள் இறக்குமதி செய்யப்பட்டுக் குறைந்த விலையில் இங்கு விற்கப்படுகின்றன (எனென்றால் அந்த நாட்டில் அத்துணிகள் தயார் செய்ய அதிகப்பணம் செலவாவதில்லை).

மேலும் அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 50 'செண்ட்'டுகள் (Cents) வீதம் கூலி கொடுக்கப்படுகிறது.

அத்துணிகளின் விலை குறைவாயிருப்பதால், நம் நாட்டு மக்கள் அவைகளையே வாங்குகிறார்கள். முடிவில் நல்லகூலி கொடுக்கப்படும் நம் நாட்டுத் தொழிற்சாலைகளும் மூடவேண்டி வருகிறது. அதனால் தொழிலாளர்களுக்கும் வேலைபோய் விடுகிறது.

இவ்வின்னல்களை நம்நாடு மட்டும் தனியேயிருந்து தீர்க்க முடியாது. இதுபோல் இன்னும் பல இன்னல்களிருக்கின்றன.

பொருளாதார சமூக சபையில் 18 நபர்கள் இருக்கிறார்கள். பதினெட்டு நாடுகள் அங்கு அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு நாடும் ஒரு பிரதிநிதியை அனுப்பலாம்.

ஆறு நாடுகளை இச்சபைக்கு அங்கத்தினர்களாக பொதுச் சபை ஒவ்வொரு வருஷமும் தேர்ந்தெடுக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, மூன்று வருஷ காலத்திற்கு ஒரு நாடு அங்கத்தினராயிருக்கும். அதன்பின் பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகளையேனும் அது பெற்றால், அடுத்த வருடத்திற்கும் அது அங்கத்தினராக இருக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் தன் பிரதிநிதியைப் பொறுக்கும் விஷயத்தில் பூரண சுதந்திரமுண்டு. நம்முடைய ஜனாதிபதி நம்தேச பிரதிநிதியை தேர்ந்தெடுப்பார். (நாம் இந்தக் கௌன்ஸிலுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் போது) அவர் பெயரை 'செனட்' சபைக்கு அங்கீகரிக்குமாறு அனுப்புவார். நம் காங்கிரஸ் அவருக்கு சம்பளம் கொடுக்கிறது. (ஒரு வருஷத்திற்கு 12,000 டாலர்கள்). அவர் சபையில் என்ன செய்யவேண்டும் என்பதற்கான விதிகளையும் காங்கிரஸே தயாரிக்கிறது.

ஒரு வருஷத்தில் மூன்று முறை சபை வழக்கமாகக் கூடுகிறது. அவசியம் நேரும்போது விசேஷ கூட்டங்கள் எப்போது வேண்டுமானாலும் கூட்டலாம்.

தன்னுடைய நடவடிக்கைகளுக்கான சட்டங்களை பொருளாதார சமூக சபை தானே இயற்றிக்கொள்கிறது. அதன் முதல் கூட்டத்திற்கு முதல் தலைவராக சாந்தமும் புத்தி கூர்மையும் வாய்ந்த இந்திய நாட்டைச் சேர்ந்த சர் இராமசாமி முதலியாரைத் தேர்ந்தெடுத்தது. உபதலைவர்களாக யுகோஸ்லேவியாவிலிருந்து ஒருவரும், கொலம்பியாவிலிருந்து ஒருவரும்

தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த உத்தியோகத்தை அவர்கள் தான் வகிக்கவேண்டும். பாதுகாப்பு கௌன்ஸிலின் தலைவருக்குப் பதிலாக, அவர் நாட்டினரால் நியமிக்கபட்ட வேறொருவர் அப்பதவியை வகிக்கலாம். இச்சபையில் அம்மாதிரி செய்ய முடியாது.

சில விஷயங்களின்மீது ஓட்டு எடுக்கப்படும்போது, அவ்விஷயங்கள், சபையின் பெரும்பான்மையான ஓட்டுகளின்படியே முடிவு செய்யப்படும். இச்சபையில் வல்லரசுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் வித்தியாசம் இடையாது. இன்னும் சொல்லப் போனால், ஐந்து வல்லரசுகளில் ஏதேனும் ஒன்றை சபையிலிருந்து கூட விலக்கிவைக்க முடியும். ஒரு தீர்மானத்தை யார் விரும்புகிறார்கள் என்பதைவிட, அது எவ்வளவு தூரம் நாடுகளுக்கு நன்மை பயக்கும் என்பதே முக்கியம். தன் வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கு இச்சபைக்குப் பல செய்திகள் கிடைக்கவேண்டும். அவைகளைப் பெறுவதற்கு அதற்குப் பல வழிகள் இருக்கின்றன.

திறமைசாலிகளான சமூக சேவகர்களும், சட்ட நிபுணர்களும் மற்றும் அனுபவசாலிகளும் கொண்ட ஒரு குழுவை, ஒரு நாட்டிற்கனுப்பி, அங்கு நடக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். அந்தநாட்டு அரசாங்கம் அவர்களை அனுமதிக்க மறுத்தால், வேறு வழிகளைக் கைக்கொள்ளவேண்டும்.

இச்சபை சர்வதேசக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யலாம். உதாரணமாக, உலகமக்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்ற வேண்டிய திட்டங்களைத் தயாரிப்பதற்காக நியூயார்க் நகரில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அதற்குப் பிரதிநிதிகளை அனுப்புமாறு 67 நாடுகளுக்கு (ஸ்பெயினைத் தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும்) அழைப்பு விடுத்தது. 1946-ம் வருஷம் ஜூன் மாதம் இம்மகாநாடு தன் வேலைகளைத் தொடங்கியது. **உலக சுகாதார ஸ்தாபன**த்திற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் (W.H.O.) வெகு சீக்கிரத்திலேயே ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் ஒரு விசேஷ ஏஜண்ட் ஆகியது.

இச்சபையின் காரியங்கள் மிகவும் கடினமானதுதான். அதனுடைய 18 பிரதிநிதிகளால் மட்டும் இக்காரியங்களைச் செய்துவிட முடியாது. ஆதலால் அதற்கு உதவியளிக்க, கமிஷன்களும், விசேஷ ஏஜன்சிகளும் ஏற்படுத்திக்கொள்ள சாஸனம் இடம் கொடுக்கிறது. அவைகளின் முக்கியவேலை இச்சபைக்கு யோசனை கூறுவதேயாகும். இச்சபையின் காரியங்கள், கமிஷன்கள் தயாரிக்கும் திட்டங்களின்மீது, 'அவைகளை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா' என்று ஓட்டுச் செய்வதோடு தீர்ந்துவிடுகிறது. இப்போது ஒன்பது கமிஷன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேண்டுமானால் இன்னும் சிலவற்றை, சபை நியமித்துக்கொள்ளலாம். இச்சபையின் முக்கியமான காரியங்களில் ஒன்று **மனித உரிமைகளைக்** காப்பாற்றுவதாகும்.

மற்ற ஜனங்களின் உரிமைகள்தான் நமக்கு முக்கியமானவை. தொலைவிலுள்ள ஒரு நாட்டு மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படும்போதோ, நசுக்கப்படும்போதோ, பறிக்கப்படும்போதோ, இங்குள்ள சிலர் "அதுபற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்" என்று கேட்கிறார்கள். வெகு சீக்கிரத்திலேயே, அவர்கள் ஏன் கவலைப்படவேண்டுமென்பது அவர்களுக்கே தெரிந்துவிடும்.

சர்வாதிகாரமும், பிறரைத்துன்புறுத்தி தன்வழியே நடக்கும்படி செய்வதும் ஒரே மாதிரியான நோய்கள்தான். அவைகள் பரவும் குணமுடையன. அவைகள் மற்ற நாடுகளில் 'பிடித்து' இருந்தால், நம் நாட்டில்கூட புகுத்தப்படலாம்.

ஐக்கிய நாடுகளின் சாஸனத்தில் மனித உரிமைகளைப்பற்றி குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை. எனினும் பொதுவாகப் பல விடங்களில் கூறப்படுகிறது. உதாரணமாக, மக்களிடையே தற்போது நிலவியிருப்பதைவிட பெருத்த அளவில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் எல்லோரும் கடைப்பிடித்து நடக்கவேண்டிய முயற்சிகளை, ஐக்கிய நாடுகளும் அதன் அங்கத்தினர்களான எல்லா நாடுகளும்

செய்ய வேண்டுமென, எல்லா நாடுகளும் பிரமாணம் செய்துள்ளன.

மனித உரிமைகள் யாவை, அடிப்படைச் சுதந்திரங்கள் என்னென்ன என்பன சாஸனத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால் எல்லா மக்களுக்கும் மத, நிற, மொழி வேறுபாடின்றி ஒரே மாதிரியான உரிமைகள் வழங்கப்படுமென்று சாஸனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆண்களுக்கு உள்ள சகல உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கவேண்டுமென்று சாஸனம் சொல்கிறது. பெண்கள், பொதுச் சபையில் பிரதிநிதிகளாக அமர்வதையோ, கௌன்சிலில் அங்கம் வகிக்கவோ, நீதிபதிகள், காரியதரிசிகளாக பதவியேற்பதையோ, அல்லது ஸ்தாபனத்தின் எந்தப் பகுதியிலும் சேர்ந்து வேலை செய்வதையோ, ஐக்கியநாடுகள் தடை செய்யாதென சாஸனம் சொல்கிறது.

மத வேறுபாடின்றி, எல்லா மக்களுக்கும் அடிப்படையான சுதந்திரங்களையளிக்க ஐக்கிய நாடுகளும் அதில் அங்கம் வகிக்கும் மற்ற நாடுகளும் உண்மையாக உழைக்கவேண்டுமென சாஸனத்தில் கூறப்படுகிறது. ஒவ்வொருவரும், தாம் பின்பற்றும் மத அனுசாரப்படி தொழுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று நாம் நினைக்கிறோம். ஒருவர் தாம் பின்பற்றும் மதம் காரணமாக ஹிம்சிக்கப்படுவாரென்றோ, தாக்கப்படுவாரென்றோ, அவரது ஓட்டுரிமை பறிக்கப்படுமென்றோ, அல்லது தனிப்பட்ட ஒரு இடத்திற்கு அனுப்பிவைக்கப்படுவாரென்றோ நாம் நினைக்கவில்லை.

சாஸனத்தின் பூர்வ பீடிகை "ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் . . . . ." என்றாரம்பிக்கிறது. அதிலிருந்து நம்முடைய மக்களே அவர்களுடைய அரசாங்கத்தை ஏற்படுத்தி, அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் சொல்கிறார்கள் என்று தெரிகிறது. அரசாங்கத்திற்கு சேவை செய்யவே மக்கள் வாழவேண்டும், அதன் சொற்படியே அவர்

கள் நடக்கவேண்டும், என்பனபோன்ற பாஸிஸ எண்ணங் களுக்கு அது நேர் எதிரிடையானது. வேறு எந்த ஒப்பந்த மும் இம்மாதிரிச் சொற்களுடன் ஆரம்பிக்கவில்லை. நம் அரசாங்கத்திலுள்ள பல அதிகாரிகள் இச்சொற்கள் மிக முக்கிய மானவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு சிறிய நாட்டிற்கும் பெரிய நாடுகளுக்கு அளிக் கப்பட்டுள்ள எல்லா உரிமைகளும் அளிக்கப்படவேண்டுமென்று சாஸனத்தில் கண்டிருக்கிறது. தன்னைக்காத்துகொள்ளும் போதிய பலமில்லை என்ற காரணத்தினால் எந்தச் சிறு நாடும் தாக்கப்படுவதோ, அல்லது அதன் நாட்டை அபகரிப்பதோ, அல்லது ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்று நிர்ப் பந்திக்கப்படுவதோ கூடாது.

கடைசியாக, எந்த மக்கள் கூட்டமும் தாம் விரும்பும் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், தாங்கள் விரும்பும் ஒரு நாட்டில் சேர்ந்து கொள்ளவும், உரிமையளிக்கப்படவேண் டும். அப்படிச்செய்தால் நாடுகளுக்கிடையே நேசபாவம் வலுக் கும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அந்நாடுகளை தம்மிஷ்டம் போல் நடந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று சாஸனத் தில், பகுதி ஒன்று இரண்டாம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

1941-ம் வருஷ ஆரம்பத்தில் ஜனாதிபதி பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட் ஒரு சொற்பொழிவாற்றினார். அதில் "முக்கிய மான மனித சுதந்திரங்களின்மீது ஸ்தாபிக்கப்பட்ட ஒரு உல கத்தை நாம் எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார். இந்த சொற்பொழிவு மிகவும் பிரபல்யமடைந்தது. அவர் கூறிய நான்கு சுதந்திரங்களாவன: பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம், வறுமையின்றிவாழும் சுதந்திரம், அச்சம் மின்றி வாழும் சுதந்திரம் என்பனவேயாகும்.

ஆறு மாதத்திற்குப் பின்னர் எழுதப்பட்ட அட்லாண்டிக் சாஸனத்தில் இரண்டே சுதந்திரங்கள்தான் சொல்லப்பட்டன. அவை வறுமையின்றிவாழும் சுதந்திரமும், அச்சமின்றிவாழும் சுதந்திரமும்தான்.

அடுத்தவருஷ ஆரம்பத்தில் கையெழுத்திடப்பட்ட ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் " மத சுதந்திரம் " சேர்க்கப்பட்டது.

நான்கு சுதந்திரங்களைப்பற்றிப் பேசுவது ஒரு மனிதனுக்கு மிகவும் சுலபம். ஆனால் பல ஜனங்களைக்கொண்ட பல்வேறு அரசாங்கங்கள் அந்நான்கு சுதந்திரங்களையும் ஒரு முகமாக ஒப்புக்கொள்வது மிகவும் கடினமான காரியம். இதன் முடிவென்னவென்றால், ஐக்கிய நாடுகளின் எந்த அதிகார பூர்வமான பத்திரங்களிலும் "பேச்சு சுதந்திரம்" சேர்க்கப்பட வில்லை. அதைச் சேர்ப்பதற்கு எதிராக எவரேனும் இருந்து கொண்டேயிருந்தனர். இந்த சாஸனம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் திட்டத்தைப்போல வருங்காலத்திலாவது ஆக்கப்படும் என்று நம்முடைய அரசியல் அறிஞர்களில் பலர் நம்புகிறார்கள்.

1789-ல் நம்முடைய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த போது மனித உரிமைகளில் எதுபற்றியும் தீர்மானமாக அது சொல்லவில்லை. ஆனால் இரண்டு வருஷங்களுக்குள் நம் முடைய " உரிமைகள் மசோதா " அதனுடன் சேர்க்கப்பட்டது. அது பத்து திருத்தங்களைக் கொண்டிருந்தது. நமக்கு மத சுதந்திரத்தையும், பேச்சு சுதந்திரத்தையும், ஜூரி விசாரணைக்கு உரிமையையும், அகாரணமான சோதனைக்கு ஆளாகாமலிருக் கும் உரிமையையும் அது அளித்தது.

பல வருஷங்களுக்கப்புறம் பல திருத்தங்கள் சேர்க்கப் பட்டன. வேற்று நிற மனிதர்களுக்கு பிரஜா உரிமை கொடுக் கும் மசோதா (1868) அவர்களுக்கு ஓட்டு செய்யும் உரிமை அளிக்கும் மசோதா (1870) பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் மசோதா (1920) போன்ற திருத்தங்கள் சேர்க்கப்பட்டன. வருங்காலத்தில் இன்னும் அதிகமான உரிமைகள் திருத்தங் கள் மூலம் சேர்க்கப்படலாம்.

இம்மாதிரி திருத்தங்களை ஐக்கிய நாடுகள் சாஸனத்துடன் சேர்ப்பது **மனித உரிமைக் கமிஷன்** வேலைகளில் ஒன்றாகும்.

பொருளாதார சமூக சபைக்கு உதவும் கமிஷன்களில் இதுவும் ஒன்றாகும். இந்தக் கமிஷன் ' சர்வதேச உரிமைகள் சட்டம் ' என்று ஒன்றை இயற்றப்போகிறது.

இக்கமிஷனின் முதல் வேலை, எல்லாநாட்டு அரசாங்கங்களும், எம்மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஒப்புக் கொள்ளும்படி செய்யவேண்டும் என்பதுதான். இன்னும் அது செய்யவேண்டிய காரியங்களும் இருக்கின்றன. எல்லா நாடுகளிலும் மக்களுக்கு ஜூரி விசாரணை உரிமையும், அகாரணமான சோதனைக்கு ஆளாகும் உரிமையும், மக்கள் ஒன்றுகூடி தங்கள் தேவைகளைப்பற்றி ஒருவருக்கொருவர் சம்பாஷிக்கும் உரிமையும், தாங்கள் சுகமாய் வாழ்வதற்கான மற்ற சௌகரியங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றனவா என்றும், அவைகளை அளிக்க அரசாங்கங்கள் தயாராயிருக்கின்றனவா என்றும், கவனிப்பதுதான்.

இந்த ' சர்வதேச உரிமைகள் சட்டம் ' ஐக்கிய நாடுகள் சாஸனத்திற்குத் திருத்தங்களாகப் புகுத்தப்படலாம். பொதுச் சபை அதை அங்கீகரித்தால், எல்லா நாடுகளுக்கும் அவைகளின் பிரதிகளை அனுப்பும் அவைகளின் கருத்துகளைக் கூறுமாறும் கேட்கும். அல்லது இந்த சர்வதேச உரிமைகள் சட்டத்தை ஒரு ஒப்பந்தமாக மாற்றி, எல்லா நாடுகளையும் அதில் கையெழுத்திடும்படி கேட்கலாம்.

மேலும், பொதுச்சபை ஓட்டுகள் மூலம் தீர்மானித்த ஒரு பிரச்னையாக அதைக்கருதி எல்லா நாடுகளுக்கும் அனுப்பி, அவைகளின் அரசியல் திட்டங்களுடன் இவைகளைச் சேர்க்குமாறும் கேட்டுக்கொள்ளலாம். உதாரணமாக நம்முடைய அரசியல் திட்டத்தில் தற்போது உணவுப் பஞ்சத்திலிருந்து விடுதலைபோன்ற உத்திரவாதங்கள் சேர்க்கப்படவில்லை. ஓரிரண்டு திருத்தங்கள் மூலம் அவைகளைச் சேர்க்கும்படி நாம் தூண்டப்படலாம்.

இவைகளையெல்லாம் வெற்றுக் காகிதத்தில் எழுதுவதோடு நின்றுவிடாமல், மேற்சொல்லிய உரிமைகளும் சுதந்திரங்களும்

உலகின் அன்றாட வாழ்க்கையில் அளிக்கப்பட்டு வருகின்றனவா என்றும் மனித உரிமைக் கமிஷன் கவனித்து வருகிறது. எல்லா நாடுகளிலிருந்தும், இம்மாதிரி காரியங்களை அவைகள் செய்கின்றனவா என்பது பற்றி அறிக்கைகளை கேட்டுப் பெறும். எப்பகுதியிலாவது சிலருக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் மறுக்கப்பட்டால், அதை ருஜுப்படுத்தும் மக்களிடமிருந்து, அதைத் தவிர்க்க அவர்கள் கூறும் யோசனைகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளும்.

ஜெர்மனி தேசத்தில் நாஜிகள் செய்ததைப்போல, ஒரு அரசாங்கம் தன் குடிகளில் சிலருக்கு மனித உரிமைகளை அளிக்க மறுத்து அவர்கள் ஜாதி மத காரணங்களினால் அடித்து துன்புறுத்தி விசாரணையின்றி சிறையில் தள்ளிவிட்டார்களென்று தெரிந்தால், நாஜிகளின் செயல்கள் ஒரு போருக்குக் காரணமானதுபோல், இவைகளும் ஓர் போர் மூள காரணமாகும் என்று நிபுணர்கள் நம்பினால், மனித உரிமைக்கமிஷன், உடனே பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு நேராக ஒரு செய்தி அனுப்பும். இது அதிகாரபூர்வமாக இந்தக் கமிஷனுக்குக் கொடுககப்பட்ட ஒரு விசேஷ சலுகையாகும். இந்தச் செய்தி கிடைத்ததும் பாதுகாப்புக் கௌன்ஸில் சிறிதும் சந்தேகமின்றி அதுபற்றிய நடவடிக்கைகளை எடுக்கவாரம்பிக்கும்.

மனித உரிமைக் கமிஷனின் மற்றொரு வேலை பேச்சு சுதந்திரத்தைப்பற்றி ஆராய்வது. ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடந்த மகாநாட்டில் பிரசன்னமாயிருந்த அமெரிக்கப் பிரதிநிதிகள் சாசனத்தில் "அடிப்படைச் சுதந்திரங்கள்" என்று சொல்லப்பட்டிருப்பவை பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், ரேடியோ சுதந்திரம், பேசும்பட சுதந்திரம், நிருபர்கள் ஒரு நாட்டில் செய்திகளை சேகரித்து மற்ற நாடுகளுக்கு தணிக்கை செய்யப்படாமல் அனுப்பும் சுதந்திரம் இவைகளையே குறிக்கிறதென்று சொன்னார்கள். மனித உரிமைக்கமிஷனோ, பொருளாதார சமூக சபையோ, எல்லா நாடுகளையும் இதற்கு இணங்கும்படி செய்ய

முயலுமா என்பதில் நமக்குச் சந்தேகம்தான். ஆனால் இந்த உரிமைகளைக் கேட்பது தவறு இல்லை.

மனித உரிமைக் கமிஷனின் இந்த வேலையில் அதற்கு உதவி செய்ய **செய்திப் போக்குவரத்துச் சுதந்திர உப கமிஷன்** என்று ஒரு கிளை ஸ்தாபனமிருக்கிறது. அதில் பிரபலமான பத்திரிகாசிரியர்களும், பிரசுரகர்த்தர்களும், ஆக பன்னிரெண்டு பேர்களிருக்கிறார்கள். அவர்கள், பத்திரிகைகள், ரேடியோ, புத்தகங்கள், சஞ்சிகைகள், பேசும்படங்கள் இவைகள் மூலம் உண்மை வெளிப்படுவதைத் தடுக்கும் சக்திகளை எப்படி நீக்குவது என்று திட்டங்கள் தயாரிக்கிறார்கள். மேலும் எந்த அரசாங்கங்கள் இத்திட்டங்களை உண்டுபண்ணுகின்றன என்றும் கவனிக்கிறார்கள்.

பெண்கள் அந்தஸ்து கமிஷன் :—ஆண்கள் செய்யும் வேலைக்குச் சரியான வேலைகளை பெண்கள் செய்யும்போது, அவர்களுக்கும் அதேபோல் சம்பளம் வாங்கித் தருவதும், மருத்துவ, சட்டக் கல்லூரிகளில் அவர்களும் சென்றுபடிக்க வசதி செய்வதும், அவர்கள் செய்யும் காரியங்களை சில நாடுகள் தடை செய்வதிலிருந்தும், அதற்கான சட்டங்களிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை அளிப்பதற்கு உதவுவதும் இந்தக் கமிஷனின் வேலையாகும். பொருளாதார சமூக சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களையும், எல்லா நாடுகளிலுமுள்ள பெண்களுக்கும் ஓட்டுரிமை அளிக்கும்படி சொல்லவேண்டுமென்று இந்தக் கமிஷன் கேட்டுக்கொண்டது.

ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடந்த மகாநாட்டில் தீர்மானித்த, பெண்களின் உரிமைக்குப் போராடும் பல திட்டங்கள், பிரேஸில் நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகள் செய்த முயற்சியின் பலனேயாகும். ஐக்கிய நாடுகளின் சில முக்கியமான காரியங்கள், நீங்களும் நானும் நினைக்கக்கூட முடியாத தொலைவிலிருந்துவந்த சிறு நாடுகளின் பிரதிநிதிகள் செய்த முயற்சியாலேயேயாகும் என்பதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

சமூகக் கமிஷன் குற்றங்களைத் தடுப்பதற்காகவும் குற்றவாளிகள் சிறைகளில் அடைக்கப்பட்ட பிறகு நடத்தப்படும் விதத்தை ஆராய்வதற்கும் ஏற்படுத்தப்பட்டது. பொது மக்களுக்கு சுகமான வாசஸ்தலங்களை அளிக்கவும், முதிர்ந்த வயதில் உபகாரச்சம்பளம் கொடுப்பதுபற்றியும், தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் சட்டங்களைத் தயார் செய்வதிலும் தன் கவனத்தைச் செலுத்துகிறது. சமூக சேவை செய்யும் எல்லாக் குழுக்களுக்கும் இது உதவி செய்கிறது. ஐக்கிய நாடுகளின் நிவாரண புனரமைப்பு ஸ்தாபனத்திற்கும், அரசாங்க வேலை நிவாரண இலாக்காக்களுக்கும், உள் நாடுகளில் வீடுகள் வசதியாகக் கட்டிக்கொடுக்கும் சிறு ஸ்தாபனங்களுக்கும் உதவுகிறது.

குழந்தைகளின் நல்வாழ்வுக்கான உதவிக் கமிஷன் ஒன்று அதன் கிளையாக வேலை செய்கிறது. அதில் சிறுவர்களுக்கு இலவச கல்வியளிப்பதும், ஏழைச் சிறுவர்களுக்கு இலவச வைத்திய உதவியளிப்பதும், பள்ளிக்கூடங்களை நல்ல முறையில் சீர்திருத்துவதும் ஆலோசிக்கப்படுகிறது.

யுத்தத்திற்குப்பின், ஐரோப்பாவும் ஆசியாவும் பல கஷ்டங்களுக்குள்ளாகி, வீடின்றி நோயாலும் பசியாலும் வாடும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் பல வருஷங்கள் சிரமப்பட்டன. கொஞ்ச காலத்திற்கு **ஐக்கிய நாடுகளின் நிவாரண புனரமைப்பு ஸ்தாபனம்** அவர்களுக்கு உதவியது. அதன் பிறகு பொருளாதார சமூக சபையின் சிபார்சின்பேரில், பொதுச் சபை **சர்வதேச குழந்தைகளின் அவசர நிதி** ஒன்றை ஏற்படுத்தியது. அது அனாதைக் குழந்தைகளுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் அளித்து வைத்திய உதவிக்கு வேண்டுவன செய்து, அனாதை விடுதிகள் வைத்திய சாலைகள் கட்டி, நடத்தி வருகிறது. எவரும் இந் நிதிக்குப் பணம் உதவலாம். பள்ளிக்கூடங்கள், கோவில்கள், அக்கறை கொண்டுள்ள மற்ற ஸ்தாபனங்கள் அளிக்கும் வெகுமதிகளையும் அது பெற்றுக்கொள்கிறது. உங்கள் உதவி

களை நியூயார்க்கிலிருக்கும் 'பொதுக்காரியதரிசி' க்கு அனுப்ப வேண்டும். மற்ற தகவல்களுக்கும் அவ்விலாசத்திற்கே எழுதி தெரிந்துகொள்ளலாம்.

போக்கு வரத்துக் கமிஷன் :—கப்பல், ஆகாய விமானம் ரஸ் தாக்கள், தண்டவாளங்கள், நீராவிக்கப்பல்கள், தந்தி ரேடியோ போக்கு வரத்துக்கள் இவைகள் நல்ல முறையில் நடைபெறு வதற்காக போக்குவரத்துக் கமிஷன் பாடுபடுகிறது. எல்லா நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளைக்கூட்டி ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு செல்ல வசதிகளை அதிகரிக்கச்செய்யவேண்டிய திட்டங்களைத் நிர்மானிக்க வேண்டுமென்றும் 'பாஸ்போர்ட்' முறையை விஸ்தரிக்க வேண்டுமென்றும் இவைகளைப் பொருளா தார சமூக சபை செய்து தன்னுடைய அறிக்கையையும் சமர்பிக்க வெண்டுமென்று இந்தக் கமிஷன் கேட்டுக்கொண்டது. அது உலகத்தபால் யூனியனுடனும் (இதைப்பற்றி நீங்கள் அறிந்திருப் பீர்கள்) சர்வதேச தந்தி இலாகா யூனியனுடனும் (இதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள்) தொடர்பு வைத் துக்கொண்டிருக்கிறது. ஒலி அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதிவிடாமல் இருப்பதற்காக வெவ்வேறு மீட்டர்களை ஒவ் வொரு நாடும் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம், இதை ஒரு மகாநாடு நடத்தி எல்லா நாடுகளுக்கும் சொல்ல வேண்டுமென்று சர்வதேச தந்தி போக்குவரத்து யூனியனை (I.U.T.), கமிஷன் கேட்டுக்கொண்டது.

பொருளாதார வேலைத் தேடித் தரும் கமிஷன் :—வேலை செய்ய விரும்பும் ஒவ்வொருவருக்கும் வேலைதர இது வழி களைத் தயார் செய்யும். உணவுப்பஞ்சத்தை நீக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் போராட்டத்தில் ஐக்கிய நாடு களுடன் சேர்ந்து இக்கமிஷனும் பாடுபடுகிறது. முக்கியமாக ஏழை மக்கள் வசிக்கும் இடங்களிலேயே இக்கமிஷன் தன் வேலைகளைச் செய்யத் தொடங்குகிறது.

நிதிக் கமிஷன் :—மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிப் பணத்தை அவர்களின் நன்மைக்காகவே செலவிடும் வழியை

எல்லா நாடுகளுக்காகும் காண்பிக்கிறது, நிதிக்கமிஷன். பல அரசாங்கங்கள் தவறான வழிகளில் வரிவசூலித்துத் தன் மக்களை ஏழைகளாக்கிவிட்டன. மேலும் தொழிற் சாலைகள் தங்கள் வேலைகளைச் சரிவர செய்யமுடியாமலும் பல நாடுகள் தங்கள் காரியங்களை செய்துவிட்டன.

புள்ளி விவரக் கணக்கு கமிஷன் மிகவும் முக்கியமானது. அதன் அங்கத்தினர்கள், நிபுணர்கள், நல்லவர்கள். அவர்கள் தங்கள் கமிஷனை பொருளாதார சமூக சபையின் புள்ளி விவரக் கணக்குக் கமிஷன் (Statistical Commission of the Economic Social Council) என்று அழைத்துக் கொண்டனர் புள்ளி விவரக் கணக்கெடுப்பதும், மற்றும் அதைச்சார்ந்த வேலைகளைச் செய்வதும் அதன் வேலைகளாகும். பல நாடுகளிலிருந்தும் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது. முக்கியமாக சென்ற வருஷத்தில் உலகத்தில் எவ்வளவு செருப்புகள் விற்கப்பட்டன அல்லது எவ்வளவு கோழிக்குஞ்சுகள் இருந்தன என்பனபோன்ற விவரங்களை அது கூறமுடியும்.

விஷ மருந்துகள் கமிஷன் (Narcotic Drugs Commission) பல அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்ட உடன்படிக்கையினால், இந்தக் கமிஷனுக்குச் சில விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அபினி, பாப்பி விதைகள், கொக்கைன், இவைகள் விநியோகிக்கப்படுவதை கண்காணிக்கிறது. தவறான முறைகளில் போதை மருந்துகளை விற்பனை செய்கிறவர்களைக் கண்டுபிடிக்கும் வழிகளை ஆராய்கிறது.

ஒவ்வொரு கமிஷனிலும் 12 முதல் 18 வரை நிபுணர்கள் இருப்பார்கள். அவர்கள் பொருளாதார சமூக சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளால் அனுப்பப்பட்டவர்கள்.

கமிஷன்களைத்தவிர பொருளாதார சமூக சபைக்குதவ **பிரத்யேக ஏஜென்ஸிகளும்** உண்டு. பிரத்தியேக ஏஜென்ஸிகள் என்ற வார்த்தைகளுக்கு சாஸனத்தில் ஒரு குறிப்பிட்ட அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

பல நாடுகள் ஒன்றுகூடி ஒப்புக்கொண்டபடி பல முக்கிய மான சர்வதேச ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா உட்பட பலதேசங்கள் செய்துகொண்ட ஒரு ஒப் பந்தப்படி **சர்வதேசத் தொழிலாளக் காரியாலயம்** ஏற்பட்டு, பல வருஷங்கள் நிலைத்திருந்தது. இந்த ஸ்தாபனங்கள், சுகாதாரம், விவசாயம், விமான மார்க்கங்கள், இவைகளில் கவனம் செலுத்தவும், பொருதாளார சமூக சபை செய்ய விரும்பும் பல பிரச்னைத் தீர்க்கவும், இது போன்ற முக்கிய காரியங்களில் உதவவும் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுக்காக தங்களாலியன்ற உதவியைச் செய்கின்றன. இன்னும் பல சர்வ தேச ஸ்தாபனங்களுக்கும் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

பொருளாதார சமூக சபையுடன் செய்துகொள்ளும் உடன் படிக்கையால் இவை ஐக்கிய நாடுகளில் அங்கத்தினராகலாம். இவ்வுடன்படிக்கைகள் எல்லாம் பொதுச் சபையால் அங்கீ கரிக்கப்படவேண்டும். இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு உதவு வதற்காகப் பொதுச்சபை பொருளுதவியும் சில சமயங்களில் செய்யும். இம்மாதிரி ஐ.நா.வுடன் சேரும் ஸ்தாபனங்களுக்கு ‘பிரத்தியேக ஏஜென்ஸிகள்’ என்று பெயர்.

இம்மாதிரி பல ஏஜென்ஸிகள் இருக்கின்றன. ஒவ்வொன் றுக்கும் தனித்தனியான சாஸனங்களோ திட்டங்களோ உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒரு பொதுச் சபையும், அலுவலகமும், நிர்வாகியும் இருப்பார்கள். ஒவ்வொன்றும் பல கோடி டாலர்களைச் சேர்த்து, தாங்கள் செய்யும் விசேஷ காரியங்களுக்குச் செலவிடுகின்றன.

இந்த ஏஜென்ஸிகளெல்லாம் மிகப் பெரியவை, முக்கிய மானவை, தனித்தனியாய் இயங்குபவை. அவைகளில் அங் கத்தினராயிருக்கும் நாடுகளாலேயே அவைகள் நடத்தப்படு கின்றன. அவைகள் ஒரு ஸ்தாபனம் செய்துவிட்ட வேலையை மீண்டும் செய்து வேறொன்று தன் காலத்தை வீணாக்காம லிருக்குமாறு பொதுச் சபை பார்த்துக்கொள்ளுகிறது. ஆனால்

அவைகளின்மீது ஆட்சியோ அதிகாரமோ செலுத்தமுடியாது. அவைகளுக்கு உதவிபுரிந்து, அதனால் ஏற்படும் லாபத்தைப் பெறுகிறது. இந்தப் புத்தகத்தின் • நான்காம் பாகத்தில் இந்த விசேஷ ஏஜென்ஸிகளின் முக்யத்வத்தைப்பற்றி ஒரு அத்தியாயம் சொல்லப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

கமிஷன்களும் ஏஜென்ஸிகளும் செய்யும் வேலைகளை ஒன்று சேர்த்துப் பார்ப்பது, பொருளாதார சமூக சபையின் வேலையாகும். அவர்கள் அனுப்பும் செய்திகளையும் அவர்கள் பிரதிநிதிகள் கூறுவதையும் கேட்டு, தன் சிபார்சுகளை அவைகளுக்குச் சமர்ப்பிக்கிறது.

சேகரிக்கப்பட்ட எல்லா செய்திகளையும் அச்சடித்து, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கும், பொதுச்சபைக்கும், ஐ.நா. அங்கத்தின நாடுகளுக்கும், மற்ற விசேஷ ஏஜென்ஸிகளுக்கும், வேறு முக்கியமானவர்களுக்கும் அனுப்புகிறது.

வியாபாரம் பெருகவும், சர்வதேச ஒத்துழைப்புக்கும், தொழில் நிலைமைகளை சீர்திருத்துவதற்கும், மக்களைக் கல்வியறிவுள்ளவர்கள் ஆக்குவதற்கும், பள்ளிக்கூடங்களை நன்முறையில் நடத்துவதற்கும், நோய்களைத் தடுத்து சுகாதாரத்தை அதிகரிப்பதற்குமான தன்னுடைய யோசனைகளை சர்வதேச கூட்டுறவு ஏஜென்ஸிகளுக்கு சமர்ப்பிக்கும்.

இம்மாதிரி யோசனைகள் பெரும்பான்மையோரால் ஆமோதிக்கப்பட்டு பொதுச் சபைக்கோ, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கோ, அனுப்பப்பட்டால், அவைகளை நடைமுறையில் கொண்டுவருவது அவைகளின் வேலையாகும். பொருளாதார சமூக சபை ஒரு போலீஸ் படையை வைத்துக்கொள்ளவில்லை. போதைப்பொருள்களை விற்கும் ஒருவரை சிறைக்கனுப்ப அதற்கு அதிகாரம் கிடையாது.

என்றாலும், அதன் யோசனைகள் எல்லா விஷயங்களிலும் கேட்கப்படுகின்றன. சாஸனத்தை ஒப்புக்கொள்ளும் ஒவ்வொரு

நாடும், சாஸனத்தில் கூறியுள்ள காரியங்களைத் தான் செய்வதாகப் பிரமாணம் செய்கின்றன. பொதுச் சபையுடனும் பாதுகாப்புக் கௌன்ஸிலுடனும் ஒத்துழைப்பதாக ஒவ்வொரு நாடும் பிரமாணம் செய்யவேண்டும் என்று 56-ம் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது.

அங்கத்தின நாடுகளின் அரசாங்கங்கள், பொதுச்சபையிலிருந்தோ கௌன்ஸிலிலிருந்தோ வரும் யோசனைகளின்படி நடக்க வேண்டும். வரிகளை குறைக்கவேண்டுமென்றும், உள் நாட்டில் குடியேறும் சட்டங்களை மாற்ற வேண்டுமென்றும் அவைகள் கூறலாம். அவைகளை மறுப்பதற்குத் தகுந்த காரணங்களில்லாத காலங்களில், அவைகளுக்குட்பட்டே நடக்கவேண்டும்.

பொருளாதார சமூக சபையின் யோசனைகள் ஒரு நாட்டை தனியே குறிப்பிடக்கூடாது. பொதுப்படையாகவே சொல்ல வேண்டும்.

உதாரணமாக, ஸ்பெயினுக்கு எஃகு விற்பனை செய்வதை ஸ்வீடன் உடனே நிறுத்தவேண்டும் என்று அது சொல்லக் கூடாது. ஆனால் சமாதான காரணங்களுக்காகவே மட்டும் விரும்பும் நாடுகளுக்கு எஃகை விற்பனை செய்யலாம் என்று சொல்லலாம்.

இந்த யோசனையை சில நாடுகள் மதிக்காமலிருந்தால் என்ன நடக்கும் ? அந்த நாடுகள் எக்காரியங்களைச் செய்தன, எவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டன என்று அறிக்கைகள் அனுப்பும்படி பொருளாதார சமூக சபை கேட்கலாம். அப்பதில்கள் திருப்திகரமாயில்லாவிட்டால், பொதுச்சபையின் அடுத்த கூட்டத்தில் அந்நாட்டின்மீது குற்றப்பத்திரிகையை இந்த சபை சமர்ப்பிக்கும்.

பொதுச் சபையில் தங்களைப்பற்றிக் குற்றம் சொல்லப்படுவதை எந்த நாடும் விரும்புவதில்லை. சாதாரணமாக, அவைகள், தாங்கள் விதிக்கும் வரிகளைக் குறைத்தோ, உள் நாட்டுக்

குடியேற்று சட்டங்களில் தகுந்த திருத்தங்களைப் புகுத்தியோ, சபையின் யோசனைகளின்படி சட்டங்களை சீர்படுத்திக் கொள்கிறார்கள். எல்லா நாட்டினரும் கூடியுள்ள பொதுச் சபையில் தங்கள் மீது குற்றப்பத்திரிகை படிக்கப்படுவதை அவர்கள் அம்மாதிரி செய்வதால் தடுத்துவிட முடிகிறது.

ஐக்கிய நாடுகளின் சுறுசுறுப்பான ஒரு பகுதி பொருளாதார சமூக சபையும், அதன் ஏஜென்ஸிகளும் ஆகும். அவர்கள் தங்களுடைய வேலைகளைச் செவ்வனே செய்தால், நம்முடைய வாழ்க்கை சுகமாகவும், சந்தோஷம் நிரம்பியதாகவும், வளமுள்ளதாகவும் இருக்கும்.

அத்தியாயம் 6

தாங்களே அரசாண்டு கொள்ளாத மக்களைக் காப்பாற்றுவதற்காக :

தர்மகர்த்தா சபை

இந்த உலகத்தில் வாழும் நான்கில் ஒருபங்கு ஜனங்கள் பல வருஷங்களுக்குக் காலனிகளிலேயே வசித்து வந்தார்கள். அவர்கள் வேறு நாட்டினரால் அரசாளப்பட்டார்களே தவிர, தாங்களே அரசாண்டு கொள்ளவில்லை.

முதல் உலக யுத்தத்தின்போது ஜெர்மனி, துருக்கி நாடுகளிடமிருந்து சில நாடுகளை நேச நாடுகள் பிடுங்கிக்கொண்டன. இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பானிடமிருந்து இன்னம் சில நாடுகளை நேசநாடுகள் பறித்துக்கொண்டன. இந்நாடுகளை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வது ?

இந்தக் கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்கவே தர்மகர்த்தா சபை ஸ்தாபிக்கப்பட்டது.

முதல் உலக யுத்தம் முடிந்த பிறகு, ஜெர்மனி, துருக்கி நாடுகளிடமிருந்து கைப்பற்றிய காலனிகளை எப்படி ஆளுவது என்று நேசநாடுகள் புரியாமல் தவித்துக் கொண்டிருந்த போது "மாண்டேட்" முறையை அவர்கள் கண்டுபிடித்தனர். ஜெர்மனி, துருக்கி நாடுகளின் காலனிகளில் ஒவ்வொன்று இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், தென் ஆப்பிரிக்கா, நியூ ஜிலாந்த், ஆஸ்திரேலியா, பெல்ஜியம் போன்ற நேச நாடுகளுக்கு நிர்வாகம் செய்யும்பொருட்டு கொடுக்கப்பட்டன.

உதாரணமாக பாலஸ்தீனம் இங்கிலாந்திடமும், சிரியா பிரான்சிடமும், விடப்பட்டன. ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மன் காலனிகள் எல்லாம் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் பிரித்துக்

கொடுக்கப்பட்டன. பஸிபிக் கடலிலுள்ள நியூகினி, ஆஸ்திரேலியாவையும், மற்றும் பஸிபிக் கடலிலுள்ள ஜெர்மனிக்குச் சொந்தமான பல தீவுகள் ஜப்பானையும் அடைந்தன. இந்த இடங்கள் எல்லாம் சர்வதேச சங்கத்தைச் சேர்ந்தனவென்றும், அதனுடைய அதிகாரத்தின் கீழேயே இந்தப் பலமுள்ள அரசாங்கங்கள், அவைகளை ஆண்டுவந்தன என்பதும், முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

உண்மையில் இம்முறையில் காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. அச் சபையிலிருந்து ஒரு குழு, ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்ட தீவுகளில் அரசாங்கம் சரிவர நடக்கிறதா என்று பார்ப்பதற்காகப் புறப்பட்டது. ஆனால் ஜப்பான் அந்தக் குழு பிரவேசிப்பதைத் தடுத்து விட்டது. கடைசியில், அந்த தீவுகளில் யுத்த தளவாடங்களை ஜப்பான் சேகரித்து வைத்திருந்ததாக வெளியாயிற்று. இது சபையின் நோக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட செய்கையாகும். அதேபோல இங்கிலாந்திடமும் பிரான்சிடமும் விடப்பட்ட நாடுகளையும், அவைகளின் சொந்த நாடுகளாகவே பாவிக்க ஆரம்பித்துவிட்டன, அவ்விரு நாடுகளும்.

தற்போது மீண்டும் அவைகள் நிர்வாகத்திற்காகவே தான் மற்ற நாடுகளிடம் அளிக்கப்படுகின்றன. என்றாலும், அம்முறையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது நன்றாக வேலை செய்ய முடியும் என எதிப்பார்க்கலாம்.

இத்தாலிக்கும் ஜப்பானுக்கும் சொந்தமானதும், இரண்டாவது உலக யுத்தத்தில் நேசப் படைகள் கைப்பற்றியதுமான தேசங்கள் மீது தர்மகர்த்தா சபைக்கு அதிகாரமுண்டு. எந்தப் பிரதேசத்தை ஆளும் அரசாங்கமும் தன்னுடைய நாட்டை இந்த சபையின் அதிகாரத்திற்குட்படுத்தி வைக்கலாம்.

உடன்படிக்கையில் கையெழுத்திட்டவுடனே, ஒரு பிரதேசம், தர்மகர்த்தா சபைக்குச் சேர்ந்து விடுகிறது. ஒரு அரசாங்கம் தான் ஆட்சி செலுத்தும் பிரதேசம் தர்மகர்த்தா முறையின்படி

கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று விரும்பினால் அந்த நாடு ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். அவ் வுடன்படிக்கையில், அந்தப் பிரதேசத்தை யார் ஆளவேண்டும் என்பதும், தர்மகர்த்தா சபை அதற்கு எவ்வழிகளில் உதவ முடியும் என்பதும், எந்தச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டு மென்பதையும் எழுதப்படும். ஒவ்வொரு பிரதேசமும் தனித் தனித்தனியானவை. அவைகளுக்கென வெவ்வேறு பிரச் னைகள் இருக்கும். ஆதலால் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்தனியான உடன்படிக்கைகள் எழுத வேண்டும்.

தர்மகர்த்தா முறையின்கீழ் நாடுகள் கொண்டுவரப்படும்போது அதன் மக்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமா என்பதுபற்றி சாஸனத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. உண்மையில் என்ன நடக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தால், அங்கு வசிக்கும் மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் போதும், ஆட்சியாளர்கள் அவர்களின் வேண்டுகோள்களுக்கு செவி சாய்ப்பது கிடையாது. உதாரணமாக, பாலஸ்தீன மக்கள் சொல்வதற்கு ஏராளமான விஷயங்களிருந்தன.

பிரதேசங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். கேந்திர பிரதேசங்கள், கேந்திரமில்லாத பிரதேசங்கள். யுத்தக் கப்பல் கள் நிறுத்தப்படும் முக்யமான துறைமுகங்கள், விமானஸ்தலங் கள், யுத்தகாலங்களில் உபயோகப்படும் இடங்கள் இவைகளெல் லாம் கேந்திர ஸ்தானங்கள் என்று சொல்லப்படும். மற்ற பிர தேசங்களெல்லாம் அப்படிப்பட்டதல்ல.

கேந்திரஸ்தானங்களுக்கு எழுதப்படும் தர்மகர்த்தா உடன் படிக்கைகள் பாதுகாப்புக் கௌன்ஸிலின் அங்கீகாரம் பெறவேண்டும். பாதுகாப்புக் கௌன்ஸிலிலுள்ள அங்கத் தினர்களுக்கு அவ்வுடன்படிக்கை திருப்தியளிக்காவிட்டால், அதை மாற்றும்படி, அங்கு ஆள்வோருக்குச் சொல்வார்கள்.

மற்ற பிரதேசங்களுக்கு செய்யப்படும் உடன்படிக்கைகள் பொதுச்சபையின் அங்கீகாரம் பெறவேண்டும். உடன்படிக்கை

களில் முக்கியமான மாறுதல்களை வேண்டும்போது, அவைகளைச் செய்வதில் அச்சபை இதுவரை வெற்றிபெற்றுள்ளது.

இம்முறை வெகு சுலபமாக நடக்கிறது. அப் பிரதேசம் ஒரு நாட்டினுல் ஆளப்பட வேண்டுமா, பல நாடுகளால் ஆளப்பட வேண்டுமா, அல்லது தர்மகர்த்தா சபையினுலேயே ஆளப்பட வேண்டுமா என்பதை இவ்வுடன்படிக்கைகள் விளக்குகின்றன.

இதன் தத்துவம் என்னவென்ருல், அங்கே ஆட்சி செலுத்தும் நாடுகள், தங்களை தர்மகர்த்தா சபை கண்காணிப்பதற்கும், தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதற்கும், ஒப்புக்கொள்கின்றன.

இந்த மாதிரி உடன்படிக்கைகளின் மூலம், பிரதேசங்கள் மீது ஆட்சி செலுத்தும் நாடுகள், தர்மகர்த்தா சபையில் அங்கம் வகிக்கின்றன. ஐந்து வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்சு, சோவியத் குடியரசு, சீனு, அமெரிக்கா இவைகள், எப் பிரதேசங்களையும் தர்மகர்த்தா முறையில் ஆளாவிடினும், அங்கத்தினர்களாகவிருக்கின்றன.

தர்மகர்த்தா முறையில் ஆளும் தேசங்கள் எத்தனை அங்கம வகிக்கிறதோ அதே எண்ணிக்கையுள்ள தர்மகர்த்தா முறையில் ஆளாத தேசங்களையும் பொதுச் சபைத் தேர்ந்தெடுக்கும்.

அதன்படி முதல் தர்மகர்த்தா சபையில் கீழ்கண்ட நாடுகள் அங்கம் வகித்தன.

தர்மகர்த்தா முறையில் ஆளும் நாடுகள்.	மற்ற நாடுகள்.
ஆஸ்திரேலியா	ஐந்து வல்லரசுகளில் மீதியுள்ள
பெல்ஜியம்	சீனு, சோவியத்
பிரான்சு	குடியரசு அமெரிக்கா.
நியூஜீலந்து	இதைத் தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட
இங்கிலாந்து	தேசங்களான இராக், மெக்ஸிகோ
United Kingdom	என்ற இரு நாடுகள்.

இது ஒரு நல்ல திட்டம். இந்தச் சபையில் காலனிகளில் ஆட்சி செலுத்தும் நாடுகள் மட்டுமேயிருந்தால், ஒரு பிரதிநிதி மற்றவரைப் பார்த்து "என்னுடைய காலனிகளிலிருந்து நான் அபகரிக்கும் பொருளைப்பற்றி நீ வெளியே சொல்லாமலிருந் தால் உன் காலனிகளிலிருந்து நீ சேர்க்கும் பொருள்கள் பற்றி யும் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். அப்பணத்தால் நாம் அதிக கல்விச் சாலைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதை நாம் வெளியே சொல்ல வேண்டியதில்லை." என்று சொல்லு வார். மற்றவரும் அதற்கு ஆமோதித்தால் எல்லாம் இரகசிய மாகவே நடந்துவிடும்.

ஆனால் இந்தச் சபையில் தர்மகர்த்தா பிரதேசங்களைப் பரி பாலிக்கும் ஆறு நாடுகளுடன், அம்மாதிரியில்லாத வேறு ஆறு நாடுகளும் அங்கம் வகிப்பதால், பிரதேசங்களுக்குப் பாதுகாப் பளிக்க வசதியாயிருக்கிறது. இந்த சபையில் அங்கத்தினரா யிருக்கும் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப் பும். 12 நாடுகள் அங்கம் வகிப்பதால், 12 பிரதிநிதிகள் உண்டு.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு ஒட்டு உண்டு. அங்கு செய்யப் படும் முடிவுகள், பெரும்பான்மையான ஒட்டுகளைப் பொருத்தே யிருக்கும். [ஐந்து வல்லரசுகளுக்கு விசேஷ அதிகாரம் கிடை யாது.]

இந்தச் சபை தனக்கென தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கோள்வதோடு, நடைமுறைக்கான சட்டங்களையும் வகுத்துக் கொள்ளும்.

பெரும்பான்மையான அங்கத்தினர்கள் விரும்பும்போது சபை கூட்டப்படும்.

"சென்ற வருஷத்தில் எவ்வளவு பள்ளிக் கூடங்கள் கட்டி னீர்கள்? உங்கள் மக்களுக்கு அவர்களுடைய நகராட்சிக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கொடுத்திருக்கி றீர்களா?" என்பன போன்ற கேள்விகளைச் சேர்த்து தர்மகர்த்தா

சபை, ஒரு பட்டியலைத் தயாரிக்கும். தர்மகர்த்தா பிரதேசங்களை ஆளும் நாடுகளுக்கு இந்த கேள்வித்தாள்கள் ஒவ்வொரு வருஷமும் அனுப்பி வைக்கப்படும். அவைகளுக்குப் பதில் எழுதி அனுப்ப வேண்டியது அங்கு ஆள்பவரின் கடமையாகும்.

இப்பதில்களின்மீது விவாதம் செய்து தன் அபிப்பிராயங்களை பொதுச் சபைக்கோ, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கோ, தர்ம கர்த்தா சபை அனுப்பி வைக்கும்.

இந்தப் பதில்களின்மீது மட்டும் சபை ஆதாரப்பட்டிருப்பதில்லை. தனிக் குழுக்களையனுப்பியும் தனக்கு வேண்டிய விவரங்களை சேகரித்துக் கொள்ளும். அங்கு ஆளும் அரசாங்கம், இக் குழு பிரவேசிப்பதை ஆட்சேபித்தால், அதுபற்றி பொதுச் சபைக்கோ பாதுகாப்புக் கௌன்சிலுக்கோ, தர்மகர்த்தா சபை விண்ணப்பித்துக் கொள்ளும்.

அப்பிரதேசங்களில் வாழும் மக்கள், தங்களுடைய நாட்டில் நடக்கும் அக்கிரமங்களைப் பற்றி தர்மகர்த்தா சபைக்கு மனுக்கள் எழுதி, தங்களுக்குதவுமாறு வேண்டலாம். பெல்ஜியம், நியூஜிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இவைகள் இம்மாதிரிப் பிரதேசங்களை ஆட்சிபுரிந்தபோது, மேலே கூறியபடி மனுக்கள் அனுப்பும் சுதந்திரத்தை, அந்த பிரதேச மக்களுக்கு அனுமதிக்க விரும்பவில்லை. அம்மாதிரி மனுக்கள் அனுப்பப்படுவதை தடுக்க வேண்டுமென்று அவைகள் விரும்பின. அப்படிச் செய்யாவிட்டால், தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கண்காணிக்கும் ஓர் உரிமையை அச்சபைக்குக் கொடுக்கவேண்டி வருமென்று அவைகள் பயப்பட்டன. ஆனால் அமெரிக்காவும், சோவியத் குடியரசும், தர்மகர்த்தா பிரதேச மக்களுக்கு இவ்வுரிமை வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்திக் கூறின.

ஒரு மனுவில் அப்பிரதேச மக்கள் கேவலமாய் நடத்தப்படுகிறார்களென்று படித்தால், தர்மகர்த்தா சபை, உடனே அப்பிரதேசத்தில் ஆளும் நாட்டினிடமோ அல்லது நாட்டாரிடமோ அது பற்றி விசாரிக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில், எக்

காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்து பொதுச் சபைக்கோ பாதுகாப்பு கௌன்சிலுக்கோ இந்த சபை அனுப்பும்.

மேலும் காலனிகளில் ஆட்சி புரியும் ஒவ்வொரு அங்கத்தின நாடும், எவ்வளவு வரி வசூலிக்கப்பட்டது, எவ்வளவு புதிய சாலைகள் ஏற்படுத்தப்பட்டன, எவ்வளவு பேர்கள் குற்றங்கள் செய்ததற்காகத் தண்டனையடைந்தனர் என்பன போன்ற செய்திகளை அனுப்ப வேண்டும். இந்த செய்திகளிலிருந்து, அங்கு நிர்வாகம் செய்யும் நாடுகள் தர்மகர்த்தா முறைக்கு எதிரான காரியங்களைச் செய்கின்றனவா என்பதும் வேறு அக்கிரமங்கள் புரிகின்றதா என்பதும், பொதுச் சபைக்கும் தர்மகர்த்தா சபைக்கும் தெரியவரும்.

ஒவ்வொரு அங்கத்தின நாடும் தர்மகர்த்தா சபை மூலமாய் தன் காலனிகளில் ஆட்சி புரிந்தாலும், வேறு எவ்விதத்தில் அதிகாரம் செலுத்தினாலும், கீழே சொல்லியுள்ள இரு காரணங்களுக்காக, தன்னுடைய காலனிகளையும் பிரதேசங்களையும் ஆட்சி புரிவதாக பிரதிக்ஞை செய்யவேண்டும்.

1. பருத்தி எண்ணெய் ரப்பர் அவுரி (Hemp) முதலிய பொருள்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாடு வாங்க எல்லா உரிமைகளும் உண்டு. அதுபோலத் தன் நாட்டுப் பொருள்களைப் பிற நாடுகளில் விற்பனை செய்யவும் உரிமைகள் வேண்டும். பல காலனிகளை ஒரு நாடு தனக்கே வைத்துக் கொண்டு, அவைகளிலிருந்து கிடைக்கும் கச்சாப் பொருள்களைத் தானே பெற்று, அவைகளுக்குப் பதிலாக அலாரம் கெடியாரங்களும், தையல் மிஷின்களும் வழங்கிவிடுவது கூடாது. தங்கள் இஷ்டம்போல் பொருள்களை வாங்கவும் விற்கவும் காலனிகளுக்கு அனுமதி தரவேண்டும்.

2. தன்னுடைய சொந்த லாபத்திற்கே மட்டுமன்றி, அங்கு வாழும் மக்களின் நன்மைக்காகவே ஒரு நாடு ஆட்சி புரிய வேண்டும்.

அவ்விடங்களில் பள்ளிக் கூடங்களும், வியாபாரஸ்தலங்களும் கட்டவேண்டுமென்று சாஸனம் சொல்லுகிறது. அங்கு வாழும் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் விதத்தை அறியும்படி உதவி செய்து, வெகு சீக்கிரத்திலேயே அவர்களையே ஆள விட்டுவிட வேண்டும். மற்றவர்களைப் போல அவர்களும் வாழ்வதற்கு வழிகளைச் செய்து தரவேண்டும். [பகுதி 73].

அப்பிரதேசங்களிலும் காலனிகளிலும் வாழும் மக்கள், மற்ற மக்களைப் போலவே உரிமைகளும் சுதந்திரங்களும் உடையவர்களாயிருக்கவேண்டும்.

பொதுச் சபை பாதுகாப்புக் கௌன்சில் இவைகளின் உதவியுடன் தர்மகர்த்தா சபை அங்கு ஆளும் நாடுகள் நல்ல முறையில் ஆள்வதற்கு உதவும்.

இக்காரியம் நிறைவேறுவது அங்கு ஆட்சி செலுத்தும் அரசாங்கங்களில் உள்ளவர்களைப் பொருத்து இருக்கிறது. அவர்கள் விரும்பினால், நிறைய கல்வி ஸ்தாபனங்களை நிறுவி, அவர்களின் நகர கௌன்ஸிலுக்கும் சட்டசபைக்கும் அங்கத்தினர்களைப் பொறுக்கும் பொறுப்பை அம்மக்களிடமே விட்டுவிட்டு, சட்டங்கள் இயற்றும் விதத்தையும் கற்றுக் கொடுக்கலாம். அங்கு ஆட்சி புரியும் அரசாங்கத்திலுள்ளவர்கள், இப்படிச் செய்ய விரும்பாது போனால், தர்மகர்த்தா சபை, பாதுகாப்புக் கௌன்சில், பொதுச் சபை இம்மூன்றும் அவர்களுடைய நடவடிக்கைகளை எதிர்த்துத் தங்களுடைய எண்ணங்களை வெளியிடும்.

அத்தியாயம் 7

தேசங்களை விசாரிக்கும் நீதிஸ்தலம்

சர்வ தேச நீதிமன்றம்

உங்கள் நாட்டின் சட்டங்கள், உங்கள் நாட்டின் சட்ட சபையால் செய்யப்படுகின்றன. உங்கள் நாட்டில் ஓட்டுச் செய்யும் உரிமையுள்ள பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் அதில் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனி சட்டங்கள் இருக்கின்றன. தொழிற்சாலைகளில் வேலை செய்வதால், சிறுவர்கள் நோய்வாய்ப் படுகிறார்களென்னும் காரணத்தால், சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தக் கூடாதென்று ஒரு சட்டம் இருக்கிறது. சில நாடுகள் அச் சட்டத்தை அமுலில் வைத்துக்கொண்டுள்ளன. அந்நாடுகளில் சிறுவர்களுக்குத் தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பதில்லை. திருடுவதும், ஜன்னல்கள் மீது கற்களைவிட்டெறிவதும் கூடாதென்று சொல்லும் சட்டங்கள் எல்லா நாடுகளிலும் இருக்கின்றன. நியூ ஜெர்ஸியில், கொலை செய்த குற்றவாளி ஒருவனை மின்சார நாற்காலியில் அமரச் செய்து, மின்சார மூலம் அவன் உடலை வதைக்க வேண்டும் என்று சட்டமிருக்கிறது. நியூ ஹாம்ப்ஷயரிலோ அவனைத் தூக்கிலிட வேண்டுமென்பதுவே சட்டம்.

நீங்கள் எவைகளைச் செய்யக்கூடாதென்பவைகளை உங்கள் நாட்டுச் சட்டங்கள் சொல்லும். இந்தச் சட்டங்களை மீறினால், உங்கள் நாட்டுப் போலீஸும், நீதிமன்றங்களும், சிறைச்சாலைகளும், தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும். அதுபற்றிய சட்டங்களும் இருக்கின்றன.

நாடுகளுக்கிடையே "சர்வதேச சட்டங்கள்" என்று கூறப்படும் சில உடன்படிக்கைகளிருக்கின்றன. அவைகள் நாடுகள், உள்

நாட்டிற்காகச் செய்யும் சட்டங்களிலிருந்து வேறுபட்டவை. அவைகளை அமுல் நடத்த சர்வதேச போலீஸோ, சிறைச்சாலைகளோ கிடையாது. ஒரு நாட்டின் சட்டம், "சட்டம்" தான். அதை மீறினால் உங்களைச் சிறைச்சாலையில் தான் பார்க்க முடியும். ஆனால் 1945-ம் வருஷம் வரையிலும் சர்வதேச சட்டத்தை மீறிய எவரும் எந்த தேச போலீஸாராலும், நீதிமன்றத்தாலும் தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சர்வதேச சட்டங்கள் மூன்று வழிகளில் ஏற்படுத்தப்படுகின்றன.

முதலாவது ஒப்பந்தங்கள் மூலம். இரண்டு நாடுகள் கீழ் கண்ட மாதிரி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதில் ஒரு நாடு மற்றொரு நாட்டினிடமிருந்து ஒவ்வொரு வருஷமும் நான்கு மில்லியன் டன்கள் காப்பிக் கொட்டையை வாங்குகிக் கொள்வதென்றும், மற்றது அந்நாட்டு மக்கள் முதற் சொல்லிய நாட்டிலிருந்து வாங்கும் மோட்டார் கார்கள் மீது எந்தவிதமான பாதுகாப்பு வரியையும் விதிப்பதில்லையென்றும் எழுதிக் கொள்ளலாம். அவ்விரு நாடுகளும் இவ்வொப்பந்தத்தை ஒப்புக் கொள்ளும்போது, அவ்விரு நாடுகளைப் பொறுத்த வரையில் அது ஒரு சட்டமாகிறது. [இது நாடுகளுக்கு ஒரு சட்டமே தவிர, தனி மனிதர்களுக்குச் சட்டமல்ல என்பதை கவனிக்க வேண்டும்].

ஒப்பந்தங்கள் ஆயிரக் கணக்கில் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் பல ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. சர்வதேச சட்டங்களென்று நாம் சொல்லும்போது இம்மாதிரி ஒப்பந்தங்களையே குறிப்பிடுகிறோம்.

இதைத்தவிர இரு விதங்களிருக்கின்றன. அவைகள் அவ்வளவு முக்கியமானவையல்ல. வெகு காலமாகப் பழக்கத்திலிருந்து வரும் ஒரு வழக்கம் சர்வதேச சட்டமாகும். சில நாடுகள் ஒரு குறிப்பிட்ட முறையிலேயே தங்கள் காரியங்களைச் செய்துகொண்டு போனால், அம் முறையே ' சர்வதேச சட்டமாக'

கருதப்படும். உதாரணமாக கடலின் மத்தியில் ஒரு கப்பலி லுள்ளவர்களை மற்றொரு கப்பலிலுள்ளவர்கள் கடற் கொள்ளை யடித்தால், அவர்களை விசாரித்துத் தண்டனையளிக்க, அவர்களைப் பிடிக்கும் எந்த நாட்டிற்கும் உரிமையுண்டு. கொள்ளையிட்ட அல்லது கொள்ளையடிக்கப்பட்ட கப்பல் எந்த நாட்டைச் சேர்ந்த தாயிருந்தாலும், அதுபற்றிக் கவலையில்லை.

அது தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கமாகும். அதுவே எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமாகும். சென்ற இரண்டு மூன்றுண்டுகளாக மக்கள் தங்களுக்குச் சரி, தவறு என்று எவைகளை நினைத்து அதன்படி நடந்து வந்தார்களோ, அவ்வழக்கங்களே சர்வ தேச சட்டங்களாக ஒப்புக் கொள்ளப் பட்டன.

சர்வதேச சட்டங்கள் ஏற்படும் மூன்றுவது வழி, சர்வதேச சட்டங்களில் நிபுணர்களான 'ஹ்யூகோ கிரோஷியோ' (Hugo Grotius), நம் நாட்டு நீதிமன்றத் தலைவர் கிரீன் எச். ஹேக்வொர்த் (Judge Green H. Hackworth) போன்ற வர்கள் எழுதியுள்ள நூல்களாகும். ஒப்பந்தங்களில் சொல் லப்படாத விஷயங்களைத் தீர்மானிப்பதற்கு இப் புத்தகங்கள் மிகவும் உபயோகமாயிருக்கின்றன.

தான் வழக்குகளை முடிவு செய்வதற்கு, மேற் சொல்லிய மூன்றுவிதமான சர்வதேச சட்டங்களையே சர்வதேச நீதிமன்றம் உபயோகிக்கிறது.

எல்லா அங்கத்தின நாடுகளும், தாங்கள் செய்துகொண் டிருக்கும் ஒப்பந்தங்களின் பிரதியொன்றை ஐக்கிய நாடுகளின் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சாஸனத்தின் 102-ம் பகுதியில் கூறப்படுகிறது. அவைகளைப் படித் தறிய வேண்டுமென்று பலர் விரும்புகிறுர்கள். அதனுல் ஆயிரக் கணக்கான பிரதிகளை அலுவலகம் அச்சிட்டு அளிக்கிறது. நீங்கள் ஒரு பெரிய நகரத்தில் வாழ்ந்தால், உங்கள் நகர பொது நூல் நிலையத்தில் இவ் வொப்பந்தங்களின் அச்சுப்

பிரதிகளை நீங்கள் பார்க்கலாம். அவைகள் பார்வைக்குத் துண்டுப் பிரசுரங்கள்போலிருக்கும். அவைகளிலுள்ள வாக்கியங்கள் அவ்வளவு திருப்திகரமாயிராது. ஆனால் சில சமயங்களில் அவைகளில் உணர்ச்சியூட்டும் செய்திகளும் இருக்கும்.

நாடுகள் ரகசிய ஒப்பந்தங்களும் செய்துகொள்ளும் பிரான்சில் பிரதம மந்திரியாயிருந்த ரிச்லியூ என்பவர் இங்கிலாந்துக்கு எதிராக ஸ்பெயினுக்கு உதவுவதாக ரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதனால் திருப்தியடைந்த ஸ்பெயினும், அவர் கேட்ட சில பொருள்களைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. அதே சமயத்தில் அவர் இங்கிலாந்திடமும், ஸ்பெயினை எதிர்த்துப் போர் செய்வதில் இங்கிலாந்தின் கடற்படைக்கு உதவுவதாக ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். அதனால் இங்கிலாந்தும் அவர் விரும்பிய பொருள்களைக் கொடுக்கச் சம்மதப்பட்டது. சில வருஷங்களுக்கு முன்பு கூட இம்மாதிரி இரகசிய ஒப்பந்தங்களை நாடுகள் செய்து கொண்டிருந்தன.

இரகசிய ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளும் அளவிற்கு நீதிமன்றம் முட்டாள் தனமாய் நடந்து கொள்ளாது. ஆதலால் ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்ட ஒரு நாடு, அவ்வொப்பந்தத்தை அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் இருந்தால், அதை சர்வதேச நீதி மன்றம் ஒப்புக் கொள்ளாதென்றும், அது சர்வதேச சட்டமாகக் கருதப்படாதென்றும் 102-ம் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது.

முதல் உலக யுத்தம் முடிந்ததும் தொடங்கப்பட்ட சர்வதேச சங்கத்தில், சர்வதேச சட்டங்கள் சம்பந்தப்பட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்காக "சர்வதேச நிரந்தர நீதிஸ்தலம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதை 'உலக நியாயஸ்தலம்' என்று மக்கள் சொன்னார்கள். சர்வதேச சங்கம் அடைந்த வெற்றிகளில் அதுவும் ஒன்று. இருபத்தைந்து வருஷ காலத்தில் அந்த நியாயஸ்தலம் அறுபது வழக்குகளை விசாரணை செய்தது. ஒவ்வொரு விசாரணை முடிந்த பின்பும், வழக்கத்திற்குச் சம்பந்தப்பட்ட

நாடுகள், அந்த நியாயஸ்தலத்தின் தீர்ப்புக்குக் கீழ்ப்படிந்தன. ஆனால் நம் அமெரிக்க தேச 'செனட்' சபை, நாம் அதில் சேருவதை எதிர்த்து 'ஓட்டு'ச் செய்தது.

இப்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள சர்வதேச நீதிமன்றம் ஐக்கிய நாடுகளின் ஒரு பகுதியேயாகும். அது எல்லா விதத்தி லும் 'உலக நியாயஸ்தலத்'தையே ஒத்திருந்தது. அதில் ஏற்படுத்திய முக்கிய மாறுதல்களினால், இப்புதிய நீதிமன்றம் தன் வேலைகளை முன்னிலும் சுலபமாகச் செய்வதற்கு முடிந்தது. பழைய உலக நியாயஸ்தலத்தை ஒப்புக்கொள்ளாத நம்முடைய 'செனட்' சபை, பத்தே வருஷங்களுக்குப் பின் ஸ்தாபிக்கப்பட்ட இந்தசர்வதேச நீதிமன்றத்தை 1945-ல் ஒப்புக் கொண்டது. அதற் குக்காரணம் இதுதான். சமாதானத்தை நிலை நிறுத்தும் உலக ஸ்தாபனத்திலோ, நீதிமன்றத்திலோ அமெரிக்கர்களைப் பங் கெடுத்துக் கொள்ளும்படியும், அதிக அக்கரை காட்டும்படியும் இரண்டாவது உலக யுத்தம் செய்து விட்டது.

ஐக்கிய நாடுகளில் சேரும் எல்லா நாடுகளும், அக் காரணத் தினாலேயே சர்வதேச நீதிமன்றத்திலும் சேர்ந்ததாக ஆகி விடுகிறது. ஐக்கிய நாடுகளிலிருந்து நீதிமன்றம் ஒரு விஷயத் தில் மாறுபட்டிருக்கிறது. நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள் மக்களே தவிர, நாடுகளல்ல. பாதுகாப்புக் கௌன்சிலுக்கோ, பொருளாதார சமூக சபைக்கோ, தர்மகர்த்தா சபைக்கோ அங் கத்தினர்களை பொதுச் சபை தேர்ந்தெடுக்கும்போது, நாடுகளையே தேர்ந்தெடுக்கிறது. அதன் பிறகு தங்கள் பிரதிநிதிகளாக ஆணை யோ, பெண்ணையோ தேர்ந்தெடுப்பது அந்தந்த நாடுகளின் வேலையாகும். அவைகளுக்காக வழிகளை அவைகளே நிச்ச யித்துக் கொள்கின்றன. இந்த நீதிமன்றத்து நீதிபதிகள் எந்த நாட்டுப் பிரதிநிதிகளுமல்ல. அவர்கள் யாருடைய பிரதி நிதிகளுமல்ல.

அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மிகவும் சிக்கலானது. ஆனால் நல்ல முறையில் நடத்தப் படுகிறது. ஒவ்வொரு நாட்

டின் அரசாங்கங்களும் தங்கள் நாட்டிலிருந்து நால்வரை நிய மனம் செய்கின்றன. அவர்களை "தேசிய கோஷ்டி" என்று சொல்லலாம். அந்நால்வர் ஒன்றுகூடி ஆலோசித்து, நான்கு பெயர்களை நீதிபதி பதவிக்காக சிபார்சு செய்வார்கள். அந் நான்கு பெயர்களிலும் இருவர்தான் அந்நாட்டிலிருந்தே பொறுக்கப்பட்டவர்களா யிருக்கவேண்டும். ஆனால் சாதாரண மாக, அக்குழு வெளி நாடுகளிலிருந்து மூவரையும் தங்கள் நாட்டிலிருந்து ஒருவரையுமே குறிப்பிடுவார்கள். இப் பெயர் கள் பொதுச் சபைக்கும், பாதுகாப்புக் கௌன்சிலுக்கும் அனுப் பப்படும். இவ் விரண்டிலும் அப்பெயர்கள் மீது ஓட்டுச் செய்யப் படும். எவருக்குப் பொதுச் சபையிலும் பாதுகாப்புக் கௌன்சி லிலும் பெருவாரியான ஓட்டுகள் அளிக்கப்படுகிறதோ, அவர் நீதிபதியாக நியமிக்கப்படுவார்.

[பாதுகாப்புக் கௌன்ஸில் ஐந்து பெயர்களைத் தேர்ந்தெ டுத்து, பொதுச் சபை வேறு ஐந்து பேர்களைத் தேர்ந்தெடுத்தால், அவர்களில் எவருமே நியமிக்கப்படமாட்டார்கள். அதன் பின் கௌன்ஸிலும் சபையும் மறுபடியும் ஓட்டுச் செய்ய வேண்டும். அவர்களின் முடிவுகள் ஒத்துப் போகும் வரையிலும் இதே மாதிரி முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்கென விரிவான தனிப்பட்ட கட்டு திட்டங்கள் இருக்கின்றன].

இதன் முடிவில் நீதிமன்றத்தில் 15 பேர்களிருப்பார்கள். அவர்கள் மூன்று வருஷத்திற்கு ஒருமுறை ஐவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள். அவர்களில் ஒரு நாட்டிலிருந்து ஒரு பிரதிநிதிதான் இருக்கலாம். அவர்கள் பாரபட்சமற்ற நீதிபதிக ளாயிருக்க வேண்டும். அவர்கள் குணச் சிறப்பிற்காகவே நீதி பதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. [நீதிமன்றத்தின் சாஸனத்தின் இரண்டாம் பகுதி]. அவர்களெல்லோரும் உண்மையிலேயே மதிப்பிற்குரியவர்கள்.

ஒரு நீதிபதி ஒன்பது வருஷங்கள் பதவி வகிக்கலாம். அதன் பிறகும் அவர் தேர்ந்தெடுக்கப்படலாம். எந்த நீதி

பதியும், ஒன்பது வருஷங்கள் முடிவடைவதற்குள் பதவியி லிருந்து விலக்க முடியாது. ஒன்பது வருஷங்கள் மிகவும் நீண்ட காலம்தான். ஒரு வழக்கை விசாரித்து முடிவு செய்யும் போது, பொதுச்சபை இந்த முடிவுக்காக வருத்தம் கொள்ளுமா, என்று நீதிபதிகள் யோசிக்கக் கூடாது. தான் எது சரியான முடிவு என்றும் நியாயமான முடிவு என்றும் தீர்மானம் செய்கிறரோ, அதையே வெளியிட வேண்டும். ஒரு நீதிபதி மிகவும் நோய்வாய்ப்பட்டு வேலை செய்ய முடியாத காலத்திலும் பதவியிலிருந்து விலக மறுத்து விட்டால், மற்ற நீதிபதிகள் ஒன்றுகூடித் தீர்மானம் செய்தால், அவரைப் பதவி யிலிருந்து தள்ளிவிடலாம். வேறு எவ்வழியிலும் யாராலும் அவரைப் பதவியிலிருந்து தள்ளிவிட முடியாது. இதிலிருந்து பொதுச் சபையும் பாதுகாப்புக் கௌன்ஸிலும் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான வர்களா என்று தெரிந்து தேர்ந்தெடுப்பதே நலம்.

இந்த நீதிபதிகள் யாரிடமிருந்தும் உத்திரவுகள்பெற வேண் டியதில்லை. அவர்களில் ஒருவர் நம் அமெரிக்காவைச் சேர்ந்த வர் என்று வைத்துக்கொள்வோம். அதனால் நம் ஜனாதிபதி அவர் எப்படி ஓட்டுச் செய்யவேண்டுமென்றோ, அதற்கான சூசனைகள் காட்டவோ கூடாது. ஒரு நீதிபதி அம்மாதிரி வேறு ஒருவரிடமிருந்து குறிப்புகள் பெற்று நடப்பதாக, மற்ற நீதி பதிகள் தெரிந்து கொண்டால், அவர்கள் ஒன்று சேர்ந்து அவரைப் பதவியிலிருந்து தள்ளி விடலாம். நீதிபதிகளின் சம்பளத்தைப் பொதுச் சபையே கொடுக்கிறது. [வருஷத்திற்கு 21,000 டாலர்கள்]. ஒரு நீதிபதியின் சம்பளத்தை அவருடைய ஒன்பது வருஷ காலத்திற்குள் குறைக்கக் கூடாது.

தனி மனிதர்களுக்குள் ஏற்படும் சச்சரவை இந் நீதிமன்றம் விசாரிக்காது. தன்னிடமிருந்து பல மில்லியன் டாலர்களை ஒரு அரசாங்கம் திருடிக் கொண்டு விட்டது என்று, ஒரு தேசத்தைச் சேர்ந்த ஒருவர் வாதாடினாலும், அவ் வழக்கை இந்நீதிமன்றம் விசாரிக்காது. ஏனென்றால், வழக்காடுபவன் தனி மனிதனே

தவிர, ஒரு நாடல்ல. ஒரு நாடு மற்ற நாட்டின்மேல் செய்யும் குற்றச்சாட்டுகளை மட்டும்தான் இந்நீதி மன்றம் விசாரணை செய்யும்.

ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் எந்த நாடும் இந்த நீதிமன்றத்தில் தன் தாவாக்களைக் கொண்டுவரலாம். அங்கத்தினரல்லாத ஒரு நாடு, நீதிமன்றத்தின் சாஸனத்தில் கையெழுத்திட்டால், அதுவும் இந்நீதிமன்றத்தில் தன் வழக்கைச் சொல்லலாம். பொதுச் சபையும் பாதுகாப்புக் கௌன்ஸிலும், இம்மாதிரி வழக்காட விரும்பும் அங்கத்தினரல்லாத நாடுகளுக்கென, சில தனிச் சட்டங்களை இயற்றுகின்றன. ஐக்கிய நாடுகளில் சேர்வதற்கு அனுமதிக்கப்படாத, ஜெனரல் பிராங்கோவின் அதிகாரத்திற்குட்பட்ட ஸ்பெயின் போன்ற சில நாடுகளும், இந்நீதி மன்றத்தில் வாதாட அனுமதிக்கப்படலாம். அத்தகைய நாடுகளில் இந்த நீதிமன்றத்திற்கு ஒரு தீங்கும் ஏற்பட்டு விடாது. அதுபற்றி நமக்கு பயம் வேண்டியதில்லை.

நீதிமன்றத்தில் சேராத ஒரு நாடுகூட வழக்கைக் கொண்டு வரலாம். அம்மாதிரி செய்ய விரும்பும் நாடு, இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வரையில் தான் ஐக்கிய நாடுகள் சாஸனத்திற்குக் கீழ்ப்படிவதாகவும், நீதிமன்றத்தின் முடிவிற்குப் பணிவதாகவும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

நீதிமன்றம் குற்றச்சாட்டுகளுக்காக தேடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. வழக்குகள் தானாகவே அதைத் தேடிக் கொண்டு வரும். தங்களுக்குள் நடக்கும் சச்சரவை நீதிமன்றத்திடம் கொண்டு வரும்படி நாடுகளை உத்திரவிடாது. ஒரு நாடு செய்யும் குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் போய்ச் சொல்ல வேண்டுமென்று பாதுகாப்புக் கௌன்ஸில் உத்திரவிட முடியாவிட்டாலும், அம்மாதிரி செய்தால் சச்சரவை சமரஸமாகத் தீர்க்க முடியுமென்று சிபார்சு செய்யலாம்.

நீதிமன்றத்தின் அதிபருக்கு (Registrar) சச்சரவிலுள்ள ஒரு நாடு, எந்த நாட்டுடன் சச்சரவிலிருக்கிறதென்பதை எழுதி

அனுப்பலாம். அப்படி அனுப்பப்பட்டதும் வழக்கு ஆரம்பமாகி றது. எவ் விஷயத்தைப் பற்றி சச்சரவு என்பதையும் இந்த செய்தி தெரிவிக்க வேண்டும். உடனே அவர் மற்ற நாட்டிற் கும், இதர அங்கத்தின நாடுகளுக்கும் செய்தி அனுப்புவார்.

எந்த நாட்டின்மீது குற்றம் சாட்டப்படுகிறதோ, அந்த நாடு, நீதி மன்றத்தில் தன் கட்சியை வாதாட வராவிட்டால், அதை எவரும் வற்புறுத்தி வரவழைக்க முடியாது.

எல்லா நாடுகளும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சர்வதேச நீதிமன்ற சாஸனத்தின் 36-ம் பகுதி கூறுகிறது. இச்சாஸனத்தை ஒப்புக்கொள்ளும் எந்த அரசாங்கமும், அப்பொழுதிலிருந்து தன்மீது மற்ற நாடுகள் கொணரும் குற்றங்களை, நீதிமன்றத்தில் சொல்லி, அதன் முடிவின்படியே நடக்க வேண்டும்.

அமெரிக்கா உட்பட எல்லா தேசங்களும் இம்மாதிரி பிர மாணம் செய்திருக்கின்றன.

விசாரணைக்கு வரும் சிறு சச்சரவுகளை எற்று நீதிமன்றம் விசாரிக்க வேண்டியதில்லை. சில வழக்குகளை, அவைகள் தாங் கள் விசாரித்து முடிவு செய்ய வேண்டியவைகளல்ல என்று நீதிமன்றம் தள்ளிவிடும். வேறு சில சமயங்களில், வழக்கைக் கொண்டு வந்திருக்கும் நாட்டிற்கு உண்மையில் ஒரு குறைவு மில்லை. ஆகையால் இதைப்பற்றி விசாரிக்கும் சிரமத்தை நாம் மேற்கொள்ள வேண்டியதில்லை என்று முடிவு செய்துவிடும். தங்களிடையேயுள்ள உடன்படிக்கையை ஒரு நாடு மீறிவிட் டதென்றோ, அல்லது சர்வதேச சட்டம்போல் முக்யத்வம் வாய்ந்த ஒரு வழக்கத்தை மீறிவிட்டதென்றோ மற்றொரு நாடு நினைக்கு மானால், அந்த வழக்கை நீதிமன்றத்தில் சொல்லலாம். அதன் பிறகு நீதிமன்றம் தன் வேலையைச் செய்யும். குற்றம் கூறும் நாடு சொல்லிய காரியங்களை மற்ற நாடு செய்திருக்கிறதா, அப்படிச் செய்திருந்தால், அது ஒரு சர்வதேச சட்டத்தை மீறிய தாகவோ, ஒப்பந்தத்தைத் தகர்த்ததாகவோ அர்த்தமாகுமா

என்று ஆராய வேண்டும். உதாரணமாக, ஈக்வடார் தேச பிரஜைகளில் மூவர், வெனிஸுலாவில் சொந்தமாக வாங்கி யிருந்த நான்கு மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள எண்ணெய்க் கிணறுகளை, வெனிஸுலா அரசாங்கம் பறித்துக் கொண்டு விட்டதாக ஈக்வடார் அரசாங்கம் சொல்லுகிறது. வெனிஸுலா அரசாங்கம் தான் அவ்வாறு செய்தது உண்மைதான் என்று ஒப்புக்கொள்கிறது. இம்மாதிரி வழக்குகளில், வெனிஸுலா அரசாங்கத்தின் செய்கை ஒரு உடன்படிக்கைக்கோ, சர்வதேச சட்டத்திற்கோ முரணானதா என்று தீர்மானிக்க வேண்டும்.

அம்மனிதர்களிடமிருந்து எண்ணெய்க் கிணறுகளை பறித்துக் கொள்ள வெனிஸுலாவுக்குச் சட்ட பூர்வமாக அதிகாரமுண் டென்றும், ஆனால் அதற்குப் பதிலாக அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நிபுணர்களைக் கலந்து அவர்கள் வாதங்களைக் கேட்டு, அம்மனிதர்களுக்கு வெனிஸுலா எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் தீர்மா னிக்கும். நாலு மில்லியன் டாலர்களுக்குப் பதிலாக ஒரு மில்லியன் டாலர்களே வெனிஸுலா கொடுக்க வேண்டுமென் றும் அது தீர்மானிக்கலாம்.

அத் தீர்ப்பின்படி வெனிஸுலா அரசாங்கம் ஒரு மில்லியன் டாலர்களை ஈக்வடார் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும். அவ்வரசாங்கம் அப்பணத்தை அம்மூவருக்கும் பகிர்ந்தளிக்கும்.

சில சமயங்களில் சச்சரவுகளில் கலந்துள்ள ஒரு நாடு " ஒப்பந்தம் அப்படித்தான் சொல்லுகிறது. ஆனால் அந்த ஒப் பந்தம் நியாயமானதல்ல. அதை மாற்ற வேண்டும் " என்று சொல்லலாம். அம்மாதிரி வழக்குகள் இந் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படாது. நாடுகள் தங்களிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றன வா என்று பார்ப்பதேயல்லாது, அவ்வுடன்படிக்கைகளை மாற்று வது இந் நீதிமன்றத்தின் வேலையல்ல. அம்மாதிரி வழக்குகள் பொதுச் சபையில் அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலில் சொல்லப் படவேண்டும்.

நீதிமன்றம் தனக்கென சில சட்டங்களை ஏற்படுத்திக்கொள் ளும். ஆனால் அவைகள் இப் புத்தகத்தின் கடைசிப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள சர்வதேச நீதிமன்ற சாஸனத்திற்குட்பட்டே யிருத்தல் வேண்டும்.

அங்குள்ள நீதிபதிகளுள் ஒருவரையே தனக்குத் தலைவ ராகவும், மற்றொருவரை பதிவு செய்யும் அதிகாரி (Registrar) அல்லது ரிஜிஸ்டிரார் ஆகவும் தேர்ந்தெடுக்கும். ரிஜிஸ்டிரார் ஒரு தலைமை குமாஸ்தாவைப் போன்றவர். தன்னுடன் வேலை செய்யும் சிப்பந்திகளின் உதவியால் நீதிமன்றத்தின் தஸ்தா வேஜுகளை ஜாக்கிரதையாக வைத்திருந்து, மற்ற அலுவல்களை யும் ரிஜிஸ்டிரார் கவனிப்பார்.

நெதர்லாண்ட்ஸிலுள்ள ஹேக் என்னுமிடத்தில் வழக்க மாக இந் நீதிமன்றம் கூடும். அவசியமிருந்தால் உலகில் வேறு எவ்விடத்திலும் அது கூடலாம். வருஷம் முழுதும் அது வேலை செய்கிறது. ஒரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று நீதிபதிகள் விடுமுறை எடுத்துக் கொள்வார்கள். அவர் கள் வேலைக்கு வந்ததும், வேறு இருவரோ அல்லது மூவரோ விடுமுறையில் செல்வார்கள். எப்படியும் அவர்களின் மொத்த எண்ணிக்கை பதினொன்றுக்கும் குறையாதபடி அவர்கள் பார்த் துக் கொள்வார்கள்.

நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் வழக்குகள் அதிக ரித்து விட்டால், நீதிபதிகள் மூன்று அல்லது அதற்கு மேற் பட்டவர்களாகத் தங்களைப் பிரித்துக் கொள்வார்கள். அவர்களை "சேம்பர்"கள் என்று சொல்லலாம். ஒரே சமயத்தில் நான்கு வித வழக்குகளை விசாரிக்கும் தனித்தனி 'சேம்பர்'களும் இருக்கும்.

எல்லா நீதிபதிகளும் ஒருங்கே அமர்ந்து ஒரு வழக்கை விசாரிப்பது எப்போதாவதுதான் முடியும். ஆதலால் நாடுகள் . ங்கள் வழக்குகளை மேற் சொல்லிய 'சேம்பர்'களிலேயேதான்

கொண்டு வரும். அங்கவீக்கப்படும் தீர்ப்பே நீதிமன்றத்தின் தீர்ப்பாக நினைத்து நாடுகள் நடக்க வேண்டும்.

எண்ணெய்க் கிணறுகள் பற்றிய வழக்காயிருந்தால் அவை களைப்பற்றி நன்றாக அறிந்துகொள்ள ஒருவரை. தனக்குச் சகாயமாய் ஒரு நீதிபதி அழைத்துக் கொள்ளலாம். அப்படிப் பட்டவருக்கு 'அஸெஸர்' என்று பெயர். (சாஸனத்தின் 30-வது பகுதி). அவருக்கு சாட்சிகளையும் வக்கீல்களையும் வழக் குக்குச் சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்கும் உரிமையுண்டு. ஓய்வு நேரங்களில் நீதிபதிகள் வழக்குகளைப் பற்றி ஆலோசித் துக் கொண்டிருக்கும்போதும் இவர் பங்கெடுத்துக் கொள்ள லாம். ஆனால் தீர்மானங்கள் பற்றி ஓட்டுச் செய்யும் உரிமை கிடையாது.

நீதிமன்றத்திற்கு வந்து கேள்விகளுக்குப் பதில் சொல்லு மாறு வேறு நிபுணர்களையும் நீதிமன்றம் அழைக்கலாம். சாட்சி களையும் கூப்பிடலாம். மேலும் அது விரும்பும் எக் கடிதங்களை யும் ஒப்பந்தங்களையும், பத்திரங்களையும் தாக்கல் செய்யும்படியும் நீதிமன்றம் ஒரு நாட்டிற்கு உத்திரவிடலாம்.

சாட்சிகளைப் பிடிப்பதற்கோ, அத்தாட்சிகளை நிர்ப்பந்தப்படுத்தி ஒப்புக் கொள்ளும்படிச் செய்யவோ அதற்கு அதிகாரம் கிடை யாது. வெனிஸுலாவிலுள்ள எண்ணெய் கிணறுகளைப்பற்றி ஏதேனும் தகவல் வேண்டியிருந்தால், அவ்விவரங்களை அனுப் பும்படி வெனிஸுலா அரசாங்கத்தைக் கேட்கலாம். தன் ரிஜிஸ் டிராரை அனுப்பி, அவைகளைப் பார்வையிட்டு வரும்படியோ, படம் பிடித்து வருமாறு சொல்லவோ முடியாது. பிரான்சி லுள்ள ஒரு சாட்சி வரவேண்டுமென நீதிமன்றம் விரும்பி னால், பிரென்ஞ் அரசாங்கத்திடம் அச் சாட்சியை அனுப்புமாறு கேட்க வேண்டும்.

இதை நீதிமன்றத்தின் பலஹீனம் என்று சொல்லக்கூடாது. "பிரான்சு எங்களுக்கு பதினோரு நீராவி யந்திரங்களை அனுப்பு

வதாக ஒப்புக்கொண்டது. ஆனால் அனுப்பவில்லை" என்று போலந்து குற்றம் சாட்டுகிறது என்று வைத்துக்கொள்ளலாம். அதே சமயத்தில் பிரான்சு "நாங்கள் முன்பே அனுப்பி விட்டோம். அவைகள் அந்த நாட்டில்தான் இருக்கின்றன. அவைகளைப்படம் பிடித்து வருவதற்காக எங்கள் நாட்டிலிருந்து ஒரு புகைப்படக்காரரை அனுப்ப எங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும்" என்று கேட்கலாம். அதற்குப் போலந்து இணங்க மறுத்தால், தன் **ரிஜிஸ்டிராரை** அனுப்பி, இயந்திரங்கள் அங்கு இருக்கின்றனவா, இல்லையா என்று பார்த்துவரும்படி நீதி மன்றம் சொல்லவேண்டியதில்லை. எந்தநாடு பொய் சொல்கிறதென்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ, அதன் படியே நீதிபதிகள் முடிவு செய்கிறார்கள்.

வழக்கின் இருதரத்தாரும் தங்களுக்குச் சாதகமான பத்திரங்களைச் சமர்ப்பித்துவிட்டு வாதங்களைக் கூறி முடித்தபின்னர், நீதிபதிகள் சில கேள்விகளைக் கேட்பார்கள். பிறகு ஒரு தனியறைக்குச் சென்று நீதிபதிகள் அதுபற்றி சர்ச்சை செய்வார்கள்.

அதன்பிறகு அவர்கள் ஓட்டுச் செய்வார்கள். பெருவாரியான ஓட்டுகள் சாதகமாயிருந்தால் சாதகமாகவும் இல்லையேல் பாதகமாகவும் முடிவு சொல்லப்படும். இருடக்கமும் சமமாக ஓட்டுகளிருந்தால்—உதாரணமாக சாதகமாக ஐந்தும் பாதகமாக ஐந்துமோ யிருந்தால்—நீதி மன்றத்திற்குத் தலைமை நீதிபதியாயிருப்பவருக்கு இன்னொரு ஓட்டுச் செய்யும் உரிமையுண்டு. இந்த அதிகப்படியான ஓட்டுக்கு காஸ்டிங் (Casting) ஓட்டு என்று பெயர். (சாஸனத்தின் 55-ம் பகுதி). அதன் பிறகு தகுந்த காரணங்களுடன் நீதிமன்றத்தின் திர்ப்பு எழுதப்படும். சாதாரணமாக ஒரு நீதிபதியே அதை எழுதுவார். அதிலேயே அம்முடிவுக்குச் சாதகமான மற்ற நீதிபதிகளும் கையெழுத்திடுவார்கள். இத்தீர்ப்புகள் குறைந்தது பத்து பக்கங்களாவது இருக்கும். சர்வதேச சட்டங்களைப்பற்றி படிக்கும் சட்ட கல்லூரி மாணவர்கள், இம்மாதிரி முடிவுகள் சேர்ந்து

வெளியாகியுள்ள புத்தகங்களை முதலிலிருந்து கடைசிவரை படிக்கிருர்கள்.

நீதி மன்றத்தின் தீர்ப்புகள், வக்கீல்களும் மற்றுமுள்ளோரும் கூடிய அவையில் பகிரங்கமாக வாசிக்கப்படும். அதை உரத்த குரலில் படிப்பார்கள். அதன் பிறகு அவை அச்சிடப்பட்டு, மற்ற அரசாங்கங்களுக்கும், நூல் நிலையங்களுக்கும், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் அனுப்பப்படும்.

அத்துடன் நீதிமன்றத்தின் வேலை முடிந்தது. இந்த முடிவுகளுக்கு நாடுகள் கீழ்ப்படிய வேண்டிய முயற்சிகளை அது செய்வதில்லை.

ஐக்கிய நாடுகளின் சாஸனத்தில் கையெழுத்திடும் ஒவ்வொரு நாடும், தனக்கும் மற்ற நாடுகளுக்குமிடையே ஏற்படும் எல்லா சச்சரவுகளிலும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் கீழ்ப்படிவதாக பிரமாணம் செய்கிறது. இத்தீர்ப்புகளுக்கு ஒரு நாடு கீழ்ப்படியாதுபோனல் சம்பந்தப்பட்ட மற்ற நாடு பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அதுபற்றி ஒரு அவசர செய்தி யனுப்பலாம் என்று பகுதி 4-ல் சொல்லப்படுகிறது.

நீதி மன்றத்தின் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று பாதுகாப்புக் கௌன்ஸிலோ அல்லது ஐ.நா.வின் மற்ற பிற ஸ்தாபனங்களில் எதுவுமோ பலவந்தம் செய்ய முடியாது. இக்காரியங்களைச் செய்ய தன்னுடைய ராணுவ பலத்தை உபயோகிக்கவும் முடியாது.

மேலும் உலக நியாய ஸ்தலத்தின் தீர்ப்புக்குக் கீழ்படிந்து எல்லா நாடுகளும் நடந்ததைப்போலவே, இப்புதிய சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்புகளுக்கும் எல்லா நாடுகளும் கீழ்ப் படியுமென்று நீங்கள் நம்பலாம்.

ஏன் ? இதற்குப்பதில் சுலபமானது. நீதி மன்றத்தின் தீர்மானங்களை அலட்சியம் செய்யும் நாடுகள் மிகவும் சிரமப் படவேண்டிவரும். அதன் பிறகு மற்ற நாடுகள், அவ்வாறு

அலக்ஷியம் செய்த நாட்டைப்பார்த்து "நாங்கள் எந்தவித மான ஒப்பந்தங்களும் உன்னுடன் செய்துகொள்ள முடியாது ஏனென்றால் உன் வார்த்தைகளின்படி நீ நடப்பதில்லை" என்று சொல்ல ஆரம்பித்துவிடும்.

மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளாமல் ஒரு நாடு தனியாக வாழ முடியாது.

இந்த சர்வதேச நீதி மன்றம், தன்னிடம் விசாரணைக்கு வரும் எல்லா வழக்குகளையும் தீர்மானிக்கும் அளவுக்கு சக்தி படைத்திருக்கிறது. உலகிலுள்ள எல்லா நாடுகளும் தங்களுக் குள் ஏற்படும் சச்சரவுகளை இந்நீதி மன்றமேதான் விசாரிக்க வேண்டும் என்று தீர்மானித்து கொண்டால், எல்லா வழக்கு களும் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்படும். நாடுகள் இன்னமும் சுவாரஸ்யமான உடன்படிக்கைகளைச் செய்து கொண் டால், நீதிமன்றம் இன்னமும் சுவாரஸ்யமான வழக்குகளை விசாரிக்க சந்தர்ப்பமேற்படும். எல்லா நாடுகளும், ஒரு நாட் டுத் தொழிலாளர்கள் மற்ற நாடுகளுக்கும் சென்று அங்கே வேலை தேடிக்கொள்ளலாம் என்று ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டால், அல்லது காலனிகளில் ஆட்சி செலுத்தும் நாடுகள், தங்களுடைய காலனிகளை அங்குள்ளவர்களே ஆட்சி செய்து கொள்ளும்படி விட்டு விடுவதாய் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டால், இந்நீதிமன்றத்திற்குத் தன் வேலைகளைச் செய்ய இன்னம் அதிக உபகரணங்கள் வேண்டியிருக்கும் உடன்படிக்கைகள் எவ்வளவு முக்கியமானவைகளோ, இதுவும் அவ்வளவு முக்கியமானவையாகும்.

1945-ல் ஒரு புதிய சம்பவம் நிகழ்ந்தது. இங்கிலாந்து, பிரான்சு, சோவியத் குடியரசு, அமெரிக்கா ஆகிய இந்நாடு களின் அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து "சர்வதேச ராணுவ டிரிபுயூனலின் சாஸனம்" என்று ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டன. சாதாரணமாக உடன்படிக்கைகளில் சம் பந்தப்பட்ட நாடுகள் எவைகளைச் செய்யவேண்டும், எவைகளைச்

செய்யக்கூடாது என்பனபோன்ற விஷயங்களைக் கூறுமேயொழிய, மக்கள் யாது செய்யவேண்டும் அல்லது செய்யக்கூடாது என்பனவகளைக்கூறுது. ஆனால் மேற்சொன்ன உடன்படிக்கையில் விசேஷமாக சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. " அதிகார வெறிகொண்ட ஒரு போருக்குத் திட்டமோ, ஆயத்தமோ, முயற்சியோ செய்தாலும், சர்வதேச உடன்படிக்கைகளை மீறி ஒரு போரை ஆரம்பிக்கும் செயல்களைச் செய்தாலும், அதற்குக் காரணமாயிருக்கும் ஜனங்களை தண்டனைக்குள்ளாக்க வேண்டு" மென்று அந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டது. யுத்தம் நடக்கையில் கைப்பற்றப்பட்ட நாடுகளில் வசிக்கும் சாமானிய மக்களை கொலைசெய்தோ வற்புறுத்தியோ அல்லது ஜாதிமத காரணங்களினுல் கொடுமைபடுத்தியோ நடத்திறல் அவைகளும் குற்றங்களாகும் என்று அவ்வுடன்படிக்கை விவரித்தது. போர் நடந்தபோது ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஆகிய நாடுகளிலிருந்து பிடிக்கப்பட்ட குற்றவாளிகளை, மேற்கூறிய காரணங்களுக்காக விசாரித்தது. அதற்காக சில நீதிபதிகளை நியமித்து, தற்காலிக நீதிமன்றங்கள் ஏற்படுத்தி, அவர்களுக்குத் தண்டனைகளும் அளிக்கப்பட்டன. இவைகளை " நூரம்பெர்க் விசாரணைகள் " என்று சொல்லப்பட்டன.

சர்வதேச சட்டத்தில் குற்றங்களை விளக்கி, அக்குற்றங்களுக்குக் காரணமான ஜனங்களும் தண்டிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

பிற்காலத்திலும் இதுபோல் பல சட்டங்கள் செய்யப்படலாம். பின்னுல் அணுசக்தியைப்பற்றி நாம் கவனிக்கும்போது, அணு குண்டுகளின் உதவியால் உலகிற்குத் தீங்கை ஏற்படுத்தக் காரணமாயிருக்கும் ஒவ்வொருவரும் தண்டிக்கப்படவேண்டுமென்று, அமெரிக்கா ஒரு சட்டம் இயற்றவேண்டும் என்று கேட்டதை நீங்கள் படிப்பீர்கள்.

அத்தியாயம் 8

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்
வேலைகளைச் சரிவர செய்வதற்கு உதவும்
ஆண்களும் பெண்களும்

அலுவலகம்

ஐக்கிய நாடுகளின் ஒரு அலுவலக அறையில் நீங்கள் நுழைந்தவுடன், 'டைப்' அடிக்கும் சப்தமும், நிர்வாக உத்யோகஸ்தர்கள் கடிதங்கள் 'டைப்' ஆவதற்காக விஷயங்களைக் கூறுவதையும் கேட்பீர்கள். ஒரு பொதுக் கூட்டத்திற்கு செல்வீர்களானால் சுருக்கெழுத்துக்காரர்கள் அங்கு நடக்கும் பேச்சுகளை எழுதிக்கொள்வதையும், மொழி பெயர்ப்பாளர்கள், பேச்சுகளை மொழி பெயர்த்துக் கூறுவதையும் நீங்கள் காண்பீர்கள். இந்தக் காட்சிகளைக் கண்டதும் ஐக்கிய நாடுகளின் அலுவலகம் எப்படி வேலை செய்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்தாபனத்தின் பலத்திற்கும் தினசரி நடவடிக்கைகளுக்கும் இவர்களே காரணமாவார்கள். அதன் வேலை வெற்றிகரமாய் முடிவதற்கு அவர்கள் உதவுகிறார்கள். அதற்காக அந்த ஆண்களும் பெண்களும் உழைக்கிறார்கள்.

அலுவலகத்தின் அதிகாரி தலைமைக் காரியதரிசியாவார். அவர் மிகவும் திறமைசாலியாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்தாபனத்தால் எதுவும் செய்யமுடியாமல் போய்விடும்.

பாதுகாப்புக் கௌன்ஸில் இந்த வேலைக்குத் தகுதியான ஒருவரைத் தேடிக்கொண்டிருக்கும். ஐந்து வல்லரசுகளும் பாதுகாப்புக் கௌன்சிலிலுள்ள இரு சிறு நாடுகளும் சேர்ந்து ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு நபருக்குகாக, பாதுகாப்புக் கௌன்சிலுள்ள பிரதிநிதிகள், வலைவிசித் தேடிக்கொண்டிருப்பார்கள். அப்படி ஒருவர் அகப்பட்டால், அவர் பெயர் பொதுச் சபைக்குத்

தெரிவிக்கப்படும். பொதுச்சபை ஒப்புக்கொண்டால், அவரே தலைமைக்காரியதரிசியாக நியமிக்கப்படுவார். இல்லாவிட்டால், பொதுச்சபை அங்கீகரிக்கக்கூடிய வேறு நபரைக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் முயலவேண்டும்.

தலைமைக் காரியதரிசி ஐந்து வருடகாலம் பதவி வகிப்பார். அக்காலத்தின் முடிவில், அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். அவருடைய சம்பளம் ஒரு வருஷத்திற்கு 20,000 டாலர்கள். அதை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே கொடுக்கிறது. வருமானவரி கிடையாது. மேலும் இருபதினாயிரம் டாலர்களை அவருடைய செலவுகளுக்காகக் கொடுக்கிறது.

முதல் முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர் 50 வயதுடைய டிரிக்விலீ என்பவர். அவர் ஒரு தச்சன் மகன். கவர்ச்சிகரமான முகம், நிலக்கரிபோன்ற கருத்த தலைமயிர், பருத்த சரீரம்,—இவைதான் டிரிக்விலீ. அவரை சுறுசுறுப்புக் களஞ்சியம் என்றே சொல்லலாம்.

தொழிலாளர் தலைவராகவேயிருந்து, நார்வே அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்து, தன்னுடைய நாட்டை நாஜிகள் அபகரித்துக்கொண்டபோது, நடந்த சுதந்திரப் போரில் பங்கெடுத்துக்கொண்டவர். அவரிடத்தில் எல்லோருக்கும் நம்பிக்கையுண்டு. நார்வே பெற்றெடுத்த சிறந்த சட்ட நிபுணர்களில் அவரும் ஒருவர்.

அணுசக்தி கமிஷனில் பனிரெண்டு நாடுகள் அங்கம் வகித்தன. தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப அவைகள் தாமதம் செய்தபோது, டிரிக்விலீ அவைகளைத் துரிதமாக அனுப்புமாறு கடிதங்கள் எழுதினார். ஐக்கிய நாடுகள் திறமையாக வேலை செய்வதற்கு மிகவும் உதவியாயிருப்பவர் அவர்தான். ஸ்தாபனம் சரிவர நடக்கிறதா என்று கவனிப்பதும் அவர் வேலைதான்.

பாதுகாப்புக் கௌன்ஸிலின் ரகசியக் கூட்டம் ஒன்றை அவர் ஏற்பாடு செய்தபோது, சில பிரதிநிதிகள் அதை விரும்ப

வில்லை. அவர்கள் ஆத்திரமடைந்தாலும், குறிப்பிட்ட நேரத்தில் குறித்த இடத்தில் ஒன்று கூடாமலிருக்கமுடியவில்லை.

பாதுகாப்பு கௌன்ஸிலும் பொதுச்சபையும், ஒவ்வொரு கூட்டத்திலும் கவனிக்கவேண்டிய விஷயங்களையும் அவரே தயார் செய்து கொடுப்பார். இதைச் செய்வதற்கு அவர் பின்பற்றவேண்டிய சட்டங்களை அவைகள் ஏற்படுத்தியிருக்கின்றன. கூட்டங்கள் நடைபெறும்போது, அவைகள், அவருடைய ஜாபிதாவில் முக்கியமான மாறுதல்களைச் செய்யலாம்.

பொதுச்சபை, பாதுகாப்புக் கௌன்ஸில், பொருளாதார சமூகசபை, தர்மகர்த்தா சபை—இவைகளின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைக் காரியதரிசி பிரசன்னமாயிருப்பாரென சாஸனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே நாளில் ஒரே சமயத்தில், இந்த சபைகளில் ஏதேனும் இரண்டோ, அதற்கு மேற்பட்டவைகளோ கூடலாம். ஆதலால், தம் உதவியாளர்களில் ஒருவரை மற்ற இடங்களுக்கு அனுப்பிதான் ஒரு கூட்டத்திற்குச் செல்வார். அவரும் அவருடைய உதவியாளர்களும் அடிக்கடி கூடுகிறார்கள். ஏன் என்றால், ஒவ்வொரு சபையும் என்னென்ன காரியங்களைச் செய்கின்றன என்பதை மற்றவைகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

குழுக்கள், கமிஷன்கள், உபகமிஷன்கள் இவைகளின் கூட்டங்களுக்கும் அவர்கள் செல்வார்கள். இக்கூட்டங்கள் இரகசியமாகவே நடைபெறும். ஆனால் தலைமைக் காரியதரிசியிடமிருந்து மட்டும் எதையும் ஒளிக்கக்கூடாது.

தலைமைக் காரியதரிசி கூட்டங்களில் கலந்துகொள்ளும்போது அவைகளின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு வாய்மூடி உட்கார்ந்திருப்பதில்லை. அங்கு நடக்கும் விவாதங்களிலும் அவர் பங்கெடுத்துக்கொள்வார்.

அவருக்கு மிக முக்கியமான வேலையொன்றுமிருக்கிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டை இரகசியமாகத் தாக்குவதற்கு

ஏற்பாடு செய்தால் அவைகளைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். ஒரு காலனியை ஆளும் அரசாங்கம், அம்மக்களை மிகவும் கொடுமையாக நடத்தினால் அங்குள்ள மக்கள் இரகசியமாக கூட்டங்கள் போட்டுப் போருக்குத் தயாராகிவிடுகிறார்கள். இம் மாதிரி நிலைகளையும் அவரே கண்டுபிடிக்கவேண்டும் அல்லது ஏதாவது பெரிய ஆபத்துகள் ஏற்படும் அறிகுறிகள் தென் பட்டால், அவைபற்றிக் கருத்தாக இருக்கவேண்டும். இவை களைக் கண்டுபிடிக்க அவருக்குப் பல வழிகளிருக்கின்றன. பலர் கடிதங்கள் எழுதுகிறார்கள்; தந்தியடிக்கிறார்கள்; நேரி லும் வந்து அபாயங்களேற்படும் சூசகங்களிருக்கின்றன, அவை கள் இன்னின்ன, என்று தெரிவிக்கிறார்கள். இச்செய்திகள் உண்மைதானா என்று அவர் கண்டுபிடிக்கவேண்டும்.

அபாயம் ஏற்படப்போகும் இடத்தை அவர் கண்டுபிடித்ததும், பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் சென்று தான் கண்டுபிடித் துள்ள விஷயத்தை விளக்கி, தன்னிடமுள்ள அத்தாக்ஷிகளையும் காட்டுவார். அவர் சொல்வதைக் கேட்பது பாதுகாப்புக் கௌன்ஸிலின் கடமையாகும்.

ஒவ்வொரு வருஷமும் கௌன்ஸிலும், கமிஷன்களும், குழுக்களும், தொழிலாளர்களும், ஸ்தாபனத்தின் மற்றவிசேஷ ஏஜென்ஸிகளும் அவ்வருஷத்தில் என்னென்ன காரியங்களைச் செய்தன என்பதை பொதுச்சபையில் அவர் தெரிவிப்பார். மேலே குறிப்பிட்ட எல்லா சபைகளின்மீதும் பொதுச்சபைக்கு நிறைய அதிகாரமுண்டு என்பது உங்களுக்கு நினைவில் இருக்க லாம். தான் சமர்ப்பிக்கும் அறிக்கையில், ஒவ்வொரு சபை யின்மீதும் பொதுச்சபை எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அவர் விளக்கியிருப்பார்.

அவருடைய யோசனைகளை, அங்கு குழுமியுள்ள பிரதிநிதி கள் கவனமாகக் கேட்பார்கள். ஏனென்றால் அவர்கள் எல் லோரையும் விட ஸ்தாபனத்தின் பல பாகங்களில் நடை பெறும் விஷயங்களும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

அலுவலகம் இந்த அறிக்கைகளை அச்சடிக்கிறது. எவரும் இதைப் பெறலாம். பிரதி வருஷமும், இப்பிரதியொன்றை வாங்கி இந்தப் புத்தகத்துடன் இணைத்து வந்தீர்களானால், ஐக்கிய நாடுகளைப்பற்றிய பூரண சரித்திரமே உங்களிடம் இருக்கும்.

குமாஸ்தாக்கள், காரியதரிசிகள், மேனேஜர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், நூல்நிலைய அதிகாரிகள், பண்டிதர்கள், இன்னும் இதர ஊழியர்கள் ஆக மூன்று அல்லது நாலாயிரம் நபர்களை அலுவலகத்தில் வேலைக்கு நியமிப்பதற்கான விதிகளைப் பொதுச்சபை நிர்ணயித்து அவர்களுக்காக எவ்வளவு பொருள் செலவு செய்யலாம் என்பதையும் தீர்மானிக்கிறது. அதன் பிறகு தலைமைக்காரியதரிசியே அவர்களை வேலைக்கு அமர்த்துகிறார். அவரே அவர்களுக்கு எல்லாம் தலைவர். (இவ்வளவு நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனக்கு உதவியாக ஒருவரை அமர்த்திக்கொள்வது அவரது முதல் வேலையாகும்).

எல்லா அங்கத்தின நாடுகளிலிருந்தும் ஆண் பெண் ஊழியர்களை அவர் பொறுக்கி எடுக்க முயல்கிறார். ஒரு வருஷத்திற்குள் நாற்பது நாடுகளிலிருந்து பொறுக்கிய பலரை அவர் வேலைக்குச் சேர்த்துக்கொண்டார். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வேலைக்கமர்த்தியிருக்கிறோமா என்று பார்ப்பதைவிட, திறமைசாலியானவர்களை பொறுக்கியிருக்கிறோமா என்று பார்ப்பதுதான் முக்கியம். அவர்கள் தங்கள் நாட்டிற்கு உழைப்பதற்காக அங்கு வரவில்லை. உதாரணமாக, இங்கிலாந்திலிருந்து பலர் வேலைக்கு அமர்த்தப்பட்டால், மற்றநாடுகளைவிட முக்கியமானது தங்கள் நாடுதான் என்ற ஓர் எண்ணம் அவர்களுக்குள் ஏற்படலாம். ஒருவன் தன் சொந்த நாட்டின்மீது அன்பு செலுத்துவது தவறல்ல. ஆனால் ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் வேலை செய்யும்போது, எல்லா நாடுகளையும் ஒரேமாதிரி பாவிக்க அவன் கற்றுக்கொள்ளவேண்டும். ஐக்கிய நாடுகளுக்குப் பணி செய்யவே அவன் அங்கிருக்கிறான். தன் நாட்டு அரசாங்கத்திடமிருந்தோ, வேறு அரசாங்கங்களிடமிருந்

தோ, அரசியல் கட்சிகளிடமிருந்தோ, மதஸ்தாபனங்களிடமிருந்தோ, கட்டளைகளையோ, யோசனைகளையோ அவன் கேட்கக் கூடாது.

அலுவலகத்தின் ஊழியர்களில் சிலர், உலகின் பல பாகங்களில் வேலை செய்து கொண்டிருந்தாலும், பெரும்பான்மையானவர்கள், நியூயார்க்கிலோ, அதைச் சுற்றிலுமுள்ள ஐ.நா. வின் காரியாலயங்களிலோ வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு வருமானவரி கிடையாது. தலைமைக் காரியதரிசி சொற்படி அவர்கள் தங்கள் காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய போலீஸார் அவர்களைக் கைதுசெய்யமுடியாது.

தலைமைக் காரியதரிசியின் உதவியாளர்கள் கூட்டம் ஒரு முறை "610"ல் கூடுமென அறிவிக்கப்பட்டது. 610‹ ஐந்தாவது அவென்யூ என்று சொல்லப்படவில்லை. அந்தக் காலத்தில் உத்யோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் சாதாரணமாக ஒரு பெரிய ஓட்டலில் தங்கியிருந்தார்கள். அவ்வோட்டலில் உள்ள 610-ம் நெம்பர் அறையில் கூட்டம் நடக்கப் போகிறதென, அனுபவமிக்க சீன அறிஞரான மிஸ்டர் 'ஹூ' தப்பாக நினைத்துவிட்டார். அவ்வறைக்குக் குறித்த நேரத்தில் சென்று கதவைத்தட்டினார். உடனே கையில் சிகரெட்பிடித்த வண்ணம், சில்க் பைஜமாக்கள் அணிந்த ஒரு பெண்மணி கதவைத்திறந்து "வாருங்கள், உங்களைப்பார்க்க நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்று சொல்லி வரவேற்றாள்.

தயக்கமுடன் உள்நுழைந்த சீன அறிஞர், அது படுக்கையறை என்பதைத் தெரிந்துகொண்டார். இது ஒரு சினிமா போல் இருக்கிறதே என்று வியப்புற்றார். அமெரிக்கர்களின் விருந்தோம்புதலையும், உபசரிப்பையும் மிஸ்டர், ஹூ மிகவும் விரும்புவார். அப்போது அந்த பெண்மணி ஒரு துணி மூட்டையுடன் அங்கே வந்து, அவரிடம் அதை நீட்டினாள். "இவைகளை எவ்வளவு சீக்கிரத்தில் செய்து முடிப்பீர்கள்" என்று கேட்டாள். அப்போதுதான் அவருக்குச் சகலமும் விளங்கியது.

மிஸ்டர் ஹூவும் சிறந்த அறிவாளியல்லவா? அவர் தம் இயல்பான நடையில் "இதில் ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது, என்று நான் நினைக்கிறேன். உங்கள் நாட்டில் பல சீனர்கள் வண்ணாரத் தொழில் செய்கிறார்கள். ஆனால் எல்லா சீனர் களும் வண்ணார்கள் அல்ல. நான் தவறாக இவ்வறைக்கு வந்துவிட்டேன்" என்று பதிலுரைத்தார்.

உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், இந்தியா, எகிப்து முதலிய நாடுகளிலிருந்தும் மிக்க திறமை சாலிகளான ஆண் களும் பெண்களும் அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள். இதைத் தெரிந்துகொள்ளும்போது அமெரிக்கர்களாகிய நாம், ஒரு உலகஸ்தாபனமே நம்மிடையே வேலை செய்கிறது என்று எண்ணமிட சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

மிஸ்டர் லீ. தீர்மானம் செய்யும் ஒவ்வொரு விஷயமும் காரியாம்சத்தில் கொண்டுவரப்படுகின்றதா என்று தலைமைக் காரியதரிசிக்கு உதவும் நிர்வாக காரியதரிசி கவனித்துக்கொள் கிறார் அலுவலகத்தின் எட்டுப் பாகங்களிலும் எட்டு உதவித்தலைமைக்காரியதரிசிகள் வேலை பார்க்கிறார்கள். ஸ்தா பனத்தின் சிறிய போலீஸ் படைக்குத் தலைவரும் தினசரி உத்திரவுகளைப் பிறக்கும் அதிகாரியுமான அன்றாட அலுவல் களைக் கவனிக்கும் அதிபரும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களே.

மிஸ்டர் லீ. தன்னுடைய உதவி தலைமைக் காரியதரிசிகளை நியமிக்கிறார். சில சமயங்களில் ஒரு திறமை படைத்த குண சாலி கிடைப்பது அரிதாய் விடுகிறது. சோவியத் அரசாங்கத்தில் நுண்ணறிவு படைத்தவர்களில் ஒருவர் அர்காடி சோ போலீவ் (Arkady Sobolev). அவரை பாதுகாப்புக் கௌன்ஸிலின் கூட்டங்களின்போது மிஸ்டர் லீக்கு உதவியாக இருக்கும்படி ரஷ்யா அனுப்பியது. அவர் பாதுகாப்புக் கௌன்ஸிலில் உதவி தலைமைக்காரியதரிசியாய் இருக்கிறார். சீன நாடும், அந்நியநாட்டு விவகாரங்களில் விசேஷ திறமைபடைத்த மிஸ்டர்

ஹெ" என்பவரை அனுப்பியது. அநுபவமிக்க ஆசிரியரும், வெளிநாட்டுத் தூதராகவுமிருந்த பெஞ்சமின் கோகன் (Cohen) என்பவரை, செய்தி ஸ்தாபன இலாகாவில் உதவித் தலைமைக் காரியதரிசியாக பணிபுரிய, சிலி நாடு அனுப்பியது. இருந் தாலும், மிஸ்டர் லீ தாம் விரும்பிய சிலரை வரவழைக்க முடியாமற் போய்விட்டது. அவர்களை அனுப்ப, அந்நாட்டு அரசாங்கங்கள் மறுத்துவிட்டன.

ஒரு நாட்டின் பிரதிநிதி முக்கிய கடிதமோ தந்தியோ பொதுச் சபைக்கு அனுப்பினுல், தலைமைக் காரியதரிசியோ அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலின் பகுதிகளுக்குத் தலைவ ரான ஒரு உதவித் தலைமைக் காரியதரிசியோ, அதைப் படித்துப் பார்க்கலாம். அவசியமிருந்தால் அதை மொழிபெயர்த்துப் பிரதிகளெடுத்து மற்ற பதிஞெரு பிரதிநிதிகளுக்கும் கொடுப்பார்.

பொதுச் சபையோ, பொருளாதார சமூக சபையோ, அல்லது வேறு எந்த ஐ.நா. ஸ்தாபனமோ கூடுவதாயிருந்தால், பல நாட்கள் அல்லது வாரங்களுக்கு முன்பிருந்தே, அலுவலகத் தின் பலபாகங்களும் தினமும் இரவில் வெகு நேரம் வரை வேலை செய்யும். அங்குள்ள விசேஷ அதிகாரிகள், வேண்டிய பத்திரங்களை எழுதியும், மொழிபெயர்த்தும் தயாராக வைத் திருப்பார்கள். அதன் பிறகு ஒவ்வொரு விஷயமும், திட்டமும், —சில ஐம்பது பக்கங்கள்கூட இருக்கும்—மொழிபெயர்க்கப் பட்டு, பிரதிகள் எடுக்கப்பட்டு, எல்லா பிரதிநிதிகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் தங்கள் அபிப்பிராயங் களைத் தெரிவிப்பார்கள்.

ஒருமுறை பொதுச்சபை ஒருநாள் தள்ளிக்கூட வேண்டி வந்தது. ஏனெனில் அலுவலகம் சில பெரிய பத்திரங்களை சமாளிக்கவேண்டியிருந்தது.

கூட்டங்களில் உள்ள மொழிபெயர்ப்பாளர்களும், சுருக் கெழுத்துக்காரர்களும் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களே.

பொதுச் சபையோ, கௌன்ஸிலோ அல்லது வேறு ஒரு சபையோ, எல்லா நாடுகளுக்கும் அனுப்பும்படி ஒரு தீர்மானத்தை யனுப்பும். யார் அதை மொழி பெயர்க்கிறார்கள்? யார் அதை ஐந்து பாஷைகளில் அச்சுக் கோர்க்கிறார்கள்? டைப் அடித்து அச்சடித்து மற்ற அரசாங்கங்களுக்கு அனுப்புகிறார்கள்? எல்லாம் அலுவலகம்தான். ஆயிரக்கணக்கான பிரதிகளை அச்சடித்து, பத்திரிகைகளுக்கும், நூல் நிலையங்களுக்கும், கமிஷன்களுக்கும், விசேஷ ஏஜென்ஸிகளுக்கும், மற்றும் அவைகளை விரும்பும் மற்றவர்களுக்கும் அவைகளை வழக்கமாக அனுப்புகிறது.

திடீரென்று ஒருநாள் பொதுச் சபையில், "நாங்கள் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொள்ளமுடியாது. 1902-ம் வருஷத்தில் இருபது நாடுகள் ஒன்றுகூடி 'ஸான்ரபேல்' (Sanrafael) என்னுமிடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு இது முற்றும் முரணானது" என்று ஒருவர் சொல்வதாக வைத்துக் கொள்வோம். அங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகளில் பலர் அம்மாதிரி ஓர் உடன்படிக்கையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கக் கூடமாட்டார்கள். அதைக் கூறிய பிரதிநிதியிடம் கூட அவ்வுடன்படிக்கையின் பிரதியொன்று இருக்காது. அவர் சொல்லிய உடன்படிக்கை ஏற்பட்ட வருஷமும் தவறாக இருக்கலாம். உண்மையில் 1907 என்று சொல்வதற்குப் பதிலாக 1902 என்று அவர் சொல்லியிருப்பார். அலுவலக ஊழியர்கள், நூல் நிலையத்திற்கோடி, அவ்வுடன்படிக்கையின் பிரதி ஒன்றைக் கண்டுபிடிக்கத் தேடுவார்கள். அதைத்தேடி மொழி பெயர்த்து, பிரதிகளெடுத்து எல்லா பிரதிநிதிகளுக்கும் கொடுக்க வேண்டும். அன்றிரவு 11½ மணிக்குள் எல்லா நாடுகளும் அவைகளைப் படித்து விடவேண்டும். அப்போதுதான் மறுநாள் அதுபற்றி அலுவலகத்தில் தாராளமாக விவாதிக்க முடியும்.

அலுவலகத்தில் வேலை செய்யும் டஜன் கணக்கான ஆராய்ச்சியாளர்களும், [—அவர்கள் பல விஷயங்களை ஆராய்வ

தாலேயே ஆராய்ச்சியாளர்கள் என்று பெயர் பெற்றார்கள்.] அந்த சுறுசுறுப்பான காரியாலயத்தின் ஒரு சிறு பகுதியே யாவர்.

ஒரு சபையோ, கௌன்ஸிலோ, சிறிது காலம் விடுமுறையில் சென்றால், அவைகள் அலுவலகம் செய்வதற்காகச் சில வேலை களை விட்டுவிட்டுச் செல்லும். உதாரணமாக குற்றம் புரியும் சிறுவர்களை ஒவ்வொரு நாட்டிலும் எவ்விதங்களில் தண்டிக்கி றார்கள் என்பதையும், அவைகளை சீர்திருத்தும் வழிகள் என்ன என்பதையும், அறிவதற்காக ஒரு கேள்வித்தாள் தயாரித்து எல்லா நாடுகளுக்கும் அனுப்ப வேண்டும். அவைகளுக்கு வரும் பதில்களையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒழுங்காக அமைத்து அவர்களின் அடுத்த கூட்டத்தில் சமர்பிப்பதற்குச் சௌகரியமாய் அச்சடித்து வைத்திருக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைச் செய்துவிட்டுச் செல்லலாம்.

இதைப் போன்ற இன்னும் நூற்றுக்கணக்கான காரியங்கள், ஒவ்வொரு காரியமும், அலுவலகத்திலுள்ள மொழிபெயர்ப் பாளர்கள் குமாஸ்தாக்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை ஒரு மாதத்திற்கு நல்ல வேலையில் ஆழ்த்திவிடும். சாதாரணமாக ஒவ்வொரு கூட்டத்திற்குப் பிறகும் அலுவலகம் அம்மாதிரி வேலைகளில் தன் நேரத்தைச் செலவிடவேண்டியிருக்கும்.

இது மிகவும் கடினமான வேலைதான். ஆனாலும் மிக முக்கியமானது. அங்கு செய்யப்படும் பல தீர்மானங்களும், கேள் வித்தாள்களும், பல்லாயிரக் கணக்கான குடும்பங்களில் விசேஷ் மாறுதல்களை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தவை.

ஒவ்வொரு நாடும் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும், அப் பணத்தை எவ்வழிகளில் செலவிட வேண்டும், என்றும் பொதுச் சபை தீர்மானிக்கும். அதன் பிறகு "செக்" (Cheque) குகள் கொடுப்பதும், "உடனே பணம் கொடுக்கவும்" என்று சீட்டெழுதி அனுப்புவதும் அலுவலகத்தின் வேலைதான். முதல் வருஷத்தில் இருபது மில்லியன் டாலர்கள் வசூலிப்ப

தென்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால் தாங்கள் வேலை செய்ய ஆரம்பிப்பதற்கு, அது ஒரு குறைந்த மூலதனமே என்பதை அறிந்தார்கள். அவர்கள் ஊழியர்களின் சம்பளங் களைக் கொடுக்கிறார்கள். நிலங்கள் வாங்குகிறார்கள், கட்டிடங்களை கட்டுகிறார்கள். சில கட்டிடங்களை வாடகைக்கும் வைத்துக் கொள்கிறார்கள்.

சர்வதேச சங்கம் மறைந்ததும், (18-4-1946), அது தன்னு டைய கட்டிடத்தையும் (11,700,000 டாலர் மதிப்புள்ளது) விலை யுயர்ந்த புத்தகங்கள், மற்ற அலுவலக மேஜை நாற்காலி முதலியவைகளையும் தன்னிடமிருந்த பத்திரங்களையும் ஐக்கிய நாடுகளிடம் ஒப்படைத்து விட்டது. அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அலுவலகத்தினுடையதே.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கத்தினராயிருக்கும் நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளின் பிரதிகள் எல்லாவற்றையும் பெற்றுப் பாதுகாப்பது அலுவலகத்தின் வேலையாகும். ஐ.நா.வில் அங்கத்தினரல்லாத நாடுகளும் தாங் கள் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளின் பிரதிகளை அனுப்ப லாம். இவைகளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டியதும், மற்றவர்கள் விரும்பும்போது வேறு மொழிகளில் மொழி பெயர்த்து, அச்சடித்து, பிரதிகளை அவர்களுக்குக் கொடுப்பதும் அலுவலகம்தான். முன்பு சர்வதேச சங்கம் இவ் வேலையைச் செய்துகொண்டிருந்தது. இருபத்தாறு வருஷங்களில் 4,500 உடன்படிக்கைகளுக்கு மேலாக அது நாடுகளிடமிருந்து பெற்று, அச்சடித்தது. கடைசியில், அவைகளை ஐ. நா. ஸ்தாப னத்திற்குக் கொடுத்து விட்டது. அடுத்த இருபத்தாறு வருஷங் களிலும், இதே எண்ணிக்கையுள்ள உடன்படிக்கைகளோ அதற்கு அதிகமாகவோ ஏற்படலாம். ஒவ்வொரு உடன்படிக்கையும் மூன்றிலிருந்து இருபது பக்கங்கள் வரை பெரியதாயிருக்கும். அலுவலகத்தின் அச்சகம் எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கும்.

சில வேளைகளில், அலுவலகமே முயற்சி எடுத்துக்கொள்ளும். சமூக விஷயங்களைப் பற்றிப் பரிசிலனை செய்யும் பகுதி, விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கான ஒரு பிரம்மாண்டமான திட்டத்தைத் தயாரித்தது. விஞ்ஞான அறிஞர்களை ஒன்று சேர்த்து, ஆஸ்தமா, புற்று நோய், பூமியிலேற்படும் மாறுதல்கள், இவைகளையும் நகராண்மைத் திட்டம், வான சாஸ்திரம் இவைகளைப் பற்றி ஆராயவும் அத்திட்டம் வழி கூறியது. பெரிய ரசாயன சாலைகள் கட்டி, விஞ்ஞானிகளுக்குப் பண உதவி செய்ய வேண்டுமென்று யோசனை கூறியது. உலகத்தின் எல்லா பக்கங்களிலிருந்தும் வந்த விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து அமெரிக்க அரசாங்கத்திற்காக அணு குண்டைக் கண்டு பிடித்ததுபோல, சிறந்த விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்காக முயற்சி செய்து உழைத்தால், இன்னும் பல நவீன இயந்திரங்களைக் கண்டு பிடிக்கலாம்.

மேற் சொல்லிய திட்டத்துடன், பொதுச் சபையிடமும், பொருளாதார சமூக சபையிடமும், மற்றும் விசேஷ ஏஜென்ஸிகளிடமும் சென்று சமூக விஷயங்களுக்கான உதவி தலைமை காரியதரிசி வேண்டுவார். அலுவலகமும் இம்மாதிரி திட்டத்தைத் தயாரிக்கலாம். ஆனால் பொதுச் சபையோ, கௌன்ஸிலோ, அல்லது விசேஷ ஏஜென்ஸியோ அதை ஆமோதித்துப் பொருளுதவியும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அலுவலகம் எதுவும் உருப்படியாகச் செய்ய முடியாது.

ஸ்தாபனத்தின் பாகங்கள் எப்படி வேலைகளைச் செய்கின்றன என்று அறிய நீங்கள் விரும்பினால், அலுவலகத்தால் நடத்தப்படும் செய்தி இலாகாவிற்கு எழுதலாம். அச் செய்திகளை அன்றாடமும் பத்திரிகைகளுக்குப் பிரசுரிப்பதற்காக அவர்கள் அனுப்புகிறார்கள்.

"இது ஐக்கிய நாடுகளின் ரேடியோ நிலையம். உலகத்திலுள்ள எல்லா மக்களையும் நாங்கள் அழைக்கிறோம்" என்று அலுவலகம், தன் தினசரி செய்திகளை, தன் ரேடியோ (வானொ

வி) நிலையத்திலிருந்து ஒலிபரப்புகிறது. உலகிலுள்ள பல நாடு கள், வெவ்வேறு மொழிகளில் ஒலிபரப்பப்படும் செய்திகளை அஞ்சல் செய்கின்றன.

பொது செய்தி இலாகாவின் ஒரு கிளையான பிரசுர இலாகா, ஒரு வாரச் செய்தித் தாளும், ஒரு வருட புத்தகமும், மற்றும் இதர துண்டுப் பிரசுரங்களும் வெளியிடுகின்றன. இவைகளை யெல்லாம் மிகக் குறைந்த விலையில் நீங்கள் தருவித்துக் கொள்ள முடியும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் எப் பகுதிக்கு நீங்கள் எழுதினாலும் தபால் பெட்டி நெ. 1000, நியூயார்க் என்ற விலாசத்திற்கே எழுதவும்.

நீங்கள் தலைமை காரியதரிசிக்கும் கடிதம் எழுதலாம். அவருடைய அந்தரங்கக் காரியதரிசிகள் அவைகளைப் பார்த்து அலுவலகத்திற்கு அனுப்புவார்கள். நீங்கள் கீழே சொல்லி யுள்ளபடி ஆரம்பித்து எழுதவேண்டும்.

கனம் டிரிக் லீ,
ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியதரிசி,
தபால் பெட்டி நெம்பர் 1000,
நியூயார்க்-1. (என்.ஒய்.)
அன்புள்ள தலைமைக் காரியதரிசி அவர்களுக்கு,...............
....

நீங்கள் விரும்பும் விஷயம் சாதாரணமானதாயிருந்தால் கீழ் கண்டபடி எழுதவேண்டும்.

பொது விசாரணைப் பகுதி,
பொதுநல செய்தி இலாகா,
தபால் பெட்டி நெம்பர் 1000,
நியூயார்க்-1. (என்.ஒய்.).
ஐயன்மீர் !

....

....

தயவு செய்து எனக்குத்தெரிவிக்கவும்.

அல்லது நீங்கள் நியூயார்க்கிலேயே வசிப்பவராக இருந்தால் 610 ஐந்தாவது அவெனியூவிலுள்ள பொது நல செய்தி இலாகாவிற்கு நீங்கள் நேரிலேயே போகலாம். ஆனால் முதலில் டெலிபோன் மூலம் உங்களுக்கு வேண்டியது பற்றியும், யாரைப் பார்க்க வேண்டுமென்பதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஐ. நா. ஸ்தாபனம் 1,500 டெலிபோன்களை உடையது. அதைத் தவிர ஒரு விசேஷ செய்தி நலவிலாகாவும் வேலை செய்கிறது. தினந்தோறும் ஆயிரக் கணக்கான கேள்விகளுக்குப் பதிலுரைத்து அவை சுறுசுறுப்பாகத் தங்கள் வேலைகளைச் செய்து வருகின்றன.

நீங்கள் நம் பிரதிநிதிகளுக்கும் எழுதலாம். அவர்களின் விலாசம் : ஐக்கிய நாடுகளின் அமெரிக்க தூது கோஷ்டி, நியூ யார்க் என்.ஒய். என்பதேயாகும்.

நீங்கள் அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டு, பொதுச் சபை, கௌன்ஸில், மற்ற குழுக்கள், கமிஷன்கள் இவைகளின் கூட்டங்களுக்குச் சென்று அவைகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கலாம். (ரகசிய கூட்டங்களுக்கு அனுமதி கிடையாது).

அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் ஒவ்வொரு கூட்டத்திற்கும் வெவ்வேறான வழிகளில் செய்யப்படுகிறது. ஆகையால் டெலிபோன் மூலம் எந்தக் கூட்டங்கள் நடைபெறுகின்றன, அவைகளுக்கு எப்படிப் போக முடியும் என்று கேட்டுத் தெரிந்து கொள்வது நலம். பொதுச் சபையாயிருந்தால் பிளஷ்ஷிங் (Flushing) கிலுள்ள அனுமதிச் சீட்டளிக்கும் காரியாலயமும், கௌன்ஸில் கூட்டமாயிருந்தால் **லேக் ஸக்ஸஸி**லுள்ள காரியாலயமும் உங்களுக்கு உதவும். மாணவர்களுடன் வரும் ஆசிரியர்கள் **லேக் ஸக்ஸஸி**லுள்ள கல்விஸ்தாபன பிரிவைக் கேட்டு அனுமதி பெற வேண்டும். அனுமதிச் சீட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இதைச் செய்ய உங்களுக்கு உரிமையுண்டு! அலுவல்க ஊழியர்களான ஆண்களும் பெண்களும், உலக மக்களனைவரும் ஐ.நா. ஸ்தாபனத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியம் என உணர்கிறார்கள். நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், ஐக்கிய நாடுகள் உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் பொதுவானது. 'அதை' 'அவர்கள்' என்று மூன்றாமவரைப் போல் குறிப்பிடுவதை "நாம்" என்று குறிப்பிடுவது மிகவும் சிறந்தது. அதன் பல கிளைகளும் செய்யும் தீர்மானங்கள், அவைகள் இப்போது செய்யப்பட்டாலும் எதிர் காலத்தில் செய்யப்பட்டாலும், அவை உங்களுடைய பள்ளி வாழ்க்கை, சுகாதாரம், சிறிய பாக்கெட் புத்தகம், சந்தோஷ வாழ்வு இவைகளைப் பாதிப்பதாயிருக்கும். போரினால் ஏற்படும் பஞ்சத்திலிருந்தோ, ஒரு வெடி குண்டிலிருந்தோ உங்கள் உயிரை அது காப்பாற்றலாம். அல்லது தன் முயற்சியில் தவறியும் விடலாம். ஆதலால் அது என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அவைகளை அங்கு பதவியிலிருப்பவர்களும் பிரதிநிதிகளும் அறியுமாறு செய்வது உங்கள் கடமையாகும்.

பாகம் 3

அபாயம் தோன்றும்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ன செய்கிறது?

அத்தியாயம் 9

சமாதான முறைகள்

பொலிவியா அர்ஜண்டைனுவிடமிருந்து கோதுமை வாங்குகிறது. அர்ஜண்டைனு பொலிவியாவிடமிருந்து தகரம் வாங்குகிறது. பிறகு பொலிவியாவிடமிருக்கும் தகரம் முழுவதையும். வேறு ஒரு நாடு வாங்கிக் கொள்வதாக அதனுடன் உடன்படிக்கைச் செய்து கொண்டால், அர்ஜண்டைனுவிற்கு ஒன்றும் கிடைக்காமல் போய்விடும். அதனுல் கோபமடைந்த அர்ஜண்டைனு, பொலிவியாவைப் பார்த்து " நீங்கள் எங்களுக்குத் தகரம் அனுப்பவில்லையேயானுல் நாங்கள் உங்களுக்குக் கோதுமை அனுப்பமாட்டோம் " என்று சொல்லும். பொலிவியாவிலோ கோதுமை பயிர் செய்வதேயில்லை. ஆனுல் அந்நாட்டு மக்களுக்குக் கோதுமை மிக முக்கியம். ஆகையால், பொலிவியா கோபத்துடன் " நீங்கள் கோதுமை அனுப்பாவிட்டால் உங்களுக்கு ரப்பர் அனுப்புவதை நிறுத்தி விடுவோம் " என்று சொல்லும். அர்ஜண்டைனுவிற்கோ ரப்பர் முக்கியமாக வேண்டும். அதன் மீது கோபங்கொண்ட அர்ஜண்டைனுவும் " அப்படியானுல் நீங்கள் விரும்பும் மாட்டிறைச்சியை நாங்கள் அனுப்ப முடியாது " என்று கூறும். ஆனுல் பொலிவியாவிற்கு மாட்டிறைச்சி அவசியம். இவ் விவாதம் சங்கிலித் தொடர்போல நீண்டுகொண்டேயிருக்கும்.

ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்ட இரு நாடுகளில், எதுவும்,. மற்றது உடன்படிக்கையை மீறும்போது, அவ்வழக்கைச் சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு போகலாம்.

அல்லது தங்களுக்குள் ஏற்பட்டுள்ள சச்சரவை மற்ற நாடுகளின் உதவியால் சமரஸமாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று அவை நினைத்தால், அவ்வழியிலும் அதைத் தீர்த்துக்

கொள்ளலாம். அதற்காக அவ்வழக்கைப் பொருளாதார சமூக சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். சில வழக்குகளில், பொருளாதார சமூக சபை, அவ்வழக்குகளில் ஏழு அல்லது எட்டு நாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன என்றும், அதைத் தீர்ப்ப தற்கு ஒரு திட்டம் தயாரிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யும், அதன்படி ஒரு திட்டம் தயாரித்து, அந்நாடுகளுக்குப் பொரு ளாதார சமூக சபை அனுப்பும். அவைகள் எல்லாம் அத்திட் டத்தை ஒப்புக் கொண்டால், மீண்டும் அவைகளிடையே கோது மை, தகரம், ரப்பர், மாட்டிறைச்சி இப் பொருள்களை விற்கவும் வாங்கவும் செய்யலாம்.

ஆனால் ஒரு நாடு தனக்குத் தெரிந்த எல்லா முறைகளையும் கையாண்டு அவைகளால் ஒரு பிரயோஜனமுமில்லை என்றோ அல்லது சமாதானமேற்பட கால தாமதமாகுமென்றோ புரிந்து கொண்டால், அந்த நாடு எதற்காகவும் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. உடனே பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு ஒரு தந்தியை அனுப்பலாம். அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலில் வழக்கைச் சொல்லுவதற்காக தன் உத்யோகஸ்தர்களில் ஒரு வரை, அவருக்குத் தேவையான ஆலோசகர்களுடனும், உதவி யாளர்களுடனும், காரியதரிசிகளுடனும், நிபுணர்களுடனும், மொழிபெயர்ப்பாளர்களுடனும் அனுப்பும்.

பாதுகாப்புக் கௌன்ஸில் அவருடைய வாதங்களைக் கேட்டு, தன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும். ஐக்கிய நாடுகளில் அங்கத்தினராயிருந்தாலும், இராவிட்டாலும், தன் தக ராறுகளைப் பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டு வரலாமென்று சாஸனத்தின் 35-ம் பகுதியில் சொல்லப்பட் டிருக்கிறது. [சாஸனத்தில் கையொப்பமிடாத ஒரு நாடு பாது காப்புக் கௌன்ஸிலில் தன் வழக்கைச் சொல்ல விரும்பினால், தன் தகராறுகளை சமாதான முறையிலேயே தீர்த்துக்கொள்வ தாயும், ராணுவ பலத்தை உபயோகிப்பதில்லை என்றும் அந்த நாடு ஒரு விசேஷ பிரமாணம் செய்ய வேண்டும்.]

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கத்தினராயிருக்கும் எந்த நாடும் எவ்வழக்கையும் பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். சச்சரவுகள் சமரஸமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே, எல்லா நாடுகளும் அச் சச்சரவுகளில் நாங்கள் சம்பந்தப் படாமலிருந்தாலும், அவ் வழக்குகளைப் பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.

ஒரு பிரதேசத்தில் அபாயமேற்படும் அறிகுறிகள் தென்பட்டதும், அம்மாதிரி அபாயங்களைத் திறமையுடன் சமாளிக்கும் சிலரைப் பொறுக்கியெடுத்து, அக்குழுவினரை அதுபற்றி விசாரித்துவர பாதுகாப்புக் கௌன்ஸில் அனுப்பும்.

ஸ்பெயின் நாட்டுப் பாஸிஸ பிராங்கோ அரசாங்கத்தை என்ன செய்வதென்று கௌன்ஸிலில் அங்கத்தினர்கள் தெரியாமல் தவித்தபோது, அவர்கள் ஒரு குழுவை நியமித்து, ஸ்பெயின் தேசத்திலுள்ள நிலைமையை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி சொன்னார்கள். நியூயார்க் நகரை விட்டு அக்குழு கிளம்பவேயில்லை. ஐ.நா. அங்கத்தின நாடுகள் தெரிவிக்கும் செய்திகளையும், மற்றும் வேறு வழிகளில் கிடைக்கும் செய்திகளையும் ஏற்றுக்கொள்வதென அவர்கள் முடிவு செய்தனர். அதன்படி ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

உடனே அதற்குப் பலவிடங்களிலிருந்தும் செய்திகள் மலை போல் வந்து குவிந்தன. ஜெர்மனியிலுள்ள நம் வீரர்களில் சிலர் பிராங்கோ, ஹிட்லருக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றைக் கைப்பற்றியிருந்தனர். அவைகள் அமெரிக்க இராஜாங்க இலாகாவால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. அவைகளும் கௌன்ஸிலின் குழுவுக்கு அனுப்பப்பட்டன. ஸ்பானிய குடியரசின் அகதிகளின் தலைவர், நியூயார்க்கில் பலதடவை அக் குழுவை நேரில் கண்டு பேசினார். அதன் பலனாக எதுவும் புதிதாக அவர் தெரிவிக்க முடியவில்லை. பிராங்கோவும் நேரிடையான பதில் எதுவும் அவர்களுக்கு அனுப்பவில்லை. ஆனால் குழு ஆராய்ந்து கொண்டிருந்த விஷயங்களை பொய்யென்று,

பிராங்கோ நாட்டுப் பத்திரிகைகள் பிரசாரம் செய்துகொண்டிருந்தன. அவைகளையும் இந்தக் குழு படித்தது.

கடைசியாக அந்தக் குழு தன்னுடைய அறிக்கையைப் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குச் சமர்ப்பித்தது. அதில் தன் முடிவுகளுக்குத் தகுந்த சாட்சியங்களையும், இந்நிலையில் கௌன்ஸிலின் கடமையாது என்பதையும் தெளிவாகச் சொல்லியிருந்தது. அவைகளைக் கௌன்ஸில் ஆராய்ந்தது. அம் முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. நீண்ட விவாதத்திற்குப் பின் அது தன்னுடைய பொர்சுகளை எழுதியது.

இரு நாடுகள் ஒன்றையொன்று தாக்கும் வரையிலும் பாதுகாப்புக் கௌன்ஸில் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. போருக்கான அபாயம் அந்த இடத்தில் தோன்றியிருக்கிறது என்று தெரிந்ததுமே, அது தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுகிறது.

உதாரணமாக, வெளி நாட்டிலிருந்து கிறிஸ்தவ வியாபாரிகளும், எஞ்சினியர்களும், முகம்மதியர் வாழும் நாட்டிற்கு வந்து, எண்ணெய்க் கிணறுகளை வெட்டி, வியாபாரம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதனால் முகம்மதியர்கள் சினங் கொள்கிறார்கள். அதுபற்றி அம் மொகலாய நாட்டின் அரசாங்கமும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தங்கள் நாட்டிலிருந்து எண்ணெய் எடுத்து, வியாபாரம் செய்யும் அன்னியரை எதிர்த்து, அந்நாட்டு மக்கள், தங்கள் நகரத் தெருக்களில் ஊர்வலங்களாக, கோஷங்களைக் கிளப்பிக் கொண்டு செல்வார்கள். பெரிய கூட்டங்கள் கூட்டி "இந்த நாட்டிற்கு வரும் கிறிஸ்துவர்களைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும்" என்று ஆக்ரோஷத்துடன் அவர்கள் பேசுவார்கள். அப்போதும் அந்த நாட்டு அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால், அப்போது அந்நாட்டில் ஒரு குழப்பமான நிலை பரவியிருக்கும். அதைத்தான் 'நிலைமை' என்று சொல்லுகிறோம்.

இரு நாடுகளுக்குள் ஏற்பட்ட சச்சரவல்ல அது. சச்சரவு இன்னும் ஆரம்பமாகவில்லை. இன்னும் இரண்டொரு தினங்களில் அம்மாதிரி ஏற்படலாம். அவ்வெளிநாட்டு நிபுணர்களில் இரண்டொருவர் கொல்லப்பட்டால் என்ன நேரும்? வெளி நாட்டு மக்கள், மும்மதியர்கள் நாட்டு அரசாங்கத்திடம் "இந்தக் கொலைகளைத் தடுக்க ஏன் ஒரு நடவடிக்கையும் நீங்கள் எடுக்கவில்லை? இப்படி ஏற்படுமென்று தெரிந்திருந்தும் நீங்கள் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டீர்களே! எங்களுக்கு நியாயம் வேண்டும். நீங்கள் எங்களுக்கு நஷ்டஈடாக இரண்டு மில்லியன் டாலர்கள் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் நாட்டின் மீது படையெடுத்து, நாட்டின் அரைப்பகுதியைப் பிடுங்கிக்கொள்வோம்" என்று கூக்குரலிடுவார்கள்.

இதிலிருந்து ஒரு "நிலைமை" ஏன் அபாயகரமானது, என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

"தங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளை சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதாக" நாடுகள் பிரமாணம் செய்திருந்தாலும் (பகுதி 33), சில சமயங்களில் அவை அம்மாதிரி செய்வதில்லை. ஒரு அரசாங்கத்திலுள்ள ராஜதந்திரிகள் "நம் விரோதிகளுடன் இச்சச்சரவை சமாதானமாக நாம் இப்போது தீர்த்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், அதனால் நமக்கு ஒரு லாபமும் தற்போது ஏற்படாது. இச் சச்சரவு இன்னும் மோசமான நிலைமையையடையும்வரை நாம் பொறுத்துக் கொண்டிருப்போம். மேலும் அப்படி ஆவதற்காக உதவிகளையும் நாம் செய்யலாம். அப்படிப்பட்ட நிலைமையில், நம் நாட்டு மக்கள், நம் விரோதிகள் மீது கடுங் கோபங் கொள்வார்கள். அப்போது நாம் நம் நாட்டு மக்களின் உதவியால், நம் படைகளைத் திரட்டி, அயல் நாட்டினர் மீது படையெடுக்க, அந்நாடு முழுவதையும் வெற்றி கொள்வோம்" என்று சில சமயங்களில் நினைக்கிறார்கள். அநேகமாக இராஜ தந்திரிகள் எல்லோருமே இம்மாதிரிதான் நினைத்திருக்கிறார்கள். சர்ச்சரவு செய்துகொள்ளும் நாடுகளை தங்கள் சச்சரவை சமாதான

முறையில் தீர்த்துக் கொள்ளும்படி பாதுகாப்புக் கௌன்ஸில் சொல்லலாமென்று பகுதி 33-ல் சொல்லியிருக்கிறது. "உங்களிடையே சச்சரவு ஆரம்பமாகி விட்டது! விழித்தெழுங்கள்!! அதைத் தீர்ப்பதற்கு ஏதேனும் முயற்சி செய்யுங்கள்!!!" என்று கௌன்ஸில் சொல்லலாம்.

ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரல்லாத நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளையும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளும்படி பாதுகாப்புக் கௌன்ஸில் சொல்லலாம். இது ஒரு உலக ஸ்தாபனம். ஐ.நா.வில் சேரும் நாடுகளின் மீது செலுத்தப்படும் அதிகாரத்தைப் போலவே, ஐ.நா. வில் சேராத நாடுகள் மீதும் செலுத்தலாம், என்று பகுதி இரண்டு பாரா ஆறில் சொல்லப்பட்டுளது.

சச்சரவிலீடுபட்டுள்ள இரு நாடுகளுக்கு இடையே சமாதானம் என்னும் லில்லி புஷ்பத்தைக் கையில் பிடித்தபடி சென்று "நாம் எல்லோரும் நண்பர்கள், . . . இல்லையா ?" என்று இனிமையாகவும் சாந்தமாகவும் கேட்கிறது. மற்றொருபுறம் ஒரு பெரிய சக்தியை அது படைத் திருக்கிறது. போர் ஏற்பட்டால் அதை சமாளிக்கும் அளவுக்குப் பலம் பெற்றிருக்கிறது.

"இந்த சச்சரவை நீங்கள் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளுங்கள் ; இல்லாவிட்டால். . . . . !" என்று கூறுகிறது.

பகுதி 33-ல் இரு நாடுகள் தங்கள் சச்சரவுகளை எவ்வெவ் வழிகளில் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

"கலந்தாலோசிப்பது" மூலமாக—அதாவது இரு நாடுகளும் மனம்விட்டுப் பேசிக் கொள்வது.

"விசாரணை" மூலமாக—அவைகள் தங்கள் தங்கள் நாட்டிலிருந்து சில நபர்களை சர்சரவு நிகழும் இடத்திற்கு அனுப்பி, உண்மை நிலையை யறிந்து வருதல்.

" மத்தியஸ்தம் " மூலமாக—சச்சரவிலீடுபட்டுள்ள நாடுகள் வேறு ஒரு நாட்டை, தங்களிடையேயுள்ள சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும்படி விட்டுவிட ஒப்புக்கொள்ளுதல்.

" சமரஸம் " மூலமாக—தங்களிடையே பழைய நேசப் பான்மை நிலவுவதற்காக ஒவ்வொரு நாடும் சில கோரிக்கை களில் விட்டுக் கொடுத்தல்.

" மத்தியஸ்த தீர்ப்பின் " படி.,—பராகுவேயும், பொலிவியா வும் சாகோ சண்டையில் மூன்று வருஷங்கள் ஈடுபட்ட பிறகு, ஆறு நபர்களைப் பொறுக்கியெடுத்து தங்களுக்குள் சமாதானம் நிலவ ஒரு மத்தியஸ்த தீர்ப்பு அளிக்குமாறு கேட்டுக் கொண்ட னர். அந்த ஆறு நபர்களும் அமெரிக்கக் குடியரசின் ஜனாதி பதிகள் ஆவர். அவர்களில் பிராங்க்ளின், டி. ரூஸ்வெல்ட்டும் ஒருவர். அவர்கள், சச்சரவை பூரணமாய் ஆராய்ந்து தீர்த்து வைத்தனர். சாகோ நாட்டின் பெரும் பகுதியை பராகுவே தேசத்திற்கு அளித்து, ஒரு குறிப்பிட்ட நதிக்குச் செல்வதற் காகப் பொலிவியாவிற்கு ஒரு வழி ஏற்படுத்திக் கொடுத்தனர். உண்மையில் பொலிவியா விரும்பியதும் அதுவே. இம் முடிவை 1935-ல் அவ் விருநாடுகளும் ஒப்புக் கொண்டன. அவர்களிடையே இருந்த சண்டையும் அத்துடன் முற்றுப் பெற்றது.

" நீதிஸ்தல தீர்ப்பின் " மூலமாக—அதாவது சர்வதேச நீதிமன்றத்தில் தங்கள் வழக்கைக் கூறுவது. அல்லது சிறிய சர்வதேச நீதிஸ்தலங்களில் ஒன்றுக்குத் தங்கள் வழக்கைக் கொண்டு வருதல். (உதாரணமாக, ஐக்கிய தேசமும், கானடா வும், தங்களுக்குள் ஏற்படும் மனவேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒரு விசேஷ நீதிஸ்தலத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.)

" பிராந்திய ஏற்பாடுகள் " மூலமாக—1945-ல் மார்ச் மாதத் தில் மெக்ஸிகோ நகரில் 'சாபெல்டெபெக்' சட்டத்தில், இருபத் தோரு அமெரிக்கக் குடியரசுகளும் கையெழுத்திட்டபோது,

வடக்கு அல்லது தென் அமெரிக்காவிலுள்ள எந்த நாடும் சச்சர வுக்கு ஆரம்பித்தால், மற்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொள் ளப்பட்டன. 'டெலிபோன்' மூலமாகவோ அல்லது தந்திகள் மூலமாகவோ அவைகள் ஒன்றையொன்று கலந்து கொள்ள லாம். அவ்விஷயம் பற்றியும் ஆலோசிக்கலாம். அல்லது தங்கள் பிரதிநிதிகளை, அவ் விஷயம் பற்றி விவாதிக்க ஒரு கூட்டத்திற்கு அனுப்பலாம். அவர்கள் ஆலோசித்துத் தீர்மா னிக்கும் முடிவுகளின்படியே, நடவடிக்கைகள் எடுக்கப்படும். சமாதானமான எக்காரியத்தையும், அவர்கள் ஒப்புக் கொண்டால், செய்யலாம்.

மேற் சொல்லிய முறைகள் எதுவும் பிரயோசனப்படாத போது " அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேறு சமாதா னமான வழிகள் மூலமாகவும் " தீர்த்துக் கொள்ளலாம் என்று 33-ம் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

சில சமயங்களில் சச்சரவிலீடுபட்டுள்ள நாடுகள் ஒரு வழிக் கும் ஒத்துவாா. எதேனும் ஒரு முறையைக் கையாளவேண்டி யிருந்தாலும், ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கொள்ளும். ஒன்று " இவ் வழக்கு சர்வதேச நீதிமன்றத்தாலேயே விசாரிக் கப்பட வேண்டும் " என்று சொல்லும். மற்றொன்று " இல்லை. வெவ்வேறான ஆறு நாடுகளின் ஜனாதிபதிகளை இவ் விஷயம் பற்றி விசாரிக்க நியமிக்க வேண்டும் " என்று சொல்லும்.

ஒரு சச்சரவிலோ அல்லது போருக்கான அறிகுறிகள் காணும் நிலைமையிலோ, சச்சரவிலீடுபட்டுள்ள நாடுகள் மேலே சொல்லிய வழிகளில் எதைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பாது காப்புக் கௌன்ஸில் தீர்மானிக்கும். தற்போது நாம் விவா தித்துக்கொண்டிருந்த சமாதான முறைகளில் எது ஒன்றை யும் அது கைக்கொள்ளலாம்.

இம்முறையைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று அது சொல்லக் கூடாது. சிபார்சு மட்டும்தான் செய்யலாம்.

ஆனாலும், "இந்த முறையை ஏற்றுக்கொண்டீர்களானால் உங்கள் சச்சரவை சுலபமாகத் தீர்த்துக் கொள்ளலாம்; நாங்கள் தலையிட்டுத்தான் இச் சச்சரவைத் தீர்க்கவேண்டுமென்னும் வரையில் நிலைமை மோசமாகும்படி விட்டுவிட்டீர்களானால், நீங்கள்தான் பின்னால் வருந்த வேண்டியிருக்கும்" என்பது போன்று குறிப்பாகச் சொல்லலாம்.

"உங்கள் சச்சரவைத் தீர்க்கக் கூடிய திறமை பெற்ற ஒருவரிடம் சென்று உங்கள் சச்சரவைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, கௌன்ஸில் அலுத்துப் போய்விட்டால் "எங்களிடம் வாருங்கள், நாங்கள் உங்கள் சச்சரவுக்கு ஒரு முடிவு கட்டுகிறோம்" என்று சொல்லலாம். இம்மாதிரி செய்ய அது தீர்மானித்தால், எல்லாவற்றையும் ஆராய்ந்து, சாட்சிகளை விசாரித்து, வாதங்களைக் கேட்டு, உருவான வழியொன்றை வகுத்துக் கொடுக்கலாம். A என்ற நாடு B என்ற நாட்டுக்கு ஒரு மில்லியன் டாலர்களைக் கொடுக்க வேண்டுமென்றோ அல்லது தகரக் குவளைகளின் மீது தான் விதிக்கும் பாதுகாப்பு வரியை ஒரு அரசாங்கம் பாதியாகக் குறைத்துவிட வேண்டுமென்றோ அது சிபார்சு செய்யலாம். இக் காரியங்களில் ஒன்றை, ஒரு நாடு செய்ய வேண்டுமென்று அது சிபார்சு செய்யலாமே ஒழிய, அதை நிர்ப்பந்திக்கக் கூடாது.

வேறு விதமாகக் கூறவேண்டுமானால், சச்சரவிலுள்ள இரு நாடுகளை சர்வதேச நீதிமன்றத்துக்கோ அல்லது மத்தியஸ்தர்களின் 'போர்டு'க்கோ அனுப்புவதற்குப் பதிலாக பாதுகாப்புக் கௌன்சிலே நீதிமன்றத்தின் வேலையைச் செய்து வழக்கை முடிவு செய்யலாம்.

மேலும் ஒரு நாடு, "நம் சச்சரவை ஆராய்ந்து முடிவுகட்ட ஒரு வழியைக் கூறும்படி பாதுகாப்புக் கௌன்ஸிலை நாம் கேட்போம்" என்று சொல்லலாம்.

அதற்கு மற்ற நாடு சில சமயங்களில் ஒப்புக்கொள்ளும். அதுவும், "மிகவும் நல்லது. அவ்வாறே செய்யலாம். அதுவே

நமக்கு நல்ல வழி. மற்ற வழிகளை நாம் இதுவரை முயன்று பார்த்தாகி விட்டது. ஒன்றும் பிரயோசனப்படவில்லை" என்று ஒப்புக் கொள்ளும்.

மற்ற வழிகளில் நங்களிடையேயுள்ள சச்சரவைத் தீர்த்துக் கொள்ள முடியாததற்குக் காரணம், அவைகளுக்குள் ஏற்பட்டுள்ள பழைய உடன்படிக்கைகளில் ஒன்ருகவுமிருக்கலாம். அம்மாதிரி வழக்குகளை சாதாரணமாக பொதுச் சபைக்குக் கொண்டுபோக வேண்டும்.

உதாரணமாக, ஒரு காலத்தில் தென் அமெரிக்காவில் தன்னை ஒரு சர்வாதிகாரி என்று சொல்லிக் கொண்டு, எல்லோரும் தன் விருப்பப்படியே நடக்க வேண்டும் என்று ஒருவன் சொன்னுன். அவன் இங்கிலாந்துடன் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டான். அதில் தன் நாட்டிலுள்ள எண்ணெய் முழுவதையும் இங்கிலாந்து வாங்கிக் கொள்ள வேண்டுமென்று எழுதினுன். எண்ணெயை மிகவும் குறைந்த விலைக்கு இங்கிலாந்துக்கு விற்ருன். அதற்குக் காரணம் வேறு. இரகசியமாக இங்கிலாந்தில் ஒரு எண்ணெய்க் கம்பெனியுடன் ஒவ்வொரு காலன் எண்ணெய்க்கும் அவர்கள் ஒரு 'சென்ட்'டைத் தனக்கு லஞ்சமாகக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தான். இந்த லஞ்சத்தைப் பற்றி இங்கிலாந்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் எதுவும் கூறப்படவில்லை. ஆனல், ஒவ்வொரு வருஷமும் அந்தக் கம்பெனி அவனுக்குச் சேரவேண்டிய பொருளைக் கணக்கிட்டுக் கொடுத்து வந்தது. வெகு சீக்கிரத்திலேயே உலகிலுள்ள பெரிய பணக்காரர்களில் அவனும் ஒருவனுனுன்.

பல வருஷங்களுக்குப் பிறகு அந்நாட்டு மக்கள் அந்த சர்வாதிகாரியைத் தொலைத்துவிட்டு, தங்களுக்கென ஒரு ஜனநாயக அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். புதிதாக வந்த ஜனுதிபதி, தன் நாட்டிலுள்ள எண்ணெய் முழுவதையும் இங்கிலாந்துக்கு மிகக் குறைந்த விலைக்குத் தரவேண்டும் என்ற உடன்படிக்கையைப் பார்த்ததும் மிக்க திகிலடைந்தார்.

ஆனால் அவர் என்ன செய்ய முடியும்? உடன்படிக்கை உடன்படிக்கைதான். அது சர்வதேசச் சட்டம். யாரானாலும் அதற்குக் கீழ்ப்படிந்தேயாகவேண்டும். ஆனால் ஒப்புக்கொள்ளக்கூடாத ஒரு உடன்படிக்கையாயிருந்தால், என்ன செய்வது?

இப்பொழுது அந்த நாடு, தன் குற்றச்சாட்டைப் பொதுச் சபையில் கூறலாம். பொதுச் சபைக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கிறது. ஒரு உடன்படிக்கை நியாயமற்றதென்றும், நாடுகளுக்கிடையேயுள்ள நேசபாவத்தைக் குறைப்பதற்கான சந்தர்ப்பத்தை அவ்வுடன்படிக்கை ஏற்படுத்தும் என்றும், அதனால் அதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அந்த நாடுகளுக்குப் பொதுச் சபை சொல்லலாம். இந்த உரிமை 14-ம் பகுதியில் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதிமுறைப்படி, ஒரு உடன்படிக்கையை மாற்றிவிடவேண்டுமென்று பொதுச் சபை தீர்மானித்து விட்டால், உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகளில் சிறியதான நாடு, பெரிய நாட்டிற்கு ஒரு செய்தி அனுப்பும். அதில் அப்பெரிய நாடு உடன்படிக்கையை மாற்றுவதற்குத் தன் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும். பெரிய நாடும் அம்மாதிரியே செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆனால் சில சமயங்களில் ஒரு நாடு, "இந்த உடன்படிக்கையை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் சண்டைக்குப் புறப்படுவோம்!" என்று சொல்லும். போர்கள் மூளாமல் தடுப்பது பாதுகாப்புக் கௌன்ஸிலின் வேலையாகும். அம்மாதிரி வழக்குகளை, பாதுகாப்புக் கௌன்ஸிலே ஆராய்ந்து, உடன்படிக்கைகளை மாற்ற வேண்டுமென்றும் முடிவு செய்து, தன் சிபார்சுகளைக் கூறும்.

1930-ல், ஜெர்மனியில் ஒரு ஜனநாயக அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டபோது, பல ஜெர்மனியர்கள் **வர்ஸேல்ஸ்**

உடன்படிக்கை ஜெர்மனியைக் கொடுமைப்படுத்துகிறதென்றும், அதனால் அவ்வுடன்படிக்கையை மாற்றவேண்டுமென்றும் சொன்னார்கள். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்த மக்களில் சிலரும் அம்மாதிரியே அபிப்பிராயப்பட்டனர். ஆனால் அவ்வுடன்படிக்கைப் பற்றி யாதொரு திருத்தமும் செய்யப்பட வில்லை. அதனால் ஜெர்மனியர்கள் மிகவும் கோபமடைந்தனர். வர்ஸேல்ஸ் உடன்படிக்கையைத் தான் மாற்றி விடுவதாக ஹிட்லர் உறுதி கூறியபோது, பலர் அவரை நம்பினார்கள். அதனால் அவரைச் சேர்ந்த நாஜிகள் ஜெர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றவும், போருக்கு அவர்களை ஆயத்தப்படுத்தவும் அவர்கள் அனுமதித்தார்கள்.

அந்தக் காலத்தில் பாதுகாப்புக் கௌன்ஸிலில் உருவாகியிருந்து, அமெரிக்காவும் அதில் அங்கத்தினராகி, உடன்படிக்கை மாற்றப்பட வேண்டும் என்று அமெரிக்கா சிபார்சு செய்திருந்தால் ஒருவேளை இரண்டாவது உலக யுத்தமே ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

அத்தியாயம் 10

ராணுவபலம் உபயோகிப்பதற்கு முதற் படிகள்

இத்தாலி தேசத்தின் சர்வாதிகாரியான முஸோலினி எத்தியோப்பியாவைக் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். அத் தேசத்தின்மீது படையெடுப்பதற்காகத் தம் நாட்டு ராணுவத்தைப் பலப்படுத்தி தயார் செய்து கொண்டார். எத்தியோப்பியாவைப் பற்றி பல புகார்களை, தம் நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படிச் செய்தார்.

1934-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் எத்தியோப்பியாவுக்கும், இத்தாலிய குடியேற்ற நாடான சோமாலிலாந்துக்கும் இடையேயுள்ள எல்லையில், எத்தியோப்பிய, இத்தாலிய வீரர்களுக்குள் போர் தொடங்கியது. சர்வதேச சங்கம் சில நீதிபதிகளைச் சேர்த்து, அக்குழுவை 'தவறு யாருடையது' என்று கண்டுபிடிக்கப் பணித்தது. ஆனால் அக்குழு எவ்விதத் தீர்மானமும் செய்யவில்லை. எத்தியோப்பியர்கள் இத்தாலியர் மீது படையெடுத்துவிட்டதாக முஸோலினி குற்றம் சாட்டினார்.

இந்தக் குற்றச் சாட்டைக் காரணமாக வைத்துக்கொண்டு, பல கப்பல்களில் போர்வீரர்களையும், டாங்கிகளையும், வெடி குண்டுகளையும், ஆகாய விமானங்களையும், விஷப் புகையையும் அவர் அனுப்பினார். இந்தக் கப்பல்கள் இங்கிலாந்துக்குச் சொந்தமான சூயஸ் கால்வாய் வழியாய்ப் போகும்போது, ஆங்கில அதிகாரிகள், அக் கப்பல்களில் கொண்டு செல்லப் படும் பொருள்கள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டார்கள். பத்திரிகைகள் அச் செய்தியை உலக முழுவதற்கும் பரப்பின.

அந்த இத்தாலிய சைன்யங்கள் எத்தியோப்பியா மீது படையெடுத்தன.

கடைசியில் சர்வதேச சங்கம் சில காரியங்களைச் செய்தது. ஆனால் அப்போது காலம் தாண்டி விட்டது. முஸோலினியின் ராணுவம் எத்தியோப்பியாவில் முன்னேறி அந் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு விட்டன.

போருக்கு ஆரம்பம் ஏற்படும் நிலை வரும்வரையில் சர்வதேச சங்கத்தால் எதுவும் செய்ய முடியாது. ஒரு சில முறைகளில் ஏற்படும் போரை மட்டுமே அது கவனிக்கக் கூடியதாயிருந்தது. நேரடியான ஒரு போரை நாடுகள் ஆரம்பிக்கும் வரையில், அச்சங்கத்தால் எதுவும் செய்ய முடியாது.

அம்மாதிரி மீண்டும் ஏற்படுமானால், நிலைமை மோசமாகும் வரையில் பாதுகாப்புக் கௌன்ஸில் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அந்தக் காலத்தில் பாதுகாப்புக் கௌன்ஸில் ஏற்பட்டிருந்தால், முஸோலினி இத்தாலிய ராணுவத்தை தயார் செய்து, தன் பத்திரிகைகளில் எத்தியோப்பியா மீது குற்றச்சாட்டுகளைச் சொல்ல ஆரம்பித்தபோதே, அது தன் வேலையை ஆரம்பித்திருக்கும். அந்த நிலை 'அமைதிக்கு ஓர் அபாய அறிவிப்பு' என்று கௌன்ஸில் தீர்மானித்திருக்கும். அதை இப்போதுதான் நாம் உணருகிறோம்.

எத்தியோப்பியா தன் நாட்டின் மீது படையெடுப்பதாக பயமுறுத்துகிறது என்று முஸோலினி சொன்னார். அது பொய் என்பது நமக்குத் தெரியும். ஆனால் எல்லா சச்சரவுகளிலும், ஒரு கட்சி மற்றொரு கட்சியின்மீது குற்றம் சாட்டுவது வழக்கம்தான். சச்சரவிற்கு யார் பொறுப்பாளி என்பதையும் அல்லது இரு நாடுகளுமே பொறுப்பாளிகளா என்பதையும் பாதுகாப்புக் கௌன்ஸில் நிச்சயிக்கும்.

அதன் பின் பாதுகாப்புக் கௌன்ஸில், தன் வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கும். அமைதிக்குப் பங்கமேற்படும் நிலை

என்று தெரிந்த உடனே, அது ஒரு போலீஸ் தலைவனைப் போல் நடந்து கொள்ளும். சமாதானம் என்ற லில்லி புஷ்பத்தைத் தூர எறிந்துவிட்டு போர் ஏற்பட்டால் அதை முளையிலேயே கிள்ளி எறிவதற்காகத் தன் சேனைகளைத் தயார் செய்யும்.

இன்னும் இரு சந்தர்ப்பங்களிலும் அது அம்மாதிரி செய்யும்.

1934-ம் வருஷத்தில் டிசம்பர் மாதத்தில், எத்தியோப்பியாவுக்கும் இத்தாலி சோமாலிலாந்துக்கும் எல்லைப்புறத்தில் போர் நடந்த போது, பாதுகாப்புக் கௌன்ஸில் ஏற்பட்டிருந்தால், அவைகளின் செயல் "அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய ஒரு செய்கைதான்" என்று தீர்மானிக்க வேண்டியிருந்திருக்கும். சமாதானம் நிலவவொட்டாமல் செய்யும் எந்தக் காரியமும் 'அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செய்கை'யே ஆகும். மேலே சொன்னதும் இதைப்போன்ற செய்கையே.

இத்தாலிய ராணுவம் சூயஸ் கனவாய் வழியாக எத்தியோப்பியாவுக்குப் போனது '**ஆக்கிரமிப்புச் செய்கைதான்**' என்று பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானித்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு செய்கையே அது.

"ஆக்கிரமிப்பு" என்ற வார்த்தைக்கு அகராதியில் சண்டையின் ஆரம்பம் என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. அதை இரு வழிகளில் ஆரம்பிக்கலாம். ஒரு நாடு மற்றொன்றால் தாக்கப்படாமலோ, அல்லது அதற்காகத் தூண்டப்படாமலோ இருக்கும்போது அதனுடன் போருக்குச் செல்வது ஆக்கிரமிப்பாகும். ஒரு நாடு மற்றொரு நாட்டைப் போருக்கு ஆத்திரமூட்டினாலும் அதுவும் ஆக்கிரமிப்பேயாகும். ஒரு குறிப்பிட்ட வழக்கு ஆக்கிரமிப்புத்தான் என்று தீர்மானிக்கும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் சாஸனத்தின்படி பாதுகாப்புக் கௌன்ஸிலினிடம் விடப்பட்டிருக்கிறது.

அபாயம் நேரப்போகிறதென்று பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குத் தெரிந்து விட்டால், எதற்காகவும் அது காத்துக்கொண்

டிருக்க வேண்டியதில்லை. ஒரு வழக்கு சர்வதேச நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போதோ, பொருளாதார சமூக சபை அல்லது பொதுச் சபை அவ் வழக்குப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்போதோ, போர் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இச்சச்சரவில் இருக்கின்றன என்று தெரிந்தால், மற்றவர்கள் என்ன சொல்கிருர்கள் அல்லது செய்கிருர்கள் என்று கவலைப் படாமல், பாதுகாப்புக் கௌன்ஸில் அவ் விஷயத்தைப் பற்றித் தன் வேலைகளைத் தொடங்கலாம்.

ஒரு சில சச்சரவுகள் பாதுகாப்புக் கௌன்ஸிலின் அதிகாரத்திற்குட்பட்டவையல்ல. ' ஒரே நாட்டில் வசிக்கும் இரு வகுப்பார்கள் ஒருவரோடொருவர் போரிடும்போது அதற்கு உள்நாட்டுச் சண்டை என்று பெயர். ஒவ்வொரு நாட்டிலும் அம் மாதிரிச் சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு உள்நாட்டுச் சண்டையால், இரு நாடுகளிடையே சச்சரவு ஏற்படக் காரணமாயிராவிட்டால், பாதுகாப்புக் கௌன்ஸில் அதில் தலையிட முடியாது. சில சமயங்களில் உள்நாட்டுச் சண்டைகள் பெரிதாகி, சர்வதேச சண்டையாக மாறி விடுவதுமுண்டு. சில அப்படியல்ல. ஒரு உள்நாட்டுச் சண்டை நடக்கும்போதே பாதுகாப்புக் கௌன்ஸில் அதுபற்றி விவாதித்து முடிவு காண வேண்டும்.

சமாதானத்தைத் தகர்க்கும் முயற்சியில் ஒரு நாடு ஈடுபட்டு இருக்கிறதென்றோ, சமாதானத்தை நிலவ விடாதபடி தன் காரியங்களைச் செய்கிறதென்றோ, அல்லது ஆக்கிரமிப்பு செய்கைகளைச் செய்கிறதென்றோ விஷயம் பற்றி பாதுகாப்புக் கௌன்ஸில் ஓட்டு செய்ய வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால், அக் கௌன்ஸிலிலுள்ளவர்களுக்கு அது ஒரு பெரிய சோதனையாகும். மேற் சொல்லிய முயற்சிகளில் எதுவுமல்ல என்று பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானித்தால், சச்சரவைத் தீர்க்க சமாதான முறைகளையே அது கையாள வேண்டும். மேற் சொல்லிய முயற்சிகளில் ஒன்றுதான் அது என்று தீர்மானித்தாலோ, அச்சச்சரவில் தலையிட்டு, ராணுவ பலத்தைக் கொண்டு சமாதானத்தை நிலைநிறுத்த முற்படும். இம்மாதிரி தீர்மானங்

கள் வெகு முக்கியமானவை. ஐந்து வல்லரசுகளில் ஏதேனும் ஒன்று அச் சச்சரவுகளில் ஈடுபட்டிருந்த போதிலும், தன்னு டைய விசேஷ நிராகரிப்பு அதிகாரத்தை உபயோகித்து, அந்தத் தீர்மானம் நிறைவேற முடியாதபடி செய்து விடலாம்.

பாதுகாப்புக் கௌன்ஸில் ஆக்கிரமிப்புச் செய்கை என்றோ அல்லது சமாதானத்தைக் குலைக்கும் முயற்சி என்றோ தீர் மானிக்கும்போது, தான் எவ்விதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்கிறது.

அது தன் சிபார்சுகளைச் செய்யலாம்.

அது உடனே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

இல்லையேல், அது மேற் சொல்லிய இரண்டையும் ஒரே சமயத்தில் செய்யலாம்.

முதலாவதாக நேரிடையாகத் தன்னுடைய தற்காலிக சிபார் சுகளைச் செய்வதன் மூலம், மிக்க நன்மைகளைச் செய்ய முடியும்.

எல்லைப்புறத்தில் ஏற்படும் சண்டைகளில் தலையிட்டு இரு பக்கத்தாரையும் நோக்கி அது "நீங்களிருவரும் உங்களுடைய ராணுவங்களை எல்லைக் கோட்டிலிருந்து மூன்று மைல்கள் பின் னுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் இச் சச்சரவைத் தீர்க்கும் உகந்த வழியை நாங்கள் தீர்க்க முடியும்" என்று சொல்லலாம்.

ஒரு நாட்டின் குடிகளில் சிலரை மற்றொரு நாடு கைப்பற்றி அவர்களைச் சுட ஏற்பாடு செய்தால், முதலில் சொல்லிய நாடு பின்னால் சொல்லிய நாட்டுடன் சண்டைக்குச் செல்லும், அல்லது சண்டைக்கு ஆரம்பிப்பதாக பயமுறுத்தும். அப்போது பாது காப்புக் கௌன்ஸில் தலையிட்டு "நீங்கள் அவர்களைச் சுட வேண்டாம். நாங்கள் இவ் விஷயத்தை ஆலோசித்து ஒரு முடிவு செய்யும் வரையில் அவர்களைப் பாதுகாப்பிலேயே வைத் திருங்கள்" என்று சொல்லலாம்.

பாதுகாப்புக் கௌன்ஸிலிலுள்ள பதினொரு அங்கத்தினர்களும் வெவ்வேறு விதமான பல வழிகளைக் கூற முடியும்.

இம்மாதிரி தற்கால சிபார்சுகளை நாடுகள் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளலாம். ஏனென்றால் பாதுகாப்புக் கௌன்ஸில் மிக்க பலமுடன் இவைகளை ஆதரிக்கும்.

குண்டுகளாலும் துப்பாக்கிகளாலும் ஒரு நாடு தாக்கப்படும் போது, பாதுகாப்புக் கௌன்ஸில் அதைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்வது ஒருபுறமிருக்க, தாக்கப்பட்ட நாடு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு பலமுடன் சண்டையிடவேண்டுமோ அவ்வளவு பலத்துடன் போரிட, அதற்குப் பூரண உரிமையுண்டு. அத் தாக்குதலை நிறுத்தி அவர்களையும் பின் வாங்கும் படி செய்வதில் பாதுகாப்புக் கௌன்ஸில் வெற்றி காணும் வரையில், தாக்கப்பட்ட நாடு மற்ற நாடுகளைத் தனக்கு உதவிக் கழைத்துக் கொண்டு, போரைத் தொடர்ந்து நடத்தலாம்.

எனினும் பீரங்கிகளாலோ, டாங்கிகளாலோ வெடி குண்டுகளாலோ நாடுகள் தாக்கப்படும்போது மட்டும்தான், இவ்வுரிமையை உபயோகிக்க முடியும். வெறும் வார்த்தைச் சண்டையோ, பண விவகாரமோ, வர்த்தக முறைகளால் ஏற்படும் சச்சரவுகளோ நேர்ந்தால், இந்த உரிமையை நாடுகள் உபயோகிக்கக் கூடாது.

பாதுகாப்புக் கௌன்ஸில் தலையிட்டுத்தான் ஒரு வழக்கை முடிவு செய்ய வேண்டும் என்று ஏற்பட்டால், அது உடனே மக்களைக் கொல்ல ஆரம்பித்து விடும் என்று அர்த்தமல்ல. வேறு பலனுள்ள வழிகளையும் அது ஏற்று முயற்சிக்கலாம்.

முதலாவதாக, எதிரி நாடுடன் மற்ற நாடுகள் வைத்துக் கொண்டிருக்கும் எல்லா அரசியல் உறவுகளையும் கைவிடும்படி அவைகளை அது அழைக்கும்.

இந்த நடவடிக்கை, நாம் சொல்லிய "சமாதான வழிகளை உபயோகித்து முடிவு செய்தல்" என்பதில் அடங்கியதல்ல.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் இம்மாதிரி நடவடிக்கைகளை எடுக்கும் போது, ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய ஒரு தேசத்தையே தண்டனைக்குள்ளாக்குகிறது.

ஒரு நாட்டுடன் நாம் அரசியல் உறவுகளை நிறுத்திவிட்டோமென்றால், அங்குள்ள நம் ஸ்தானிகரை திரும்பி வந்துவிடுமாறு நாம் உத்திரவிடுகிறோம். அதே போல நம் நாட்டிலுள்ள அந்நாட்டு ஸ்தானிகரையும் நாம் அனுப்பி விடுகிறோம். தம்முடன் எந்த விதமான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும்படி நம்மைக் கேட்கும் உரிமையை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். நமக்குமவர்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கிற பழைய உடன்படிக்கைகளை நாம் மீறினாலும் அதுபற்றி அவர்கள் குற்றங் கூற முடியாது. நம்மைப்பொருள் உதவி செய்யும்படியோ, அல்லது நாம் அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டுள்ள பொருள்களுக்கு உள்ள விலையைக் கொடுக்குமாறோ நம்மைக் கேட்க அவர்களால் முடியாது. மற்ற நாடுகளிடமிருந்து இம்மாதிரி ஒரு நாடு துண்டிக்கப்பட்டு விட்டால், அது மிகவும் கஷ்டத்திற்குள்ளாகும்.

இவைகள் போதாவிட்டால் பாதுகாப்புக் கௌன்ஸிலில் சில " தடைகளை " (Sanctions) விதிக்க முற்படும்.

நீங்கள் சச்சரவு செய்துகொண்டால், பள்ளிக்கூடம் முடிந்த பிறகும் உங்களைச் சிறிது நேரம் தங்கும்படி உங்கள் ஆசிரியர் சொல்ல முடியும் ; அல்லது உங்கள் வகுப்புப் பிள்ளைகள் நடத்தும் அடுத்த நாடகத்தில் நீங்கள் பங்கு பெறாதபடி தடுத்து விடுவார். அல்லது நீங்கள் சினிமாப் பார்க்கச் செல்லக்கூடாதென்று உங்கள் தாயார் சொல்வார்கள். அல்லது உங்கள் செலவுக்கென கொடுக்கும் ' சில்லரையை ' உங்கள் தகப்பனார் கொடுக்காமலிருந்துவிடுவார். அவர்கள் உங்கள் மீது " தடைகளை " உபயோகிக்கிறார்கள். தடை என்பது நீங்கள் தவறாக நடந்து கொண்டால், உங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகையை நிறுத்திவிடுவதேயாகும்.

[அல்லது அவர்கள் உங்களைத் துன்புறுத்தலாம். அதாவது உங்கள் மீது அவர்கள் அதிகாரத்தைச் செலுத்தலாம். அடுத்த அத்தியாயத்தில் அதுபற்றி விரிவாகப் பார்ப்போம்.]

சச்சரவுகள் ஏற்படுத்தும் ஒரு நாட்டைத் தண்டிப்பதற்காகப் பாதுகாப்புக் கௌன்ஸில் முயலும்போது, அந்நாட்டிலிருந்து பொருள்கள் வாங்குவதோ அல்லது அந்நாட்டிற்குப் பொருள்கள் விற்பதோ கூடாதென்று எல்லா அங்கத்தின நாடுகளையும் அது தடை செய்யும். சில சமயங்களில் வேறு சில விஷயங்களிலும் கௌன்ஸில் தலையிடும். உதாரணமாக, துப்பாக்கி, நிலக்கரி, வாயு வகைகள், ரப்பர் டயர்கள், அல்லது அநேகமாக எல்லாப் பொருள்களின் மீதும் தடை விதிக்கும். அவசியமானால் எல்லா அங்கத்தின நாடுகளையும் அந்நாட்டிலுள்ள எவருக்கும் கடன் கொடுக்கவோ, கடனைத் தீர்க்கவோ கூடாது என்றும் தடை செய்யலாம்.

அந் நாட்டிற்கருகிலுள்ள மற்ற நாடுகளிலிருந்து செல்லும் ரயில்களையும், பஸ்களையும், டிரக்குகளையும், செல்லவொட்டாமல் தடுக்கும்படி அந்நாடுகளுக்குச் சொல்லும். மேலும் அந்நாட்டிற்குச் செல்லும் கப்பல்களையும், ஆகாய விமானங்களையும், தந்திச் செய்திகளையும், ரேடியோ செய்திகளையும், கடிதங்களையும், அந்த நாட்டிற்கு அனுப்பாமலிருக்கும்படி எல்லா அங்கத்தின நாடுகளுக்கும் சொல்லும். அல்லது வேறு எவ்விதமான போக்கு வரத்துக்களையும் நிறுத்தி விடலாம்.

இத்தாலி எத்தியோப்பியாவின்மேல் படையெடுத்ததால், 1935-ல், சர்வதேச சங்கம், இத்தாலி மீது "தடை"களை உபயோகிக்க வேண்டுமென்று ஓட்டுச் செய்து தீர்மானித்தது. என்றாலும் 51 தேசங்கள் கொண்ட சங்கத்தின் சபையிலேயே ஓட்டு எடுக்கப்பட்டது. "தடை" களை உபயோகப்படுத்த வேண்டுமானால், அதற்கு எல்லா நாடுகளும் சேர்ந்து ஓட்டுச் செய்ய வேண்டும். அவைகள் எல்லாம் ஒரு முகமாக ஒப்புக் கொள்ளும் தீர்மானங்களேயன்றி வேறு எதுவும் அதில் சேர்க்கப்

படாது. அச் சங்கத்தில் அங்கம் வகித்த நாடுகள் இத்தாலிக்கு துப்பாக்கிகளோ, யுத்த தளவாடங்களோ, விற்கக் கூடாதென்றும், நிலக்கரி போன்ற கச்சாப் பொருள்களை அனுப்பக்கூடாதென்றும், வேறு வழிகளில் பொருளுதவியும் செய்யக்கூடாதென்றும் அச் சங்கம் தீர்மானித்தது. ஆனால் ஆகாய விமானங்களுக்கும், டாங்கிகளுக்கும் உபயோகிக்கப்படும் முக்கிய பொருளான எண்ணெய் அவைகளில் சேர்க்கப்படவில்லை. ஏனென்றால் அதைச் சேர்ப்பதற்கு அங்கு கூடியிருந்த ஐம்பத்தோறு நாடுகளில் சில ஒப்புக்கொள்ளவில்லை.

அந்த சங்கத்தில் அமெரிக்கா அங்கத்தினராகவிருக்கவில்லை. ஜெர்மனியும் சிறிது காலத்திற்கு முன்புதான் தன் அங்கத்தின பதவியை ராஜினாமா செய்திருந்தது.

ஆதலால் வேறு நாடுகளிலிருந்து எண்ணெயை வரவழைத்துக்கொள்ள இத்தாலிக்கு சௌகரியமாயிருந்தது. அதனால் எத்தியோப்பியா மீது படையெடுப்பதற்கும், அதை ஜயித்துக் கொள்வதற்கும் முடிந்தது.

சர்வதேச சங்கத்தால் இதற்கு அதிகமாக எதுவும் செய்ய முடியவில்லை.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பழைய சர்வதேச சங்கத்தைப் போலல்ல. நம் பொதுச் சபையில் 51 தேசங்கள் அங்கம் வகிக்கின்றன. இருந்தாலும் தடைகளை அளிப்பதற்காக ஓட்டுச் செய்யும் அதிகாரம் அதற்குக் கிடையாது. அவ்வதிகாரம் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கே உரியது. பாதுகாப்புக் கௌன்ஸிலில் பதினொரு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவைகளில் ஐந்து வல்லரசுகளும் உள்பட ஏழு நாடுகள் ஒப்புக்கொண்டால்தான், "தடை"களை விதிக்க முடியும். ஏதேனும் சில காரணங்களால் இவ்வித "தடை"களை விதித்தும், சச்சரவிடும் ஒரு நாட்டை சமாதானப்படுத்த முடியாவிட்டால், வேறு வழிகளை உபயோகிக்கவும் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அதிகாரமுண்டு.

அத்தியாயம் 11

ராணுவபலம் அவசியமாயிருந்தால்

உலக சரித்திரத்திலேயே, முதல் தடவையாக, ஒரு யுத்தம் ஏற்பட்டால் அதை நிறுத்துவதற்கு போர் வீரர்கள், சண்டைக் கப்பல்கள், வெடி குண்டுகள் இவைகளை வைத்திருக்கும் ஒரு உலக ஸ்தாபனம், ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாயுதங்களைபற்றி ஒரு சிறப்பு என்னவென்றால், அப் பெயர்ரக் கேட்டமாத்தி ரத்திலேயே, சச்சரவுக்கு ஆயத்தமாயிருக்கும் நாடுகள், தங்கள் சச்சரவுகளை சமாதான முறைகளில் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யும். அவ்வாயுதங்களை உபயோகப்படுத்தவேண்டுமென்ப தில்லை. அவைகள் எப்போதும் தயாராயிருக்கின்றன என்னும் செய்தியே போதுமானது.

'சிறிய நாடுகளின் மீதோ அல்லது நம்முடைய பழைய விரோதிகளான ஜெர்மனி, ஜப்பான் நாடுகள் மீதோ இப் பலத்தை உபயோகிக்கலாம்' என்னும் பொருளில் ஐக்கிய நாடுகள் சாஸனம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஐந்து வல் லரசுகளில் எதன்மீதும், அப்பலத்தை ஒருபோதும் உபயோகிக்க முடியாது.

இம்மாதிரி எழுதப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம் இருக் கிறது. ஒரு சிறிய நாட்டின் மீது இப்படை பலத்தின் ஒரு பகுதியை உபயோகித்தால், ஒரு பெரும் போர் ஏற்படுவதைத் தடுக்கலாம். ஆனால் ஐம்பெரும் நாடுகளில் ஒன்றின்மீது இப் படை ஏவி விடப்பட்டால், **எல்லாப்** படைகளும் ஆயுதங்களும் வேண்டியிருக்கும். அப்போது ஒரு பெரிய போரே நிகழ்ந்துவிடும். அது மனிதப் பூண்டையே அழித்துவிடலாம்.

சிறிய நாடுகளை வல்லரசுகள் ஆக்கிரமித்தால், அவைகள் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? அதற்காக அவைகளுக்கும்

சில வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அவைகள் நிர்க்கதியாயிருக்க வேண்டியதில்லை. முன்னுட்களில் ஐந்து வல்லரசுகள் கூட சிறு நாடுகள் மீது ஆக்கிரமித்துக் குற்றங்கள் புரிந்துள்ளன. உதாரணமாக, 1898-ல் அமெரிக்கா தன் படை பலத்திருல் பிலிப்பைன் தீவுகளை ஆக்கிரமித்துக் கொண்டது; கடற்படை உதவியினுல் நிகரகுவாவிற்குள் நுழைந்தது. ஹைதியின் பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொண்டது. இம்மாதிரி ஒவ்வொரு பெரிய தேசங்களும் தவருன செயல்களைச் செய்து இருக்கின்றன.

அம்மாதிரிச் செயல்கள் மீண்டும் செய்யப்பட்டால், சிறிய நாடு சர்வதேச நீதிமன்றத்தையோ, பொதுச் சபையையோ தன் உதவிக்கு அழைக்கலாம். ஐந்து வல்லரசுகளுக்கு அந்த ஸ்தாபனங்களில், விசேஷ நிராகரிப்பு அதிகாரம் கிடையாது.

அல்லது அச் சிறிய நாடு பாதுகாப்புக் கௌன்ஸிலின் உதவியை நாடலாம். பாதுகாப்புக் கௌன்ஸில் சச்சரவைத் தீர்க்க சமாதான முறைகளை உபயோகிக்கும் வரையில், தான் சம்பந்தப்பட்டுள்ள ஒரு சச்சரவில் ஓட்டு செய்ய, பெரிய நாட்டிற்கு உரிமை கிடையாது.

சமாதான முறைகள் பயன்படாமற் போனுல் சிறிய நாட்டிற்கு யாதொரு உதவியுமில்லாமற் போய்விடும். ஏனென்ருல், ஐந்து வல்லரசுகளில் எதன்மீதும் தன் பலத்தை உபயோகப்படுத்தப் பாதுகாப்புக் கௌன்ஸிலால் முடியாது.

இப் பலத்தில் எல்லா நாடுகளுக்கும் பங்குண்டு. பாதுகாப்புக் கௌன்ஸிலின் உபயோகத்திற்காக ஒவ்வொரு நாடும் எவ்வளவு வீரர்களைத் தயார் செய்து வைத்துக்கொள்ளவேண்டும், எவ்வளவு கப்பல்களையும் ஆகாய விமானங்களையும் வைத்துக் கொள்ள வேண்டும், எத்தகைய பீரங்கிகளையும் வெடி குண்டுகளையும் வைத்துக் கொள்ள வேண்டும், என்பன பற்றி ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டுடனும்

கௌன்ஸில் தனித்தனியான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும்.

ஒவ்வொரு நாடும் ராணுவ தலைமை அதிகாரிகள் சேர்ந்த ஒரு குழுவை ஏற்படுத்தும். அதில் தரைப் படை, கடற் படை, இவைகளின் உயர்ந்த அதிகாரிகள் இருப்பார்கள். எப்படிப் போரிட வேண்டும் என்று முன் கூட்டி வகுப்பது அவர்களின் வேலையாகும். புதிதாக இரு சண்டைக் கப்பல்களைக் கட்டினால், எவ்வளவு விமானங்கள் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை யாயிருக்கும், துரதிர்ஷ்டவசமாக எத்தியோப்பியாவுடன் நாம் போரிட நேர்ந்தால், நம்முடைய துருப்புகள் மத்திய தரைக் கடல் மூலமாக செல்ல வேண்டுமா, அல்லது ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு போக வேண்டுமா என்பதையும், நம்முடைய ராணுவ காரியாலய தலைமை அதிகாரிகளே தீர்மானிக்கிறார் கள். இந்தக் குழுவின் தலைவர் **ராணுவ அதிகாரிகளின் தலைவர்** எனப்படுவார். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு நம் நாட்டில் அப்பதவியை வகிப்பவர் ஜெனரல் ட்வைட். டி. ஐஸன்ஹவர் ஆவர்.

அமெரிக்கா, சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கிய குடியரசு, சீனா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய ஐந்து வல்லரசுகளில் உள்ள ஒவ்வொரு ராணுவ அதிகாரிகளின் தலைவரும், மூன்று நபர் களை நியூயார்க் நகருக்கு அனுப்புவார்கள். அம்மூவரும் கடல், தரை, ஆகாயப் படைகளில் நிபுணர்கள். அவர்களே அப்படை களுக்குப் பிரதிநிதிகளாவர். அம்மாதிரி அனுப்பப்பட்ட 15 பேர்களும் சேர்ந்து **ராணுவ அதிகாரிகள் குழு** என்று சொல்லப் படுவார்கள். இது பாதுகாப்புக் கௌன்ஸிலின் கிளைகளில் ஒன் றாகும். அது எப்போதும் இரகசியமாகவே கூடுவதால், அதைப் பற்றி நீங்கள் ஒன்றும் அறிந்திருக்க முடியாது.

ஐந்து வல்லரசுகளும், அவைகள் விரும்பினால், ராணுவ அதிகாரிகள் குழுவிற்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பும்படி மற்ற நாடுகளைக் கேட்கலாம். ஆனால் அம்மாதிரி கேட்கவேண் டிய சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை.

ஐக்கிய நாடுகளின் ராணுவ அதிகாரிகள் குழுவில் சிறிய நாடுகளின் ராணுவ அதிகாரிகளல்லாது, வல்லரசுகளின் ராணுவ அதிகாரிகளே இருப்பதன் காரணம் என்னவென்றால், உலகி லுள்ள முக்கிய இராணுவ பலம் அவைகளிடம்தான் இருக்கிறது என்பதே.

ஒரு நாடு, தான் எவ்வளவு ராணுவத்தைத் தயாராய் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று ஒரு விசேஷ உடன்படிக்கையில் கையெழுத்திடும்போது, ராணுவ அதிகாரிகள் குழு அவ்வுடன்படிக்கையை ஆராய்ந்து தன்னுடைய சிறந்த யோசனைகளைப் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குக் கூறும்.

ராணுவ அதிகாரிகள் குழுவின் உதவியுடன் பாதுகாப்புக் கௌன்ஸில் (பகுதி 46) 'அபாயம் ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்' என்பது பற்றி முடிவான திட்டங்களைத் தயாரிக்கும். ஏனென்றால் உலகின் எந்த பாகத்தில் ஆயுத பலத்தை உபயோகிக்க வேண்டியிருந்தாலும், அதற்கான திட் டங்கள் எப்போதும் தயாராயிருக்க வேண்டும்.

அம்மாதிரி வருந்தத்தக்க ஒரு தினம் வருமேயானால், ராணுவ அதிகாரிகள் குழு, முன்னிலும் அதிக முக்கியத்து வத்தையடையும். பாதுகாப்புக் கௌன்ஸில், எப்படைகளை எந்த நாடுகளின்மீது செலுத்த வேண்டும் என தீர்மானிக்கும். அதன் பிறகு ராணுவ அதிகாரிகள் குழுவை நோக்கி "அப் படைகளை இப்போது அனுப்புங்கள்" என்று சொல்லும்.

இம்முறை மிக நன்றாக நடக்க வேண்டுமென்று சாஸனம் தயாரித்தவர்கள் எண்ணினார்கள். அதற்காகப் பல முக்கிய வழிகளை சாஸனத்தில் புகுத்தியுள்ளார்கள். காலம் நெருங்கி விட்டதென்று பாதுகாப்புக் கௌன்ஸில் கூறிய உடனே, தாங் கள் எல்லோரும் தலையிட்டு உதவி செய்வதாய் எல்லா நாடு களும் பிரமாணம் செய்கின்றன. (பகுதி 2-ம், பகுதி 49-ம்).

படை பலம் முழுவதையும் எல்லா நாடுகளிடமிருந்தும் ஒரே சமயத்தில் கேட்க வேண்டியதில்லை. ஜாவாவில் சச்சர வேற்படும்போது அதற்கு அருகிலுள்ள ஆஸ்திரேலியா வுக்கோ அல்லது இந்தியாவிற்கோ அழைப்பு அனுப்பப்படும். அல்லாமல் வெகு தூரத்திலுள்ள சிலி அல்லது பிரேஸில் நாட்டிற்கு அழைப்பு அனுப்பமாட்டாது. அதேபோல அர்ஜென் டைனுவில் போர் நிகழும்போது சிலி அல்லது பிரேஸில் நாட் டிற்குத்தான் அழைப்பு செல்லுமே தவிர இந்தியா அல்லது ஆஸ்திரேலியா நாட்டிற்கு அழைப்புப் போகாது.

இம்மாதிரி அழைப்பைப் பெற்ற நாடு, பாதுகாப்புக் கௌன் ஸிலில் அங்கத்தினராக இல்லாது போனால் " நான் உங்களுக்கு உதவி செய்வதற்காக தயாராய் வைத்திருக்கும் வீரர்களையும் ஆகாய விமானங்களையும் அனுப்புவதற்கு முன்னால் இவ்வழக் கைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல அனுமதிப்பீர் களா ?" என்று கேட்கும். அதன் பின்னர், பாதுகாப்புக் கௌன்ஸிலில் நீண்ட வளைந்த மேஜை முன் அமர்ந்து, தன் நாட்டு ராணுவப் பலம் ஏன் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாதாட தன் நாட்டிலிருந்து ஒரு பிரதிநிதியை அந்த நாடு அனுப்பிவைக்கும். தன் நாட்டு ராணுவ பலம் உபயோ கிக்கப்பட வேண்டுமா என்ற விஷயத்தின் மீது ஓட்டுச் செய்யும் போது அந்த பிரதிநிதிக்கும் ஒரு ஓட்டு உண்டு. அவரும் ஓட்டுச் செய்யலாம்.

பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு உதவ தான் தயாரா வைத் திருப்பதாகச் சொன்ன ராணுவ பலத்தை அனுப்ப ஒருநாடு மறுத்ததாக வைத்துக்கொள்வோம். அம்மாதிரி நிகழ்வது சர்வ சகஜம்.

[ஐந்து வல்லரசுகளில் எதுவும் அம்மாதிரி மறுக்காது. அப்படி எதிர்க்க வேண்டுமென அது எண்ணினால், தன் பிரதிநிதியை, தீர்மானத்திற்கெதிராக ஓட்டுச் செய்யும்படி சொல்லி விடும். அவ்விசேஷ அதிகாரத்தின் உதவியால், தீர்மானம்

தோற்றுப்போய்விடும். முடிவில் ராணுவ பலத்தின் உதவியை அழைக்கவே முடியாமல் போய்விடும்.]

பாதுகாப்புக் கௌன்ஸில் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று ஓட்டுச் செய்து, உதவிக்கு எல்லா நாடுகளுக்கும் அழைப்புகள் விடுத்து, சில சிறிய நாடுகள் தங்கள் ராணு வத்தை அனுப்ப மறுத்துவிட்டால், அவை அவ்வளவு முக்கிய மல்ல. எந்தவிதமான சச்சரவுகளையும், சிறு நாடுகளின் உதவி யின்றியே சமாளிக்க ஐந்து வல்லரசுகளும் பலம் பெற் றுள்ளன.

சச்சரவுகளில் ஈடுபடாத அக்கம் பக்க நாடுகளுக்கு, அவை களுக்கு அருகில் சச்சரவு நிகழும்போது உதவுவதற்காக, பகுதி 50-ல் சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. கிரேக்க நாட்டை அடுத்துள்ள ஒரு நாட்டின்மீது படையெடுப்பதற்காக, கிரேக்க நாட்டின் வழியாக, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், தன் ராணுவத்தையும், 'டாங்கி' களையும் பீரங்கிகளையும் அனுப்பி னால், அங்குள்ள கிரேக்கர்களும் கஷ்டப்படுவார்கள். அவர்கள் காரியங்கள் சரிவர நடைபெறாமல் தடைபடும். அந்நாட்டு விவசாயிகள் தங்கள் விளைபொருள்களையெல்லாம் ராணுவத் தினருக்கு விற்றுவிடுவார்கள். அதனால் அந்நாட்டு மக்கள் பசிப்பிணியால் வாட நேரிடும்.

அம்மாதிரி ஒரு நாடு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங் கத்தினராக இல்லாவிட்டாலும், பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் உதவி கோரலாம். பல வழிகளில் பாதுகாப்புக் கௌன்ஸில் உதவி செய்யமுடியும். அம்மாதிரி கஷ்டப்படும் நாடுகளுக்கு பொருள் உதவி செய்யும்படியோ, பல கப்பல்களில் உணவு தான்யங்களை அனுப்பும்படியோ, கௌன்ஸில், பெரிய நாடு களைத் தூண்டலாம்.

உதாரணமாக சமாதான காலங்களில் ஜெர்மனியிடமிருந்து மிகுந்த அளவில் நிலக்கரியை இத்தாலி வாங்குகிறது. ஏதோ சில காரணங்களினால், எல்லா நாடுகளையும், ஜெர்மனியிட

மிருந்து எப்பொருளேயும் வாங்கக் கூடாதென்று பாதுகாப்புக் கௌன்ஸில் தடை செய்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். நிலக்கரியில்லாததால் இத்தாலி தேச தொழிற்சாலைகளே மூட வேண்டிவரும். ஆனல் பென்ஸில்வேனியா விலிருந்து நிலக் கரியை நாம் அனுப்பமுடியும். இம்மாதிரி நிலக்கரியை அனுப்பும் வழி நீண்டதுதான். ஆனாலும் இரண்டாவது உலக யுத்தத்தின்போது இதுபோல் பல காரியங்களே நாம் செய் தோம். தங்களுடைய தவறினலல்லாமல், கஷ்டப்படும் எந்த நாட்டிற்கும் நாம் அந்த வழிகளில் உதவிபுரியலாம்.

ராணுவ அதிகாரிகள் குழு உதவியுடன் பாதுகாப்புக் கௌன் ஸில், அங்கத்தின நாடுகளில் எவை தங்கள் ராணுவத்தை அனுப்பவேண்டும், எவ்வளவு ராணுவத்தை அனுப்பவேண்டும் என்பனபோன்ற விஷயங்களேத் தீர்மானிக்கிறது.

ஒரே சமயத்தில் அவர்கள் எல்லோரும் எல்லா ராணு வத்தையும் அனுப்ப வேண்டியிருக்காது. சாதாரணமாக, கச்சரவு நடக்கும் இடத்தைச் சுற்றியுள்ள அரைடஜன் நாடுகளே சிலநூறு விமானங்களேயும், ஒரு டஜன் சண்டைக் கப்பல்களேயும், மூன்று டஜன் நீர்மூழ்கிகளேயும் அனுப்பும்படி கேட்கலாம். அவையே போதுமானதாயிருக்கும்.

அவைகள் வெடிகுண்டுகளே எதிரி நாட்டின்மீது வீசவேண் டிய அவசியமும் இராது.

அவைகள் “ஆர்பாட்டங்கள்” செய்து பார்க்கலாம். நல்ல பகலில், பல மக்களுக்கும் தெரியும் விதத்தில், கடற்கரை யோரப் பட்டிணங்களில், எதிரியின் நாடுகளில், தங்களுடைய சண்டைக் கப்பல்களேச் செலுத்திக் காண்பிக்கலாம். இராக் காலங்களில், வெடிகுண்டு விமானங்களே ஆகாயத்தில் பறக்கச் செய்து, எல்லோருக்கும் தெரியும்படியாக மிகப் பிரகாசமான விளக்குகளேப் போட்டுக் காண்பிக்கலாம். அவைகளிலிருந்து “நாளேயிரவு இவ்விமானங்கள் நம் நகரங்கள்மீது பறந்து, வெடிகுண்டுகளே வீசினல், நம் கதி என்னவாகும்?” என்று

அம்மக்கள் நினைக்கக்கூடும். உங்கள் வீடுகளுக்கு மேல் பிர காசமான வெளிச்சம் ஆகாயத்திலிருந்து விழுந்தாலும், அப் பெரிய சண்டைக்கப்பல்களை நீங்கள் பார்க்க நேர்ந்தாலும் என்ன நினைப்பீர்கள் ? மேலும் அந்நாட்டு அரசாங்கம் போரை நிறுத்தாவிட்டால் என்ன நேரிடும் என்பதுபற்றி அச் சடித்த துண்டுப் பிரசுரங்களை நூறுயிரங்கள் கணக்கில் ஆகாய விமானங்களிலிருந்து அந்நாடுகளின்மீது வீசும்படியும் சொல்ல லாம்.

அல்லது பாதுகாப்புக் கௌன்ஸில் தடுப்பு முறையைக் கையாளலாம். நீர்மூழ்கிகள், விமானங்கள், சண்டைக் கப்பல் கள் இவைகளை அந்த நாட்டிலிருந்து வரும் எல்லாக்கப்பல் களையும் பிடிக்கும்படியும் உத்திரவிடலாம். மேலும் அந்நாட் டிற்குச் செல்லும் கப்பல்களையும், ஆகாயவிமானங்களையும் தடுக்க லாம். இன்னும் அந்நாட்டிற்குச் செல்லும் எல்லா புகை வண்டிகளையும், மோட்டார்களையும், இதர சாதனங்களையும் தடுத்து நிறுத்தும்படி, தன்னுடைய ராணுவத்தினருக்கு கட்டளை யிடலாம்.

இது, அந்த நாட்டிற்குச் செல்லும் நிலக்கரி, துப்பாக்கிகள், எண்ணெய் வகைகள் இவைகளைத் தடுப்பதுபோல் ஆகிறது. சில காரணங்களினால் அவைகள் செல்வதைத் தடுக்கமுடியாது போகலாம். ஆனால் தடுப்பு முறையினால் அக்காரியத்தைச் செவ்வனே செய்யலாம்.

கடைசியில் தன் ராணுவத்தை அந்நாட்டின்மீது படை யெடுத்துத் தாக்கப் பாதுகாப்புக் கௌன்ஸில் அனுப்பலாம். அவர்கள் அந்த நாட்டிற்குள் பிரவேசித்து, ஒரு முக்கிய நகரத்தைக் கைப்பற்றினால் போதும். போர் அதனுடனேயே நின்றுவிடும். உதாரணமாக அவர்கள் அர்ஜன்டைனாமீது படையெடுக்கிறார்களென்றால், புவனஸ் அயரஸ் என்ற நகரத் தைக் கைப்பற்றினால் போதுமானது. . ஏனென்றால் அந்நகரம் அந்த நாட்டிற்கு மிக முக்கியமானது. அந்நாட்டின் ' இரு தயம்' என்றுகூட அதைச் சொல்லலாம்.

அல்லது அந்த நாட்டு ராணுவத்திற்கு உதவியாக இருந்து வரும் தொழிற்சாலைகள்மீது மிக பயங்கரமான வெடிகுண்டுகளை வீசவேண்டும் என்று அவர்கள் அபிப்பிராயப்படலாம்.

“ஆர்ப்பாட்டங்கள்” நடந்து கொண்டிருக்கும்போதோ, கௌன்ஸில் பகிஷ்கரிப்பு முறைகளைக் கைக்கொள்ளும்போதோ, ராணுவத்தையும் வெடிகுண்டு விமானங்களையும் அனுப்பும்போதோ, அக்காரியங்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, நன் சொற்களைக்கூறி அந்நாடுகளிடையே சமாதானம் நிலவுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்க வேண்டும். இம்முயற்சிகள் பலனடைந்து எதிர்ப்பு நின்றுவிட்டாலும், சச்சரவு முடிவாகத் தீர்மானிக்கப்படும் வரையிலும் நன் சொற்களைக் கூறிக்கொண்டிருக்கவேண்டும்.

ராணுவ பலத்தை உபயோகிப்பதற்கு சில விசித்ரமான எல்லைகளுமுண்டு.

ஒன்று :—இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனியையும் ஜப்பானையும் தோற்கடித்த நேசநாடுகள், அவ்விரண்டு நாடுகளையும் தம்மிஷ்டம்போல் நடத்தும் அதிகாரம் பெற்றிருந்தன. பாதுகாப்புக் கௌன்ஸில் அவைகளைத் தடுக்கமுடியாது. [பகுதி 107] அப்போரில் ஜயித்த நேசநாடுகள், தோற்றுப்போன நாடுகளிடம் நடந்துகொள்ளும் முறைபற்றி ஐக்கியநாடுகள் ஸ்தாபனமும் எதுவும் செய்யமுடியாது.

எனினும், தோற்றுப்போன நாடுகள் மீண்டும் மற்றொரு போரை ஆரம்பிக்காமல் பார்த்துக்கொள்ளும் வேலையை, பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் விட்டுவிடுவதாக, நேசநாடுகள் என்றாவது ஒரு நாள் ஒரு உடன்படிக்கைச் செய்துகொள்ளலாம் என்று பகுதி 53-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டு :—பாதுகாப்புக் கௌன்ஸில் தன்னுடைய ராணுவ பலத்தை நாடுகளுக்கெதிராக உபயோகிக்க முடியுமே தவிர, ஜனங்களுக்கெதிராக உபயோகிக்கமுடியாது. போர்

ஏற்படுவதற்கான அறிகுறிகளைக்காட்டி ஒரு நாடு பயமுறுத்தினாலோ அல்லது ஒரு போரைத் தொடங்கினாலோ, அந்த நாட்டிலுள்ள பத்துப்பனிரெண்டு பேர்களே உண்மையில் அதற்குக் காரணமாயிருப்பார்கள். அவர்களே தங்களுடைய நாட்டைப் போருக்கு இழுத்துச் செல்ல தலைமை கொள்பவர்கள். மேலும் அந்த நாட்டு மக்களில் பெரும்பாலோர் போருக்குச் செல்வதையே விரும்பமாட்டார்கள். தங்கள் அரசாங்கம் என்ன செய்கிறது என்பதுபற்றி அதிகம் அறியாதவர்கள். ஆனால் அந்தப் பத்துப்பனிரெண்டு பேர்களைமட்டும் பிடித்துத் தண்டிப்பதற்குப் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு எவ்வித அதிகாரமும் இடையாது. அது ஒரு நாட்டின்மீதுதான் தன் ராணுவ பலத்தைச் செலுத்தமுடியும்.

எப்பொழுதும் இம்முறை நன்றாக நடப்பதில்லை. சண்டைக் கப்பல்களும், வெடிகுண்டு விமானங்களும் தங்கள் நாட்டிற்கு எதிராக வருவதைப் பார்த்தவுடனேயே, அந்நாட்டு மக்கள், அந்தப் பத்துப்பனிரண்டு மனிதர்களைக் கைது செய்தோ, அவர்களை அரசாங்க பதயிலிருந்து விலக்கி வேறு புத்திசாலியானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பதிலாக நியமித்தோ நடக்கவேண்டும். ஆனால் அவர்கள் அம்மாதிரி செய்யமுடியாது போய்விடுகிறது. அதற்குக் காரணம் அந்த பத்துப்பனிரெண்டு மனிதர்களும் எப்போதும் துப்பாக்கிகளை தங்களுக்குக் காவலாக சுற்றிலும் வைத்துக்கொண்டிருப்பார்கள்.

மூன்று :—ஒரு நாட்டைத் தன் சிபார்சுகளின்படி நடக்கச் செய்வதற்குப் பாதுகாப்புக் கௌன்ஸில் பலாத்காரத்தை உபயோகிக்ககூடாது. சண்டைக்கு ஒரு நாடு ஆரம்பிப்பதைத் தடுப்பதற்கு ராணுவ பலத்தை உபயோகிக்கலாம்.

உதாரணமாக, ஒருநாடு, தன் நாட்டிலுள்ள ஒரு மில்லியன் மக்களை சேர்த்து, ராணுவப் பயிற்சி அளித்து, வேறு நாட்டை ஜயிப்பதற்காகத் தயார் செய்வதாக வைத்துக்கொள்வோம். அந்த சேனையை ஒரு நூறுயிரம் வீரர்கள் உள்ளதாகக் குறைக்

கும்படி பாதுகாப்புக் கௌன்சில் சொல்லலாம். அந்நாடு அதன்படி கேட்காமல், அவர்களைக் குறைக்காமல் ராணுவப் பயிற்சி அளிக்கிறது. மேலும் ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய வர்கள் என்று சொல்லும் மக்களை சிறையிலடைக்கிறது. நங்கள் மதத்திலிருந்து வேறுபட்டவர்களின் கடைகளின் ஜன் னல்களை உடைத்து, அங்குள்ள பல பொருள்களையும் கொள்ளை யடித்து செல்லும்போதும், அந்த உள் நாட்டுத் தூதர்களை அந்த நாட்டுப் போலீஸார் எதுவும் செய்யாமல் விட்டுவிடு கிறார்கள்.

அப்போது பாதுகாப்புக் கௌன்ஸில் மீண்டும் ஒரு செய்தி யனுப்பும். அதில் " நீங்கள் உங்கள் படையை ஒரு நூறுயிரம் வீரர்கள் கொண்டதாகக் குறைக்கவேண்டும் என்றும், ஜன நாயகத்தில் நம்பிக்கையுள்ள மக்களை, சிறைக்கு வெளியே சுதந்திரமாக வாழ விடவேண்டுமென்றும், பிறர் கடைகளை உங்கள் நாட்டினர் உடைத்துச் சூறையாடுவதை நிறுத்த வேண்டுமென்றும், உங்கள் நாட்டினர் விரும்பும் ஒருவரை அல்லது ஒரு அரசாங்கத்தை அவர்களை தேர்ந்தெடுத்துக் கொள் ளுவதற்காக, ஒரு சுதந்திரமான தேர்தலுக்கு அனுமதிக்க வேண்டுமென்றும் நாங்கள் உங்களுக்குக் கூறுகிறோம்," என்று எழுதி அனுப்பலாம். அதே சமயத்தில் சண்டைக் கப்பல்களையும், ஆகாய விமானங்களையும் அனுப்பி " ஆர்பாட் டங்கள் " செய்தும் பாதுகாப்புக் கௌன்ஸில் பயமுறுத்த லாம்.

இக்காரியங்கள் அவ்வரசாங்கத்திலுள்ளவர்களைத் திகிலடை யச் செய்யும். அவர்கள் உடனே ஒரு பதில் அனுப்புவார்கள். அதில் " நாங்கள் எங்களுடைய ராணுவத்தை மூன்று நூறு யிர வீரர்களுடையதாகக் குறைத்துவிட்டோ " மென்று எழுதுவார் கள்.

அதற்குப் பாதுகாப்புக் கௌன்ஸில் " நீங்கள் உங்கள் ராணுவத்தை மூன்று நூறுயிர வீரர்கள் உடையதாகக் குறைத்து

விட்டதாக எழுதியிருக்கிறீர்கள். ஆனால் மீதியுள்ள எழுநூறு யிரம் போர்வீரர்களையும் உங்கள் நாட்டு எல்லைப்புறங்களில் உள்ள "காம்ப்" (Camps) களிலேயே வைத்திருக்கிறீர்கள். மேலும் நாங்கள் முன்பே கூறியிருக்கும் மற்ற காரியங்களையும் நீங்கள் செய்யவில்லை" என்று பதில் எழுதும். அதற்குப் பிறகு பாதுகாப்புக் கௌன்ஸில் பகிஷ்கரிப்பு முறையையும் கையாண்டு, அந்நாட்டுக்குப்போகும் எல்லாக் கப்பல்களையும், புகைவண்டிகளையும், 'டிரக்கு'களையும் தடுக்கும்.

தங்கள் நாட்டிற்குள் நிலக்கரியோ, எண்ணெய்யோ, கோதுமையோ கொண்டுவரமுடியாததால் அந்நாட்டு அரசாங்கத்தினர் தங்கள் தவறை உணர சந்தர்ப்பமேற்படும். உடனே அவர்கள் மற்றொரு செய்தியை அனுப்புவார்கள். அதில் "நாங்கள் எங்கள் வீரர்களை மூன்று நூறுயிரங்களாகக் குறைத்து விட்டோம். மற்ற எழுநூறுயிரம் வீரர்களைக் கலைத்து அனுப்பி விட்டோம். நாங்கள் எந்த நாட்டுடனும் போர் செய்யத் தயார் செய்து கொண்டிருக்கவில்லை" என்று எழுதுவார்கள்.

இப்புது நிலையைப் பாதுகாப்புக் கௌன்ஸில் ஆராயும். அந்த நாடு எல்லா சிபார்சுகளையும் ஏற்று நடக்காவிடினும், போர் ஏற்படுமென்று பயங்காட்டிக் கொண்டிருந்த காரணங்களை குலைத்துவிட்டது.

அம்மாதிரி சந்தர்ப்பத்தில் பாதுகாப்புக் கௌன்ஸில் பகிஷ்கரிப்பு முறையை நிறுத்திவிட்டு, ஐ.நா.வின் சண்டைக்கப்பல்களையும் வெடிகுண்டு விமானங்களையும் திருப்பிப்பெற்று அவைகளை வீட்டிற்கனுப்பும்.

அத்தியாயம் 12

நாடுகளின் ஆயுதபரிகரணமும் அணுகுண்டு கட்டுப்பாடும்

ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் "ராணுவம் எங்களுக்கு இரு காரணங்களுக்காக வேண்டும். முதலாவதாக நாட்டின் அமைதியை நிலை நிறுத்த—இந்நாட்டில் எங்கேனும் புரட்சி ஏற்பட்டால் அல்லது பெருங்கூட்டமாக மக்கள் சேர்ந்து போலீஸ் அடக்கமுடியாதபடி. இன்னல் ஏற்படுத்தினால், அவர்களை நல் வழியில் திருப்ப, நமக்குதவ ராணுவம் வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக வேறு நாட்டினர் நம்மை எதிர்ப்பதிலிருந்தும் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் நமக்கு ராணுவம் தேவை" என்று எப்போதும் சொல்லியிருக்கின்றன.

சில சமயங்களில் வேறு ஒரு காரணமும் சொல்வதுண்டு. நம்மிடம் ராணுவமிருந்தால் மற்ற நாடுகள் மீது படையெடுத்து அவைகளையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆனால் சேனைகளையும் ஆயுதங்களையும் நிர்வகிப்பது மிக்க பொருட் செலவைத்தரும். இந்த உலகம் ஒரு வருஷத்தில் பில்லியன் (Billion) கணக்கில் டாலர்களை அவைகளின் மீது செலவிடுகிறது. இப்பணம் மக்களிடையேயிருந்து (வரிக ளாக) வசூலிக்கப்பட்டு துப்பாக்கிகள், குண்டுகள், வெடிகுண்டு கள் இவைகள்மீது செலவிடப்படுகிறது. தங்கள் வாழ்க்கை இன்பமாகவும் சுகமாகவுமிருக்க உதவும் உணவு, உடை, வீடு, பள்ளி, ஸ்னானம் செய்யும் நீர்த்தேக்கம் இவைகள்மீது செல விட ஜனங்களிடம் மிகக்குறைவான பொருளேயிருக்கிறது. உங் களுடைய பொருள் சைன்யத்திற்கும் ஆயுதங்களுக்கும் நிர் வாகத்திற்காகப் போகாமலிருந்தால் நீங்கள் மிகவும் சுகமா யிருக்கமுடியும். ஆனால் தற்காலத்தில் நீங்களும், உங்கள்

நேயர்கள் உட்பட எல்லோரும் மிகவும் ஏழையாய்த்தான் இருக்கிறார்கள். அதுபற்றி சாஸனத்தில் 26-ம் பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது.

மேலும் ஆயுதங்கள் மிகப் பயங்கரமானவை. துப்பாக்கியை வைத்திருக்கும் சிலர், கோபமேற்படும்போது மற்றவர்களுக்கு எதிரில் 'சடாரெ'ன்று துப்பாக்கியை எடுத்துப் பிடித்து விடும்படி நேருகிறது. அதுபோல் ஒரு அரசாங்கத்திலுள்ளவர்கள், தங்களிடம் மிக்க பலமுள்ள ராணுவம் ஒன்று இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்தால், அடிக்கடி அவர்கள் நிதானமிழந்து தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் சில்லரைச் சச்சரவுகளிலெல்லாம் கூட தங்கள் ராணுவத்தைப் பயன்படுத்த முயல்கிறார்கள்.

ஒரு புது விதமான போர்விமானம் ஒரு நாட்டாரால் கண்டு பிடிக்கப்பட்டால், மற்ற நாடுகளும் அம்மாதிரி தங்களுக்கும் விமானங்கள் வேண்டுமென ஆசை கொள்கின்றன. ஒரு நாடு நெருப்பைக் கக்கும் ஒரு புது யந்திரத்தைக் கண்டுபிடித்தால், அடுத்து ஒரு நாடும் தானும் அம்மாதிரி ஒன்றையோ அதை விட சக்திவாய்ந்த ஒன்றையோ கண்டுபிடிக்க விரும்புகிறது. இதைத்தான் "ஆயுதங்கள் சேகரிப்பதில் போட்டி" (Armaments Race) என்று சொல்வார்கள். இதில் ஒவ்வொரு நாடும் பெரிய அளவில் பொருள் செலவழித்து ஒன்றை ஒன்று முன்னேற முயலுகின்றன.

ஆயுதங்களைத் தாங்கியுள்ள நாடுகளை ஆயுதங்களேயில்லாத நாடுகளாக மாற்ற நம்மால் முடியுமா? சாஸனத்தில் கையெழுத்திட்ட எல்லா அரசாங்கங்களும் தாங்கள் செய்துள்ள பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்துகொள்வார்களேயானால், அதாவது வேறு எந்த நாட்டையும் ஜெயிப்பதற்கு ராணுவபலத்தை உபயோகிக்கமாட்டோம் (பகுதி 2, பாரா 4) என்பதைத் தெரிந்து கொண்டால், அந்தப் பிரமா

ணம் ராணுவத்தை வைத்துக்கொள்வதற்காகக் கூறப்படும் மூன்றாவது காரணத்தைத் தள்ளுபடி செய்துவிடுகிறது.

பாதுகாப்புக் கௌன்ஸில் தன் காரியத்தில் வெற்றிகொண்டு நாடுகள் தாக்கப்படுவதிலிருந்து அவைகளைக் காப்பாற்றிவிட்டால் இரண்டாவது காரணமும் தள்ளுபடியாகிவிடுகிறது. தற்காப்புக்காக அவர்கள் ஆயுதங்களையோ வீரர்களையோ வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் பாதுகாப்புக் கௌன்ஸிலின் உபயோகத்திற்காகத் தயாராக வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டதற்கு மட்டும் ஒரு ராணுவத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அதில் உள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்க வேண்டியதில்லை.

மீதியிருப்பது முதலாவதாக சொல்லப்பட்ட காரணம் ஒன்றுதான்.—புரட்சிகளைத் தடுத்து உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவது. தன் மக்கள் பசியினால் வாடாதபடி, அவர்கள் சொல்ல விரும்புவதைச் சொல்ல ஒரு வாய்ப்பு அளித்து, அவர்கள் விரும்பிய வேலைகளைச் செய்ய அனுமதியளித்து, அரசாட்சி நடத்தினால், எந்த அரசாங்கமும், தன் நாட்டில் ஒழுங்கீனங்கள் தலை காட்டுமென்றோ, புரட்சிகள் ஏற்படுமென்றோ பயப்படவேண்டியதில்லை. ஒரு சில வீரர்களை வேண்டுமானால் அதற்காக வைத்துக்கொள்ளலாம். அது போதும்.

எல்லா அரசாங்கங்களும் ஆயுதங்களின்மீது (இப்பொழுது) செலவிடும் பொருளைக் குறைக்கவேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் முயலவேண்டும் என்று சாஸனத்தில் மூன்று முறைகள் சொல்லப்பட்டுள்ளது.

ஆயுத பரிகரணத்திற்காக சில திட்டங்களை விவாதித்து வகுக்கும்படி, பொதுச் சபையிடம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உபயோகமான நல்ல திட்டங்களை சபை செய்யுமானால், அவைகளின் பிரதிகள் மற்ற தேசங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவைகளையும் அங்கிகரிக்கும்படி கேட்டுக்கொள்ளலாம்.

அல்லது எல்லா நாடுகளும் ஒன்றுகூடி ஆயுதபரிகரணத்திற்காக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவேண்டும் என்று பொதுச் சபை சொல்லலாம். அவ்வுடன்படிக்கையில் "ஐ.நா. அங்கத்தினர் நாடுகளின் அரசாங்கங்கள் எல்லாம் இவ்வுடன்படிக்கையை ஒப்புக்கொண்டால், நாங்களெல்லோரும் எங்கள் ராணுவ பலத்தை பத்தில் ஒரு பங்காக ஒவ்வொரு வருஷமும் குறைத்துக்கொண்டுவருகிறோம். அடுத்த ஐந்து வருஷகாலத்திற்கு இம்மாதிரி நாங்கள் செய்கிறோம்" என்று எழுதலாம்.

ஒரு சில நாடுகளில் 18 வயதை யடைந்த ஒவ்வொரு இளைஞனும் கட்டாய ராணுவப் பயிற்சி பெறவேண்டும். வேறு நாடுகளில் இளைஞன் தனக்கு விருப்பமுள்ள வேலையைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். அவன் விரும்பினால் மட்டுமே ராணுவப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். எல்லா இளைஞர்களையும் இப்பயிற்சியில் ஈடுபட ஒரு நாடு நிர்ப்பந்தித்தால், வெகு சீக்கிரத்திலேயே அந்த நாட்டில் நல்ல பயிற்சி வாய்ந்த பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் போர் செய்யத் தகுதிபெற்று விடுகிறார்கள். இதைப்பார்த்து மற்ற நாடுகள் பயந்து தங்கள் நாடுகளிலும் அம்மாதிரி இளைஞர்களை ராணுவப் பயிற்சியில் ஈடுபடுத்த முற்படுகிறார்கள்.

'எல்லா நாடுகளும் கட்டாய ராணுவப் பயிற்சியை ஒதுக்கி விட்டு இளைஞர்கள் தங்களுக்குப் பிடித்த வழிகளில் ஈடுபட அனுமதிக்கவேண்டும்' என்று பொதுச் சபை எல்லா நாடுகளுக்கும் சொல்லவேண்டும் என்று பல அரசாங்கங்கள் கேட்டுக் கொண்டன.

உலகத்தில் ஆயுத பரிகரணத்திற்காகப் பொதுத் திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பை முதல் முதலாகக்கூடிய பொதுச் சபை ஏற்றுக்கொண்டது. எல்லா நாடுகளும் தங்கள் ராணுவ பலத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும், பல குழுக்களை ஏற்படுத்தி, அவைகளை பல நாடுகளுக்கும் அனுப்பி, அவைகள் தங்களுடைய யோசனைகளின்படி நடக்கின்றனவா

என்று பார்த்து வரவேண்டுமென்றும் எல்லாப் பிரதிநிதிகளும் ஒரு மனத்துடன் விண்ணப்பித்துக் கொண்டனர். இந்தப் பரீக்ஷை முறையை எப்படி நடத்துவது என்னும் பொறுப்பை பொதுச்சபை பாதுகாப்பு கௌன்ஸிலிடம் விட்டுவிட்டது.

ராணுவ அதிகாரிகள் குழு உதவியுடன் பாதுகாப்புக் கௌன் ஸில் இவ்விஷயத்தை ஆலோசிப்பதோடு, உருப்படியான திட்டங் களும் தயாரிக்க வேண்டும். இத்திட்டங்கள் செய்வது பொதுச் சட்டங்கள் தயாரிப்பதிலிருந்தும் வேறுபட்டது ஆகும். குறிப் பிட்ட ஒருநாடு ஆறு சண்டைக் கப்பல்களும், இரு நீர்மூழ்கி களும், இருநூறு போர் விமானங்களும்தான் வைத்துக்கொள்ள லாம் என்றும், அதற்குமேல் வைத்துக்கொள்ளக்கூடாதென் றும், சிறிது அபாயம் ஏற்படக்கூடிய நிலையில் உள்ள நாடு எட்டு சண்டைக் கப்பல்களும் பத்து நீர்மூழ்கிகளும் இருநூறு போர் விமானங்களும் வைத்துக் கொள்ளலாமென்றும் அது சொல்ல லாம். இதைப்போலவே ஒவ்வொரு நாட்டிற்கும் குறிப்பாகச் சொல்லலாம்.

அல்லது இதைவிட அதிகமாகவும் செய்யலாம். அதன்படி ஒவ்வொரு நாடும் இந்த வருஷத்தில் இவ்வளவு ஆயுதங்கள் தான் வைத்துக்கொள்ளவேண்டும், அடுத்த வருஷம் இவ் வளவு குறைவாக வைத்துக்கொள்ளவேண்டும், அதற்கடுத்த வருஷம் . . . . . இப்படியாக ஒவ்வொரு வருஷமும் குறைத்துக்கொண்டே போகவேண்டுமென்றும் தீர்மானம் செய் யலாம்.

அதன்பிறகு இத்திட்டத்தை எல்லா நாடுகளுக்கும் அவை களின் சம்மதத்தைப் பெற சமர்ப்பிக்கலாம்.

அத்திட்டத்திற்குப் போதுமான ஆதரவு கிடைத்தால், பாது காப்புக் கௌன்ஸில் இன்னும் அதிகமான பலத்தை அதற்கு சாதகமாக கொடுக்கும். ஐந்து வல்லரசுகளும் உட்பட நாற் பத்தைந்து நாடுகள் அத்திட்டத்தை ஒப்புக்கொண்டதாக வைத் துக்கொள்வோம். அப்போது பாதுகாப்புக் கௌன்ஸில் மற்ற

நாடுகளிடம் "யோசித்துப்பாருங்கள்! நீங்கள் இத்திட்டத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால், நீங்கள் வைத்துக்கொண்டுள்ள ஆயுதங்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதுபோலிருக்கும். அம்மாதிரி நாங்கள் தீர்மானித்தால், எங்கள் முழுபலமும் உங்களுக்கெதிராக உபயோகிக்கப்படும்" என்று சொல்லும்.

பாதுகாப்புக் கௌன்ஸிலின் அங்கத்தினர் எல்லோரையும் ஒரு நல்ல திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வதுதான் மிகவும் கஷ்டமான காரியம். திட்டம் நன்மை பயப்பதாயிருந்து, பாதுகாப்புக் கௌன்ஸிலும் தன் ஓட்டுகளை அதற்குச் சாதகமாய் அளித்திருந்தால், அதை ஒப்புக்கொள்ளும்படி எல்லா நாடுகளையும் பாதுகாப்புக் கௌன்ஸில் தூண்டலாம்.

இவ்வாயுதங்கள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது அணுகுண்டுதான்.

சிறிய நாடுகள் அணுகுண்டின் உதவியின்றி ஒன்றுடன் ஒன்று சிறு சச்சரவுகளைச் செய்யும்போது, பாதுகாப்புக் கௌன்ஸில் அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்த முயலவேண்டும். ஆனால் ஒரு நாடு பெருத்த அளவில் அணுகுண்டுகளைத் தயார்செய்து, அவைகளை வைத்துக்கொண்டு ஒரு பெரிய போரை ஆரம்பித்தால், அதுவே மூன்றாவது உலகயுத்தம் எனப் பெயர் பெற்று, அது 15 நிமிஷங்களேதான் நீடிக்கும் என்பது நிச்சயம்.

அணுசக்திக் கமிஷனின் வெற்றியையோ தோல்வியையோ பொருத்துத்தான் இந்த உலகம் நிலைத்திருக்குமா அல்லது அழிந்துபோகுமா என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் அங்கம் வகிக்கும் நாடுகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியும், முதல் அணுகுண்டை கண்டுபிடிக்க உதவிய **கனடாவின்** ஒரு பிரதிநிதியும் இந்தக் கமிஷனில் இருக்கிறார்கள். நம்முடைய பிரதிநிதி, நம் ஜனாதிபதியால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 'செனட்' சபையினால் அங்கீ

கரிக்கப்பட்டவர். அவருடைய சம்பளத்தை நம் அரசாங்கமே கொடுக்கிறது. ஒரு மாதத்திற்கு 1,000 டாலர்கள்.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் கூடும் அறையிலேயேதான் இந்தக் கமிஷனும் கூடுகிறது. ஒவ்வொரு பிரதிநிதியும் தனக்குதவ மூன்று அல்லது நான்கு பெயர்களை அழைத்து வருகிறார்கள். அதன் சில கூட்டங்கள் பகிரங்கமாக நடக்கும். பொது மக்களுக்கும் அவைகளைக் காண அனுமதி உண்டு.

அணுசக்திக்கமிஷனுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. தனக்காகப் பாதுகாப்புக் கௌன்ஸில் ஏற்படுத்தும் சட்டங்களின் படி அது தன் வேலைகளைச் செய்கிறது. அது செய்யக்கூடிய காரியங்கள்—ஆராய்தல், விவாதித்தல், பாதுகாப்புக் கௌன் ஸிலுக்குத் தன் சிபார்சுகளைக் கூறுதல்.

ஆனாலும், ஐக்கிய நாடுகள் செய்யும் காரியங்களால் உங் களுக்கேற்படும் பயனைவிட அதிகமான பயனை இந்தக் கமிஷன் செய்யும். முக்கியமான காரியம் ஒன்றை உங்களுக்கு செய்யும். "அணுசக்தி சாஸனம்" என்ற ஒரு விரிவான திட்டத்தை, சர்வதேச அணுசக்தி அபிவிருத்திக் கமிட்டிக்காக அது எழுதப் போகிறது.

மேலும் தற்காலத்தில் விஞ்ஞான அறிவின் உதவியால் அணுசக்தியை, எதிரிகளை அழிப்பதற்கு உபயோகிக்கிறோம். அதற்குப் பதிலாக மனித குலத்திற்கு நன்மை பயக்கும் வழிகளில் அதை உபயோகிக்க முடியுமா, என்பதைப்பற்றியும் தன் சிபார்சுகளைக்கூறும்.

திட்டம் தயாரிப்பது மிக முக்கியமானது. அதற்காக நம் பிரதிநிதிக்கு உதவியாக 60 நபர்களை நம் அரசாங்கம் அனுப்பி அவர்களின் சம்பளத்திற்காக வருஷத்திற்கு 660,000 டாலர் களை ஒதுக்கிவைத்தது.

சச்சரவு செய்துகொள்ளும் இந்த உலகம் இதற்குமுன் கண்டிராத ஒரு பெரிய திட்டத்தை நம்முடைய அமெரிக்க அரசாங்கம் இந்தக் கமிஷனுக்கு வகுத்துக் கொடுத்தது.

மிஸ்டர் ஹெண்டர்சன் தம் அடுத்த வீட்டுக்காரனிடமிருந்து ஒரு அறையைத் திருடிக்கொண்டபோது, நாடுகள் அடிக்கடி செய்யும் ஒரு காரியத்தையேதான் அவரும் செய்தார். ஆனால் மீண்டும், நாடுகள் அம்மாதிரி காரியங்களைச் செய்யமுடியாது. ஏனென்றால், உலகில் அணுசக்தியை நிர்வகிக்கும் பொறுப்பு மேலே சொல்லிய கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கமிட்டி எல்லா நாடுகளையும்விட அதிக சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் தலைமை பூண்டதொரு கமிட்டியாகும். ஐந்து வல்லரசுகள் உட்பட எல்லா நாடுகளிடையேயும் சமாதானம் நிறுவும் ஒரு பெரிய சக்தியாக அது இருக்கும். அம்மாதிரி காரியத்தை முதன் முறையாக அதுவே செய்யும்.

அம்மாதிரி பெரிய சக்தியாக அது ஆகும்—மேற்சொல்லிய திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டால்.

பல நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட **சர்வதேச அணு சக்தி அபிவிருத்தி அதிகார சபை** ஒன்று இருக்கும், என்று அந்தத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டு உண்டு. எந்த நாட்டிற்கும் விசேஷ நிராகரிப்பு அதிகாரம் கிடையாது.

இவ்வதிகார சபை, அணுகுண்டு செய்வதற்கு உபயோகிக்கப் படும் உலகிலுள்ள எல்லா வெடிக்கும் பொருள்களைப்பற்றியும் (உரேனியம், தோரியம் முதலியன) சகல விவரங்களையும் சேகரிக்கும். ஒவ்வொரு சுரங்கத்திற்கும் சென்று விவர மறிய 'எஞ்சினியர்களை' அனுப்பும். இன்னும் அதிக விவ ரங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகளை அமர்த்திக் கொள்ளும். உபயோகமான முறைகளில் அணு சக்தியை உபயோகித்தற்கு, விஞ்ஞானிகள் ஆராய்வதற்கு ஆதரவு அளிக்

கும். தங்கள் ஆராய்ச்சிகளை சரிவரச் செய்வதற்கு அவர்கள் விரும்பும் விசேஷ வகைப்பட்ட பயங்கரப் பொருள்களையும் அவர்களுக்கு இனமாகவோ, விலைக்கோ கொடுக்கும். இந்தச் சபையின் அனுமதி பெறுமல், மேற்சொல்லிய ஆராய்ச்சிகளைச் செய்ய எவருக்கும் அதிகாரமில்லை.

இந்த சபை தனக்கென எந்த விஷயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்வதில்லை. அதேபோல மற்றவர்களும் தன்னிடமிருந்து எதையும் மறைக்காமல் அது பார்த்துக்கொள்ளும். வெகு தொலைவிலுள்ள மலைக்குகையொன்றில் தனியேயிருந்து ஆராய்ந்து, மிக அபாயமான அணுகுண்டை ஒரு விஞ்ஞானி கண்டுபிடித்து, அதை திடீரென மக்களிடையே வெளியிடுவதுபோன்ற செயல்களைத் தடுப்பதற்கு அது பாடுபடும். மிக கவனத்துடன் இக்காரியங்களை அது கவனிக்கும்.

உரேனியம் தோரியம் போன்ற ' அபாயம் விளைவிக்கும் பொருள்கள் ' தயாரிக்கப்படும் எல்லாத் தொழிற்சாலைகளையும் இந்தச் சபையே சொந்தத்தில் நடத்தும் ; அல்லது தானே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். அங்கு செய்யப்படும் எல்லாப்பொருள்களையும் தன் அதிகாரத்தின் கீழேயே வைத்துக்கொள்ளும் ; அல்லது விநியோகிக்கும் பொறுப்பை அதுவே ஏற்றுக்கொள்ளும்.

இந்த சபையினிடமிருந்து அனுமதி (License) பெற்றுத் தான், அரசாங்கங்களும், தனிப்பட்ட கம்பெனிகளும் மின் சாரம் தயாரிப்பதற்கு இயந்திரங்கள் கட்டுவதற்கோ அல்லது இதர முக்கியமான காரியங்களுக்கோ அணுசக்தியை உபயோகிக்கலாம். அவர்களுக்கு வேண்டிய பொருள்களையும் இந்தச் சபையே உதவும். அப்பொருள்களை வேறு எந்த இடங்களிலிருந்தும் அவைகள் பெறக்கூடாது.

எந்தத் தொழிற்சாலையாவது, இம்மாதிரி பயங்கர பொருள்களுடன் வெடிமருந்து சாமான்களை உற்பத்தி செய்ய முற்பட்டால், அந்த தொழிற்சாலையை இச்சபை, தன் நிர்

வாகத்திற்கு எடுத்துக்கொண்டுவிடும். அத்தொழிற்சாலையை நடத்துவதற்காக சரியான மனிதர்களைப் பொறுக்கி, அவர்கள் செய்யவேண்டிய காரியங்களையும் இச்சபையே தீர்மானிக்கும்.

வேறெங்கும் இம்மாதிரி தொழிற்சாலைகளை எவரும் நடத்தக்கூடாது. இந்தச்சபை, அமெரிக்க அரசாங்கத்தைவிட, சோவியத் அரசாங்கத்தைவிட, வேறு எந்த அரசாங்கத்தையும் விட பலமுள்ளதாகவிருக்கும். இந்த அரசாங்கங்கள் அணுசக்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கும் இச்சபை அனுமதி கொடுக்காது.

எந்த நாட்டிலுமுள்ள எந்த தொழிற்சாலைக்கும் அல்லது ஆராய்ச்சி நிலையங்களுக்கும் தன் மனிதர்களை அனுப்பி, அங்கு அணுசக்தி உதவியினால் ஏதேனும் அபாயமான பொருள்கள் செய்யப்படுகின்றனவா என்று சோதிக்கும் உரிமை இந்தச் சபையினுடையதே.

சர்வதேச அணுசக்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இவ்வளவு அதிகாரம் (பலம்) கொடுக்கப்பட்டதற்குக் காரணம் மிகவும் சுலபமானது. இச்சட்டங்களை மீறும் எவரும் கைது செய்யப்பட்டு, பாதுகாப்புக் கௌன்ஸிலால் தண்டனைக்குட்படுத்தப்படுவார்.

இச்சட்டங்களின்படி, விசேஷ அனுமதியின்றி, எவரும் அணுகுண்டு செய்ய உபயோகமாகும் வெடிக்கும் பொருள்களை வைத்துக்கொள்ளவோ, அதைச்செய்ய தொழிற்சாலை ஏற்படுத்துவதோ, அல்லது ஆராய்வதோ கூடாது. பொதுவாக அணுசக்தியைப்பற்றி எவ்வித ஆராய்ச்சிகளிலும் ஈடுபடக்கூடாது.

இந்த சபைக்கு சொந்தமான, அல்லது அதன் அனுமதி அளிக்கப்பட்ட தொழிற்சாலையை அல்லது ஆராய்ச்சி நிலையத்தைக் கைப்பற்றும் வீரர்களை அல்லது அரசாங்க அதிகாரிகளை கைது செய்து தண்டிக்க பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அதிகாரமுண்டு. அதேபோல இச்சபை செய்யும் காரியங்களில் தலையிட்டுக் குழப்புவோரையும் தண்டிக்கலாம்.

இந்த வித்தியாசத்தைக் கவனியுங்கள் : ஐ. நா. சாஸனப்படி ஒரு நாட்டைத்தான் பாதுகாப்புக் கௌன்ஸில் தண்டிக்கலாம். இந்த திட்டத்தின்படி இச்சபை, குற்றம் செய்த ஒரு மனிதனைக்கூட தண்டிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

இந்தத் திட்டம் அமெரிக்காவினுல் அளிக்கப்பட்டது. அணுசக்திக் கமிஷன் செய்யவேண்டிய முதல் வேலை—இத்திட்டத்தை நன்ருய் ஆராய்ந்து, இம்மாதிரி ஒரு அதிகாரசபையைப்பற்றி விவரித்து "அணுசக்தி சாஸனம்" ஒன்று எழுத வேண்டும். அதன்மீது பாதுகாப்பு கௌன்ஸில் ஓட்டுசெய்யும். நாடுகள் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டால், சர்வதேச அணுசக்தி அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டு தன் காரியங்களைச் செய்யவாரம்பிக்கும். அம்மாதிரி ஏற்பட்டால் அமெரிக்க அரசாங்கம் மூன்று காரியங்களைச் செய்வதாக வாக்களித்திருக்கிறது : அணுகுண்டுகள் தயாரிப்பதை நிறுத்துவது. "அணுசக்தி சாஸனம்" சொல்லும் எல்லா முறைகளையும் உபயோகித்து தற்போது கைவசமுள்ள எல்லா அணுகுண்டுகளையும் அழித்துவிடுதல். அணுகுண்டுகளைப்பற்றி நாம் அறிந்த எல்லா விவரங்களையும், மேலே குறிப்பிட்ட சபை, நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரானதும் அச்சபையினிடமே விட்டுவிடுதல்—இம்மூன்று காரியங்களும் செய்வதாக அமெரிக்க அரசாங்கம் வாக்களித்திருக்கிறது.

அத்தியாயம் 13

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை எப்படி மாற்றுவது?

இப்பொழுதிருக்கும் இந்த ஸ்தாபனத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அது சரிவர வேலை செய்யும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உலகில் எல்லோரும் சுகமாகவும், சௌகரிய மாகவும் வாழ்வதற்குப் போதுமான வசதிகளை அது செய்யுமா? ஒரு அணுகுண்டு யுத்தம் ஏற்பட்டு நாம் எல்லோரும் இறந்து மடிவதினின்றும் நம்மைக் காப்பாற்ற அது சக்தி பெற்றிருக் கிறதா?

இவ்வுலக மக்களாகிய நாம் ஐக்கிய நாடுகள் சாஸனத்தில் நமக்கு வேண்டிய மாறுதல்களை திருத்தங்கள் மூலம் செய்து கொள்ளமுடியும்.

எவர் வேண்டுமானாலும் திருத்தங்களைக் கூறலாம். ஸ்தா பனத்தைச் சேர்ந்த ஒரு சபையோ, கௌன்ஸிலோ, கமிஷனோ கூடத் தம் சிபார்சுகளைச் சொல்லலாம். நம்முடைய பிரதி நிதிகள் எத்திருத்தங்களுக்கு எவ்விதத்தில் ஓட்டுச் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதலாம்.

பிரஸ்தாபிக்கப்பட்ட திருத்தங்களெல்லாம் பொதுச் சபை யால் விவாதிக்கப்பட்டு, அவைகளில் மாற்றங்களோ, திருத்தங் களோ செய்யப்படும். எல்லா அங்கத்தின நாடுகளும் பொதுச் சபையில் தங்கள் பிரதிநிதிகளை நியமித்திருக்கின்றன. அதனுல் தங்கள் நாடு எத்திருத்தங்களை ஆதரிக்கும், எவைகளை மறுக்கும் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

பொதுச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் ஒப்புக்கொண்டால், அத்திருத்தம் பலபிரதிகள் எடுக்கப்பட்டு, மற்ற அரசாங்கங்களுக்கு அனுப்பப்படும். அவைகளும் அதை ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படும். ஒரு நாட்டின் அரசாங்கம் அதை ஒப்புக்கொண்டுவிட்டால், அது அந்த நாட்டால் ஒப்புக்கொள்ளப்பட்டதாக கருதப்படும். நம்முடைய நாட்டில் நம்முடைய 'செனட்' சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர் ஒப்புக்கொள்ளவேண்டும்.

அங்கத்தின நாடுகளில் ஐந்து வல்லரசுகள் உள்பட மூன்றில் இரண்டு பங்கு நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டால், அத்திருத்தம் ஐ.நா. சாஸனத்தின் ஒரு பகுதியாகிறது. புதிய திருத்தம், சாஸனத்தின் பழைய வாக்கியங்களுக்கு எதிரிடையாக இருந்தால், புதிய திருத்தத்தின் வாசகத்தையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஐந்து வல்லரசுகளில் ஒன்று அத்திருத்தத்தைச் சேர்க்க ஒப்புக்கொள்ளாவிட்டால், சாஸனத்தில் அது சேர்க்கப்படமாட்டாது.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை பலமாக ஆதரவளித்துப் பேசப்பட்டுவந்த சில திருத்தங்களாகும்.

அமெரிக்க அரசியல் திட்டத்தில் செய்யப்பட்ட முதல் பத்து திருத்தங்களும் நம் எல்லோருக்கும் பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம், ஜூரி விசாரணைமுறை, மற்றும் சில சுதந்திரங்களையும் அளித்தது. ஐ.நா.வின் மனித உரிமைக் கமிஷன் சில திருத்தங்களைக் கொண்டுவந்து, நம்மெல்லோருக்கும் மனித உரிமைகளை வழங்கலாம்.

ஒரு சச்சரவை சமாதான முறையில் தீர்க்க பாதுகாப்புக் கௌன்ஸில் முயன்றுகொண்டிருக்கும் சமயங்களிலாவது, பாதுகாப்புக் கௌன்ஸிலில் ஐந்து வல்லரசுகளுக்குமட்டுமே உரிய விசேஷ நிராகரிப்பு அதிகாரத்தை எடுத்து விடவேண்டும் என்று

ஆஸ்திரேலியாவும் இன்னும் பல சிறிய நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தன.

இந்த நிராகரிப்பு அதிகாரத்தை மற்ருெரு விதத்திலும் மாற்றலாம். அது ஒரு ஆச்சர்யமான வழியாகும். இரண்டு மூன்று நாடுகள் ஒன்று சேர விரும்பினுல் அவைகள் சேர்ந்து கொள்ளலாம் என்று நம் 'செனட்டர்' கள் கூறியிருக்கிருர் கள். நம் நாட்டிலிருக்கும், ஸ்பானிஷ் பாஷை பேசும் 18 லத்தீன் அமெரிக்க குடியரசுகளும், அவைகள் விரும்பினுல் ஒன்று சேர்ந்து 'ஸ்பானிஷ் அமெரிக்காவின் ஐக்கிய தேசங்கள்' என்று ஒரே நாடாக ஆகிவிடலாம். அப்போது அவைகள் சிறு சிறு நாடுகள் அல்ல. அவைகள் ஒரு பெரிய நாடா கின்றன. அதில் 75 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் இருப்பார்கள். இப்புதிய நாடு தனக்கும் பாது காப்புக் கௌன்ஸிலில் அங்கத்தின பதவி கொடுக்கவேண்டு மென்று ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து, தனக்கும் மற்ற வல்லரசுகளுக்குள்ளது போலவே விசேஷ நிராகரிப்பு அதி காரம் வழங்கப்படவேண்டுமென்று வலியுறுத்தலாம். சிறிய நாடுகள் என்றுமே சிறிய நாடுகளாய் இருக்கவேண்டியதில்லே. ஒன்று சேர்ந்தால் அவை பெரிய நாடாக ஆகலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்குப் பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கும் முறையையும் நாம் மாற்றிவிடலாம். நம், ஜன நாயகத்தில்கூட, நம் 'செனட்டர்' கள் முதலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லே. அவர்களே நம் தேசத்து சட்ட சபைகளே நியமித்துக் கொண்டிருந்தன. 1904-ல், ஓட் டுரிமையுள்ள மக்களே 'செனட்டர்' களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரேகான் (Oregon) தீர்மானித்தது. மற்ற மாகாணங்களும் அதைப் பின்பற்றின. 1910-ம் வருஷத்திற்குள், நம் தேசத்தில் முக்கால் பகுதியில், தங்கள் தங்கள் 'செனட் டர்' களை சட்ட சபைகளின் மூலம் தேர்ந்தெடுத்துக்கொள்வதை கைவிட்டுவிட்டு, ஓட்டுரிமை பெற்றவர்கள் தேர்ந்தெடுப்பதின் மூலமே அவர்கள் நியமனம் பெற்றனர். மூன்று வருஷங்

களுக்கப்புறம், நம் அமெரிக்க அரசியல் திட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு, அதன்படி நம் தேசத்திலுள்ள எல்லா 'செனட்டர்'களும் ஓட்டுரிமை பெற்ற மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா.வும் இதே முறையில் முன்னேற்றம் அடையலாம். பொதுச் சபையில் பிரதிநிதிகளாய் இருப்பவர்கள் எல்லாம், அவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்களோ, அந்த நாடுகளின் அரசாங்கங்களாலேயே நியமிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். நம்முடைய பிரதிநிதியும் நம்முடைய ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டவரே. நம்முடைய பிரதிநிதி, அமெரிக்காவிலுள்ள 'ஓட்டர்'களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களிடம் நமக்கு இன்னும் அதிக நம்பிக்கை ஏற்படும்.

நாம் அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகளை நம்முடைய 'காங்கிரஸ்' முடிவு செய்யலாம். இதற்காக சாஸனத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டியதில்லை. மற்ற நாடுகளும் இவ்வாறே செய்யலாம். அதன் பிறகு, எதிர் காலத்தில் எப்போது வேண்டுமானாலும், ஒருநாளில், ஐ.நா. பிரதிநிதிகள் 'எல்லாம், ஓட்டுரிமை பெற்ற மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று ஒரு திருத்தத்தை சாஸனத்துடன் இணைத்துவிடலாம். இம்மாதிரி ஒரு திட்டத்தை ஆங்கிலேய அரசாங்கம் அதிகாரபூர்வமாய் பிரேரேபித்துள்ளது.

சட்டங்கள் செய்யும் அதிகாரம் பொதுச்சபையிடம் இருக்க வேண்டும் என்பதற்காக சாஸனத்திற்கு ஒரு திருத்தத்தை, ஈக்வெடார், பிலிப்பைன் நாடுகளின் பிரதிநிதிகள் கொண்டு வந்தனர். நம் 'செனட்டர்'களில் சிலரும் அதை ஆதரித்துப் பேசினார்கள். உதாரணமாக, இதன்முடிவு என்னவாகுமென்றால், சமாதான காலங்களில் இளைஞர்களை ராணுவப் பயிற்சிக்கு எந்த நாடும் தயார் செய்யமுடியாதபடி சபை செய்துவிடலாம். இவைகளெல்லாம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை ஒரு உலக அரசாங்கமாகவே செய்துவிடலாம்.

போர் மூள்வதற்குக் காரணமான எம்மனிதனையும் கைது செய்து தண்டனையளிக்கும் அதிகாரத்தை ஐ.நா. வுக்கு கொடுக்க வேண்டுமென்று பலர் சொல்கிறார்கள். சாஸனத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து இவ்வதிகாரத்தை அதற்குக் கொடுக்கலாம்.

ஐந்து வல்லரசுகள் உள்பட மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள், பல திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதற்காக சாஸனத்தையே மீண்டும் விவாதிக்கவேண்டும் என்று விரும்பினால், ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்றதுபோல மற்றொரு மகாநாட்டை அவர்கள் கூட்டலாம் (பகுதி 109). அம்மாதிரி ஒரு மகாநாடு நடக்குமென்பது உறுதி. ஏனென்றால் அடுத்த ஒன்பது வருஷங்களில் இம்மாதிரி ஒரு மகா நாட்டைக் கூட்டுவதற்கு மூன்றில் இரண்டுபங்கு நாடுகள் ஒன்று சேராவிட்டால், பத்தாவது வருஷத்தில், பாதுகாப்புக் கௌன்ஸிலில் உள்ள அங்கத்தின நாடுகளில், எந்த ஏழும் உட்பட, ஒரு 'மெஜாரிட்டி' கிடைத்துவிட்டால், ஒரு மகாநாட்டிற்கு ஏற்பாடு செய்யலாம்.

'ஸ்தாபனத்தில் சில பெரிய மாறுதல்களைச் செய்வதற்கு எல்லா நாடுகளும் சம்மதப்படுமா' என்று பார்ப்பது அம்மகா நாடு செய்ய வேண்டிய வேலைகளில் முக்கியமானதொன்றாகும். அம்மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், சாதாரண திருத்தங்களைப்போலவே, எல்லா நாடுகளின் அரசாங்கங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். ஐந்து வல்லரசுகள் உட்பட, மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களால் ஒப்புக்கொள்ளப்படும் தீர்மானங்களே, சாஸனத்துடன் சேர்க்கப்படும்.

அத்தியாயம் 14

ஒரு எச்சரிக்கை

கப்பல் உடைந்து விட்டதனால், நீரில் தவித்த இருவர், ஒருவரும் கண்டிராத ஒரு கடற்கரையோரத்திற்கு அடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் நினைவு பெற்று சிறிது இளைப் பாறி நடக்கக்கூடிய நிலையை யடைந்ததும், அந்நிலத்தை வைடுருவிப் பார்த்தனர். அது ஒரு வட்டவடிவமான தீப கற்பம் என்பதைக் கண்டார்கள். அவர்கள் மிகவும் வருத்த மடைந்தனர். காற்று பலமாக வீசவும், அவர்கள்மீது மழை பெய்யவும், இராக்காலத்தில் அத்தீவு மிகக் குளிராயிருந்தது.

அவசரம் அவசரமாக அவர்கள் தங்களுக்கென தனித் தனியே வீடுகள் கட்டிக்கொள்ள ஆரம்பித்தனர். அது மிகவும் கஷ்டமாயிருந்தது. ஏனென்றால் அங்கிருந்த மரக்கட்டை களில் எதையும் அவர்களால் தனியாகத் தூக்கமுடியவில்லை.

அவர்களுக்கு மிகவும் பசி யெடுத்தது. உணவுக்காகத் தேடினார்கள். ஒன்றும் அகப்படவில்லை. அங்கு ஒன்று மேயில்லை. கிடைத்தவைகளை எடுத்துத் தங்கள் வாய்க்குள் திணித்துக்கொண்டனர். அங்கு சிறு நீரோடையில் இருந்த மிகச் சிறிய மீன் ஒன்றைப்பிடித்து, ஒருவன், அப்படியே பச்சையாகத் தின்னத் தொடங்கினான். உடனே இரண்டா மவன் அவனை நோக்கி "நீ ஒரு நாகரீகமற்றவன்! காட்டு மிராண்டி!" என்றான்.

முதலாமவன் மிகக் கோபமடைந்தாலும் எதுவும் பதில் கூறவில்லை.

கடைசியில் தங்களைச் சுற்றிலும் அவர்கள் ஆராய்ந்து பார்த்த போது தாங்கள் மிகவும் ஏழைகளாயிருப்பதையும், தங்கள் கை

களைத் தவிர தங்களுக்கு வேறு உதவியில்லாமலிருப்பதையும் கண்டனர். இரண்டாமவன் தன் அலங்கோல நிலையிலிருந்து கொஞ்சம் அழகுபடுத்திக்கொள்ள விரும்பினான். கடற்கரையோரத்தில் சிதறியிருந்த வர்ணப்பட்சிகளின் இறகுகளைப் பொறுக்கி, அவைகளைத் தன் தலையின்மேல் சுற்றிவைத்துக் கட்டிக்கொண்டான். தான் மிகவும் அழகுள்ளவனாக மாறிவிட்டதாக எண்ணிக் கொண்டான்.

"நீ ஒரு முட்டாள் !" என்று முதலாமவன் உரக்கக் கத்தி "உன் மூஞ்சியைப் பார் !! . . . . . . நீ ஒரு பெரிய முட்டள்தான் !!!" என்று சொன்னான்.

"ஒரு காட்டுமிராண்டி என்னை முட்டாள் என்று கூப்பிட வேண்டியதில்லை !" என்று கோபமாக மற்றவன் இறைந்தான்.

"ஒரு முட்டாள் என்னைக் காட்டுமிராண்டி என்று சொல்ல வேண்டியதில்லை" என்று முதலாமவன் தன் கோபத்தை வெளிக்காட்டி உறுமினான்.

ஒவ்வொருவனும் மற்றவன் கட்டத்தொடங்கிய வீட்டினிடம் சென்று, அவைகளை உருக்குலையச் செய்தனர்.

காற்று பலமாக அடிக்கவும், அவர்கள்மீது மழை பொழியவும் இராக்காலத்தில் அத்தீவுமிக்க குளிராகவும் இருந்ததால், அவர்கள் மிகவும் மனவருத்தமடைந்தனர்.

கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் கோபம் தணியலாயிற்று.

கடைசியில் மறுபடியும் வீடுகட்ட ஒருவன் தொடங்கினான். மற்றவன் அதைப்பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். தனியாக மரக்கட்டைகளைத் தூக்குவது மிகவும் சிரமமாயிருந்தது முதலாமவனுக்கு.

உடனே அவன் மற்றவனைப்பார்த்து "நீ எனக்கு உதவ வா ! . . . . . உன் வீட்டைக் கட்டுவதற்கு நான் உனக்கு உதவுகிறேன்" என்றான்.

அவர்கள் இருவருமாகச் சேர்ந்து வேலை செய்யவாரம் பித்தனர். வேலை சுலபமாக இருந்தது. வெகு சீக்கிரத்தி லேயே அவர்கள் தங்களுக்கென தனித்தனியாக முன்பிருந்த தைவிட நல்ல வீடுகளைக் கட்டிக்கொண்டனர்.

பிறகு ஒருவன் சொன்னான்: "நாம் எப்போதும் ஒருவருக் கொருவர் சகாயம் செய்யத் தயாராயிருக்கவேண்டும். இந்த முறையினால் இந்தத் தீவிலும்கூட நம்முடைய வாழ்க்கை நன்றாகவே இருக்கும். நீ உன்னுடைய மீன் ஆகாரத்தை எந்த முறையிலும் சாப்பிட்டுக்கொள்ளலாம். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை."

மற்றவனும் அதை ஒப்புக்கொண்டான். "ரொம்பவும் நல்லது. நீ உடுத்துக்கொள்ளும் உடையைப்பற்றியும் எனக்குக் கவலையில்லை. உன் ஆடையினால், உன்னை ஒரு முட்டாளென்று நான் நினைக்கமாட்டேன். நாமிருவரும் சிநேகமாக இருக்க வேண்டுமானால், ஒருவர் மற்றொருவரின் வழிகளை ஒப்புக் கொள்ளவேண்டும்" என்று பதில் சொன்னான்.

மேற்குறிப்பிட்ட இருவரும் நீங்களும் நானும்தான். அந்தத் தீவும் இந்த உருண்டையான உலகம்தான். மேலும் நம்மில் அநேகர் உண்பதற்குப் போதி உணவில்லாமலும், உடுப்ப தற்கு நல்ல உடைகளில்லாமலும், ஏழைகளாயிருக்கிறார்கள். நம்மிலிருந்து வேறுபட்டவர்களைப் பார்த்து நாம் பயங்கொள் கிறோம். அதன் விளைவாக, இருவரும் நம் பொருளை, மற்றவர்களை அழிக்கும் வல்லமையுள்ள வெடிகுண்டுகள்மீது வாரி இறைத்து விடுகிறோம்.

நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் 'வீடு'கள் கட்டிக் கொள்வதில் உதவியாயிருந்தோமானால், உருண்டை வடிவ மான இந்த தீபகற்பத்தில்—அதாவது இவ்வுலகத்தில்—நம் முடைய வாழ்க்கை மிகவும் நன்றாயிருக்கும். நம்மிடமுள்ள மிகக் குறைந்த செல்வத்தையும், பிறரை அழிப்பதற்காக நாம் செலவிடவேண்டியதில்லை.

பாகம் 4

விஷயங்களும் தஸ்தாவேஜுகளும்

முன்னுரை

எப்படிச் சொல்வது :—

ஐக்கிய நாடுகள் (ஸ்தாபனம்) உலகில் அமைதி ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடுகிறது.— [பாடுபடுகின்றன என்று பன்மையில் சொல்லக்கூடாது].

சாஸனமும் அதை ஸ்தாபனம் என்றே குறிப்பிடுகிறது.

அங்கத்தின நாடு என்று நாம் குறிப்பிடும்போதெல்லாம் ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டையே குறிப்பிடுகிறோம்.

அத்தியாயம் 15

எந்த நாடுகள் அங்கத்தின நாடுகள்

ஐக்கிய நாடுகளில் அங்கத்தினராய் இருந்த நாடுகள் இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் எதிராக போரில் ஈடுபட்டிருந்த ஐம்பத்தோறு நாடுகளாகும். அவைகளெல்லாம் ஐ.நா. சாஸனத்தில் கையெழுத்திட்டன. அவைகளின் அரசாங்கங்கள் ஐ.நா. சாஸனத்தை அதிகார பூர்வமாய் ஒப்புக் கொண்டதும் அவைகள் அங்கத்தின நாடுகளாயின. அவைகளின் பெயர்கள் :—

அர்ஜண்டைன	எல் ஸால்வடார்
ஆஸ்திரேலியா	எத்தியோப்பியா
பெல்ஜியம்	பிரான்ஸ்
பொலிவியா	கிரீஸ்
பிரேஸில்	கௌதேமாலா
பைலோ ரஷ்யா (வெள்ளை ரஷ்யா)	ஹைதி
	ஹாண்டுரஸ்
கானடா	இந்தியா
சிலி	ஈரான்
சீனு	ஈராக்
கொலம்பியா	லெபனன்
கோஸ்தாரிகா	லைபீரியா
கூபா	லக்ஸம்பர்க்
செக்கோஸ்லேவேகியா	மெக்ஸிகோ
டென்மார்க்	நெதர்லாந்து
டொமினியன் குடியரசு	நியூ ஸிலாந்து
ஈக்வடார்	நிராகுவா
எகிப்து	நார்வே

பனுமா
பாராகுவே
பெரு
பிலிப்பைன் காமன்வெல்த்
போலந்து
சௌடி அரேபியா
சிரியா
துருக்கி
யுக்ரேன்
நெதர்லாந்து
நியூஸீலாந்து
நிகராகுவா
நார்வே
பாகிஸ்தான்

தென்னாப்பிரிக்க ஐக்கிய நாடுகள்.
சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கிய குடியரசு.
ஐக்கிய சாம்ராஜ்யம் (இங்கிலாந்து)
ஐக்கிய தேசங்கள் (அமெரிக்கா)
உருகுவே
உவனிசூலா
யுகோஸ்லேவியா.

இவைகளைத் தவிர வேறு ஒரு நாடு ஐ. நா.வில் சேரவேண்டுமென்றால், அதன் அரசாங்கம், ஸ்தாபனத்தின் தலைமைக் காரியதரிசிக்கு பின் வருமாறு எழுத வேண்டும். சாஸனத்தில் கையெழுத்திடும்போது எல்லா நாடுகளும் செய்யும் பிரமாணங்களைத் தானும் செய்வதாகவும், சாஸனத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு காரியத்தையும் மற்ற எல்லா அங்கத்தின நாடுகளும் செய்வதேபோல தானும் செய்ய விரும்புவதாகவும் எழுத வேண்டும்.

இது ஒரு முக்கியமான விஷயம். சாஸனத்தில் கையெழுத்திடும் எல்லா நாடுகளும், முதல் பகுதியில் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பாடு படுவதாகவும், இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ள விதிகளுக்குக் கீழ்ப்படிவதாகவும் ஒப்புக்கொள்ள வேண்டும். தன்னுடைய சச்சரவுகளையெல்லாம் சமாதான வழிகளிலேயே தீர்த்துக்கொள்ளுமென்றும், மற்றவர்களிடமிருந்து எதைப் பறிக்கவும் போரை மேற்கொள்வதில்லை என்றும் பிரமாணம் செய்ய வேண்டும். பாதுகாப்புக் கௌன்ஸிலின் உதவிக்காக ஒரு சேனையைத் தயாராய் வைத்துக்கொண்டிருப்பதாக ஒவ்வொரு நாடும் பிரமாணம் செய்கின்றன. மேலும் பாதுகாப்புக் கௌன்ஸில் ஒரு நாட்டிற்கெதிராக எடுக்கும் நடவடிக்கைகளில் உதவி செய்வதாகவும் வாக்களிக்க வேண்டும். உதாரணமாக, ஆக்கிரமிப்பைக் கைக்கொண்டுள்ள நாடுகளுக்கு எப்பொருளையும் விற்பதில்லை என்றும், அந்த

நாட்டுடன் வியாபார விஷயங்களில் தொடர்பு வைத்துக்கொள்ளும் நாடுகளைத் தங்கள் ராணுவத்தின் உதவியால் தடுப்பதாகவும் உறுதி கூற வேண்டும். தான் மற்ற நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளின் பிரதிகளை, அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் சம்மதிக்கவேண்டும். அலுவலகம் அவைகளை அச்சிட்டு எல்லோருக்கும் அனுப்பும். தான் எவ்வளவு பொருளை ஸ்தாபனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று பொதுச் சபை முடிவு செய்கிறதோ, அப்பொருளைக் கொடுப்பதாக வாக்குத் தத்தமும் செய்ய வேண்டும். எல்லோரின் வாழ்க்கையும் சுலபமாகவும் இனிமையாகவும் நடைபெற பொருளாதார சமூக சபை செய்யும் வேலைகளில் அதற்கு ஒத்துழைப்பதாகவும் பிரமாணம் செய்யவேண்டும்—எவரையும் அவருடைய ஜாதி, மதத்திற்காக கொடுமையாக நடத்துவதில்லை என்று உறுதி கூற வேண்டும். (பகுதி ஒன்று, பாரா மூன்று).

ஒரு நாடு ஐ.நா.வில் அங்கத்தினராவதற்கு முன், பாதுகாப்புக் கௌன்ஸிலில் உள்ள அங்கத்தினர்களில் ஐந்து வல்லரசுகள் உட்பட ஏழு அங்கத்தினர்களாவது அந்த நாட்டை "சமாதானம் விரும்பும் நாடு" என்று ஓட்டு செய்ய வேண்டும். மேலும் பொதுச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களுடைய சம்மதத்தையும் அந்த நாடு பெற வேண்டும். அதன் பிறகுதான் அது அங்கத்தின நாடாக கருதப்படும்.

ஒரு நாட்டின் கோரிக்கையைப் பாதுகாப்புக் கௌன்ஸிலோ பொதுச் சபையோ மறுத்து அதை அங்கத்தினராக ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டால், சில காலம் பொறுத்திருந்த பின்பு மீண்டும் தன் கோரிக்கையை அந்நாடு சமர்ப்பிக்கலாம். எவ்வளவு முறைகள் தான் அது தன் கோரிக்கையைச் சமர்ப்பிக்கலாம் என்பதற்கு வரையறை கிடையாது.

இதில் சேரக் கூடிய சில நாடுகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சில எதிரி நாடுகளாயிருந்தன.

மத்தியஸ்தம் வகித்தவை : இந்த உலகிலேயே ஆறு நாடுகள்தான் சண்டையில் சேராமலிருந்தன. அவை :—

ஆப்கானிஸ்தானம்	ஸ்பெயின்
அயர் (அயர்லாந்து)	ஸ்விடன்
போர்ச்சுக்கல்	ஸ்விட்சர்லாந்து.

எதிரி நாடுகள் :—இவ் வொன்பது நாடுகளும் ஹிட்லருக்காகப் போர் புரியும் துரதிருஷ்டத்தில் சிக்கிக் கொண்டன.

ஆஸ்திரியா	ஜெர்மனி	ஜப்பான்
பல்கேரியா	ஹங்கேரி	ருமேனியா
பின்லாந்து	இத்தாலி	சயாம் (தாய்லந்து)

இந்த எதிரி நாடுகளில் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள், அதன் பிறகு ஐ.நா.வில் சேர அனுமதிக்கும்படி கேட்கலாம்.

குடியேற்ற நாடுகளும், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளாத மற்ற நாடுகளும் ஐக்கிய நாடுகளில் சேர முடியாது. ஆனால் அல்பேனியா, டிரான்ஸ் ஜார்டன், ஐஸ்லாந்து, கொரியா (Chosen) மங்கோலியா போன்ற சுதந்திரத்தை இழந்த நாடுகள், மீண்டும் சுதந்திரம் அடைந்திருந்தால், அல்லது கூடிய சீக்கிரத்தில் பெறுமானால், அவைகளும் ஐ.நா.வில் சேர்ந்து கொள்ளலாம். சுதந்திரம் பெறும் ஒரு நாடு, (அதாவது தானே அரசாட்சி செய்து கொள்ளும் உரிமையைப் பெறும் ஒரு நாடு) ஐ.நா.வில் சேர்ந்து கொள்ள விரும்பினால், தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்கலாம்.

தளபதி பிராங்கோ சர்வாதிகாரியாய் இருக்கும் வரையிலும், ஸ்பெயின் நாட்டை ஐக்கிய நாடுகளில் சேரும்படி விடக்கூடாது என்று பொதுச் சபை ஒரு தீர்மானத்தைச் செய்திருக்கிறது. [8-2-1946].

ஆப்கானிஸ்தான், ஐஸ்லாந்து, ஸ்விடன் ஆகிய மூன்று நாடுகளும் முதலில் ஐ.நா.வில் சேர்ந்தன. சயாமும் அவை

களைப் பின் தொடர்ந்தது. அந்த நாடுகள் பாதுகாப்புக்கௌன்ஸிலாலும், பொதுச் சபையாலும் 1946-ம் வருஷம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் அங்கிகரிக்கப்பட்டன.

ஒரு நாடு ராஜிநாமா செய்ய விரும்பினால் :

அங்கத்தின ஸ்தானத்தை வாபஸ் பெறுவதைப் பற்றி சாஸனத்தில் எதுவும் சொல்லப்படவில்லை.

சர்வதேச சங்கத்தின் திட்டங்களில், தான் விரும்பியபோது வெளியேறும் உரிமை ஒவ்வொரு அங்கத்தின நாட்டிற்கும் அளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விலகுவதற்குத் தகுந்த காரணங்களும் வேண்டியதில்லை. இதனால் ஒரு நாடு மற்றொரு நாட்டினிடம் தவறாக நடந்து கொண்டதை—குற்றத்தை —வெளிப்படுத்தியதும், அந்த நாடு உடனே அச் சங்கத்திலிருந்து ராஜிநாமா செய்ய முடிந்தது.

ஜெர்மனி உலகத்தை ஜெயிக்க விரும்பியபோது, அது செய்த முதல் காரியம், சங்கத்திலிருந்து விலகியதுதான்.

ஐக்கிய நாடுகளிலிருந்து விலகுவதால் ஒரு நாட்டிற்கு எவ்வித நலன்களும் ஏற்பட்டுவிடாது. ஏனென்றால், அங்கத்தின நாடுகள்மீது ஸ்தாபனத்திற்கு எத்தனை அதிகாரமுண்டோ, அத்தனை அதிகாரம் அங்கத்தினரல்லாத நாடுகள் மீதும் ஸ்தாபனத்திற்கு உண்டு. ஒரு நாடு தனனுடைய அங்கத்தின பதவியை ராஜிநாமா செய்துவிட்டிருந்தாலும், அந்த நாடு போர் செய்வதற்கான முயற்சிகளில் இறங்கும்போது, சண்டைக் கப்பல்களையும், வெடி குண்டு விமானங்களையும் அந்நாட்டிற்கு எதிராகப் பாதுகாப்புக் கௌன்ஸில் அனுப்பமுடியும்.

எனினும், எந்த நாடும் தான் விரும்பினால் தன் அங்கத்தின பதவியை வாபஸ் பெறலாம். போர் ஏற்படுவதைத் தடுக்காமலிருந்தாலும், தவறான வழிகளில் அடாத செய்கைகளை ஸ்தாபனம் செய்தாலும், பல நாடுகள் அதிலிருந்து தங்கள் அங்கத்தின பதவிகளை ராஜிநாமா செய்யலாம்.

சில சமயங்களில் ஒரு நாட்டை வெளியேற்றவும் முடியும். போருக்கான ஆயத்தங்களைச் செய்யும் அல்லது போரில் ஈடுபடும், ஒரு நாட்டின்மீது பாதுகாப்புக் கௌன்ஸில் நடவடிக்கை எடுக்கும்போது, கௌன்ஸிலும் பொதுச் சபையும் அந்த நாட்டை ஸ்தாபனத்திலிருந்து வெளியேற்றுவதற்காக ஓட்டுச் செய்யும். அப்படி. ஏற்பட்டால், அந்த நாடு கொஞ்ச காலத்திற்கு ஸ்தாபனத்தைவிட்டு வெளியேற்றப்படும்.

போர் செய்வதற்கான அறிகுறிகளைக் காட்டுவதை அந்த நாடு நிறுத்தி விட்டால், மீண்டும், பாதுகாப்புக் கௌன்ஸிலில் கிடைக்கும் ஓட்டுகளின் மூலம், அது அங்கத்தின நாடாகலாம்.

ஆனால் ஐ.நா.வின் நோக்கங்களுக்கு எதிராக ஒரு நாடு தன் காரியங்களைச் செய்துகொண்டு போனால், பாதுகாப்புக கௌன்ஸிலும் பொதுச் சபையும் சேர்ந்து அந்த நாட்டை வெளியில் தள்ளிவிடலாம்.

அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அந்த நாடு தன் கொள்கைகளை மாற்றிக்கொண்டு மீண்டும் ஸ்தாபனத்தில் சேர விரும்பினால், புதிதாக ஒரு நாடு சேர வேண்டிய விதத்தையே அது கையாள வேண்டும்.

அத்தியாயம் 16

விசேஷ பணிகளுக்கு விசேஷ ஏஜன்ஸிகள்

'பொருளாதார சமூக சபை' பற்றிய அத்தியாயத்தில் [பாகம் 2 அத்தியாயம் 5] விசேஷ ஏஜன்ஸிகள் என்றால் என்ன, அவைகளின் வேலைகளென்ன, ஐக்கிய நாடுகளுடன் அவைகள் எப்படித் தொடர்பு கொண்டுள்ளன என்பனபற்றிச் சொல்லப்பட்டது.

இந்த அத்தியாயத்தில் அவ் விசேஷ ஏஜென்ஸிகளைப் பற்றி விரிவாகக் கூறப்படுகிறது. மற்றும் பல ஏஜன்ஸிகளுக்கும் திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இன்னும் பலவற்றைப்பற்றி பேசிய வண்ணம் இருக்கிறார்கள், மக்கள்.

உணவு விவசாய ஸ்தாபனம் [F.A.O.] ஐக்கிய நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட விசேஷ ஏஜன்ஸிகளில் முதலாவது உணவு விவசாய ஸ்தாபனம். நம்முடைய அடிப்படைக் கொள்கை உணவுப் பிரச்னையல்லவா ? அதனாலேயே முதலாவதாக அவ் வேஜன்ஸி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொருவருக்கும் உண்பதற்குப் போதிய உணவைத் தரும் வழியை நாம் ஏற்படுத்தா விட்டால், நாம் வேறு எதைத்தான் செய்ய முடியும் ? செய்து தான் என்ன பிரயோசனம் ?

1943-ம் வருஷம் மே மாதத்தில் வெர்ஜீனியாவிலுள்ள ஹாட் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் நாற்பத்திநான்கு தேசப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி உணவு விவசாய ஸ்தாபனத்திற்கான திட்டங்களை வகுத்தார்கள். இந்தக் கூட்டத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அவர்கள் இந்த ஸ்தானத்திற்கான சட்ட திட்டங்களைச் செய்தார்கள். அந்தப் பத்திரம் ஐக்கிய நாடுகளின்

சாஸனத்தைப்போல பெரியதாயிருந்தது. வெகு சீக்கிரத்திலேயே நாற்பத்திரண்டு நாடுகள் அதை ஒப்புக்கொண்டன. அமெரிக்காவும் 1945-ல் ஆகஸ்ட், நான்காம் தேதி அதை ஒப்புக்கொண்டது. அடுத்த வருஷத்தில், ஐக்கிய நாடுகளில் இன்னும் அங்கத்தினர்களாக சேராமலிருந்த நாடுகளையும் (இத்தாலி, ஹங்கேரி உட்பட பல நாடுகளை) அங்கத்தின நாடுகளாக சேர்த்துக்கொண்டது.

மக்களுக்குப் போதிய உணவு அகப்படாமலிருந்ததாலேயே உணவு விவசாய ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது, அமெரிக்க ராணுவத்திலிருந்து பல இளைஞர்களை—ஆண் பெண் உட்பட—வெளி யேற்றும்படி நேர்ந்தது. ஏனென்றால் அவர்கள் அனைவரும் போஷணைக் குறைவினால் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தார்கள். உலகிலேயே மிக்க செல்வம் படைத்த நாடென்று சொல்லப்படும் நம் அமெரிக்க தேசத்திலேயே இம்மாதிரி நடந்ததென்றால், ஏழ்மைதாண்டவமாடும் மற்ற நாடுகளில் உள்ள மக்கள் எவ்வளவு கோரமாகப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

உணவு விவசாய ஸ்தாபனம் மூன்று முக்கிய அலுவல்களைக் கவனிக்கும். விவசாயப் பண்ணை, மீன் பிடித்தல், காட்டுத் தொழில், நிலங்களை நல்ல நிலைமையில் வைத்து பூமியைப் பண்படுத்தவும், இம்மாதிரி இயற்கை வளங்களை மேம்படுத்தவும் அது வேலை செய்கிறது. நாடுகளிடையே, கோதுமை, நெல், மரம், காகிதம், பருத்தி, மாமிசம் மற்றும் இதர பண்ணைப் பொருள்களிலும் சர்வதேச வர்த்தக உறவுகள் வளர்வதற்காக எல்லா நாடுகளும் ஒத்துழைப்பதற்காகச் சட்டங்களைச் செய்ய அது முயலுகிறது. அதிகமான விளைச்சலைப் பெறுவதற்கான சுலபமான முறைகளைக் கண்டு பிடித்து, அவைகளை உலகிலுள்ள எல்லா விவசாயிகளுக்கும் போதிக்கிறது. மக்கள் உணவுப் பொருள்களை தகுந்த விலைக்கு விற்கவும், நகரங்களில் வாழும் ஏழை ஜனங்கள் அதிக உணவு பெறும்படி உதவி

யளிக்கவும், ஏழை விவசாயிகள் தங்களிடமுள்ள உணவுத் தானியங்களுக்குத் தகுந்த விலையைப் பெறவும், மக்களை ஒன்று படுத்துவதற்காக அது உதவுகிறது.

உணவு விவசாய ஸ்தாபனம் கையாளும் முறைகள் மிகச் சுலபமானவை. அதில் சேரும் நாடுகள், அதன் செலவுகளை ஏற்றுக்கொள்கின்றன. [வருஷத்திற்கு ஐந்து மில்லியன் டாலர்கள்]. தன்னிடம் மற்ற அரசாங்கங்கள் கேட்கும் கேள்வி களை ஆராய்ந்து, அங்கத்தின நாடுகளுக்கு தன் பதில்களை வழங்குகிறது. அவைகள் என்ன செய்ய வேண்டும் என்பதை யும் அதுவே சொல்லுகிறது. தான் சொல்லியவைகளை அந்த தேசங்கள் நிறைவேற்றுகின்றனவா என்று அவைகளிடமிருந்து விவரங்களைச் சேகரிக்கிறது. நாடுகள் மீது அதற்கு ஒரு அதி கார்முடிம் கிடையாது.

விசேஷ காரியங்களுக்காக, சர்வதேச மகாநாடுகளையும் அது ஏற்பாடு செய்யலாம். 1946 ஜூன் மாதத்தில் ஒரு முக்கிய மகாநாட்டை அது கூட்டியது. பல நாடுகளின் பிரதிநிதிகள் அதில் பங்கெடுத்துக்கொண்டனர். ஐரோப்பா, ஆசியா நாடு களில் போருக்குப் பின் ஏற்பட்டுள்ள 'பஞ்ச'த்துடன் எவ் வகைகளில் போராடுவது என்ற விஷயத்தை அவர்கள் விவாதித்தனர்.

உணவு விவசாய ஸ்தாபனத்தின் முதல் கூட்டத்திற்கு இருபத்தேழு அதிகாரிகளை (நான்கு காங்கிரஸ் அங்கத்தினர்கள் உட்பட)யும், பதினொரு உதவியாளர்களையும் அமெரிக்கா அனுப் பியது. இவ் விஷயத்தை நீங்கள் அறிந்து கொண்டால் விசேஷ ஏஜன்ஸிகளைப் பற்றிய முக்கிய விவரங்களை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் அதிகார பூர்வமான ஒரே ஒரு பிரதிநிதியும் ஒரே ஒரு ஓட்டும்தான் உண்டு. ஆனல் ஒவ்வொரு பிரதிநிதியும் தனக்கு வேண்டிய உதவியாளர்களை அழைத்துக்கொண்டு வரலாம். அதனல் இந்த ஸ்தாபனத் தின் கூட்டங்கள் மிகப் பெரியனவாகவும், சிற்சில சமயங்களில் இரைச்சலும் உணர்ச்சியும் நிறைந்ததாகவும் இருக்கும்.

உணவு விவசாய ஸ்தாபனத்தில் உள்ள எல்லா அங்கத்தின நாடுகளின் பிரதிநிதிகளும் சேர்ந்த மகாநாடுகள் ஒரு வருஷத்திற் கொருமுறை நடக்கிறது. தவிரவும், அந்த ஸ்தாபனத்தின் பதி னைந்து பேர்களைக் கொண்ட (ஒவ்வொருவரும் வெவ்வேறு நாடு களைச் சேர்ந்தவர்கள்) ஒரு தனிக்குழு, முக்கிய அலுவல்களைக் கவனிக்க அடிக்கடி கூடும். தலைமை டைரக்டரும், (முதலில் இப் பதவியில் நியமிக்கப்பட்டவர் ஸர் ஜான் ஆர்) அவர் மேற் பார்வை யில் உழைக்கும் ஊழியர்களும் வருஷ முழுவதும் ஸ்தாப னத்தின் இக் காரியங்களிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் களின் காரியாலயம் வாஷிங்டன், டி.ஸி.யில் இருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் (UNESCO).

செய்திகளைக் கட்டுப்பாடு செய்யும் வழக்கத்தை ஒழிக்கவும், ஒரு நாட்டு மக்களைப் பற்றி மற்ற நாட்டு மக்கள் அறிந்து கொள்ளவும் இந்த ஸ்தாபனம் பாடுபடுகிறது. மற்ற நாட்டு மக்கள் உங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தால், அவர்கள் உங்களுடன் சுலபத்தில் சண்டைக்கு வரமாட்டார்கள். இப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில், தற்போது மக்க ளிடையே நிலவியுள்ள அவநம்பிக்கையே, இவ்வுலகத்தில் அமைதியேற்படா வண்ணம் செய்கிறது என்று சொல்லப்பட்டது. அறிவின் உதவியைக் கொண்டு இந்த அவநம்பிக்கையைப் போக்கி விடலாம்.

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம், கல்லூரிகளுக்கும், காட்சி சாலைகளுக்கும் உதவுகிறது. விஞ் ஞான அறிவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பயன்படுத்தவும் அது உதவுகிறது. ஒரு நாட்டில் பிரசுரமாகும் உபயோகமுள்ள புத்தகங்களைப் பற்றிய விவரங்களை மற்ற நாடுக ளுக்கும் அங்குள்ள அறிஞர்களுக்கும் அறிவிக்கிறது.

பல நாடுகளிலுள்ள பள்ளிக்கூடங்களை நடத்தும் எல்லோரையும் ஒன்று சேர்த்து, தங்கள் பள்ளிகள் நல்ல முறையில் நடப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஒருவரிடமிருந்து மற்றவர் அறிந்து கொள்ளும் வழிகளைச் செய்கிறது. மாணுக்கர்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கனுப்பவும் ஏற்பாடுகளைச் செய்கிறது.

பள்ளிப் புத்தகங்களில் மற்ற நாடுகளைப் பற்றியப் பொய்ப் பிரசுரங்களை அகற்றி. "போர் ஒரு உன்னதமான காரியம்" என்று கூறும் புத்தகங்களைத் தடை செய்து, அவைகளைச் சீர்திருத்தவும் இந்த ஸ்தாபனம் முயற்சி செய்ய வேண்டும் என்று சில அங்கத்தின நாடுகள் விரும்பின.

இவ்வுலகில் மில்லியன்கள் தொகையுள்ள மக்கள் எழுதவும் படிக்கவும் தெரியாமல் இருக்கிறார்கள். இந்த ஸ்தாபனம் அவர்களுக்கு கல்வி போதிக்க உதவும்.

உணவு விவசாய ஸ்தாபனத்தைப் போலவே, எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி இந்த ஸ்தாபனத்திலும் வருஷத்திற்கொருமுறை மகாநாடு நடத்துவர். அடிக்கடி கூடும் 18 பேர்கள் கொண்ட ஒரு "போர்டு"ம் உண்டு. [பதினெட்டு பேர்களும் பதினெட்டு நாடுகளைச் சேர்ந்தவர்கள்]. எல்லா நேரங்களிலும் வேலை செய்யும் ஒரு அலுவலகமும் பாரிஸ் நகரத்தில் இருக்கிறது. புகழ் பெற்ற விஞ்ஞானியும், எழுத்தாளருமான "ஜூலியன் ஹக்ஸ்லி" என்பவர் அதன் முதல் காரியதரிசியாவார். 1945-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் அதன் திட்டம் எழுதப்பட்டு, வெகு சீக்கிரத்திலேயே நாற்பத்தி நான்கு நாடுகளின் அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்டது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம். (I.L.O.)

1920-ம் வருஷத்திலிருந்து இந்த ஸ்தாபனம் தன் வேலைகளைச் செய்துகொண்டு வருகிறது. அது சர்வதேச சங்கத்துடன் சேர்த்தேசொல்லப்பட்டு வந்தது. அமெரிக்கா உட்பட ஐக்கிய

நாடுகளில் அங்கம் வகிக்கும் 39 நாடுகள் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் அங்கத்தினர்கள்.

அந்த ஸ்தாபனத்தின் அமைப்பு முறையே விசித்திரமானது. ஒவ்வொரு நாடும் அரசாங்கப் பிரதிநிதியாக ஒருவரையோ அல்லது இருவரையோவும், வேலைக்கமர்த்துவோர் அல்லது எஜமானர்கள் சார்பாக ஒருவரையும், தொழிற் சங்கங்கள் சார்பாக ஒருவரையும் அனுப்பும். சில மாதங்களுக்கொருமுறை, விசேஷ காரியங்களை விவாதிப்பதற்காக, விசேஷ கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும். அவை பெரிய கூட்டங்களாயிருக்கும்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், தொழிலாளருக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கவும், அவர்கள் வேலை செய்யும் நிலைமைகளை வசதியாகச் செய்யவும் பாடுபடுகிறது. தேக அசௌக்கியத்திற்குக் காரணமாயிருக்கும் வேலைகளில் சிறுவர்களை அமர்த்தக் கூடாதென்றும், வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அடிபட்ட அல்லது உடல் பாதிக்கப்பட்ட மனிதர்களுக்குத் தகுந்த வைத்திய உதவியளிக்கும் சட்டங்களை எல்லா நாடுகளும் செய்ய வேண்டுமென்றும் அது முயலுகிறது. மேலும் தனக்குக் கிடைக்கும் வருவாய் போதுமானதாயில்லாததாலோ, தனக்கு வேலை கிடைக்காததினாலோ, எவரும் பட்டினியால் வாடும்படி விடாமல் அரசாங்கங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் அது சொல்லுகிறது.

1946-ம் வருஷம் அக்டோபர் 2-ம் தேதியன்று ஒரு விசேஷ உடன்படிக்கையில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் கையெழுத்திட்டது. அதிலிருந்து ஐக்கிய நாடுகளின் ஒரு விசேஷ ஏஜன்ஸியாக அது ஆயிற்று.

நிதி, பாங்க், சர்வதேச வர்த்தக ஸ்தாபனம்—இம் மூன்று விசேஷ ஏஜன்ஸிகளும் ஒரு நாடு மற்ற நாடுகளுடன் வர்த்தக உறவு கொள்வதற்கு உதவியளிக்கின்றன. அவைகளுக்கு 1944-ம் வருஷம் ‘பிரட்டன் உட்ஸ்’ N. H. என்னுமிடத்தில் திட்டங்கள் போடப்பட்டன. நிதியும் பாங்கும் தங்கள் தலைமைக்

காரியாலயங்களை வாஷிங்டன் D.C.யில் வைத்துக்கொண்டு, அங்கே தங்கள் காரியங்களை 1945-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதியன்று ஆரம்பித்தன. நாற்பத்து மூன்று நாடுகள் வெகு சீக்கிரத்திலேயே நிதியில் அங்கத்தினராயின. பாங்கில் 38 நாடுகள் சேர்ந்துகொண்டன.

சர்வதேச நாணய நிதி—எட்டு மில்லியன் டாலர்களை வைத்துக் கொண்டிருக்கிறது. அப்பொருள் அதைச் சேர்ந்த நாடுகளால் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் தன்னுடைய பொருளாதார நிலைமையை நிலையாக வைத்துக் கொள்வதற்கு அந்த ஸ்தாபனம் உதவுகிறது. இன்றைக்கு ஒரு பிரிட்டிஷ் பவுன் எவ்வளவு டாலர்கள் அல்லது எவ்வளவு பிராங்குகள் மதிப்புடையதாயிருக்கிறதோ, ஆறு மாதத்திற்குப் பிறகும் அதே டாலர்கள் அல்லது பிராங்குகள் மதிப்புள்ளதாயிருக்க அது உதவி செய்கிறது. இந்த ஸ்திரத்தன்மை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாடு வாங்கும் பொருள்களுக்குக் கொடுக்க வேண்டிய பொருளை சுலபமாக செலுத்துவதற்கு வசதியாயிருக்கிறது. அதனால் அதிகமான பொருள்களை வாங்குவதற்குள்ள வழிகளை எளிதாக்குகிறது. அதனால் உலக வியாபாரம் பெருகுகிறது.

புனருத்தாரண அபிவிருத்தி பாங்க்கும் அதில் சேர்ந்துள்ள நாடுகளால் கொடுக்கப்பட்ட எட்டு மில்லியன் டாலர்களை வைத்திருக்கிறது. அதனுடைய முக்கியமான வேலை வியாபாரிகள் தங்கள் பொருள்களை வேறு நாட்டிலுள்ளவர்களுக்கு கடனுக்க் கொடுப்பதற்கும், வெளிநாட்டு வியாபார ஸ்தலங்களில் தங்கள் பொருளை முதலீடு செய்வதற்கும் உதவுவதாகும். பணம் படைத்த மக்கள் கூட்டத்தை நோக்கி, “நீங்கள் 20 மில்லியன் டாலர்களை ரெயில்வேக்கள் அமைப்பதற்காக யுகோஸ்லேவியாவிற்கு கடனுகக் கொடுங்கள். உங்கள் பொருள் வட்டியுடன் உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். நாங்கள் சொல்வது தவறினல், நீங்கள் இழந்த பொருளை நாங்கள் கொடுக்கிறோம். அதற்கு நாங்கள் ஜவாப்தாரி” என்று அது சொல்லும். சில

சமயங்களில் பொருளை விரும்பும் நாடுகளுக்கு தன்னிடமுள்ள பொருளையேகூடக் கடனாகக் கொடுக்கும்.

அது இரண்டு காரியங்களைச் செய்யும்.

ஒன்று : இரண்டாவது உலக யுத்தத்தில் அழிக்கப்பட்டுவிட்ட தொழிற்சாலைகளையும் மற்ற சாதனங்களையும் மீண்டும் நிறுவுவதற்கு உதவி செய்தல். **இரண்டு :** ரெயில் பாதைகள் அமைக்கவோ, சுரங்கங்கள் வெட்டவோ, செருப்புகள், துணிகள், மர சாமான்கள், மற்றும் உபயோகமுள்ள பொருள்களைச் செய்யும் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவோ விரும்பும் எல்லா நாடுகளுக்கும் உதவுதல். உதாரணமாக எல்லா நாடுகளிலும் நவீன இயந்திரங்களோ அல்லது அவைகளைச் செய்யும் தொழிற்சாலைகளோ கிடையாது. நவீன யந்திரங்கள் என்றால் **"காஸ் ஸ்டவ்"** (அதாவது சமையல் முதலிய காரியங்களை நெருப்பின் உதவியின்றி புகையின் உதவியினாலேயே செய்துகொள்ள உதவும் சாதனம்) **"ரிபரிஜிரேடர்"** (பொருள்களைக் குளிர்ச்சியாய் வைத்திருக்க உதவும் சாதனம்) போன்றவையாகும்.

சர்வதேச வர்த்தக ஸ்தாபனம் : ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகள் பொருள்களை வாங்குவதற்கான சட்டங்கள் கடுமையாயிருந்தால், அவைகளைத் திருத்துவதற்கும் மாற்றுவதற்கும் முயலுகிறது. சர்வதேச வியாபாரத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் பாதுகாப்பு வரிகள், தடைகள், ஏகபோக உரிமைகள், முறைகள், மற்ற வழிகள் இவைகளைச் சீர்திருத்தப்பாடுபடுகிறது.

சர்வ தேச ஆகாய விமான போக்கு வரத்து ஸ்தாபனம் I.C.A.O.

1945-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மாண்ட்ரீல் என்னுமிடத்தில் இந்த ஸ்தாபனம் கூடி, தன் வேலைகளைச் செய்யத் தொடங்கியது. கீழே கூறப்படும் விஷயங்களில் நாடுகள் ஒத்துழைப்பதற்காக அது பாடுபடுகிறது. யார் யாருடைய விமானங்கள் எந்தெந்த நகரங்களின் வழியாகச் செல்ல வேண்டும்,

எந்தெந்த விதமான சமிக்ஞைகள் உபயோகிக்கப்படவேண்டும், ஆகாயத்தில் பறப்பதற்கு எந்த பந்தோபஸ்து முறைகளைக் கைக்கொள்ள வேண்டும், விமான அதிகாரிகள் ஒரு இடத்தி லிருந்து மக்களை மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோக எவ்வ ளவு பொருள் வசூலிக்கலாம் என்பன போன்ற விஷயங்களில் அது தன் கவனத்தைச் செலுத்துகிறது. விமானங்களில் பிர யாணம் செய்வோரிடமிருந்தும், அதில் கொண்டு செல்லப்படும் பொருள்களுக்காகவும் எவ்வளவு கட்டணம் வசூல் செய்ய வேண்டும், என்பவைகளையும், தனிப்பட்ட முறையில் சொந்த மாக விமானம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கான சட்டங்களை யும் அதுவே ஏற்படுத்துகிறது. ஆகாயவிமான பந்தோபஸ்து சட்டங்கள் சரிவர அனுசரிக்கப்படுகின்றனவா என்றும் அது கண்காணிக்கிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O.)

பொருளாதார சமூக சபை, அறுபத்தேழு நாடுகளை (உலகி லுள்ள நாடுகளில் ஸ்பெயினைத் தவிர மற்ற நாடுகள் எல்லா வற்றையும்) 1946-ம் வருஷம் ஜூன் மாதம் ஒரு உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்படுத்துவதற்காக நியூயார்க்கில் நடைபெறும் மகாநாட்டிற்குத் தங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பும்படி அழைப்பு அனுப்பியது.

உலக சுகாதார ஸ்தாபனம், புது வைத்திய முறைகளைப பற்றியும், வியாதிகளைத்தீர்க்க நவீன மருந்து வகைகளை உப யோகிப்பது பற்றியும், ஆராய்ச்சி செய்கிறது. மேலும் அவைகளை அறிய விரும்பும் நாடுகளுக்கு அச் செய்திகள் சுலபத்தில் கிடைக்கும்படியாகவும் அது வழிசெய்கிறது. மருந்துகளைப் பற்றிப் பொய்ப் பிரசாரங்களை ரேடியோவில் செய்வதையும் அது தடுக்கிறது.

விஷக்கிருமிகளுக்கு எதிராக ஒரு போரை இந்த ஸ்தாபனம் ஆரம்பித்திருக்கிறது. வியாதிகள் பரவக் காரணமாயிருக்கும் விஷக்கிருமிகளை அழிப்பதற்கு எல்லா நாடுகளும் ஒன்று

சேர்ந்து உழைக்க வேண்டும். அதற்காக அந்த ஸ்தாபனம் முயலுகிறது. உதாரணமாக மலேரியா வியாதியினுல் உலகத்தி லுள்ள மக்களில் ஐந்தில் இரண்டு பங்கு மக்கள் ஏன் கஷ்டப் படுகிருர்கள் என்றும், அதனுடன் போரிட அவர்களுக்குப் போதிய விஞ்ஞான வசதிகள் ஏன் கிடைப்பதில்லை என்றும் அது அறிய முயலுகிறது.

தொத்து வியாதிகள் பரவுவதை உலக சுகாதார ஸ்தாபனம் தடுக்கிறது. தொத்து நோய் ஒரு நாட்டில் பரவிவிட்டால், இந்த ஸ்தாபனம் மற்ற நாடுகளுக்கு டாக்டர்களையும் மருந்து வகைகளையும் அனுப்பும்படி கோரிக்கைகளை அனுப்புகிறது.

சிறுவர்கள் ஒருவரோடொருவர் சிநேகமான முறையில் பழக வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்த அது பாடுபடுகிறது. ஏனென்ருல் சண்டை பிடித்துக்கொள்வதை விட, சிநேகபாவ மாக இருந்தால் அவர்கள் இன்னும் ஆரோக்கியமாக இருக்க முடியும் என்பதை அது விளக்குகிறது.

உணவு விவசாய ஸ்தாபனம், ஐ.நா. கல்வி, விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனங்களைப்போல இந்த உலக சுகாதார ஸ்தா பனமும், தன் அங்கத்தினர்களின் பிரதிநிதிகளை ஒன்றுக் கூட்டி ஒவ்வொரு வருஷமும் ஒரு மகாநாடு நடத்துகிறது. அதற்கென ஒரு தனி 'போர்டு'ம் 'டைரெக்டரும்' இருக்கின்றனர். டைரெக்டர் கீழ் வேலை செய்யும் அதிகாரிகளும் இருக்கிருர்கள்.

இந்த ஸ்தாபனம் மிக்க பலம் வாய்ந்தது. அதனுடைய சட்டதிட்டங்கள் எல்லா நாடுகளையும் கட்டுப்படுத்துவதாகும்.

ஐக்கிய நாடுகளின் நிவாரண புனரமைப்பு ஸ்தாபனம்: (U.N.R.R.A.)

இந்த ஸ்தாபனம் இரண்டாவது உலக யுத்தத்தின்போது அழிந்துபோன நகரங்களிலுள்ள மக்களுக்கு ஏராளமான உடை களையும் போதிய உணவுப் பொருள்களையும் மற்ற அத்தியா

வரியமான பண்டங்களையும் வழங்குகிறது. ஐக்கிய நாடுகள் சாஸனம் எழுதப்படுவதற்கு முன்பே அது தன் காரியங்களைச் செய்யத் தொடங்கிவிட்டது. நாற்பத்தேழு நாடுகள் அதில் அங்கத்தினராயின.

அது முதலில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டதால் ஐக்கிய நாடுகளின் விசேஷ ஏஜன்ஸியாக அது மாறவில்லை. ஆனால் பொதுச் சபை ஒரு விசேஷ குழுவை ஏற்படுத்தி, பொருளுதவி செய்யக்கூடிய நாடுகளிடமிருந்து பொருள் வசூல் செய்து இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுத்தது. மேலும் ஐக்கிய நாடுகளின் நிவாரண புனரமைப்பு ஸ்தாபனம் (U.N.R.R.A.) எப்படி வேலை செய்கிறது என்று கவனிக்கும் பொறுப்பை தலைமைக் காரிய தரிசியிடம் பொதுச் சபை விட்டுவிட்டது. 1947-ல் எல்லா அர சாங்கங்களும் அது மறைந்து போகும்படி நிராதரவாக விட்டு விட்டன.

சர்வதேச அகதிகள் ஸ்தாபனம் : (I.R.O.)

போர்களும், உள்நாட்டுச் சண்டைகளும், புரட்சிகளும், துன் பம் நிறைந்த இவ்வுலகத்தில் தங்கள் கொடுங்கோலாட்சியைச் செலுத்தி, இப்பிரமாண்டமான ஜனக் கூட்டத்தையே படும் நரகத்தில் ஆழ்த்தி விட்டன : அவைகளின் விளைவாக இன்று, பிரான்ஸில் ஸ்பானிய குடியரசுக் கட்சியினரும், ஜெர்மனி இத்தாலி தேசங்களில் போலந்து தேச அகதிகளும் (எஸ்தோனி யா, லாத்வியா, லித்துவேனியா தேசங்களிலிருந்து வந்த) பால்டிக் தொழிலாளர்களும், நாஜிகளால் வீடுகளையும் வர்த்த கத்தையும் இழந்த ஜெர்மனி ஆஸ்திரியா தேசங்களின் யூதர்க ளும், தங்கள் தாய் நாடுகளுக்குத் திரும்பிச் சென்றால் அர சியல் காரணங்களுக்காகச் சுடப்படுவோம் என்று பயப்படும் அகதிகளும்—இப்படிப்பட்ட நூறாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் தங்க வீடுகளின்றியும் வேறிடம் செல்ல அனுமதிச் சீட்டுகள் இன்றியும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழிகளு மின்றி கஷ்டப்படுபவர்களும் இருக் கிறார்கள்.

பிராஞ்சு, இங்கிலாந்து மற்றும் இதர தேசங்கள், இவ்வகதிகளைப் பற்றி யாதொரு கவலையும் எடுத்துக் கொள்ளாததால், பொருளாதார சமூக சபை சர்வதேச அகதிகள் ஸ்தாபனத்திற்கு ஒரு திட்டம் தயாரித்தது. அதற்குப் பல திருத்தங்களைச் செய்து பொதுச் சபை அங்கீகரித்துக்கொண்டது. அதன்படி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளும் சர்வதேச அகதிகள் ஸ்தாபனத்திலும் அங்கத்தினராயின.

நாடின்றி கஷ்டப்படும் மக்களுக்கு, சட்ட பூர்வமாகவும், அரசியல் அடிப்படையிலும், காவல் அளித்து, அவர்கள் வேறு நாடுகளுக்குச் செல்ல விசேஷ அனுமதி சீட்டுக்களையும் வழங்குகிறது. பொருள் சேகரித்து, அவ்வேழை மக்களுக்கு உடை, வீடு, கல்வி இவ்வசதிகள் அளிப்பதற்கு செலவிடுகிறது. பல்வேறு நாடுகளிலும் இம்மக்கள் நிலையாகத் தங்கி, தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் வழியைக் காணுவதற்கும், உபயோகமான வேலைகளில் அவர்கள் ஈடுபடவும் தக்க இடங்களுக்காக அது தேடுகிறது.

அத்தியாயம் 17

சர்வதேச ஒப்பந்தங்கள்

அட்லாண்டிக் சாஸனம்.

அமெரிக்க ஐக்கிய தேசங்களின் ஜனாதிபதியும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அதன் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலும் ஒன்றுகூடி, உலகத்தின் எதிர்காலம் சீராக அமைவதற்குத் தம் நாடுகள் அத்தியாவசியமெனக் கருதும் பொதுவான தத்துவங்களை வெளியிடுவது அவசிய மெனக் கருதுகிறார்கள்.

1. அவர்கள் நாடுகள் பிற நாடுகளைப் பிடிக்கவோ, அல்லது அந்த நாடுகளில் தங்கள் செல்வாக்கை விஸ்தரிக்கவோ வேறு எவ்வித உரிமைகளைப் பிடுங்கி கொள்ளவோ விரும்பவில்லை.

2. ஜன சமூகங்களால், தங்கள் சுய இச்சையின் பேரில் கோரப்படாத எவ்வித பிரதேச மாறுபாட்டையும் ஆதரிக்க பிரியப்படுவதில்லை.

3. எல்லா ஜன சமூகங்களும் தத்தம் விருப்பப்படி அரசாங் கத்தை அமைத்துக்கொள்வதையும் அதற்குள்ள உரிமையை யும், அவர்கள் கௌரவிக்கிறார்கள். மேலும் சுயாட்சியும் ஆதிபத்ய உரிமையும் பலாத்காரமாய் பறிக்கப்பட்ட நாடுகளுக்கு அவை மீண்டும் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று அவர்கள் ஆவ லுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

4. அவர்கள் ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் கடமைகளுக் குப் பங்கமில்லாமல், இப்போதுள்ள கட்டுப்பாடுகளை மீறாமல் பெரிய, சிறிய, ஜெயித்த, தோற்ற எல்லா நாடுகளும் சம உரிமைகளுடன் தங்களுக்குள் வர்த்தக உறவுகளைப் பெருக்கிக் கொள்ளவும், அவர்களின் பொருளாதா சுபிட்சத்திற்குத் தேவை

யான மூலப் பொருள்களை வாங்கவும் விற்கவும் உதவி செய்யவும் முயற்சிப்பார்கள்.

5. எல்லாருக்கும் சீரான தொழில் தரங்களை அளிக்கவும், பொருளாதார துறையில் எல்லா தேசங்களும் ஒன்றுபட்டு சமூக பாதுகாப்பும் பொருளாதார முன்னேற்றமும் அடைவதற்காக எல்லா தேசங்களிடையேயும் நல்லுறவு ஏற்பட உழைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

6. நாஜிகளின் அராஜகம் வேரோடு அழிக்கப்பட்ட பிறகு, எல்லா நாடுகளிலும் வாழும் மக்கள் தங்கள் சொந்த எல்லைகளுக்குள்ளே பயமின்றி வாழும் வழிகளையும், பயம், பசி இவைகளிலிருந்து விடுதலையடைந்து சௌக்கியமாக மக்கள் வாழ்வதற்காக ஒரு நிலையான உறுதியுள்ள சமாதானத்தை ஏற்படுத்தவும் அவர்கள் பிரியப்படுகிறார்கள்.

7. அத்தகைய ஒரு சமாதானம் நிலவினால், எவ்வித இடையூறுமின்றி பெரிய கடல்களையும், மகா சமுத்திரங்களையும் நிர்ப்பயமாகக் கடப்பது எல்லா மக்களுக்கும் சுலபமாகும்.

8. பிரத்தியட்ச காரணங்களுக்காகவோ ஆத்மார்த்திக காரணங்களுக்காகவோ, உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஆயுத பலம் உபயோகிப்பதை கைவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். தரை, கடல், ஆகாயப் படைகளைத் தொடர்ந்து வைத்து கொண்டுள்ள நாடுகள், அவைகளின் எல்லைகளுக்கு வெளியில் உள்ள நாடுகளை பயமுறுத்தினாலோ, அல்லது பயமுறுத்தலாம் என்ற காரணத்தினாலோ, ஒரு நிலையான எதிர்கால சமாதானத்தை நிறுவ முடியாது இருக்கிறது. ஆகையால், பொது நல வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் பரந்தலும் நிரந்தரமானதுமான திட்டமொன்று ஏற்படும் வரையில், மேற் குறிப்பிட்ட நாடுகளில் ' ஆயுத பரிகரணம் ' செய்வது முக்கியமானது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

அதேபோல, ஆயுத உற்பத்திச் சுமையிலிருந்து விடுபடுவதற்கு மற்ற சமாதானம் விரும்பும் நாடுகள் கூறுகின்ற வழிகளை ஆதரிப்பதோடு அனுபவ சாத்தியமான எல்லா முறைகளிலும் அவர்கள் உதவி செய்வார்கள்.

பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்,
வின்ஸ்டன் எஸ். சர்ச்சில்.

1941 ஆகஸ்டு, 14-ம் தேதி.

ஐக்கிய நாடுகளின் பிரகடனம்

அமெரிக்க ஐக்கிய தேசங்களும், கிரேட் பிரிட்டனும், வடக்கு அயர்லாந்தும் சேர்ந்த 'யுனைடெட் கிங்டெம்'ம், சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கிய குடியரசும், சீனாவும், ஆஸ்திரேலியாவும், பெல்ஜியமும், கானடாவும், டொமினியன் குடியரசும், எல் ஸால்வாடாராவும், கிரேக்க நாடும், கௌதே மாலாவும், ஹைதியும், ஹாண்டுராஸும், இந்தியாவும், லக்ஸம்பர்க்கும், நெதர்லாந்தும், நியூஜிலாந்தும், நிகரகுவாவும், நார்வேயும், பனமாவும், போலந்தும், தென் ஆப்பிரிக்காவும், யுகோஸ்லேவியாவும் சேர்ந்து வெளியிட்ட பிரகடனம்:

இதில் கையெழுத்திட்டுள்ள அரசாங்கங்கள், அமெரிக்க ஐனாதிபதியும் கிரேட் பிரிட்டனும் வடக்கு அயர்லாந்தும் சேர்ந்த "யுனைடெட் கிங்டெம்" எனப்படும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியும் சேர்ந்து 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி வெளியிட்டுள்ள அட்லாண்டிக் சாஸனம் என்ற கூட்டுப் பிரகடனத்தில் சொல்லியுள்ள அடிப்படைத் தத்துவங்களையும், செய்யவேண்டிய கடமைகளையும் ஆராய்ந்து, ஆத்மா தனி நபர் விடுதலை, நாட்டு சுதந்திரம், மத சுதந்திரம் இவைகளைக் காப்பாற்றவும், மனித உரிமைகளை நிலைபெறச் செய்யவும், எல்லோரிடமும் நியாயம் நிலைபெறவும், எதிரிகள்மீது அடையும் ஒரு முழுவெற்றியே முக்கியமென்று கருதுகிறார்கள். மேலும் இவ்வுலகத்தை அழிக்க முற்படும் அநாகரீகமானதும் கொடுமையானதுமான ஆயுத பலத்திலிருந்து விடுதலையளிக்கும் வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆதலால் கீழ்கண்ட விஷயங்களை அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

1. மூவர் உடன்படிக்கைக் கெதிராக நடக்கும் நாடுகள் மீதோ, அல்லது அவைகளுடன் சேரும் நாடுகள்மீதோ தங்கள்

சகல சக்திகளையும் பொருளாதார பலத்தையும் ஈடுபடுத்து வதாய் ஒவ்வொரு அரசாங்கமும் உறுதியளிக்கிறது.

2. ஒவ்வொரு அரசாங்கமும் இதில் கையெழுத்து செய் துள்ள மற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பதோடு, எதிரி நாடு களுடன் எவ்வித உடன்படிக்கையும் சமாதானமும் தனிப் பட்ட முறையில் செய்துகொள்வதில்லை என்று பிரமாணம் செய்கின்றது.

ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து அதில் வெற்றி பெறுவதற்காகச் செய்யும் முயற்சியில் உதவும் அல்லது உதவ விரும்பும் மற்ற நாடுகளும் மேற்சொல்லிய பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

வாஷிங்டனில் கையெழுத்திடப்பட்டது.

தேதி :—1—1—1942.

ஐக்கிய நாடுகளின் சாஸனம்

பூர்வ பீடிகை

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து முடிவு செய்து கொண்டவை :

நம் வாழ்நாளில் இருமுறை மனித சமூகத்திற்குச் சொல்ல முடியாத வருத்தம் விளைத்த யுத்தக் கொடுமையினின்று இனி வரும் தலைமுறை மக்களைத் தப்புவிப்போம்.

மனிதன் மேன்மையும் மதிப்பும் வாய்ந்தவன். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் உண்டு. பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் சம உரிமை உண்டு. இந்த மனித உரிமைபற்றிய அடிப்படைக் கொள்கைகள் குறித்த எங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், சர்வ தேச சட்டங்களைப் பாதுகாப்பதற்கும், நியாய உணர்ச்சியும் மரியாதையும் ஏற்படும் நிலைமையை அமைப்போம்.

இந்த விரிவான சுதந்திர நிலையில் சமூக முன்னேற்றம் உண்டாகவும், வாழ்க்கைத் துறையில் சிறந்த வசதிகள் ஏற்படவும் வேண்டுவன செய்வோம்.

இவைகள் கைகூடுவதற்காகச் செய்பவை.

சகிப்புத்தன்மையுள்ளவர்களாய் ஒருவரோடொருவர் நல்ல அயலார்போல சமாதானமாய் வாழப்பழகுவோம்.

சர்வ தேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நாட்டவும், பொதுநலம் கருதி செய்தால் அல்லாமல், ராணுவத்தைப் பயன்படுத்தலாகாது என்னும் கொள்கையையும் முறையையும் யாவரும் ஏற்கவும் நாம் நமது பலத்தை ஒன்றுபடுத்துவோம்.

எல்லா மக்களின் பொருளாதார முற்போக்குக்காகவும், ஜனசமூக முன்னேற்றத்திற்காகவும், சர்வதேச அமைப்புகளைப் பயன்படுத்துவோம்.

இந்நோக்கங்களை நிறைவேற்ற ஒன்றுபட்டு முயற்சி செய்ய நிர்மானம் செய்வோம்.

எனவே ஸான்பிரான்ஸிஸ்கோவில் அரசாங்கங்களின் பிரதிநிதிகள் கூடி, நன் முறையில், தகுதியான அதிகாரம் படைத்தவர்களாய், ஐக்கிய நாடுகளின் இந்த சாஸனத்தை ஒப்புக்கொண்டு ஐக்கிய நாடுகளின் சங்கம் எனப்படும் சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்துகிறோம்.

அத்தியாயம் 1

நோக்கங்களும் கொள்கைகளும்

பகுதி 1.

ஐக்கிய நாடுகளின் நோக்கங்களாவன :

1. சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நாட்டுவது : அவ்வாறு நிலை நாட்டுவதற்கும், சமாதானக் குலைப்பு முயற்சிகளைத் தடுத்து ஒழிப்பதற்கும், ஆக்கிரமிப்புகளையும், வேறு சமாதான குலைவுகளையும் அடக்குவதற்கும், சமாதான முறைகளை அமைப்பதற்கும், நீதியையும், சர்வதேச சட்டத்தையும் தழுவி, சர்வதேச தகராறுகளையும், சாமாதானத்திற்கு இடையூறான சிக்கல்களையும் தீர்த்துவைப்பதற்கும், ஒன்றுதிரண்டு வன்மைமிக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

2. சம உரிமையையும் சுய நிர்ணய சுதந்திரத்தையும் மதித்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாடுகளுக்குள்

நட்பை வளர்த்து, சர்வதேச சாமாதானத்தைப் பலப்படுத்து வதற்குத் தகுதியான ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும்.

3. பொருளாதாரம், ஜனசமூகம், கலாச்சாரம், பரோப காரம் பற்றிய சர்வதேச சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்ப தற்கும், நாட்டு வேற்றுமை, ஆண் பெண் வேறுபாடு, மொழி வேற்றுமை, மதபேதம் இவற்றைக் கருதாமல் மனித உரிமை களையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மதித்து அம்மதிப்புப் பெருகுமாறு செய்தலும் வேண்டும்.

4. இந்தப் பொது லக்ஷ்யங்களுக்காக நாடுகள் செய்யும் காரியங்களை ஒன்றுபடுத்திவைக்கும் மத்திய சங்கமாக ஐக்கிய நாடுகள் சங்கம் விளங்குதல் வேண்டும்.

பகுதி 2.

ஸ்தாபனமும் அதைச் சேர்ந்த அங்கத்தினர்களும், பகுதி ஒன்றில் கூறப்பட்டிருக்கிற நோக்கங்களுக்காக, கீழே கூறியுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டும்.

1. எல்லா அங்கத்தினர்களுக்கும் ஆதிபத்ய உரிமை உண்டு என்ற கொள்கையின்படியே ஸ்தாபனம் அமைக்கப் பட்டிருக்கிறது.

2. தாங்கள் அங்கம் வகிப்பதால் கிடைக்கக்கூடிய உரிமை களும், நலன்களும், எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்வதற் காக இந்த சாஸனத்தில் கண்டிருக்கிற கடமைகளை உணர்ந்து அவைகள் நன் முறையில் நிறைவேற எல்லா அங்கத்தினர் களும் பாடுபடவேண்டும்.

3. தங்களுக்குள் ஏற்படும் சர்வதேச சச்சரவுகளை சமா தான முறைகளில், சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படாத வகைகளில், எல்லா அங்கத்தினர்களும் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

4. தங்கள் சர்வதேச உறவுகளில் ஏற்படும் இடையூறு களைத் தீர்த்துக்கொள்ள எந்த நாடும் ராணுவ பலத்தை உபயோகிக்கக்கூடாது. மற்றொரு நாட்டினுடைய அரசியல் சுதந்திரத்தையோ, அல்லது ஆதிபத்ய அந்தஸ்தையோ பாதிக் கும் வகையில் ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு எதிராக ராணுவ பல உதவியினால் பயமுறுத்துவதோ அல்லது அதை உப யோகிப்பதோ கூடாது.

5. இந்த சாஸனத்தில் சொல்லியிருப்பதுபோல ஐக்கிய நாடுகள் எடுத்துக்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளிலும், மற்ற அங்கத்தின் நாடுகள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். மேலும் எந்த நாடுகளுக்கு எதிராக தடுப்பு அல்லது பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் ஐக்கிய நாடு களால் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவோ, அந்நாடுகளுக்கு எவ் வித உதவியும் செய்யக்கூடாது.

6. சர்வதேச சமாதானம் பாதுகாப்பு இவைகளை நிலை நிறுத்துவதற்காக ஐ.நா.வில் அங்கத்தினரல்லாத நாடுகளும் முயலவேண்டும், அவைகளும் இதே நோக்கங்களுக்காகப் பாடு படவேண்டும் என்பதற்காக ஸ்தாபனம் தன் வேலைகளைச் செய்யும்.

7. ஒரு நாட்டின் அரசாங்கமே தீர்த்துக்கொள்ளக் கூடிய உள் நாட்டு பிரச்னைகளில் ஐக்கிய நாடுகள். தலையிடவோ, அல்லது அவ்விஷயங்களில் சமரசமுடிவுகாண தன்னிடம் சமர்ப் பிக்கவேண்டும்' என்று கேட்கவோ, இந்த சாஸனத்தின் எந்த பாகமும் அதிகாரமளிக்கவில்லை. ஆனால் ஏழாம் அத்தி யாயத்தில் கூறப்பட்டுள்ள முறைகளைக் கையாளுவதை இது பாதிக்காது.

அத்தியாயம் 2

அங்கத்தினர்கள்

பகுதி 3.

ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் நாடுகள் இவையாவன :— ஸான்பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச ஸ்தாபனத்திற்கான ஐக்கிய நாடுகளின் மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட நாடுகளும், 1—1—1942-ல் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கையெழுத்திட்டபிறகு தற்போது இப்புதிய சாஸனத்திலும் கையெழுத்திட்டு அதை 110-ம் பகுதியில் கூறியுள்ள விதிகளின்படி ஒப்புக்கொண்ட நாடுகளும் ஆகும்.

பகுதி 4.

1. சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் உரிமையுண்டு. அவைகள் இந்த சாஸனத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அவைகளுக்கு அக்காரியங்களைச் செய்யும் திறமையும், செய்யும் விருப்பமும் இருக்கின்றன என்று ஸ்தாபனத்தின் நன் மதிப்பும் பெறவேண்டும்.

2. அப்படி ஒரு நாடு ஐக்கிய நாடுகளில் அங்கத்தினராக வேண்டுமென்றால், பாதுகாப்புக் கௌன்சிலின் சிபார்சின்பேரில் பொதுச் சபை செய்யும் தீர்மானத்தின்படியே ஏற்றுக்கொள்ளப் படும்.

பகுதி 5.

ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரான ஒரு நாட்டின்மீது தடுப்பு அல்லது பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் பாதுகாப்புக் கௌன்ஸிலால் எடுக்கப்பட்டிருந்தால், பொதுச் சபையில் அதற்குள்ள உரிமைகளையும் சலுகைகளையும், பாதுகாப்புக் கௌன்ஸிலின்

சிபார்சின்பேரில் நிறுத்திவைக்கலாம். இந்தச் சலுகைகளை யும் உரிமைகளையும் மீண்டும் அந்நாட்டிற்கு அளிப்பதற்குப் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குத்தான் அதிகாரமுண்டு,

பகுதி 6.

இந்த சாஸனத்தில் கூறியுள்ள நோக்கங்களை, சதா மீறி நடக்கும் ஒரு அங்கத்தின நாட்டை ஸ்தாபனத்திலிருந்து, பாதுகாப்புக் கௌன்ஸிலின் சிபார்சின்பேரில், விலக்கும் உரிமை பொதுச் சபைக்கு உண்டு.

அத்தியாயம் 3

கிளை ஸ்தாபனங்கள்

பகுதி 7.

1. ஐக்கிய நாடுகளின் பிரதான ஸ்தாபனங்களாவன:— பொதுச்சபை, பாதுகாப்புக் கௌன்ஸில், பொருளாதார சமூக சபை, தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதிமன்றம், அலுவலகம் இவையாவன.

2. இன்னும் அவ்வப்போது வேண்டிய கிளை ஸ்தாபனங் களையும் சாஸனத்தில் கூறியுள்ள விதிகளுக்குட்பட்டு ஏற்படுத தி.கொள்ளலாம்.

பகுதி 8.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தா பனத்தில் சேர்ந்து சேவை செய்ய சம உரிமை அளிப்பதோடு சமதர்ம நோக்கின்படி, அதன் மூல அல்லது கிளை ஸ்தாபனங களில் வேலை செய்யவும் எவ்வித தடைகளையும் ஐக்கிய நாடுகள் ஏற்படுத்தாது.

அத்தியாயம் 4

பொதுச் சபை அமைப்பு

பகுதி 9.

1. ஐக்கிய நாடுகளின் எல்லா அங்கத்தினர்களையும் கொண்டது பொதுச்சபை எனப்படும்.

2. ஒவ்வொரு அங்கத்தின நாடும் பொதுச்சபையில் ஐந்து பிரதிநிதிகளைத்தான் வைத்துக்கொள்ளலாம்.

வேலைகளும் அதிகாரங்களும்

பகுதி 10.

இந்த சாஸனத்திற்குட்பட்ட எல்லா விஷயங்களையும், சாஸனத்தில் இடம் பெற்றுள்ள ஸ்தாபனங்களின் அலுவல்கள், அதிகாரங்கள் பற்றிய விஷயங்களையும், வேறு எல்லா விஷயங்களையும் பொதுச்சபை விவாதிக்கலாம். பகுதி 12-ல் சொல்லியுள்ள முறையில் அல்லாமல் மற்ற வகைகளில், ஐ.நா.வின் அங்கத்தினர்களுக்கோ, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கோ, அல்லது இரு ஸ்தாபனங்களுக்குமோ, எவ்விஷயத்தையும் பற்றித் தன் சிபார்சுகளைக் கூறலாம்.

பகுதி 11.

1. சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அவசியமான ஒத்துழைப்புக் கொள்கைகளை பொதுச்சபை ஆலோசிக்கும். மேலும் ஆயுத பரிகரணம், ஆயுத புனருத்தாரணம் இவை பற்றி தன்னுடைய சிபார்சுகளை ஐ.நா. அங்கத்தினர்களுக்கோ, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கோ அல்லது இரண்டிற்குமோ தெரிவிக்கும்.

2. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு, பொதுச் சபையிடம் கொண்டுவரும் சர்வதேச சமாதானம் அல்லது பாதுகாப்புபற்றிய எல்லா விஷயங்களையும், அது விவாதிக்கும். அதேபோல் பாதுகாப்புக் கௌன்ஸிலோ அல்லது பகுதி 35, பாரா 2-ல் கூறியுள்ளபடி ஐ.நா.வில் அங்கம் வகிக்காத ஒரு நாடோ விவாதத்திற்கு கொண்டுவரும் விஷயங்களையும் சபை விவாதிக்கும். மேலும் 12-ம் பகுதியில் கூறப்பட்டுள்ள முறைகளில் அல்லாமல், அவ்விஷயங்களைபற்றிய தன்னுடைய சிபார்சுகளை, சம்பந்தப்பட்ட நாட்டிற்கோ, நாடுகளுக்கோ அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கோ சொல்லும். அம்மாதிரி விஷயங்களில் எவைகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவைகளை, விவாதத்திற்கு முன்போ அல்லது பின்போ, பொதுச்சபை, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அறிவிக்கும்.

3. சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படக்கூடிய நிலைகள் பொதுச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உடனே பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்தைப் பொதுச் சபை யிழுக்கும்.

4. 10-ம் பகுதியில் பொதுச் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை இப்பகுதியில் கூறியுள்ளவை கட்டுப்படுத்தாது.

பகுதி 12.

1. இந்த சாஸனத்தில் சொல்லியுள்ள திட்டங்களின்படி பாதுகாப்புக் கௌன்ஸில் ஒரு தகராறையோ நிலையையோ ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, பொதுச் சபையிடம் பாதுகாப்புக் கௌன்ஸிலே அத்தகராறை அல்லது நிலையைப்பற்றி அதனுடைய சிபார்சுகளைக் கேட்டாலன்றி, பொதுச்சபை எதுவும் செய்யக்கூடாது.

2. சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பாதுகாப்புக் கௌன்ஸில் எடுத்துக்கொள்

ளும் நடவடிக்கைகள்பற்றி, பொதுச் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும், தலைமைக் காரியதரிசி, பாதுகாப்புக் கௌன்ஸிலின் சம்மதத்தின்பேரில், வெளியிடுவார். அதேபோல் பாதுகாப்புக் கௌன்ஸில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதை நிறுத்திவிட்ட காலங்களிலும், அவ்விஷயத்தை பொதுச் சபைக்கோ அல்லது அது கூடாதிருந்தால் ஐ.நா. அங்கத்தின நாடுகளுக்கோ, அவரே அறிவிப்பார்.

பகுதி 13.

1. பொதுச்சபை கீழே சொல்லியுள்ள காரியங்களுக்காக ஆராய்ச்சி செய்து, தன் சிபார்சுகளை வெளியிடும்.

(1) அரசியல் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பு முன்னேற்றமடையப் பாடுபடுவது. சர்வதேச சட்டத்தைப் படிப்படியாக சீர்படுத்தவும் அவைகளை ஒழுங்குப்படுத்தவும் முயலுவது.

(2) பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி, சுகாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிக்கப் பாடுபடவேண்டும். ஜாதி, மத, நிற, மொழி வேறுபாடின்றி எல்லோருக்கும் அடிப்படை சுதந்திரங்களும் மனித உரிமைகளும் கிடைப்பதற்கு உதவி புரியவேண்டும்.

2. மேலே பாரா 1 (I)-ல் கூறியுள்ள விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பொதுச்சபையின் மற்ற கடமைகள், வேலைகள், அதிகாரங்கள், இவை 9, 10-ம் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன.

பகுதி 14.

12-ம் பகுதியில் கூறப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு கவலைதரக்கூடிய எந்த நிலையையும் சமாதான முறைகளில் தீர்த்துக் கொள்ளும்படி சிபார்சு செய்து, வழிகளைக் கூறுதல் பொதுச் சபையின் வேலையாகும். பொது நலத்திற்கோ அல்லது நாடு

களின் நேரபான்மைக்கோ பங்கமேற்படும்படியான நிலைகளை யும், சாஸனத்தில் கூறியுள்ள நோக்கங்களையும் கொள்கை களையும் நிராகரிப்பதால் ஏற்படும் பயங்கர நிலைகளையும் சமா தான முறைகளில் தீர்த்துக்கொள்ள பொதுச்சபை சிபார்சு செய்யும்.

பகுதி 15.

1. பாதுகாப்புக் கௌன்ஸிலிலிருந்து வரும் வருஷாந் திர அறிக்கைகளையும், பிரத்தியேக அறிக்கைகளையும் பொதுச் சபை பெற்று ஆலோசிக்கும். இவைகளில் சர்வதேச அமை திக்கும், பாதுகாப்பிற்கும், பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானம் செய்துள்ள முறைகளும் அடங்கியிருக்கும்.

2. ஐ.நா. வின் மற்ற ஸ்தாபனங்களிலிருந்தும் இதே மாதிரி, அவைகளின் நடவடிக்கைகளைப்பற்றிய அறிக்கைகளைக் கேட்டுப்பெற்றுப் பரிசீலிக்கும்.

பகுதி 16.

கேந்திர பிரதேசங்கள் செய்துகொள்ளும் தர்மகர்த்தா உடன்படிக்கைகளை ஒப்புக்கொள்வதோடு, 12-ம், 13-ம் அத்தி யாயங்களில் சர்வதேச தர்மகர்த்தா பரிபாலன முறைக்காக கொடுக்கப்பட்டுள்ள வேலைகளையும் பொதுச்சபை செய்யவேண்டும்.

பகுதி 17.

1. ஸ்தாபனத்தின் வரவு செலவுத்திட்டத்தை பொதுச் சபை பரிசீலித்து முடிவு செய்யவேண்டும்.

2. ஸ்தாபனத்தின் செலவுகள், அதன் அங்கத்தினர் களாலேயே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். ஒவ்வொருவரும் எவ்வளவு பொருளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் பொதுச்சபையே தீர்மானிக்கும்.

3. 57-ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விசேஷ ஏஜன்ஸிகளின் பொருளாதார வரவு செலவுத் திட்டங்களையும் பொதுச் சபை கவனித்து அங்கீகரிக்கும். மேலும் அவ்விசேஷ ஏஜன்ஸிகளின் நிர்வாக சம்பந்தமான வரவு செலவு திட்டங்களையும் அவைகளின் முன்னேற்றத்திற்காகத் தன்னுடைய சிபார்சுகளை செய்வதற்காகப் பரிசிலனை செய்யும்.

ஓட்டுச் செய்தல்

பகுதி 18.

1. பொதுச் சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டு உண்டு.

2. சபையில் பிரசன்னமாகி ஓட்டு செய்யும் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் முடிவுகளின்படியே, பொதுச்சபை, முக்கிய பிரச்னைகள்மீது தன் முடிவுகளைத் தீர்மானிக்கும். இப்பிரச்னைகள்—சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் சம்பந்தப்பட்ட சிபார்சுகள், பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு தற்காலிக அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது, பொருளாதார சமூக சபைக்கு அங்கத்தினர்களை நியமிப்பது, தர்மகர்த்தா சபைக்கு அங்கத்தினர்களைப் பொறுக்குவது [பகுதி 86; பாரா. 1 (iii)] ஐ.நா. வில் புது அங்கத்தினர்களை சேர்த்துக்கொள்வது, அங்கத்தினர்களுக்குள்ள உரிமைகளையும் சலுகைகளையும் நிறுத்திவைப்பது, அங்கத்தினர்களை வெளியேற்றுவது, தர்மகர்த்தா முறைபற்றிய பல பிரச்னைகள், மற்ற வரவு செலவு திட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் போன்றன.

3. மற்ற பிரச்னைகளின்மீது முடிவுகள் எல்லாம்—மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்களில் இன்னும் சில விஷயங்களைச் சேர்ப்பது உள்பட—கூட்டத்திற்கு வரும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையானவர்கள் சாதகமாக ஓட்டுச் செய்வதாலேயே தீர்மானிக்கப்படும்.

பகுதி 19.

ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு ஸ்தாபனத்திற்கு கொடுக்கவேண்டிய பொருள், அதனிடமிருந்து இரண்டு வருஷங்களுக்காகச் சேரவேண்டிய பொருளுக்கு சமானமாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தால், அந்நாட்டிற்குப் பொதுச் சபையில் ஓட்டுரிமை கிடையாது. இருந்தபோதிலும், அத்தகைய ஒரு நாடு, பொருளைக் கொடுக்காததற்குக் காரணம், அதனுடைய வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று பொதுச் சபை தீர்மானித்தால், அந்நாடு ஓட்டுச் செய்வதை பொதுச்சபை அனுமதிக்கலாம்.

முறை

பகுதி 20.

பொதுச்சபை ஒவ்வொரு வருஷமும் கூடும். அவசியமான சந்தர்ப்பங்களில் விசேஷ கூட்டங்களையும் ஏற்பாடு செய்யலாம். பாதுகாப்புக் கௌன்ஸிலின் விருப்பத்தின் பேரிலேயோ, ஐ.நா.வின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரின் வேண்டுதலின்பேரிலோ, தலைமைக் காரியதரிசி, பொதுச் சபையின் விசேஷ கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார்.

பகுதி 21.

தனக்கென நடைமுறை விதிகளை பொதுச்சபை இயற்றிக் கொள்வதோடு, ஒவ்வொரு கூட்டத்திற்கும் தகுந்த தலைவரை அதுவே தேர்ந்தெடுக்கும்.

பகுதி 22.

தன்னுடைய காரியங்கள் செவ்வனே நடை பெறுவதற்காகப் பொதுச்சபை தனக்கு வேண்டிய உதவி ஸ்தாபனங்களை ஏற் படுத்திக்கொள்ளும்.

அத்தியாயம் 5

பாதுகாப்புக் கௌன்ஸில்

அமைப்பு

பகுதி 23.

1. ஐக்கிய நாடுகளின் பதினொரு அங்கத்தினர்களைக் கொண்டது பாதுகாப்புக் கௌன்ஸில் எனப்படும். சீனக்குடி யரசு, பிரான்சு, சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கியக் குடி யரசு; கிரேட் பிரிட்டனும் வடக்கு அயர்லாந்தும் சேர்ந்த **'யுனைடெட் கிங்டம்'**, அமெரிக்க ஐக்கிய தேசங்கள்—இந்த நாடு கள் பாதுகாப்புக் கௌன்ஸிலில் நிரந்தர அங்கம் வகிக்கின்றன. மற்றும் ஆறு நாடுகளை பொதுச்சபை, பாதுகாப்புக் கௌன்ஸி லுக்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கிறது. இவர்கள் நிரந்தர அங்கத்தினர்களல்ல. இந்த அறுவரையும் தேர்ந் தெடுப்பதில் முக்யமாக கவனிக்கவேண்டியவை, சர்வதேச அமைதியைப் பாதுகாக்கும் முயற்சியில் ஐ.நா.வின் காரியங் களில் ஒவ்வொரு நாடும் தன்பங்கை எந்த அளவுக்கு செலுத்தி யிருக்கின்றன, ஐ.நா.வின் லட்சியங்கள் நிறைவேற எந்த அளவுக்கு அவை பாடுபட்டிருக்கின்றன, என்பவைகள்தான். மேலும் நாட்டின் முக்யத்வத்திற்கு ஏற்ற பிரதிநிதித்துவம் கிடைக்கிறதா என்பதையும் கவனிக்கவேண்டும்.

2. நிரந்தர அங்கத்தினர் அல்லாத ஆறு நாடுகளும் பாதுகாப்புக் கௌன்ஸிலில் இரண்டு வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதன் முதலில் நடக்கும் தேர்

தலில் மூன்று நாடுகள் ஒரு வருஷகாலத்திற்குத் தேர்ந் தெடுக்கப்படும். பதவிக்காலம் முடிவடைந்த ஒரு அங்கத் தின நாடு மீண்டும் அடுத்த தேர்தலுக்கு நிற்கக்கூடாது.

3. பாதுகாப்புக் கௌன்ஸிலில் அங்கம் வகிக்கும் ஒவ் வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பிரதிநிதி உண்டு.

வேலைகளும் அதிகாரங்களும்

பகுதி 24.

1. ஐ.நா.வின் காரியங்கள் துரிதமாய் நடைபெறவும் பயனுள்ளதாகவிருக்கவும், பாதுகாப்புக் கௌன்ஸிலில் அதன் அங்கத்தினர்கள் ஒன்றுகூடி, சர்வதேச அமைதியையும் பாது காப்பையும் நிலைபெறச்செய்வதில் அதற்குள்ள பொறுப்பை பற்றிப் பேசுவார்கள். அதனுடைய காரியங்களைச் செய்வதில் தாங்கள் ஒத்துழைப்பதாகவும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

2. இக்காரியங்களைச் செய்வதில் பாதுகாப்புக் கௌன்ஸில் ஐ.நா.வின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் இசைந்து நடக்கவேண்டும். இக்காரியங்களைச் செய்வதற்காகப் பாது காப்புக் கௌன்ஸிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விசேஷ அதி காரங்கள் 6, 7, 8, 12-ம் அத்தியாயங்களில் சொல்லப்பட்டுள்ளன.

3. ஒவ்வொரு வருஷமும், அவசியமானபோது விசேஷ சந்தர்ப்பங்களிலும், தன்னுடைய அறிக்கையை பாதுகாப்புக் கௌன்ஸில் பொதுச் சபையிடம் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கும்.

பகுதி 25.

ஐ.நா. அங்கத்தினர்கள் சாஸனத்தில் கூறியிருக்கிறபடி, பாதுகாப்புக் கௌன்ஸிலின் தீர்மானங்களை ஏற்று அவைகளை நிறைவேற்ற சம்மதிக்கிறார்கள்.

பகுதி 26.

இவ்வுலகில் சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்தும் வேலையில், மனிதனின் ஆயுதபலமோ, பொருளாதார வசதிகளோ உதவிபுரியாதவண்ணம் செய்வது பாதுகாப்புக் கௌன்ஸிலின் வேலையாகும். 47-ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ராணுவ அதிகாரிகள் குழுவின் உதவியுடன் பாதுகாப்புக் கௌன்ஸில், ஆயுதங்களை கட்டுப்படுத்துவது பற்றி ஒரு நிரந்தர ஏற்பாட்டைச் செய்ய திட்டங்கள் வகுத்து, அவைகளை ஐ.நா. அங்கத்தினர்களுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

ஓட்டுச் செய்தல்

பகுதி 27.

1. பாதுகாப்புக் கௌன்ஸிலிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டு உண்டு.

2. பாதுகாப்புக் கௌன்ஸிலில் உள்ள அங்கத்தினர்கள் ஏழு பேர்கள் சாதகமாக ஓட்டுச் செய்தால், அதனிடம் வரும் நடைமுறை விஷயங்கள்பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப் படும்.

3. பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் வரும் மற்ற பிரச்னைகள், நிரந்தர அங்கத்தினர்களின் ஓட்டுகளைச் சேர்த்து ஏழு அங்கத்தினர்களின் ஓட்டுக்களைப் பெற்றால்தான் நிறைவேற்றப் படும். ஆனால் ஆறும் அத்தியாயத்தில் சொல்லியுள்ள விஷயங்கள்பற்றியும், பகுதி 52, பாரா 3-ல் சொல்லியுள்ள விஷயங்கள் பற்றியும் ஓட்டு எடுக்கும்போது, சச்சரவில் ஈடுபட்டுள்ள நாடுகள், ஓட்டுச் செய்யமுடியாது.

முறை

பகுதி 28.

1. எப்போதும் தொடர்ந்து வேலை செய்வதற்கான முறையில் பாதுகாப்புக் கௌன்ஸில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்காக அதன் அங்கத்தினர்கள் எப்போதும் ஸ்தாபனத்தில் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். எல்லாக் கூட்டங்களிலும் அவர்கள் பிரசன்னமாயிருப்பதற்காக ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் இருக்கும் இடத்தில் அவர்களிருக்கிறார்கள்.

2. குறிப்பிட்ட காலங்களில் பாதுகாப்புக் கௌன்ஸில் கூடும். அதன் அங்கத்தின நாடுகள், தங்கள் அரசாங்கத்திலிருந்து ஒருவரையோ, அல்லது வேறு விசேஷ பிரதிநிதியையோ தங்கள் பிரதிநிதியாக அனுப்பலாம்.

3. ஸ்தாபனத்தின் நிலையான ஸ்தலத்தைத் தவிர, வேறு இடங்களிலும் பாதுகாப்புக் கௌன்ஸில் தன் கூட்டங்களை நடத்திக்கொள்ளலாம்.

பகுதி 29.

தன்னுடைய காரியங்கள் சரிவர நடப்பதற்காகப் பாதுகாப்புக் கௌன்ஸில், சில கிளை ஸ்தாபனங்களையும் ஏற்படுத்திக் கொள்ளும்.

பகுதி 30.

பாதுகாப்புக் கௌன்ஸில் தனக்கென நடைமுறை விதிகளை வகுத்துக் கொள்வதோடு, தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையையும் தானே தீர்மானித்துக்கொள்ளும்.

பகுதி 31.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் அங்கத்தினராயில்லாமல், ஐக்கியநாடுகளில் மட்டும் அங்கம் வகிக்கும் ஒரு நாடு, பாதுகாப்புக்

கௌன்ஸிலில் விவாதத்திற்கு வரும் பிரச்னைகளில் தன்னுடைய நாட்டின் நலன்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்று வெளியிட்டு, அதை பாதுகாப்புக் கௌன்ஸில் ஏற்று திருப்தியடைந்தால், அங்கு நடக்கும் விவாதங்களில் அந்த நாடும் ஓட்டுரிமையின்றி கலந்துகொள்ளலாம்.

பகுதி 32.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் அங்கத்தினராயில்லாமல், ஐ.நா.வில்மட்டும் அங்கத்தினராயிருக்கும் ஒரு நாடு, அல்லது ஐ.நா.வில் அங்கத்தினரல்லாத ஒரு நாடு, பாதுகாப்புக்கௌன்ஸிலில் ஆராயப்படும் சச்சரவொன்றில் சம்பந்தப்பட்டிருந்தால், அவ் விவாதத்தில் கலந்துகொள்ள அந்த நாடும் அழைக்கப்படும். ஆனால் அதற்கு ஓட்டுறிமை கிடையாது. ஐ.நா.வில் அங்கத்தினராயில்லாத ஒரு நாடு இம்மாதிரி விவாதங்களில் கலந்துகொள்ளவிரும்பும்போது, அதற்கென சில விதிகளை பாதுகாப்புக் கௌன்ஸில் ஏற்படுத்தும்.

அத்தியாயம் 6

சச்சரவுகளை சமாதானமாகத் தீர்த்துவைத்தல்

பகுதி 33.

1. சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அபாயம் விளைவிக்கக்கூடிய சச்சரவுகளில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகள், கலந்தாலோசிப்பது, விசாரணை, மத்தியஸ்தம், சமரஸம், நீதிஸ்தல தீர்ப்பு, பிராந்திய ஏற்பாடுகள் அல்லது தங்களுக்குப் பிடித்த இதர சமாதான வழிகளிலும், தங்கள் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும்.

2. அவசியம் நேரும் காலங்களில், தங்கள் சச்சரவுகளை மேற்சொல்லிய வழிகளில் தீர்த்துக்கொள்ளுமாறு பாதுகாப்புக் கௌன்ஸில், சச்சரவிலீடுபட்டுள்ள நாடுகளுக்குச் சொல்லும்.

பகுதி 34.

சர்வதேச தகராறு விளைவிக்கக்கூடிய ஒரு சச்சரவையோ ஒரு நிலையையோ கௌன்ஸில் ஆராயும். அப்படிப்பட்ட ஒரு சச்சரவு அல்லது நிலைமை சர்வதேச அமைதிக்கும் பாது காப்பிற்கும் பங்கம் விளைவிப்பதுதானு என்று அறிய முயலும்.

பகுதி 35.

1. 34-ம் பகுதியில் கூறப்பட்டது போன்ற ஒரு நிலைமையை அல்லது சச்சரவை, ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரான எந்த நாடும், பாதுகாப்புக் கௌன்ஸில் அல்லது பொதுச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

2. ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரல்லாத ஒரு நாடு, சச்சரவில் தான் ஈடுபட்டிருந்தால், அச்சச்சரவை பாதுகாப்புக் கௌன்ஸில் அல்லது பொதுச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். ஆனல் அதற்கு முன்பாக அது பின்சொல்லப்படும் காரியத்தைச் செய்யவேண்டும், அதாவது இச்சச்சரவிற்காக சாஸனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி தன்னுடைய சச்சரவை சமாதான வழிகளில் தீர்த்துக்கொள்ள கடமைப்பட்டிருப்பதாய் ஒப்புக்கொள்ளவேண்டும்.

3. இப்பகுதியில் சொல்லியுள்ளபடி பொதுச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் விஷயங்களின்மீது தீர்ப்பளிப்பதில், 11, 12-ம் பகுதிகளில் சொல்லப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டே பொதுச்சபை நடந்துகொள்ளவேண்டும்.

பகுதி 36.

1. 33-ம் பகுதியில் சொல்லியுள்ள ஒரு தகராறின் எந்த நிலையிலும் அல்லது அதுபோன்ற வேறு சச்சரவுகளின் எந்த நிலையிலும், அவைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக நாடுகள் ஒத்துப்போகவேண்டிய முறைகளைப் பாதுகாப்புக் கௌன்ஸிலில் சிபார்சு செய்யலாம்.

2. தகராறுகளில் சம்பந்தப்பட்ட நாடுகள், தங்கள் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் அனுசரித்த முறைகளைப் பாதுகாப்புக் கௌன்ஸில் கவனிக்கவேண்டும்.

3. இந்தப் பகுதியில் சொல்லியபடி தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்போது, பாதுகாப்புக் கௌன்ஸில், அவைகள் சர்வதேச நீதிமன்றத்தால் தான் தீர்க்கப்படவேண்டுமென்று முடிவு செய்தால், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு, அவ்வழக்கை நீதிமன்றத்திடம் கொண்டு செல்லுமாறு கூறவேண்டும்.

பகுதி 37.

1. 33-ம் பகுதியில் சொல்லியதுபோன்ற சச்சரவில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும், அப்பகுதியில் கூறப்பட்டுள்ள வழிகளினுல் தங்கள் சச்சரவைத் தீர்த்துக்கொள்ளமுடியாவிட்டால், அவ்வழக்கைப் பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

2. இச்சச்சரவை விட்டுவிட்டால் சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் விளையுமென்று பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானித்தால், 36-ம் பகுதியில் சொல்லியுள்ளபடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமா அல்லது அதற்கு 'சரியான முறைகள்' என்று தோன்றும் வழிகளில் முயலவேண்டுமா என்பதை முதலில் தீர்மானிக்கும்.

பகுதி 38.

33-லிருந்து 38-ம் பகுதிகள் வரையில் சொல்லப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, ஒரு பிரச்னைக்குச் சம்பந்தப்பட்ட நாடுகள் எல்லாம் ஒப்புக்கொண்டால், அப்பிரச்னையைத் தீர்க்க ஒரு சமாதான முறையை பாதுகாப்புக் கௌன்சில் சிபார்சு செய்யலாம்.

அத்தியாயம் 7

சமாதானத்திற்கு அபாயம் நேரும்போதும், சமாதானம் குலைக்கப்படும் போதும், ஆக்கிரமிப்புக் காரியங்கள் நடைபெறும் போதும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

பகுதி 39.

சமாதானத்திற்கு அபாயம் விளைவிக்கும் நிலைகளையும், சமாதானம் குலைக்கப்பட்டதையும், ஆக்கிரமிப்புக் காரியங்களையும் பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானிக்கும். அவைகளைத் தடுக்க தன் சிபார்சுகளைச் சொல்லும். அல்லது சர்வதேச அமைதியும் பாதுகாப்பும் நிலைபெற அல்லது மீண்டும் அவைகளை நிலை நிறுத்த 41, 42-ம் பகுதிகளில் சொல்லியுள்ள வழிகளில் எவைகளை அனுசரிக்கவேண்டும் என்பதையும் அதுவே தீர்மானம் செய்யும்.

பகுதி 40.

நிலைமை சீர்கெட்டுவிடாதபடி பாதுகாப்புக் கௌன்ஸில் 39-ம் பகுதியில் சொல்லியுள்ளபடி தன்னுடைய சிபார்சுகளை செய்வதற்கும் முன்னால், சம்பந்தப்பட்ட நாடுகளை சில தற்காலிக ' முறை ' களைக் கைக்கொள்ளும்படி சொல்லும். அம்முறைகள், சம்பந்தப்பட்ட நாடுகளின் உரிமைகள், அவைகள்

கோரும் விஷயங்கள், அவைகளிருக்கும் நிலை இவைகளை அனு சரித்தே இருக்கும். அவ்வாறு நடக்க அவைகள் மறுத்து விட்டால், அதுபற்றித்தகுந்த நடவடிக்கைகளை பாதுகாப்புக் கௌன்ஸில் உடனே எடுக்கும்.

பகுதி 41.

தன் தீர்மானங்களை ராணுவ பலமின்றி எவ்வகைகளை கைக் கொள்வதால் நடைமுறைக்கு கொண்டுவரலாம் என்பதை பாது காப்புக் கௌன்ஸில் தீர்மானிக்கும். அம்முறைகளை உப யோகிக்கும்படி, ஐ.நா. அங்கத்தினர்களை அழைக்கும். பொரு ளாதார உறவுகள், ரெயில், கடல், ஆகாயம், தந்தி, தபால், ரேடியோ போக்கு வரத்துகள், மற்ற சாதனங்கள் இவைகளைப் பூராவாகவுமோ, அல்லது ஒரு பகுதியையோ தடுப்பதும், அர சியல் உறவுகளை கைவிடுதலும் போன்ற முறைகளை உபயோ கிக்கலாம்.

பகுதி 42.

41-ம் பகுதியில் சொல்லப்பட்ட வழிகள் போதுமானவை யல்ல என்று பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானித்தாலும், அல்லது அவைகளை உபயோகித்து வெற்றிகாணுமலிருந்தாலும், சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்த, தரை கடல் ஆகாயப் படைகளை உபயோகித்து, தகுந்த நட வடிக்கைகளை எடுக்கலாம். ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர் களையும் அவர்களின் தரை கடல் ஆகாயப் படைகளின் உதவி யினுல் எதிரிகளைத் தாக்கும்படியும் கூறலாம். இதுவும் பாதுகாப்புக் கௌன்ஸில் எடுக்கும் நடவடிக்கைகளில் ஒன் றுகும்.

பகுதி 43.

1. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்காக பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குதவ, கௌன் ஸில் வேண்டும்போது ராணுவ உதவியும் இதர வசதிகளும்

செய்து கொடுப்பதாய் ஐ.நா. அங்கத்தின நாடுகள், பிரத்தியேக உடன்படிக்கைகளின்மூலம் ஒப்புக்கொள்கின்றன. மேலும் சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் உதவும் வகையில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதற்காக இருக்கும் "அனுமதிச்சீட்டு வழங்குதல்" முறைகளில் தகுந்த சீர்திருத்தங்களை செய்வதாயும் ஒப்புக்கொள்கிறார்கள்.

2. மேற்குறிப்பிட்ட உடன்படிக்கைகள், எவ்வளவு படைகளை நாடுகள் வைத்துக்கொள்ளவேண்டும், எத்தகைய படைகள் எங்கெங்கே நிறுத்தி வைக்கப்படவேண்டும், எப்போது அவைகள் தயாராக இருக்கவேண்டும், அவைகளுக்கு என்னென்ன வசதிகளும் உதவிகளும் அளிக்கவேண்டும், என்பனபோன்ற விவரங்களையும் குறிப்பிடும்.

3. பாதுகாப்புக் கௌன்ஸிலின் யோசனையின்பேரில் இந்த உடன்படிக்கைகள் வெகு சீக்கிரத்தில் நடை முறைக்கு கொண்டு வரப்படவேண்டும். அவைகள், பாதுகாப்புக் கௌன்ஸில், ஐ.நா. அங்கத்தினர்கள் இவர்களால் பேசப்பட்டு தீர்மானிக்கப்படும். அவைகள், அதில் கையெழுத்திடும் எல்லா நாடுகளாலும், தங்கள் தங்கள் அரசியல் திட்டங்களின்படி ஒப்புக்கொள்ளப்படவேண்டும்.

பகுதி 44.

பாதுகாப்புக் கௌன்ஸில் ராணுவ பலத்தை உபயோகிக்க வேண்டுமென்று நிச்சயித்துவிட்டால், அதில் பிரதிநிதித்வம் பெறாத ஒரு நாட்டினிடம், 43-ம் பகுதியில் சொல்லியுள்ளபடி தான் மேற்கொண்டுள்ள கடமைகளைச் செய்வதற்காக, ராணுவ உதவியைக் கேட்பதற்கு முன்னால், அவ்வங்கத்தினர் விரும்பினால், அவரை பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கழைத்து, அவர் நாட்டின் ராணுவ பலத்தை உபயோகிப்பது பற்றி அங்கு நடக்கும் விவாதத்தில் அவரையும் பங்கெடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளவேண்டும்.

பகுதி 45.

அவசர ராணுவ முறைகளை ஐ.நா. கைக்கொள்ளும்போது, அதற்கு உதவியாயிருக்க எல்லா அங்கத்தின நாடுகளும் தங்க ளிடமுள்ள ஆகாய விமானங்களையும், மற்ற வசதிகளையும், சர்வதேச கூட்டு நடவடிக்கைகளுக்காக உதவ வேண்டும். ராணுவ அதிகாரிகள் குழுவின் உதவியுடன் பாதுகாப்புக் கௌன் ஸில், 43-ம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக் குட்பட்டு, அப்படைகளின் பலம், தயாராக இருக்கும் தன்மை இவைகளை ஆராய்ந்து, அவர்கள் செய்யவேண்டிய கூட்டு நட வடிக்கைகளுக்கான திட்டங்களைத் தயார் செய்யும்.

பகுதி 46.

ராணுவ பலத்தை உபயோகிப்பதற்கான முறைகளை ராணுவ அதிகாரிகள் குழுவின் உதவியுடன் பாதுகாப்புக் கௌன்ஸில் தீர்மானிக்கும்.

பகுதி 47.

1. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்தவும், அதற்காக சைன்யங்களை ஒன்று சேர்த்து தயாராய் வைத்திருக்கவும், ஆயுதங்களை சரிவர உபயோகிக்கவும் தக்க சந்தர்ப்பங்களில் ஆயுத பரிகரணம் செய்யவும், வேறு ராணுவ விஷயங்களில் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு யோசனை கூறவும், ராணுவ அதிகாரிகள் குழு ஒன்று ஸ்தா பிக்கப்படும்.

2. ராணுவ அதிகாரிகள் குழுவில், பாதுகாப்புக் கௌன் ஸிலின் நிரந்தர அங்கத்தின நாடுகளின் ராணுவ தலைமை அதிகாரிகளோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ இருப் பார்கள். ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு குழுவில் நிரந்தர அங்கம் வகிக்காவிட்டாலும், குழுவின் காரியங்கள் சரிவர நடைபெற அந்த நாட்டின் உதவி தேவையாயிருந்தால், அந்த நாடும் குழுவுடன் சேர்ந்து வேலை செய்ய அழைக்கப் படும்.

3. பாதுகாப்புக் கௌன்ஸிலின் சுவாதீனத்தில் விடப்பட்டுள்ள ராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு ராணுவ அதிகாரிகள் குழுவே பொறுப்பாளியாகும். அப்படைகளை சரிவர நடத்துவதற்கான முறைகள் பின்னல் தீர்மானிக்கப்படும்.

4. பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் அனுமதி பெற்று முக்கியமான பிராந்திய ஏஜன்ஸிகளுடன் கலந்தாலோசித்த பிறகே, ராணுவ அதிகாரிகள் குழு, பிராந்திய உப குழுக்களை ஏற்படுத்தவேண்டும்.

பகுதி 48.

1. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்டுவதற்காக பாதுகாப்புக் கௌன்ஸில் செய்யும் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற விஷயத்தை, பாதுகாப்புக் கௌன்ஸில் செய்யும் தீர்மானத்தைப் பொறுத்து, ஐ.நா.வின் எல்லா அங்கத்தினர்களுமோ அல்லது அவர்களில் சிலரோ ஒன்று சேர்ந்து முடிவு செய்வார்கள்.

2. அத்தீர்மானங்கள் எல்லாம், ஐ.நா. அங்கத்தினர்களால் நேரடியாக நிறைவேற்றப்படவேண்டும். அவர்கள் அங்கத்தினர்களாயிருக்கும் தக்க சர்வதேச ஏஜன்ஸிகள் மூலமாகவும் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பகுதி 49.

பாதுகாப்புக் கௌன்ஸிலில் தீர்மானிக்கப்பட்ட பிரச்னைகளை நடைமுறையில் கொண்டுவருவதற்கு, ஐ.நா.வில் அங்கத்தினராயிருக்கும் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து தங்களாலியன்ற உதவிகளைச் செய்யும்.

பகுதி 50.

ஒரு நாட்டின்மீது தடுப்பு அல்லது பகிஷ்கரிப்பு நடவடிக்கையை பாதுகாப்புக் கௌன்ஸில் எடுத்திருக்கும்போது, வேறு

ஒரு நாடு, அது ஐ.நா.வில் அங்கம் வகித்தாலும் வகிக்கா விட்டாலும், மேற்சொன்ன வழிகளை அனுசரிக்க அந்நாட்டின் பொருளாதார வழிகள் இடமளிக்காவிடில், தன்னை அக்கஷ்டத்தினின்றும் விடுவிக்குமாறு பாதுகாப்புக் கௌன்ஸிலிடம் யோசனை கேட்கலாம். அதற்கு உரிமை உண்டு.

பகுதி 51.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கத்தினராயுள்ள ஒரு நாட்டின்மீது ஆயுதப் படையெடுப்பு ஏற்பட்டால், தன்னைத் தான் காத்துக்கொள்ள அந்த நாடு தனிப்படவோ, வேறு நாடுகளுடன் சேர்ந்து கூட்டாகவோ எதிர் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் உரிமையை இந்த சாஸனத்தில் கூறியுள்ள எதுவும் தடை செய்யாது. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதற்காகப் பாதுகாப்புக் கௌன்ஸில் நடவடிக்கை எடுக்கும்வரை அந்நாடு காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அங்கத்தின நாடுகள் மேற்கூறியபடி தற்காப்புக்காக எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு அறிவிக்க வேண்டும். சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்கோ அல்லது, திரும்பவும் நிலைபெறும்படி செய்வதற்கோ, சாஸனத்தின் விதிகளின்படி பாதுகாப்புக் கௌன்ஸில் அவசியமெனக் கருதி எடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குள்ள உரிமையையும், அதிகாரத்தையும், எவ்விதத்திலும் மேலே சொல்லிய வழி தடைபடுத்தாது.

அத்தியாயம் 8

பிராந்திய ஏற்பாடுகள்

பகுதி 52.

1. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும் மாறுபாடின்றி, அவைகளின் நடவடிக்கைகள் அமைந்திருந்தாலும், பிராந்திய நடவடிக்கைகளை யொட்டி சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் காப்பாற்றும் வழிகளை நிர்ணயிக்கும் வகையில் அவைகள் உருப்பெற்றிருந்தாலும், பிராந்திய ஏற்பாடுகளோ அல்லது ஏஜன்ஸிகளோ இருப்பதை இந்த சாஸனத்தில் சொல்லியுள்ள எதுவும் தடை செய்யாது.

2. மேலே சொல்லியுள்ள ஏற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ளும் அல்லது ஏஜன்ஸிகளாக ஆக்கிக்கொள்ளும் ஐ.நா. அங்கத்தின நாடுகள், தங்கள் உள்நாட்டுச் சச்சரவுகளை, பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டுபோவதற்கு முன், அத்தகைய பிராந்திய ஏற்பாடுகளாலேயோ அல்லது பிராந்திய ஏஜன்ஸிகளினுலேயோ சமாதான முறைகளிலேயே, தீர்த்துக்கொள்ள சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

3. உள்நாட்டுச் சச்சரவுகளை மேற்சொல்லிய சமாதான வழிகளில் தீர்த்துக் கொள்வதை பாதுகாப்புக் கௌன்ஸில் ஆதரிக்கும். அந்த சச்சரவுகளை, சம்பந்தப்பட்ட நாடுகளே தீர்த்துக்கொள்வதற்கு முயன்ருலும், அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்கு அவை கொண்டுவரப்பட்டாலும், மேற் சொல்லிய முறைகளையே அது கையாளும்.

4. 34, 35-ம் பகுதிகளில் சொல்லப்பட்டபடி நடப்பதை இப்பகுதியில் கூறப்பட்டுள்ள எதுவும் தடுக்காது.

பகுதி 53.

1. பாதுகாப்புக் கௌன்ஸில், தனக்கு உசிதம் என்று கருதும் சந்தர்ப்பங்களில், அம்மாதிரி பிராந்திய ஏற்பாடுகளையும், ஏஜன்ஸிகளையும் தனது அதிகாரத்தை அமுல் நடத்த உபயோகிக்கலாம். ஆனால் பாதுகாப்புக் கௌன்ஸிலின் அனுமதியின்றி, பிராந்திய ஏற்பாடுகளோ அல்லது ஏஜன்ஸிகளோ அமுல் செய்யமுடியாது. ஆனால் இதற்கு விதி விலக்கு உண்டு. இந்தப் பகுதியின் 2-ம் பாராவில் **பகைமை நாடு** என்று விவரிக்கப்பட்டிருக்கும் இடங்கள்மீது 107-வது பகுதியில் குறிப்பிட்டிருக்கும் பிரகாரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் ; பகைமை நாடுகள் மீண்டும் ஆக்கிரமிப்பில் இறங்காமல் தடுப்பதற்கு பிராந்திய ஏற்பாடுகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேற்படி விதி விலக்குக்குட்பட்ட நடவடிக்கைகள் சச்சரவில் சம்பந்தப்பட்ட நாடுகளின் வேண்டுகோளின்படி, ஐ.நா. ஸ்தாபனம், மேலும் ஆக்கிரமிப்பு நிகழாமல் தடுக்கும் பொறுப்பை ஏற்கும் வரையில்தான், நீடிக்கலாம்.

2. இந்தப் பகுதியில் 1-ம் பாராவில் **பகைமை நாடு** என்று குறிப்பிட்டுள்ளது, இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கு எதிராக இரண்டாவது உலக யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

பகுதி 54.

சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்காக பிராந்திய ஏற்பாடுகள் மூலமாகவோ அல்லது பிராந்திய ஏஜன்ஸிகள் மூலமாகவோ ஆராயப்படும் அல்லது நிறைவேற்றப்படும் எல்லா நடவடிக்கைகளையும் அவ்வப்போது பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குத் தெரிவிக்கவேண்டும்.

அத்தியாயம் 9

சர்வதேச பொருளாதார சமூக ஒத்துழைப்பு

பகுதி 55.

அமைதியும் சகோதரபாவமும் தேச மக்களிடையே நிலவ, எல்லோருக்கும் சம உரிமையும், சுயதேவைப் பூர்த்தியும் முக்கியமாகும். இந்த உயர்ந்த நோக்கங்களை அடைவதற்காக, கீழே சொல்லியுள்ள வழிகளை ஐக்கிய நாடுகள் பின்பற்றி போற்றும் :

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், எல்லோருக்கும் வேலை கிடைக்கும்படி செய்யவும், பொருளாதார சமூக நிலைகளில் முன்னேற்றமும் சீர்திருத்தமும் ஏற்படவும் பாடுபடவேண்டும்.

2. சர்வதேச பொருளாதார, சமூக, சுகாதார மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும், சர்வதேசக் கல்வி கலாச்சார ஒத்துழைப்புக்காகவும் உழைக்கவேண்டும்.

3. ஆண், பெண் என்ற பேதமின்றியும், ஜாதி, மத, மொழி வேறுபாடில்லாமலும், எல்லோருக்கும் மனித உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் கிடைக்கும்படி செய்வதோடு, அவைகளை உலகிலுள்ள எல்லா மக்களும் மதித்து நடக்கும்படியும் கண்காணிப்பது முக்கியம்.

பகுதி 56.

55-ம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்காக, எல்லா அங்கத்தினர்களும், தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் தங்களாலியன்ற உதவியை, ஸ்தாபனம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில், அளிப்பதாய் வாக்குறுதி செய்கின்றனர்.

பகுதி 57.

1. பலதரப்பட்ட விசேஷ ஏஜன்ஸிகளும், பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி, சுகாதார, மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் சர்வதேச பொறுப்புடையனவாய், சர்வதேச ஒப்பந்தங்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவைகள் 63-ம் பகுதியில் சொல்லியுள்ள நிபந்தனைகளின்படி ஐக்கிய நாடுகளுடன் உறவுகொள்ளும்.

2. அம்மாதிரி ஐக்கிய நாடுகளுடன் உறவு கொண்டுள்ள ஏஜன்ஸிகளை இனி **விசேஷ ஏஜன்ஸிகள்** என்று குறிப்பிடப்படும்.

பகுதி 58.

விசேஷ ஏஜன்ஸிகளின் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக, ஸ்தாபனம் தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்.

பகுதி 59.

ஸ்தாபனத்திற்கு உசிதம் என்று தோன்றும் சந்தர்ப்பங்களில், 55-ம் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற நோக்கங்களை அடைவதற்காக, புது விசேஷ ஏஜன்ஸிகளை ஏற்படுத்த ஸ்தாபனம் விரும்பினால், சம்மந்தப்பட்ட நாடுகளுடன் அது பேச்சு வார்த்தைகளைத் தொடங்கும்.

பகுதி 60.

இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்தாபனத்தின் வேலைகள் சரிவர நடக்கின்றனவா என்று கவனிக்கும்பொறுப்பு, பொதுச்சபையின் வேலையாகும். மேலும் பொதுச் சபையின் அதிகார அனுமதியின்பேரில் பொருளாதார சமூக சபையையும் கவனிக்கலாம். இந்தக் காரியத்திற்காக, பொருளாதார சமூக சபைக்கு 10-ம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அத்தியாயம் 10

பொருளாதார சமூக சபை

அமைப்பு

பகுதி 61.

1. ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களிலிருந்து பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டுப் பேர்களைக் கொண்டது பொருளாதார சமூக சபை எனப்படும்.

2. மூன்றும் பாராவில் சொல்லியுள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு வருஷமும் ஆறு அங்கத்தினர்கள், பொருளாதார சமூக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் மூன்று வருஷ காலத்திற்கு அங்கத்தினர்களாக இருக்கலாம். அக்கால முடிவிற்குப் பின்னர் விலக வேண்டிய ஒரு அங்கத்தினர், மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதியுள்ளவர் ஆவர்.

3. முதல் தேர்தலில் போருளாதார சமூக சபைக்கு 18 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களில் ஆறு அங்கத்தினர்களின் பதவிக்காலம் முதல் வருஷத்துடனேயே முடிவு பெறும். மற்றும் ஆறு அங்கத்தினர்களின் பதவிக் காலம் இரண்டு வருஷங்களுடன் முடிவு பெறும். இதற்கான ஏற்பாடுகளைப் பொதுச் சபை செய்யும்.

4. பொருளாதார சமூக சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பிரதிநிதி உண்டு.

வேலைகளும் அதிகாரங்களும்

பகுதி 62.

1. சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி, சுகாதார துறைகளிலும், மற்றும் சம்பந்தப்பட்ட வேறு துறைகளிலும், பொருளாதார சமூக சபை ஆராய்ச்சிகளைச் செய்து அல்லது தொடங்கி, தன்னுடைய முடிவுகளைத் தெரிவிக்கும். மேலும் அவ்விஷயங்களைப்பற்றி பொதுச்சபைக்கோ, ஐக்கிய நாடுகள் அங்கத்தினர்களுக்கோ, அல்லது சம்பந்தப்பட்ட விசேஷ ஏஜன்ஸிகளுக்கோ தன் சிபார்சுகளைச் செய்யும்.

2. எல்லோருக்கும் அடிப்படை சுதந்திரங்களும் மனித உரிமைகளும் கிடைக்கும்படி செய்வதோடு, எல்லா மக்களும் அவைகளை மதித்து நடப்பதற்கான வழிகளில் தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்.

3. தன்னுடைய வரம்பிற்குட்பட்ட விஷயங்களில் விவாதங்கள் நடத்துவதற்காக, ஐக்கிய நாடுகளின் விதிகளின்படி, சர்வதேச மகாநாடுகளைக் கூட்டும்.

பகுதி 63.

1. 57-ம் பகுதியில் குறிப்பிட்டுள்ள ஒரு ஏஜன்ஸியுடன், பொருளாதார சமூக சபை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். அவ்வொப்பந்தங்களில் ஐக்கிய நாடுகளுடன் அந்த ஏஜன்ஸி உறவு கொள்ள வேண்டிய முறைகளும் விளக்கப்படும்.

2. விசேஷ ஏஜன்ஸிகளுடன் இச்சபை பேச்சு வார்த்தைகள் நடத்தி அவைகளுக்குத் தன்னுடைய சிபார்சுகளைச் செய்தும், பொதுச் சபைக்கும் ஐ.நா. அங்கத்தினர்களுக்கும் சிபார்சுகளைச் செய்தும், அவர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஒன்று திரட்டும்.

பகுதி 64.

1. விசேஷ ஏஜன்ஸிகளிடமிருந்து சரியான காலங்களில் அறிக்கைகளை, பெறுவதற்காக தகுந்த நடவடிக்கைகளை பொருளாதார சமூக சபை எடுத்துக் கொள்ளும். தன்னுடைய சிபார்சுகளின் பேரிலும், தன் வரம்பிற்குள் வரும் விஷயங்கள் மீது பொதுச் சபை செய்த சிபார்சுகளின் பேரிலும், எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தான் தெரிந்து கொள்வதற்காக, அது, ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களுடனும், விசேஷ ஏஜன்ஸிகளுடனும், ஏற்பாடுகள் செய்து கொள்ளும்.

2. மேற் சொல்லிய விஷயங்களில் தன்னுடைய அபிப்பிராயத்தைப் பொதுச் சபைக்கு அறிவிக்கும்.

பகுதி 65.

பொருளாதார சமூக சபை, பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு வேண்டிய விவரங்களைத் தெரிவிப்பதோடு, அது விரும்பும் சந்தர்ப்பங்களில், தன்னாலியன்ற உதவிகளையும் செய்யும்.

பகுதி 66.

1. பொதுச்சபையின் சிபார்சுகளை செயலாக்கும் முறையில், தன் வரம்பிற்குள் வரும் வேலைகளைப் பொருளாதார சமூக சபை செய்யும்.

2. ஐ.நா. அங்கத்தினர்களின் வேண்டுதலின்பேரிலோ விசேஷ ஏஜன்ஸிகளின் விருப்பத்தின்பேரிலோ, பொதுச் சபையின் அனுமதி பெற்று, அது தன்னாலியன்ற உதவிகளைச் செய்யும்.

3. இந்த சாஸனத்தில் வேறு பகுதிகளில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள வேலைகளையும், பொதுச்சபை அதற்களிக்கும் வேலைகளையும் இச்சபை செய்யும்.

ஓட்டுச் செய்தல்

பகுதி 67.

1. பொருளாதார சமூக சபையில் அங்கத்தினர் ஒவ்வொரு வருக்கும் ஒரு ஓட்டு உண்டு.

2. சபையில் ஆஜராகி ஓட்டுச் செய்வோர்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் முடிவு செய்வதைப் பொருத்தே, பொருளாதார சமூக சபையில் விவாதத்திற்கு வரும் பிரச்னைகள் நிர்மாணிக்கப்படும்.

முறை

பகுதி 68.

மனித உரிமைகள் போஷிக்கப்பட, பொருளாதார சமூகத் துறைகளில், கமிஷன்களை, பொருளாதார சமூக சபை நியமிக்கும். மேலும் தன்னுடைய காரியங்கள் சரிவர நடைபெறுவதற்காக அவசியமான மற்ற கமிஷன்களையும் அது ஏற்படுத்தும்.

பகுதி 69.

ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டிற்கு, தான் விவாதிக்கும் விஷயங்களில் தனிப்பட்ட சம்பந்தமிருக்குமேயா னால், தன்னுடைய விவாதங்களில் கலந்துகொள்ள, அந்த நாட்டையும் பொருளாதார சமூக சபை அழைக்கும். அம் மாதிரி கலந்து கொள்ளும் நாடுகளுக்கு, அச் சபையில் ஓட் டுரிமை கிடையாது.

பகுதி 70.

தன்னுடைய நடவடிக்கைகளிலும், தன்னால் ஏற்படுத்தப் பட்டுள்ள கமிஷன்களின் நடவடிக்கைகளிலும், விசேஷ ஏஜன் ஸிகளின் பிரதிநிதிகள் ஓட்டுரிமையின்றி கலந்து கொள்ளவும், அதேபோல் தன்னுடைய பிரதிநிதிகள், விசேஷ ஏஜன்ஸி களின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கான வழிகளை, பொருளாதார சமூக சபை வகுக்கும்.

பகுதி 71.

தன்னுடைய வரம்பிற்குட்பட்ட விஷயங்களில், அதில் சம்பந்தமுள்ள சர்க்கார் ஆதிக்கத்திற்குட்படாத ஸ்தாபனங்களுடன் ஆலோசனைகள் நடத்துவதற்கான வழிகளை, பொருளாதார சமூக சபை செய்து கொள்ளும். இம்மாதிரி ஒப்பந்தங்கள், சர்வதேச ஸ்தாபனங்களுடனும், தேசீய ஸ்தாபனங்களுடனும், சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களுடனும் ஆலோசனைகள் நடத்திய பிறகே, செய்து கொள்ளப்படும்.

பகுதி 72.

1. தன்னுடைய நடைமுறை விதிகளுக்கான சட்டங்களை இயற்றிக் கொள்வதோடு, தன் தலைவரைப் பொறுக்கியெடுக்கும் வழியையும், பொருளாதார சமூக சபை தானே வகுத்துக் கொள்ளும்.

2. தன்னுடைய சட்டங்களில் சொல்லியுள்ள விதிகளின் படி, பொருளாதார சமூக சபை அவ்வப்போது கூடும். அதன் அங்கத்தினர்களில் பெரும்பான்மையானவர்கள் விரும்பினாலும் அச்சபையைக் கூட்டலாம்.

அத்தியாயம் 11

சுயாட்சி செய்துகொள்ளும் உரிமையில்லாத பிரதேசங்கள்பற்றிப் பிரகடனம்.

பகுதி 73.

சுயாட்சி செய்துகொள்ளும் உரிமையை அடையாத மக்கள் வசிக்கும் பிரதேசங்களின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ள, அல்லது, நிர்வாகத்திற்குப் பொறுப்பாளிகள் என்று கருதிக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்கள், இப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் தேவைகள் மிக அதிகமென்று

உணர்வதோடு, இச்சாஸனத்தில் சொல்லப்பட்டிருக்கும் சர்வ தேச அமைதியும் பாதுகாப்பும் அம்மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டியது தங்களுடைய கடமை யென்றும், அங்கு வாழும் மக்களின் நல்வாழ்வே தங்களின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டுமென்றும், உணர்கிறார்கள். இவைகளை ஒப்புக்கொள்வதோடு கீழ்க்காணும் லட்சியங்களுக்காகவும் பாடுபடுவார்கள்.

1. அங்கு வாழும் மக்களின் கலாச்சாரத்திற்குப் பாதகமின்றி, அவர்களின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வித் துறைகளில் முன்னேற்றமடையவும், நியாயமாக அவர்கள் நடத்தப்படவும், குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் பாடுபடுவார்கள்.

2. சுய அரசாங்கமடைவதற்கு வழிகோலவும், மக்களின் அரசியல் நோக்கங்களுக்கு தகுந்த வழிகளில் அனுமதியளிக்கவும், ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்களின் சூழ் நிலையைப் பொறுத்தும் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பொறுத்தும், சகல வழிகளிலும் அவர்களுக்கு உதவவும் வேண்டும்.

3. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் வளர்க்க வேண்டும்.

4. ஆக்க வேலைகளைச் செய்வதில் நன்முறைகளைக் கடைப்பிடிப்பதற்காகவும், ஆராய்ச்சித் துறையில் ஆதரவளிக்கவும், உசிதமெனக் கருதும் சந்தர்ப்பங்களில், இப் பகுதியில் கூறப்பட்டுள்ள பொருளாதார சமூக விஞ்ஞான நோக்கங்களை அடைவதற்காக விசேஷ சர்வதேச ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கவும் வேண்டும்.

5. 12, 13-ம் அத்தியாயங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்குப் பொறுத்தமான நாடுகள் தவிர மற்றபடி அவர்கள் பொறுப்பு வகிக்கும் நாடுகளில், பொருளாதார, சமூக,

கல்வி நிலைகள் பற்றிய புள்ளி விபர கணக்கையும் தொழில் நுணுக்கம் சம்பந்தமான எல்லா தகவல்களையும் ஒழுங்காக தலைமைகாரியதரிசிக்கு அனுப்பிவர வேண்டும். ஆனால் பாது காப்பு அல்லது அரசியல் சம்பந்த காரணங்களுக்காக இம் மாதிரி தகவல்கள் கொடுக்க வேண்டாம் என்று இருந்தால், அவைகளை அனுப்பவேண்டியதில்லை.

பகுதி 74.

இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களின் விஷயத்தில் அவர்களின் கொள்கை, ' சகோதர மனப்பான்மை என்ற அடிப்படையில், உலகிலுள்ள மற்றவர்களின் பொரு ளாதார, சமூக, வர்த்தக விஷயங்களில் நன்மைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், பாடுபடுவதேயாகும் ' என்று ஐக்கிய நாடுகளின் எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அத்தியாயம் 12

சர்வதேச தர்மகர்த்தா முறை

பகுதி 75.

ஐக்கிய நாடுகள் தன்னுடைய அதிகாரத்தின்கீழ் சர்வதேச தர்மகர்த்தா முறை ஒன்றை ஏற்பாடு செய்யும். தனிப்பட்ட ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுவதால் அதன் அதிகாரத்தின் கீழ் வரும் பிரதேசங்களை ஆட்சி புரியவும், மேற் பார்வை பார்க்கவும் இம்முறை உபயோகிக்கப்படும். இப் பிரதேசங்கள் ' தர்மஸ்தாபன பிரதேசங்கள் ' என்று இனி குறிப்பிடப்படும்.

பகுதி 76.

சாஸனத்தின் 1-ம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் நோக்கங்களையொட்டி, தர்மகர்த்தா முறையின் அடிப் படைக் கொள்கைகள் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

1. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் வளர்ப்பது.

2. தர்மஸ்தாபன பிரதேசங்களில் வாழும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி துறைகளில் அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும். அவர்கள் சுய ஆட்சி பெறுவதற்கும், மக்களின் பிரதேச சூழ்நிலையையும் விருப்பத்தையும் ஒட்டி, தர்மஸ்தாபன முறை ஒப்பந்தங்களில் கண்டுள்ள கட்டுதிட்டங்களுக்குட்பட்டு, அவர்கள் சுய அரசாங்கம் நியமித்துக்கொள்ளவோ அல்லது சுதந்திரமடையவோ எல்லோரும் முயலவேண்டும்.

3. ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி, ஜாதி, மத, மொழி வேறுபாடின்றி, எல்லோரும் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் மதித்து நடப்பதற்காகப் பாடுபட வேண்டும். மேலும் உலகில் மக்கள் ஒருவருக்கொருவர் ஆதாரப்பட்டே வாழ முடியும் என்பதையும் எல்லோரும் உணரும்படி சொல்ல வேண்டும்.

4. சமூக பொருளாதார வர்த்தக விஷயங்களில் ஐ.நா. அங்கத்தினர்களும் அவர்களின் குடிகளும் சமமாக நடத்தப்படவும், ஒரேவிதமான நியாயம் வழங்கவும் உறுதி கொடுக்க வேண்டும். மேலே சொல்லிய நோக்கங்களை அடைவதற்கு 80-ம் பகுதியில் சொல்லியுள்ள விதிகளுக்கு முரணில்லாமல் நடந்து கொள்ள வேண்டும்.

பகுதி 77.

1. கீழ் சொல்லிய வகைகளிலுள்ள நாடுகளில், தர்மகர்த்தா முறை ஒப்பந்தப்படி அம்முறையின் கீழ் கொண்டு வரப்படும் நாடுகளுக்கு தர்மகர்த்தா முறை செல்லுபடியாகும்.

(i) தற்போது "மாண்டேட்" முறையின் கீழ் இருக்கும் பிரதேசங்கள் ;

(ii) இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவாக எதிரிகளின் நாடுகளிலிருந்து கைப்பற்றப்படும் பிரதேசங்கள் ;

(iii) நாடுகளின் அரசாட்சிக்குப் பொறுப்பாளியானவர்களால், தர்மகர்த்தா முறை கீழ் கொண்டு வரப்படும் பிரதேசங்கள்.

2. மேற் சொல்லிய வகைகளில் எதுவும் தர்மகர்த்தா முறையின்கீழ் கொண்டு வரப்படலாம். அவைகளுக்கு என்ன கட்டு திட்டங்கள் வகுக்க வேண்டும் என்ற விஷயங்கள், பிற்பாடு செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில் சொல்ல வேண்டிய விபரங்களாகும்.

பகுதி 78.

ஐக்கிய நாடுகளில் அங்கத்தினர்களாயிருக்கும் நாடுகளுக்கு தர்மகர்த்தா முறை செல்லுபடியாகாது. அவைகளிடையே உறவுமுறை, சமதர்ம கொள்கையை அடிப்படையாக கொண்டு இருக்கும்.

பகுதி 79.

தர்மகர்த்தா முறையின் கீழ் கொண்டு வரப்படும் ஒவ்வொரு பிரதேசத்திற்கான விதிகளும், அவைகளுக்கு கொண்டு வரப்படும் மாறுதல்களும் திருத்தங்களும், சம்பந்தப்பட்ட நாடுகள் ஒப்புக்கொள்ளக் கூடியனவாய் இருக்க வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கும் நாடு "மாண்டேட்" முறையினால் சில பிரதேசங்களை ஆளும் உரிமை பெற்றிருந்தால், அவைகளும் மேலே சொல்லியவைக்குட்பட்டிருக்கவேண்டும். தவிரவும் 83, 85-ம் பகுதிகளில் சொல்லியுள்ளபடி அங்கீகாரமும் பெறவேண்டும்.

பகுதி 80.

(1) 77, 79, 81-ம் பகுதிகளில் சொல்லியுள்ள தனிப்பட்ட தர்மகர்த்தா முறை ஒப்பந்தங்கள் தவிர மற்றவகைகளில் தர்மகர்த்தா முறையின் கீழ்வரும் பிரதேசங்கள், அவ்வொப்பந்தங்களின் காலம் முடியும் வரையிலும், அங்கு வாழும் மக்களின் உரி

மையையோ, அல்லது சர்வதேச ஒப்பந்தங்களில் கலந்துகொள்வ திலுமோ ஐ.நா. அங்கத்தினர்களுக்கு கிடைக்கும் உரிமைகளை யோ, இந்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கும் எதுவும் எவ் வகையிலும் மாற்றாது.

(2) இந்தப் பகுதியில் 1-ம் பாராவில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள், " மாண்டேட் " முறையின்கீழ் கொண்டு வரப்படும் பிரதேசங்களுக்கான உடன்படிக்கைகளையோ அல்லது பேச்சு வார்த்தைகளையோ ஒத்திப் போடும் காரணமாகக் கொள்ளக் கூடாது. அதேபோல 17-ம் பகுதியில் சொல்லியுள்ளபடி. தர்ம கர்த்தா முறையின்கீழ் கொண்டுவரப்படும் பிரதேசங்களுக்கான உடன்படிக்கைகளையோ அல்லது பேச்சு வார்த்தைகளையோ ஒத் திப் போடும் காரணமாகக் கொள்ளக்கூடாது.

பகுதி 81.

தர்மகர்த்தா ஒப்பந்தத்தில், அதன்கீழ் கொண்டுவரப்படும் பிரதேசம் எவ்வகையில், யாரால் ஆளப்பட வேண்டும், என்பது குறிப்பிடப்படும். அங்கு ஆட்சி செலுத்தும் அதிகாரத்தை நிர் வகிக்கும் அதிகாரி என்று குறிப்பிடுவோம். அது ஒரு ஸ்தாப னமாகவோ, ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளா கவோ இருக்கலாம்.

பகுதி 82.

ஒவ்வொரு தர்மகர்த்தா ஒப்பந்தத்திலும் கேந்திர பிரதே சங்களும் கேந்திரமில்லாத பிரதேசங்களும் தனித்தனியே குறிப் பிடப்படும். ஒப்பந்தங்கள் ஒரு முழு பிரதேசத்திற்குமோ அல் லது பிரதேசத்தின் ஒரு பகுதிக்கோ செய்து கொள்ளலாம். அவைகள் 43-ம் பகுதியின் கீழ் செய்துகொண்டுள்ள விசேஷ ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களைப் பாதிக்காது.

பகுதி 83.

1. கேந்திர பிரதேசங்களுக்கு, சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுக ளின் எல்லா அலுவல்களையும் அவைகளுக்கான தர்மகர்த்தா

முறை ஒப்பந்தங்களை அங்கீகரிப்பதையும், அவைகளில் மாறுதல்கள் ஏற்படுத்துவதையும், பாதுகாப்புக் கௌன்ஸில் செய்யும்.

2. கேந்திர பிரதேசங்கள் என்று கருதப்படும் இடங்களில் வாழும் எல்லா மக்களுக்கும், 76-ம் பகுதியில் சொல்லப்பட்ட அடிப்படை தத்துவங்கள் பொருந்தும்.

3. தர்மகர்த்தா ஒப்பந்தங்களுக்குட்பட்டு, பாதுகாப்பு நிலைகளுக்கு பாதகமில்லாமல், அரசியல், பொருளாதாரம், கல்வி சமூகம் ஆகிய துறைகளில், கேந்திர பிரதேசங்களில், ஐக்கிய நாடுகளின் காரியங்களைத் தர்மகர்த்தா முறையின்கீழ் செய்வதற்கு, தர்மகர்த்தா சபையின் உதவியை, பாதுகாப்புக் கௌன்ஸில் உபயோகித்துக் கொள்ளும்.

பகுதி 84.

தர்மஸ்தாபன பிரதேசங்களை நிர்வகிக்கும் அதிகாரிகள், சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் துணை செய்வதில், அப்பிரதேசம் தன்னுடைய பங்கை சரிவர செலுத்துகிறதா என்பதைப் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். இந்த லட்சியத்தை அடைவதற்காக, நிர்வகிக்கும் அதிகாரிகள், இப் பிரதேசம் சம்பந்தப்பட்ட வரையில் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடமைகளுக்காகவும், உள்நாட்டின் தற்காப்புக்காகவும், அப் பிரதேசத்தில் நியாயமும் ஒழுங்கும் நிலைபெறுவதற்காகவும், அந்தப் பிரதேசத்திலிருந்து பெறக் கூடிய இச்சா சேவகப் படைகளையும் மற்ற உதவிகளையும் உபயோகித்துக் கொள்ளலாம்.

பகுதி 85.

1. கேந்திர ஸ்தானங்கள் என்று குறிப்பிடாத மற்ற பிரதேசங்களுக்கான தர்மகர்த்தா ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட காரியங்களை, அவைகளை அங்கீகரிப்பதும், மாற்றுவதும், திருத்துவதும் போன்ற ஐக்கிய நாடுகளின் எல்லா காரியங்களையும் பொதுச் சபையே செய்யும்.

2. பொதுச் சபையின் அதிகாரத்தின் கீழ் வேலைகளைச் செய்யும் தர்மகர்த்தா சபை, மேல் குறிப்பிட்ட பொதுச் சபையின் எல்லா காரியங்களிலும் அதற்கு உதவும்.

அத்தியாயம் 13

தர்மகர்த்தா சபை

அமைப்பு

பகுதி 86.

1. தர்மகர்த்தா சபையில் ஐக்கிய நாடுகளில் அங்கத்தினர்களான கீழ்க்கண்டவர்கள் இருப்பார்கள் :

(i) தர்மஸ்தாபன பிரதேசங்களை ஆளும் அங்கத்தினர்கள் ;

(ii) 23-ம் பகுதியில் தர்மஸ்தாபன பிரதேசங்களை நிர்வகிக்காத அங்கத்தினர்கள் என்று குறிப்பிட்டுள்ள நாடுகள் ;

(iii) தர்மகர்த்தா சபையில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையானது ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களிலிருந்து தர்மகர்த்தா பிரதேசங்களை நிர்வகிக்கும் நாடுகளென்றும், அப்படியில்லாத நாடுகள் என்றும் பொறுக்கப்பட்டு சமமாயிருப்பதற்காக, பொதுச் சபையால் மூன்று வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தின நாடுகள்.

2. தர்மகர்த்தா சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும், தனக்குப் பிரதிநிதியாக, விசேஷ நிபுணத்வமுடைய ஒருவரை அனுப்பலாம்.

வேலைகளும் அதிகாரங்களும்

பகுதி 87.

பொதுச் சபையும், அதன் அதிகாரத்தின் கீழ் தர்மகர்த்தா சபையும், தங்கள் காரியங்களை நிறைவேற்றுவதற்குப் பின் வரும் விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கும்.

1. நிர்வகிக்கும் அதிகாரிகள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை ஆராய்வார்கள்.

2. தனக்கு வரும் மனுக்களை பரிசீலித்து நிர்வகிக்கும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கும்.

3. நிர்வகிக்கும் அதிகாரிகளுடன் கலந்து கொண்டு, அவர்களுடன் முன்னேற்பாடு செய்து கொண்டு, தர்மஸ்தாபன பிரதேசங்களுக்கு குறிப்பிட்ட காலங்களில் செல்லுவார்கள்.

4. மேற்கூறிய நடவடிக்கைகளையும், தர்மஸ்தாபன ஒப்பந்தங்களுக்குட்பட்ட மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

பகுதி 88.

தர்மஸ்தாபன பிரதேசங்களில் வாழும் மக்களின் அரசியல் பொருளாதாரம், சமூகம், கல்வித் துறைகளில் முன்னேற்றம் பற்றி ஒரு கேள்வித்தாளை தர்மகர்த்தா சபை தயாரிக்கும். பொதுச் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட தர்மஸ்தாபன பிரதேசங்களை நிர்வகிக்கும் அதிகாரிகள், மேற்குறிப்பிட்ட கேள்வித் தாளுக்கு அனுசரணையாக தங்கள் வருஷாந்திர அறிக்கையைச் செய்வார்கள்.

ஓட்டுச் செய்தல்

பகுதி 89.

1. தர்மகர்த்தா சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு ஓட்டு உண்டு.

2. சபையில் ஆஜராகி ஓட்டுச் செய்யும் பெரும்பாலான அங்கத்தினர்களின் முடிவின்படியே தர்மகர்த்தா சபை முன்னால் வரும் பிரச்னைகள் தீர்மானிக்கப்படும்.

முறை

பகுதி 90.

1. தன்னுடைய நடைமுறை விதிகளுக்கான சட்டங்களை இயற்றிக்கொள்வதோடு, தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையையும் தர்மகர்த்தா சபை தானே வகுத்துக்கொள்ளும்.

2. அதன் சட்டங்களில் கூறியுள்ளபடி காலாகாலங்களில் தர்மகர்த்தா சபை கூடும். அதன் அங்கத்தினர்களில் பெரும் பாலானவர்கள் விரும்பும்போதும் அச்சபை கூடும்.

பகுதி 91.

உசிதமென்று தோன்றும் சந்தர்ப்பங்களில், பொருளாதார சமூக சபையின் உதவியையும், விசேஷ ஏஜன்ஸிகளின் உதவியையும், அவைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில், தர்மகர்த்தா சபை பெற்றுக்கொள்ளும்.

அத்தியாயம் 14

சர்வதேச நீதிமன்றம்

பகுதி 92.

ஐக்கிய நாடுகளின் நியாயம் வழங்கும் முக்கிய ஸ்தாபனம் சர்வதேச நீதிமன்றமாகும். இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றத்தின் சாஸனத்திற்குட்பட்டு, அது தன் வேலைகளைச் செய்யும். அந்த சாஸனம், சர்வதேச நிரந்தர நியாய ஸ்தலத்தின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. ஐ. நா. சாஸனத்தின் ஒரு பகுதியே "சர்வதேச நீதிமன்றத்தின் சாஸனம்" ஆகும்.

பகுதி 93.

1. ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்கள் எல்லோரும், ஐ.நா.வின் பிரதிநிதிகள் என்ற காரணத்தினாலேயே, சர்வதேச நீதி மன்றத்தின் சாஸனத்திற்கும் உட்பட்டவர்கள் ஆகிறார்கள்.

2. ஐ.நா.வில் அங்கத்தினரல்லாத ஒரு நாடும் சர்வ தேச நீதிமன்றத்தின் சாஸனத்திற்கு உட்படலாம். அதற்கான திட்டங்களை, பாதுகாப்புக் கௌன்ஸிலின் சிபார்சின் பேரில் பொதுச்சபை அவ்வப்போது தயாரிக்கும்.

பகுதி 94.

1. ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரான ஒவ்வொரு நாடும் தாங்கள் சம்பந்தப்பட்டுள்ள எல்லா வழக்குகளிலும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாக ஒப்புக் கொள்கின்றனர்.

2. வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருநாடு, நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு தன்கடமைகளைச் செய்யத் தவறினால், அவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள மற்றொரு நாடு, பாதுகாப்புக் கௌன்ஸிலில் தன் குற்றச்சாட்டை வெளியிடும். அதன்மீது, பாதுகாப்புக் கௌன்ஸில் அவசியமென்று கருதினால், நீதி மன்றத்தின் தீர்ப்பை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான சிபார்சுகளையோ அல்லது தான் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையோ தீர்மானித்து வெளியிடும்.

பகுதி 95.

தங்களுக்குள் முன்பே ஏற்படுத்திக்கொண்டுள்ள ஒப்பந்தங்களின்படியும், அல்லது இனி ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களின்படியும், தங்களுக்குள்ளேற்படும் சச்சரவுகளை, வேறு நீதிஸ்தலங்களில், ஐ.நா. அங்கத்தினர்கள் தீர்த்துக்கொள்வதை, இந்த சாஸனத்தில் சொல்லியுள்ள எதுவும் தடை செய்யாது.

பகுதி 96.

1. பொதுச் சபையோ அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலோ சர்வதேச நீதிமன்றத்திடம், சட்டசம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை கூறும்படி கேட்கலாம்.

2. பொதுச் சபையின் அதிகாரத்திற்குட்பட்டு, அதனுல் ஸ்தாபிக்கப்படும் ஐ.நா.வின் இதர கிளை ஸ்தாபனங் களும், விசேஷ ஏஜன்ஸிகளும், தங்கள் வரம்பிற்குட்பட்ட பிரச்னைகளில் சட்ட சம்பந்தமான விஷயங்களைப்பற்றி நீதிமன்றத் திடம், அதன் அபிப்பிராயங்களைக் கேட்கலாம்.

அத்தியாயம் 15

அலுவலகம்

பகுதி 97.

அலுவலகத்தில் ஒரு தலைமைக் காரியதரிசியும், ஸ்தா பனம் நடப்பதற்கான மற்ற ஊழியர்களும் இருப்பார்கள். பாதுகாப்புக் கௌன்ஸிலின் பேரில் பொதுச்சபையால் தலைமை காரியதரிசி நியமிக்கப்படுவார். அவரே ஸ்தாபனத்தின் பிரதம நிர்வாக உத்யோகஸ்தராவார்.

பகுதி 98.

பொதுச்சபை, பாதுகாப்புக் கௌன்ஸில், பொருளாதார சமூகசபை, தர்மகர்த்தா சபை ஆகியவைகளின் எல்லாக் கூட்டங் களிலும் தலைமைக்காரியதரிசி பொறுப்பேற்று, அந்த ஸ்தா பனங்களால் தனக்களிக்கப்படும் எல்லா வேலைகளையும் கவனிப்பார். ஸ்தாபனத்தின் நடவடிக்கை பற்றிய வரு ஷாந்திர அறிக்கையையும், பொதுச் சபைக்கு தலைமைக் காரிய தரிசியே செய்யவேண்டும்.

பகுதி 99.

சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலைக்க ஒட்டா மல் பயமுறுத்தும் சம்பவம் என்று தான் கருதும் எந்த நிலையையும் தலைமைக்காரியதரிசி பாதுகாப்புக் கௌன்ஸிலின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

பகுதி 100.

1. தங்கள் காரியங்களை நிறைவேற்றுவதில், தலைமைக் காரியதரிசியும், அவருடன் வேலை செய்யும் மற்ற ஊழியர்களும், எந்த அரசாங்கத்தினிடமிருந்தும் அல்லது ஸ்தாபனத்துக்குச், சம்பந்தமில்லாத, வேறு அதிகார வர்க்கத்தினிடமிருந்தும் எவ்விதமான குறிப்புகளையும், கேட்கவோ அல்லது பெறவோ கூடாது. அவர்கள் ஸ்தாபனத்தின் நற்பெயருக்குப் பொறுப்பாளிகள். அந்த அந்தஸ்திற்கு களங்கமேற்படும் எந்தக் காரியத்தையும் அவர்கள் செய்யக்கூடாது.

2. தலைமைக்காரியதரிசிக்கும் அவருடன் வேலை செய்யும் மற்ற ஊழியர்களுக்கும் உள்ள பொறுப்புகளின் சர்வதேச முக்கியத்வத்தை ஐ.நா. அங்கத்தினர்கள் உணர்கிறார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் கடமைகளினின்றும் வழுவும் வண்ணம், அவர்களிடத்தில் தங்களுடைய செல்வாக்கைச் செலுத்தி, தங்கள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில்லை என்று ஐ.நா. அங்கத்தினர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

பகுதி 101.

1. பொதுச்சபை தயாரிக்கும் திட்டங்களின்படியே தலைமைக்காரியதரிசி, தன்கீழ் வேலை செய்யும் ஊழியர்களை நியமிப்பார்.

2. பொருளாதார சமூக சபை, தர்மகர்த்தா சபை, ஐ.நா.வின் இதர கிளை ஸ்தாபனங்கள் இவைகளுக்கு வேண்டிய தகுந்த அதிகாரிகள் நிலையாக அமர்த்தப்படுவார்கள். இந்த அதிகாரிகளும் அலுவலகத்தின் ஒரு பகுதியினரே.

3. இவ்வதிகாரிகளைப் பொறுக்கும் விஷயத்தில் பிரதானமாகக் கவனிக்கவேண்டியதும் அவர்கள் வேலை செய்வதற்கான நிலைமைகளை நிர்ணயிப்பதில் முக்கியமாகத் தீர்மானிக்க வேண்டியதும் என்னவென்றால், அம்மாதிரி பொறுக்கியெடுக்கப்படுபவர்கள் நல்ல உழைப்பாளிகளாகவும், தகுதிவாய்ந்த

வர்களாகவும், பெருந்தன்மையுடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதுதான். உலகிலுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் பொறுக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையும் முக்கியமாக கவனிக்கவேண்டும்.

அத்தியாயம் 16

பலதரப்பட்ட விதிகள்

பகுதி 102.

1. இந்த சாஸனம் அமுலுக்கு வந்தபிறகு, ஐக்கிய நாடுகளில் அங்கத்தினரான நாடுகள் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளும் சர்வதேச ஒப்பந்தங்களும், விவரவில் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும். அலுவலகம் அவைகளை அச்சிட்டு, பிரசுரிக்கும்.

2. இந்தப் பகுதியில் 1-ம் பாராவில் சொல்லியுள்ளபடி தாக்கல் செய்யப்படாத எந்த உடன்படிக்கையையும் அல்லது சர்வதேச ஒப்பந்தத்தையும், சம்பந்தப்பட்ட நாடுகளில் எதுவொன்றும், ஐக்கிய நாடுகளின் எந்த கிளை ஸ்தாபனங்களிலும் தனக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ கொண்டுவரமுடியாது.

பகுதி 103.

இப்புதிய சாஸனத்தின்படி ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களுக்கு ஏற்படும் கடமைகளுக்கும், அவர்கள் முன்பே செய்து கொண்டுள்ள வேறு சர்வதேச ஒப்பந்தங்களினுல் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கடமைகளுக்கும், முரண்பாடு ஏற்படுமானுல், சாஸனத்தின்படி அவர்கள் கடமைகளென்னவோ, அவைகளே முதன்மை ஸ்தானம் பெறும்.

பகுதி 104.

தன்னுடைய காரியங்கள் சரிவர நடப்பதற்காகவும், தன்னுடைய நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவும், அவசியமான அதிகாரத்தை நியாயம் வழங்கும் முறையில், தன்னுடைய அங்கத்தினர்களின் ஒவ்வொரு பிரதேசங்களிலும், ஸ்தாபனம், ஏற்றுக்கொள்ளும்.

பகுதி 105.

1. தன்னுடைய அங்கத்தினர்களின் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும், தன்னுடைய நோக்கங்கள் கைகூடுவதற்காக, தனக்கு வேண்டிய சலுகைகளையும் பாதுகாப்பு உரிமைகளையும் ஸ்தாபனம் கைக்கொள்ளும்.

2. ஸ்தாபனத்திற்காக தாங்கள் செய்யும் காரியங்கள் சரிவர நடப்பதற்காக, ஐக்கிய நாடுகளின் அங்கத்தின நாடுகளின் பிரதிநிதிகளும், ஸ்தாபனத்தின் அதிகாரிகளும், மேலே சொல்லிய சலுகைகளையும் பாதுகாப்பு உரிமைகளையும் கைக்கொள்வார்கள்.

3. இப்பகுதியில் 1, 2-ம் பாராக்களில் சொல்லியுள்ள விஷயங்களை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான சிபார்சுகளை பொதுச்சபை செய்யும். அதற்காக ஐ.நா. அங்கத்தினர்களின் கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

அத்தியாயம் 17

தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகள்

பகுதி 106.

43-ம் பகுதியில் குறிப்பிடப்பட்டதுபோன்ற பிரத்தியேக உடன்பாடுகள் அமுலுக்கு வருவதற்குமுன், 42-ம் பகுதியில் தனக்குக்கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிர்வகிக்கலாம் என்று பாதுகாப்புக் கௌன்ஸிலுக்குத் தோன்றும்பொழுது, 1943-ம்

வருஷம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி மாஸ்கோ நகரில் நான்கு நாடுகளின் பிரகடனத்தில் கையெழுத்திட்ட நாடுகளும், பிரான்சும், அப்பிரகடனத்தின் 5-ம் பாராவில் சொல்லியுள்ள பிரகாரம், சர்வதேச அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதற்காக, ஸ்தாபனத்தின் பெயரால் ஒத்துழைப்பு நடவடிக்கைகளுக்காக, சந்தர்ப்பத்தை அனுசரித்து ஒருவரோ டொருவரும், ஐ.நா.வின் மற்ற அங்கத்தினர்களோடும் ஆலோசனைகள் செய்வார்கள்.

பகுதி 107.

இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கு எதிராக இரண்டாவது உலகயுத்தத்தில் கலந்துகொண்ட நாடுகளின் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை, அம்மாதிரி நடவடிக்கை யெடுக்க அவ்வரசாங்கங்களுக்கு அதிகாரமிருந்தால், இந்த சாஸனத்தில் சொல்லியுள்ள எதுவும் அந்த நடவடிக்கையை தடை செய்யவோ அல்லது தடுக்கவோ முடியாது.

அத்தியாயம் 18

திருத்தங்கள்

பகுதி 108.

இந்த சாஸனத்திற்குக் கொண்டுவரப்படும் திருத்தங்கள் பொதுச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரால் சாதகமாக வாக்குச் செய்யப்படவேண்டும். தவிரவும், ஐக்கியநாடுகளின் பாதுகாப்புக் கௌன்ஸிலிலுள்ள, நிரந்தர அங்கத்தினர்கள் உள்பட மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினரால் அவரவர்களின் அரசியல் திட்டங்களின்படி அங்கீகரிக்கப்படவேண்டும். அதன்பிறகு அத்திருத்தங்கள், ஐ.நா.வின் எல்லா அங்கத்தின நாடுகளுக்கும் பொருந்தி அமுலுக்கு வரும்.

பகுதி 109.

1. பொதுச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களும், பாதுகாப்புக் கௌன்ஸிலி லுள்ள எழு அங்கத்தினர்களும் ஓட்டுகள் செய்து தீர்மானிக்கும் ஒரு இடத்தில், ஒரு குறிப்பிட்ட தேதியில், ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களின் பொது மகாநாடு இந்த சாஸனத்தைப் பரிசீலனை செய்வதற்காகக் கூடும். அம்மகா நாட்டில் ஐ.நா. அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு ஓட்டு உண்டு.

2. அந்த மகாநாட்டில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத் தினர்கள் தங்கள் ஓட்டுகளின்மூலம் சிபார்சு செய்யும், இந்த சாஸனத்திற்கான திருத்தங்களெல்லாம், பாதுகாப்புக் கௌன் ஸிலிலுள்ள நிரந்தர அங்கத்தினர்கள் உட்பட, ஐக்கிய நாடு களின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளால், அவரவர்களின் அரசியல் விதிகளின்படி. அங்கீகரிக்கப்பட்டுவிட் டால், அதன்பிறகு அவைகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

3. இந்த சாஸனம் அமுலுக்கு வந்தபிறகு, பொதுச் சபையின் பத்தாவது வருஷக் கூட்டத்திற்கு முன்பாக, மேற் சொல்லியபடி ஒரு மகாநாடு நடக்கவில்லையேயானால், அம்மாதிரி ஒரு மகாநாட்டைக் கூட்டவேண்டும் என்கிற விஷயம் பொதுச் சபையின் அந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். பொதுச் சபையின் அங்கத்தினர்களில் பெரும்பாலோரும், பாதுகாப்புக் கௌன்ஸிலின் அங்கத்தினர்களில் எழு அங்கத்தினர்களும் தீர்மானித்தால், அம்மாதிரி ஒரு மகாநாடு நடைபெறும்.

அத்தியாயம் 19

அங்கீகரித்தலும் கையெழுத்திடலும்

பகுதி 110.

1. இந்த சாஸனம், இதில் கையெழுத்திட்டுள்ள எல்லா நாடுகளின் அரசாங்கங்களாலும் அவரவர் அரசியல் விதிகள்படி அங்கீகரிக்கப்படவேண்டும்.

2. அந்த அங்கிகாரங்கள் எல்லாம் அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டின் அங்கிகாரமும் மற்ற நாடுகளுக்கும் அறிவிக்கப்படும். ஸ்தாபனத்திற்குத் தலைமைக்காரியதரிசி நியமிக்கப்பட்டவுடன் அவர் பெயரையும் எல்லா நாடுகளுக்கும் அமெரிக்கா வெளியிடும்.

3. சீனக்குடியரசு, பிரான்சு, சோவியத் சோஷலிஸ்டுகளின் ஐக்கிய குடியரசு, கிரேட் பிரிட்டனும் வடக்கு அயர்லாந்தும் சேர்ந்த 'யுனைடெட் கிங்டம்' ஆகிய நாடுகளும், மற்றும் சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளில் பெரும்பான்மையான நாடுகளும் இச்சாஸனத்தை ஒப்புக்கொண்டு அவைகளின் அங்கிகாரங்களும் அமெரிக்க ஐக்கிய தேசத்திடம் சேர்க்கப்பட்டபிறகு, இந்த சாஸனம் அமுலுக்குவரும். அம்மாதிரி கிடைக்கப்பெற்ற அங்கிகாரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து குறிப்பெடுத்து, அமெரிக்க அரசாங்கம், சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள எல்லா நாடுகளுக்கும், அதன் பிரதிகளை அனுப்பும்.

4. இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள், சாஸனம் அமுலுக்கு வந்தபிறகு அதை அங்கிகாரம் செய்தால், அவர்களின் அங்கிகாரங்கள் எந்தத் தேதியில் அமெரிக்க அரசாங்கத்திடம் சேர்க்கப்படுகிறதோ, அந்தத் தேதியிலிருந்து அவர்கள் ஐக்கிய நாடுகளில் அங்கத்தினர்களாகிறார்கள்.

பகுதி 111.

இந்த சாஸனம் சீன, பிரஞ்சு, ரஷ்ய, ஆங்கில, ஸ்பானிஷ் ஆகிய பாஷைகளில் வெளியிடப்படும். அவைகள் எல்லாம் சம மதிப்பு வாய்ந்தவை. அவைகள் 'பாதுகாப்புக்காக, அமெரிக்க அரசாங்கத்திடம் விட்டுவைக்கப்படும். அவற்றின் அதிகார பூர்வமான பிரதிகள், அந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு, சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள மற்ற எல்லா நாடுகளுக்கும் அனுப்பப்படும்.

இவ்விதமாய்த் தீர்மானித்து, ஐக்கிய நாடுகளில் அங்கத்தினர்களான நாடுகளின் அரசாங்கங்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள், இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டிருக்கிறோம்.

1945-ம் வருஷம் ஜூன் மாதம் 26-ம் தேதி ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் கையெழுத்துச் செய்யப்பட்டது.

சர்வதேச நீதிமன்றத்தின் சாஸனம்

(ஐக்கிய நாடுகளின் சாஸனத்தை அங்கீகரிக்கும் நாடுகள், அந்தக் காரணத்தினாலேயே இந்த சாஸனத்தையும் அங்கீகரித்துக்கொண்டதாக ஆகிவிடுகிறது.)

பகுதி 1.

ஐக்கிய நாடுகளின் சாஸனப்படி, ஐக்கிய நாடுகளின் நியாயம் வழங்கும் முக்கிய ஸ்தாபனமாக சர்வதேச நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது இச்சாஸனத்தில் சொல்லப்பட்டுள்ள விதிகளுக்குக் கட்டுப்பட்டுத் தன் வேலைகளைச் செய்யும்.

அத்தியாயம் 1

நீதிமன்றத்தின் அமைப்பு முறை

பகுதி 2.

நீதிமன்றத்தில் பாரபக்ஷமில்லாத நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் ஜாதி வேறுபாடின்றி, உயர்ந்த கொள்கையுடைய மக்கள் கூட்டத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தங்கள் நாடுகளில் மிக உயர்ந்த அந்தஸ்துள்ள நீதிஸ்தல அதிகாரிகள் பீடத்திற்கு வேண்டிய சகல குணங்களும் பொருந்தியவர்களாகவும், சர்வதேச சட்டங்களில் மிக்க நிபுணத்வம் படைத்தவர்களாயும் அவர்கள் இருக்கவேண்டும்.

பகுதி 3.

1. நீதிமன்றத்தில் பதினைந்து அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

2. நீதிமன்றத்தின் அங்கத்தினர் என்ற காரணத்திற்காக ஒருவர், ஒரு நாட்டிற்கு மேற்பட்ட நாடுகளுக்குப் பிரஜையாயிருந்தால், சாதாரணமாக அவர் எந்த நாட்டில் வசித்து, தன்னுடைய அரசியல் உரிமைகளையும், பிரஜா உரிமைகளையும் செலுத்துகிறாரோ, அந்த நாடே அவருடைய நாடு என்று கருதப்படும்.

பகுதி 4.

1. சேகரிக்கப்பட்டுள்ள பெயர்களிலிருந்து, பொதுச் சபையும் பாதுகாப்புக் கௌன்ஸிலும், இந்நீதிமன்றத்தின் அங்கத்தினர்களை கீழ்கண்ட விதிகளுக்கு கட்டுப்பட்டுத் தேர்ந்தெடுப்பார்கள்.

2. ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்கள் மத்தியஸ்த தீர்ப்புக்கூறும் நிரந்தர நீதி ஸ்தலத்தில் பிரதிநிதித்துவம் பெறாமலிருந்தால், 1907-ம் வருஷத்தில் 'ஹேக் கன்வென்ஷ'னில், தங்கள் சர்வதேசத் தகராறுகளை சமாதானமான வழிகளில் தீர்த்துக்கொள்வதற்காக மத்தியஸ்த தீர்ப்புக்கூறும் நிரந்தர நீதி ஸ்தலத்தில் அங்கத்தினர்களுக்கு விதித்துள்ள விதிகளின்படியே, இக்காரியத்திற்காக, அவர்களின் அரசாங்கங்களால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய கூட்டங்கள் தக்க நபர்களை நியமிக்கும்.

3. இந்த சாஸனத்திற்கு மட்டும் கட்டுப்பட்டு, ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்காத ஒரு நாடு, நீதிமன்றத்திற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்றால், விசேஷ ஒப்பந்தம் இல்லாத காலங்களில், பாதுகாப்புக் கௌன்ஸிலின் சிபார்சின்பேரில், பொதுச் சபை அதற்கான விதிகளைச் செய்யும்.

பகுதி 5.

1. தேர்தல் தேதிக்கு, குறைந்தது மூன்று மாதத்திற்கு முன்பேனும் ஐக்கிய நாடுகளின் தலைமைக்காரியதரிசி, மத்தியஸ்தத் தீர்ப்புக்கூறும் நிரந்தர நீதிஸ்தலத்தின் அங்கத்தினர்களில் இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கும், 4-ம் பகுதியில் 2-ம் பாராவின்கீழ் ஏற்படுத்தியுள்ள தேசீய கூட்டங்களின் அங்கத்தினர்களுக்கும், எழுத்துமூலமாக ஒரு வேண்டுதலை அனுப்புவார். அதில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், நீதிமன்றத்தில் அங்கத்தினராகப் பதவியேற்று காரியங்களைச் செய்யும் திறமையுள்ள நபர்களை அவர்கள் நியமிக்கலாம் என்று குறிப்பிடுவார்.

2. ஒவ்வொரு கூட்டமும் நான்கு பெயர்களை நியமிக்கலாம். அந்த நால்வரிலும் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள்தானிருக்கலாம். எக்காரணத்தை முன்னிட்டும், ஒரு கூட்டத்தாரால் நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கை, காலியாயிருக்கும் ஸ்தானங்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்கிற்கும் அதிகமாய் இருக்கக்கூடாது.

பகுதி 6.

தங்களுடைய நியமனங்களைச் செய்வதற்கு முன், தங்களுடைய உயர்தர நீதிமன்றத்தையும், சட்ட நிபுணர்களையும், சட்டங்களில் ஈடுபட்டுள்ள தேசீய கழகங்களையும், சட்டங்களில் திறமைபெற்ற சர்வதேச ஸ்தாபனங்களையும் கலந்துகொள்ளும்படி, ஒவ்வொரு கூட்டத்தாரும் சிபார்சு செய்யப்படுகிறார்கள்.

பகுதி 7.

1. அம்மாதிரி நியமிக்கப்பட்ட எல்லாப் பெயர்களையும் அக்ஷரக்கிரமத்தில் தலைமைக்காரியதரிசி ஒழுங்குபடுத்துவார். 12-ம் பகுதியில் 2-ம் பாராவில் சொல்லப்பட்டுள்ளபடி தவிர, இவர்களே தேர்தலுக்குத் தகுதியுடையவர்கள்.

2. இப்பெயர்களை பொதுச் சபைக்கும் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கும் தலைமைக்காரியதரிசி சமர்ப்பிப்பார்.

பகுதி 8.

பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையும் ஒன்றுக்கொன்று உறவு கொள்ளாமல், தனித்தனியாக, நீதிமன்றத்திற்கான அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும்.

பகுதி 9.

ஒவ்வொரு தேர்தலிலும் தேர்ந்தெடுப்பவர்கள் சில விஷயங்களை முக்கியமாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் எல்லா நற்குணங்களும் உடையவர்களாயிருக்கவேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையெல்லாம், ஒன்று சேர்த்துப்பார்க்கும்போது, பிரதான நாகரீகங்களுக்கும், பிரதான சட்டமுறைகளுக்கும் தகுந்த பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றும் கவனிக்க வேண்டும்.

பகுதி 10.

1. பொதுச் சபையிலும் பாதுகாப்புக் கௌன்ஸிலிலும் பெரும்பான்மையான ஓட்டுகளைப் பெறும் நபர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படுவார்கள்.

2. நீதிமன்றத்திற்கு நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காயினும், பகுதி 12-ல் சொல்லியுள்ள மகா நாட்டிற்கு அங்கத்தினர்களை நியமித்ததற்காயினும் பாதுகாப்புக் கௌன்ஸிலில் செய்யப்படும் ஓட்டு முறைகளில், நிரந்தர அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும், நிரந்தர அங்கம் வகிக்காத நாடுகளுக்கும் எந்த வித வித்தியாசமும் கிடையாது.

3. பொதுச் சபையிலும் பாதுகாப்புக் கௌன்ஸிலிலும் செய்யப்படும் ஓட்டுகளில், ஒரு தேசத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் பெருவாரியான ஓட்டுகளைப்பெற்றால், அவர்களில் வயது முதிர்ந்தவர் எவரோ அவரே தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கருதப்படுவார்.

பகுதி 11.

தேர்தல் காரணத்தை முன்னிட்டு நடைபெற்ற முதல் கூட்டத்திற்குப் பிறகும், ஓரிரு ஸ்தானங்கள் காலியாகவிடப் பட்டால், இரண்டாவதாகவும், அவசியமானுல் மூன்ருவதாக வும் தேர்தல் கூட்டங்கள் நடைபெறும்.

பகுதி 12.

1. மூன்ருவது கூட்டத்திற்குப் பிறகும் ஓரிரு ஸ்தானங்கள் காலியாகவே யிருந்தால், பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட மூன்று பேர்களும், பாதுகாப்புக் கௌன்ஸிலால் நியமிக்கப் பட்ட மூன்று பேர்களும் சேர்ந்து ஆறு பேர்கள் கொண்ட ஒரு கூட்டு மகாநாடு, பொதுச் சபை அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலின் வேண்டுதலின்பேரில் எந்த சமயத்திலும் ஏற்படுத்தப்படும். அவர்கள் பெரும்பாலான ஓட்டுகளின்மூலம் காலியாயிருக்கும் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் ஒவ்வொரு நபரைத் தேர்ந்தெடுத்து, பொதுச் சபைக்கும் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கும் அவர்கள் அங்கிகாரத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிப்பார்கள்.

2. இந்தக் கூட்டு மகாநாடு எல்லா குணங்களும் உடைய ஒரு நபரைத் தேர்ந்தெடுத்தால், அவரின் பெயர், ஏழாம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள பெயர்களில் சேர்க்கப்படாமலிருந் தாலும், இதற்குப் பிறகு அந்தப் பெயர்களுடன் இணைக்கப் படும்.

3. தன்னுடைய தேர்தல் முறையின்மூலம் தகுந்த நபரைத் தேர்ந்தெடுக்கமுடியாது என்று மேலே சொல்லிய கூட்டு மகாநாடு தீர்மானித்தால், நீதிமன்றத்தின் அங்கத் தினர்களாக இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே, பாதுகாப் புக் கௌன்ஸிலால் குறிப்பிடப்படும் ஒரு காலத்திற்குள், பொதுச் சபையிலோ அல்லது பாதுகாப்புக் கௌன்ஸிலிலோ ஓட்டுகள் பெற்றுள்ள நபர்களிலிருந்து, காலியாயிருக்கும் ஸ்தா னங்களுக்கான நபர்களைப் பொறுக்குவார்கள்.

4. நீதிபதிகள் செய்யும் ஓட்டுகள், சாதகபாதகமின்றி சமமாக இருந்தால், நீதிபதிகளில் வயது முதிர்ந்தவருக்கு இரண்டாவது முறையாக ஓட்டுச் செய்யும் உரிமை உண்டு.

பகுதி 13.

1. நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள் ஒன்பது வருஷ காலத்திற்குப் பதவி வகிக்கலாம். அக்காலமுடிவிற்குப் பின்னர் மீண்டும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இருந்தாலும், முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளுள், ஐந்து நீதிபதிகளின் பதவிக்காலம் மூன்று வருஷங்களுடன் முடிவடையும். மற்றும் ஐந்து நீதிபதிகளின் பதவிக்காலம் ஆறு வருஷங்களுடன் முடிவடைந்துவிடும்.

2. மேலே சொல்லியபடி முறையே மூன்ருவது ஆருவது வருஷங்களின் முடிவில், யாருடைய பதவிக்காலங்கள் முடிவடைகிறது என்பதை தலைமைக்காரியதரிசி குலுக்குச் சீட்டுகளின்மூலம் நிச்சயிப்பார்.

3. நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள், தங்கள் ஸ்தானங்கள் வேறு நபர்களால் நிரப்பப்படும் வரையிலும், தங்கள் காரியங்களைத் தொடர்ந்து செய்வார்கள். வேறு நபர்கள் நியமிக்கப்பட்டுவிட்ட காலங்களிலும், தாங்கள் விசாரிக்க ஆரம்பித்துவிட்ட வழக்குகளைப் பூராவாக விசாரித்து முடித்துவிட்டுத் தான் பதவியிலிருந்து விலகுவார்கள்.

4. நீதிமன்றத்தின் அங்கத்தினர்களில் ஒருவர், ராஜிஞமா செய்ய விரும்பினல், அவரின் ராஜிஞமாவை தலைமைக் காரியதரிசிக்கு நீதிமன்றத்தின் தலைவர்மூலமாக அனுப்ப வேண்டும். இக்கடிதம் எழுதப்பட்டவுடனே அந்த ஸ்தானம் காலியாகிறது.

பகுதி 14.

முதல் தேர்தலுக்குச் சொல்லப்பட்ட வழியிலேயே காலியான ஸ்தானங்களும் பூர்த்தி செய்யப்படும். ஆனல் அதற்குக்

கீழ்கண்ட விதி உண்டு. காலியான ஒரு மாதத்திற்குள், ஐந்தாம் பகுதியில் கூறியுள்ளபடி, அழைப்புகளை, தலைமைக் காரியதரிசி அனுப்ப ஆரம்பிப்பார். தேர்தல் தேதி பாது காப்புக் கௌன்ஸிலால் தீர்மானிக்கப்படும்.

பகுதி 15.

பதவிக்காலம் முடிவடையாத ஒரு அங்கத்தினருக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்படும், நீதிமன்றத்தின் மற்றொரு அங்கத்தினர், தன்னுடைய முன்னவர் எவ்வளவு காலத்திற்குப் பதவியில் இருந்திருப்பாரோ, அந்தக் காலம் வரையில்தான் பதவி வகிக்கலாம்.

பகுதி 16.

1. நீதிமன்றத்தின் அங்கத்தினர்களில் எவரும் அரசியல் அல்லது நிர்வாகப் பொறுப்புகளிலோ அல்லது வேறு வேலைகளிலோ கலந்துகொள்ளக்கூடாது.

2. இவ்விஷயத்திலேற்படும் சந்தேகங்களெல்லாம், நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே முடிவு செய்யப்படும்.

பகுதி 17.

1. நீதிமன்றத்தின் அங்கத்தினர்களில் எவரும், எந்த வழக்கிலும் ஏஜண்டுகளாகவோ, வக்கீல்களாகவோ, ஆலோசகர்களாகவோ பங்குபெறக்கூடாது.

2. எந்த அங்கத்தினரும், தாம் முன்பே ஏஜண்டாகவோ, வக்கிலாகவோ, வழக்கின் ஒருதரப்பாருக்குப் பாடுபட்டிருந்தாலும் அல்லது ஒரு தேசீய நீதிமன்றத்திலோ அல்லது சர்வதேச நீதி ஸ்தலத்திலோ அங்கத்தினராக இருந்திருந்தாலும், விசாரணைக் கமிட்டியில் பங்கெடுத்துகொண்டிருந்தாலும், அல்லது வேறு எவ்வகையிலேனும் அவ்வழக்குடன் தொடர்பு கொண்டிருந்தாலும், அவ்வழக்குப்பற்றிய விசாரணையில் கலந்துகொள்ளக்கூடாது.

3. இவ்விஷயத்தில் ஏற்படும் சந்தேகங்களெல்லாம் நீதிமன்றத்தாலேயே முடிவு செய்யப்படும்.

பகுதி 18.

1. நீதிமன்றத்தில் அங்கத்தினராயிருக்கும் எவரும், மற்ற நீதிமன்ற அங்கத்தினர்களால், எல்லாவித தகுதியும் உடையவரல்ல என்று ஒருமுகமாகத் தீர்மானிக்கப்பட்டாலன்றி, அவர் தம் அங்கத்தின பதவியினின்றும் விலக்கப்படமாட்டார்.

2. இதுபற்றிய ஒரு குறிப்பை ரிஜிஸ்ட்ரார் தலைமைக் காரியதரிசிக்கு அனுப்புவார்.

3. இந்த அறிக்கையே ஸ்தானம் காலியாகிவிட்டது என்பதை அறிவிக்கிறது.

பகுதி 19.

நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள், நீதிமன்றத்தின் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது, அயல் நாட்டுத் தூதர்களுக்குள்ள உரிமையும், பாதுகாப்பும், பெறுவார்கள்.

பகுதி 20.

நீதிமன்றத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும், தம் பதவியை ஏற்றுக்கொள்ளுமுன், தம்முடைய அதிகாரங்களை பாரபக்ஷமின்றியும், தம் மனசாட்சிக்கு விரோதமில்லாமலும், உபயோகப்படுத்துவாரென, எல்லோர் முன்னிலையிலும் உறுதியளிப்பார்கள்.

பகுதி 21.

1. நீதிமன்றம் தன் தலைவரையும் உப தலைவரையும் மூன்று வருஷகாலம் பதவிவகிக்கத் தேர்ந்தெடுக்கிறது. அதன் பிறகு மீண்டும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்.

2. தன்னுடைய 'ரிஜிஸ்ட்ராரை' நீதிமன்றம் தேர்ந்தெடுத்துக்கொள்வதோடு, இதர அவசியமான அதிகாரிகளை தேர்ந்தெடுக்கும் முறையையும் அதுவே தீர்மானிக்கிறது.

பகுதி 22.

1. நீதிமன்றத்தின் நிலையான ஸ்தலம் ஹேக் (Hague) பட்டிணமாகும். ஆனால் தன்னுடைய காரியங்கள் சரிவர நடப்பதற்காக தகுதி என்று கருதும் வேறு இடங்களில் அமர்ந்தும் தன் வேலைகளை அது செய்யும்.

2. நீதிமன்றத்தின் தலைவரும், 'ரிஜிஸ்ட்ராரும்' நீதிமன்றத்தின் நிலையான வாசஸ்தலத்தில் தங்குவார்கள்.

பகுதி 23.

1. நீதிமன்றம் எல்லாக் காலங்களிலும் தன் வேலைகளைச் செய்யும். அதற்கென விடுமுறை காலங்களும் உண்டு. விடுமுறைகள் ஆரம்பமாகும் தேதியும், விடுமுறைகளின் கால அளவுகளும் நீதிமன்றத்தால் நிர்மானிக்கப்படும்.

2. நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள் அவ்வப்போது விடுமுறைகள் எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய சொந்த நாட்டிற்கும் ஹேக் பட்டிணத்திற்குமுள்ள தூரத்தை மனதில்கொண்டு, அவர்களின் விடுமுறை காலமும், விடுமுறை ஆரம்பமாகும் தேதியும் கணக்கிடப்படும்.

3. நீதிமன்றத்தின் அங்கத்தினர்கள் நீதிமன்றத்தின் வேலைகளிலேயே தங்கள் நேரத்தை செலவு செய்யக் கடமைப் பட்டவர்கள். ஆனால் அவர்கள் விடுமுறையில் இருந்தாலும், உடல் நிலை பாதிக்கப்பட்டதால் வரமுடியாமலிருந்தாலும், வேறு விசேஷ காரணங்களினால் பாதிக்கப்பட்டு தடுக்கப்பட்டிருந்தாலும் அவைகளை நீதிமன்றத்தின் தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.

பகுதி 24.

1. சில குறிப்பிட்ட காரணங்களால் நீதிமன்றத்தில் விசாரணைக்குவரும் ஒரு வழக்கில் தான் பங்கெடுத்துக்கொள்ள முடியாதென, நீதிமன்றத்து அதிகாரிகளில் ஒருவர் கருதினால், அவர் உடனே தலைவருக்கு அதை அறிவிக்க வேண்டும்.

2. சில விசேஷ காரணங்களினால் நீதிமன்றத்தின் அங்கத்தினர்களில் ஒருவர், ஒரு குறிப்பிட்ட வழக்கில் அமர்ந்து தீர்ப்பு அளிக்கக்கூடாதென்று தலைவர் கருதினால், அதன்படி தலைவர் அவ்வங்கத்தினருக்குச் சொல்லவேண்டும்.

3. எதேனும் ஒரு வழக்கில் நீதிமன்றத்தின் அங்கத்தினர்களில் ஒருவருக்கும் தலைவருக்கும் அபிப்பிராயபேதமிருந்தால், அவ்விஷயம் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே முடிவு செய்யப்படும்.

பகுதி 25.

1. சாஸனத்தில் வேறு விதமாகக் கூறப்படாதபோது நீதிமன்றத்தில் அங்கத்தினர்கள் அனைவரும் அமர்வார்கள்.

2. நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை எந்த சமயத்திலும் பதினொன்றுக்கும் குறைந்துவிடாதபடி, மீதி உள்ள நீதிபதிகளை ஒருவர் அல்லது அதற்கு மேலும் அதிகமானவர்களை வழக்குகளை விசாரிக்க அமர்வதிலிருந்தும் தவிர்த்து, அவர்களுக்கு விடுமுறையளிக்க நீதிமன்றத்தின் சட்டங்கள், இடமளிக்கின்றன.

3. நீதிமன்றத்தில் வரும் வழக்குகளை விசாரிக்கக் குறைந்தது ஒன்பது நீதிபதிகளாவது இருக்கவேண்டும்.

பகுதி 26.

1. வெவ்வேறு வகைப்பட்ட வழக்குகளை விசாரிக்க, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்டதாய், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட "சேம்பர்களை" (Chambers) நீதிமன்றம் ஏற்படுத்தும். நீதிபதிகள் அதன்படி பிரிந்து அமர்வார்கள். உதாரணமாக, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென்று ஒன்றும், போக்குவரத்து விஷயங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை விசாரிக்க மற்றொன்றும் நிறுவப்படலாம்.

2. ஒரு குறிப்பிட்ட வழக்கை விசாரிக்க, எந்த சமயத்திலும் ஒரு தனி சேம்பரை நீதிமன்றம் நியமிக்கும். அந்த சேம்பரில் எவ்வளவு நீதிபதிகள் அமரவேண்டும் என்பதை, சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களின் அங்கீகாரத்தின்பேரில் நீதிமன்றம் தீர்மானம் செய்யும்.

3. வழக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பார்களும் விரும்பும்போது, அவர்களின் வழக்கு, இந்தப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தனி சேம்பர்களால் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

பகுதி 27.

26, 29-ம் பகுதிகளில் குறிப்பிட்டுள்ள சேம்பர்களால் அளிக்கப்படும் தீர்ப்புகள், நீதிமன்றத்தால் அளிக்கப்பட்டதாகவே கருதப்படும்.

பகுதி 28.

26, 29-ம் பகுதிகளில் சொல்லப்பட்டுள்ள சேம்பர்கள், சம்பந்தப்பட்ட கட்சிகளின் அங்கீகாரத்தின்பேரில், ஹேக் பட்டிணத்தைத் தவிர வேறு இடங்களில் அமர்ந்தும் வழக்குகளை விசாரிக்கலாம்.

பகுதி 29.

நீதிமன்றத்தின் வேலைகள் சரிவர நடப்பதற்காக, ஒவ்வோரு வருஷமும் ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு சேம்பரை நீதிமன்றம் ஏற்படுத்தும். அது, வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் வேண்டுதலின்பேரில், வாக்கு பதிவு செய்யாமலே வழக்குகளை விசாரித்து முடிவு செய்யும். மேலும் நீதிபதிகளாக அமர்ந்து வேலைகளைச் செய்ய முடியாதவர்களை மாற்றுவதற்காக இன்னும் இரு நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பகுதி 30.

1. தன் காரியங்களைச் செவ்வனே செய்வதற்கு வேண்டிய சட்டங்களை நீதிமன்றம் தயாரித்துக்கொள்ளும். உதாரணமாக வழக்குகள் விசாரிக்கப்படவேண்டிய முறைகளை நிர்மாணிக்கும்.

2. "உதவியாளர்"கள் (Assessors) நீதிமன்றத்தின் மற்ற அங்கத்தினர்களுடன் அமர்வதையோ, சேம்பர்களுடன் சேர்ந்து அமர்வதையோ நீதிமன்றத்தின் சட்டங்கள் தடுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது.

பகுதி 31.

1. நீதிமன்றத்தில் விசாரணைக்குவரும் வழக்கில், வழக்கில் சம்பந்தப்பட்டவர்களின் நாடுகளிலிருந்து வந்த நீதிபதிகள் அமர உரிமை உண்டு.

2. ஒரு நீதிபதியை, வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளில் ஒன்றின் நாட்டைச் சேர்ந்தவர் என்பதற்காக நீதிமன்றம் பெஞ்சில் (Bench) அமர்த்துமேயானால், மற்றொரு கட்சியினர் தங்களுக்கென வேறு ஒருவரை நீதிபதியாக அமரும்படி அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். அப்படிப்பட்டவர் 4, 5-ம் பகுதிகளில் சொல்லியுள்ள தேர்தல் ஜாப்தாவிலுள்ள நபர்களிலிருந்து, பொதுவாகப் பொறுக்கப்படுவார்.

3. வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தேசங்களைச் சேர்ந்த நீதிபதிகளை, வழக்குகளை விசாரிக்க நீதிமன்றம் நியமிக்கவில்லையேயானால், இரு கட்சிக்காரர்களும் இப்பகுதியில் 2-ம் பகுதியில் கூறியுள்ள விதத்தில் நீதிபதியைப் பொறுக்க ஆரம்பிப்பார்கள்.

4. இப்பகுதியில் கூறப்பட்டுள்ள விஷயங்கள், 26, 29-ம் பகுதிகளில் சொல்லியுள்ள வழக்குகளுக்கும் பொருந்தும். அம்மாதிரி சமயங்களில், சேம்பரில் உள்ள நீதிமன்றத்தின்

அங்கத்தினர்கள் ஒருவரை அல்லது இருவரை, வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தேசங்களைச் சேர்ந்த நீதிபதிகளுக்கோ, அல்லது அவர்கள் அமர வசதியில்லாமலிருந்தால், அக்கட்சிக்காரர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வேறு நீதிபதிகளுக்கோ, தங்கள் ஆசனங்களை அளிக்கும்படி நீதிமன்றத்தலைவர் கேட்டுக்கொள்வார்.

5. ஒரு வழக்கில் ஒரே மாதிரியான முடிவை விரும்பும் பல கட்சிக்காரர்கள் இருந்தால், மேற்சொல்லப்பட்ட விதிகளுக்காக அவர்கள் எல்லோரும் ஒரே கட்சியினராகக் கருதப்படுவார்கள். இவ்விஷயத்தைப்பற்றிய சகல சந்தேகங்களும் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே முடிவு செய்யப்படும்.

6. இந்தப் பகுதியில், 2, 3, 4-ம் பாராக்களில் சொல்லியுள்ளபடி பொறுக்கப்பட்ட நீதிபதிகள், இந்த சட்டங்களின் 2, 17 (பாரா 2), 20, 24-ம் பகுதிகளில் சொல்லியுள்ள குணதசியங்களைக் கொண்டும் விதிகளுக்குட்பட்டும் நடப்பார்கள். அவர்கள் தங்களுடைய சக நீதிபதிகளுடன், நியாயமான தீர்ப்பை வழங்குவதில் பங்கெடுத்துகொள்வார்கள்.

பகுதி 32.

1. நீதிமன்றத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் வருஷ சம்பளம் பெறுவார்கள்.

2. நீதிமன்றத்தின் தலைவர் விசேஷ உதவி பணமும் வருஷா வருஷம் பெறுவார்.

3. உபதலைவர், தலைவராகப் பொறுப்பேற்கும் ஒவ்வொரு நாளுக்கும் விசேஷ உதவிப்பணம் பெறுவார்.

4. நீதிமன்றத்தின் அங்கத்தினராயில்லாமல், 31-ம் பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகள், தாங்கள் நீதிமன்றத்தின் வேலைகளைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் விசேஷ சம்பளம் (படிப்பணம்) பெறுவார்கள்.

5. இந்த சம்பளம், உதவிப்பணம், படிப்பணம், இவைகள் பொதுச் சபையால் நிர்ணயிக்கப்படும். ஒருவர் பதவி வகிக்கும்போது இவைகளைக் குறைக்கவேண்டியதில்லை.

6. ரிஜிஸ்ட்ராரின் சம்பளம், நீதிமன்றத்தின் பிரேரணையின்பேரில் பொதுச் சபையால் நிர்ணயிக்கப்படும்.

7. பொதுச் சபை செய்யும் சட்டங்கள், நீதிமன்றத்தின் அங்கத்தினர்களுக்கும், ரிஜிஸ்ட்ராருக்கும், எந்தவிதமான நிலைகளில் உபகாரச்சம்பளம் கொடுக்கலாம் என்பதுபற்றியும், எந்தக் காலங்களில் நீதிமன்றத்தின் அங்கத்தினர்களுக்கும், ரிஜிஸ்ட்ராருக்கும், அவர்களின் போக்குவரத்து செலவுகளையும் கொடுக்கலாம் என்பதுபற்றியும் முடிவு செய்யும்.

8. மேலே சொல்லிய சம்பளங்கள், அலவன்ஸ்கள், படிப்பணம் இவைகள் ஒருவிதமான வரிகளுக்கும் உட்பட்டதல்ல.

பகுதி 33.

நீதிமன்றத்தின் பொருட் செலவுகள் எல்லாம் பொதுச் சபை தீர்மானிக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தியாயம் 2

நீதிமன்றத்தின் அதிகாரம்

பகுதி 34.

1. நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குவரும் வழக்குகளில் நாடுகள்தான் வாதிகளாகவும், பிரதிவாதிகளாகவும் இருக்கலாம்.

2. தன்னுடைய சட்டங்களுக்குட்பட்டும் அவைகளை அனுசரித்தும், நீதிமன்றம், தன்முன் விசாரணைக்கு வரும் வழக்கு

களைப்பற்றிய விவரங்களை, சர்வதேச பொது ஸ்தாபனங்களைக் கேட்கலாம். மேலும் அவைகளாகவே வலுவில் தரும் விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒரு சர்வதேச பொது ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்ட அடிப்படைகளைப்பற்றிய பிரச்னையோ, அல்லது அந்த ஸ்தாபனத்தினால் ஏற்படுத்தப்பட்ட சிறு ஸ்தாபனங்களைப்பற்றிய பிரச்னையோ, ஒரு வழக்காக நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டால், நீதிமன்றத்தின் சகல நடவடிக்கைகளையும், மற்ற வழக்குக்கு சம்பந்தப்பட்ட பத்திரங்களையும் பிரதிகளெடுத்து அப் பொது சர்வதேச ஸ்தாபனத்திற்கு, ரிஜிஸ்ட்ராரே அனுப்புவார்.

பகுதி 35.

1. இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்குத் தன் சேவையைச் செய்ய நீதிமன்றம் சித்தமாயிருக்கிறது.

2. மற்ற நாடுகளைப்பொறுத்தவரையில், அமுலிலிருக்கும் உடன்படிக்கைகளிலுள்ள விசேஷ விதிகளுக்கு கட்டுப்பட்டு பாது காப்புக் கௌன்ஸிலில் தீர்மானிக்கும் விதிகளுக்குட்பட்டு, நீதிமன்றம் தன் வேலைகளைச் செய்யும். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் அவ்விதிகள், சம்பந்தப்பட்ட நாடுகளை பாரபட்சம் காட்டும் நிலைகளில் வைக்கக்கூடாது.

3. ஐ.நா.வில் அங்கத்தினரல்லாத ஒருநாடு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தால், நீதிமன்றச் செலவுகளுக்காக அந்த நாடு எவ்வளவு பொருள் கொடுக்கவேண்டுமென்பதை நீதிமன்றம் தீர்மானம் செய்யும். அம்மாதிரி ஒருநாடு, ஏற்கனவே நீதிமன்றத்தின் செலவுகளில் ஒரு பாகத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், இந்த விதி அதனைக் கட்டுப்படுத்தாது.

பகுதி 36.

1. தன்னிடம் வரும் எல்லா வழக்குகளையும் விசாரிக்க நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு. சம்பந்தப்பட்ட நாடுகள்

கொண்டுவரும் வழக்குகளையும், ஐக்கிய நாடுகளின் சாஸனத்தில் விசேஷமாகச் சொல்லியுள்ள எல்லா விஷயங்களையும், உடன் படிக்கைகளையும், அமுலிலிருந்துவரும் வழக்கங்களையும் நீதி மன்றம் விசாரிக்கும்.

2. இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் எந்த சந்தர்ப்பத்திலும், இக்கடமைகளை ஒப்புக்கொள்ளும் வேறு நாடுகள் சம்பந்தப்பட்ட வரையில் விசேஷ உடன்படிக்கையின்றி யும், நியாயமான எல்லா சச்சரவுகளிலும் நீதிமன்றத்தின் பரிபாலன உரிமையை கீழ்க்கண்ட விஷயங்களில் ஒப்புக் கொள்வதாய்த் தெரிவிக்கின்றன.

(i) உடன்படிக்கை வாசகங்களை வியாக்யானம் செய்தல்.

(ii) சர்வதேச சட்டங்கள்பற்றிய பிரச்னைகள்.

(iii) ஒரு சம்பவத்தை நிரூபிப்பதன்மூலம் சர்வதேச கடமையிலிருந்தும் மற்றொரு நாடு தவறிவிட்டதை வெளியிடுதல்.

(iv) சர்வதேச கடமையிலிருந்து தவறியதற்காக செய்ய வேண்டிய நஷ்டஈடும் அதன் தன்மையும்.

3. மேலே சொல்லிய பிரகடனங்களை ஒருவித நிபந்தனை யுமின்றி செய்யலாம். அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட நாடுகள் உட்பட்டு நடக்கவேண்டும் என்று விதித்தும் வெளியிடலாம்.

4. அப்பிரகடனங்கள், ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியதரிசியிடம் பாதுகாப்புக்காக வைக்கப்படும். அவர் அதன் பிரதிகளையெடுத்து, இச்சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் ரிஜிஸ்ட்ராருக்கும் அனுப்புவார்.

5. சர்வதேச நிரந்தர நீதிஸ்தல சட்டங்களில் 36-ம் பகுதியின் கீழ் செய்யப்பட்ட பிரகடனங்கள் இன்னும் அமுலி லிருப்பதாக கருதப்பட்டால், இந்த சாஸனத்தில் சம்பந்தப்பட்ட

நாடுகளிடையே, அந்த ஒப்பந்தப்படி பாக்கியுள்ள காலத்திற்கு இந்த நீதிமன்றத்தின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டதாக கருதப்படும். அவைகளில் சொல்லப்பட்டுள்ள விதிகளையும் அனுஷ்டிக்கப்படும்.

6. ஒரு குறிப்பிட்ட வழக்கை விசாரிக்க நீதிமன்றத்திற்கு உரிமையுண்டா என்ற பிரச்னை எழும்போது, அதையும் நீதி மன்றமே தீர்மானிக்கும்.

பகுதி 37.

ஒரு உடன்படிக்கையின்படி அல்லது அமுலிலிருக்கும் ஒரு வழக்கத்தின்படி, இரு நாடுகளுக்குள்ளேற்படும் சச்சரவுகள் சர்வதேச சங்கம் நியமித்த ஒரு நீதி சபையாலோ (Tribunal) அல்லது சர்வதேச நிரந்தர நீதிஸ்தலத்தினாலோதான் தீர்க்கப் படவேண்டும் என்றிருந்தால், அந்த சச்சரவுகள், இந்த சாஸனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் சம்பந்தப்பட்டவரை யில், இந்த சர்வதேச நீதிமன்றத்தினாலேயே முடிவு செய் யப்படும்.

பகுதி 38.

1. சர்வதேச சட்டத்திற்குட்பட்டு தன்னிடம் வரும் வழக்கு களை நியாயமான முறையில் தீர்ப்பதற்கு நீதிமன்றம் பாடுபட வேண்டும். அதற்காகப் பின் வரும் விஷயங்களை அது ஆராயும்.

(i) சர்வதேச சம்பிரதாயங்கள்—பொதுவானவையும் குறிப்பானவையும். அவைகளால் வெளிப்படை யாக இரு நாடுகளும் ஒப்புக்கொள்ளும் சட்டங் கள்.

(ii) சர்வதேச வழக்கம்—சட்டத்தின் முக்யத்வம் அளிக் கப்பட்டுள்ள ஒரு பொது வழக்கம்.

(iii) நாகரீக மக்களால் கருதப்பட்ட சட்டக் கொள்கைகள்.

(iv) 59-ம் பகுதியில் கூறப்பட்ட ஷரத்துகளுக்குப் பங்க மில்லாமல், பல்வேறு நாடுகளிலும் இருந்து

நீதிஸ்தலத் தீர்ப்புகளையும், மகா பண்டிதர்களுடைய உபதேசங்களையும் சட்டங்களை நிர்ணயிப்பதற்கு உபகரணங்களாகக் கருதலாம்.

2. வழக்குகளில் சம்பந்தப்பட்ட நாடுகள் அனுமதித்தால், மேலே சொல்லப்பட்ட விதிகளுக்கு முக்யத்வம் அளிக்காமலும், நீதிமன்றம் வழக்குகளை விசாரிக்கலாம்.

அத்தியாயம் 3

முறை

பகுதி 39.

1. நீதிமன்றத்தின் நடைமுறை மொழிகள் பிரென்சு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளாகும். வழக்கில் சம்பந்தப்பட்ட நாடுகள், வழக்கை பிரென்சு மொழியில் நடத்தவேண்டுமென்று விரும்பினால், நீதிமன்றத்தின் தீர்ப்பும் அம் மொழியிலேயே வெளியிடப்படும். சம்பந்தப்பட்ட நாடுகள் தங்கள் வழக்கை ஆங்கில மொழியில் நடத்தவேண்டுமென்று விரும்பினால் நீதிமன்றத்தின் தீர்ப்பும் ஆங்கில மொழியிலேயே சொல்லப்படும்.

2. ஒரு குறிப்பிட்ட மொழியைத்தான் உபயோகிக்க வேண்டுமென்று ஒப்பந்த மேற்படாதபோது, அவரவர்கள் தங்கள் தங்கள் தாக்கல்களில் (Pleadings), அவர்கள் விரும்பும் மொழிகளையே உபயோகிக்கலாம். அப்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஆங்கிலம், பிரென்சு ஆகிய இரு மொழிகளிலும் கொடுக்கப்படும். இம்மாதிரி வெளியிடும் சந்தர்ப்பங்களில், எம்மொழியில் வெளியிட்டுள்ள தீர்ப்பு அதிகாரபூர்வமானது என்பதையும் நீதிமன்றம் அதே சமயம் வெளியிடும்.

3. வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரர் விரும்பிய போது, ஆங்கிலம் பிரென்சு இம்மொழிகளைத்தவிர வேறு மொழிகளை உபயோகிப்பதையும் நீதிமன்றம் அனுமதிக்கும்.

பகுதி 40.

1. ஒரு விசேஷ உடன்படிக்கையின் அறிவிப்பினுலேயோ, ரிஜிஸ்ட்ராருக்கு எழுதியனுப்பப்படும் ஒரு மனுவினுலேயோ, நீதிமன்றம் அவ்வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். ஒவ்வொரு மனுவிலும், வழக்கின் விவரமும், வழக்குக்கு சம்பந்தப்பட்டவர்களின் பெயரும் விலாசமும் கொடுக்கப்பட வேண்டும்.

2. அதன்பின் ரிஜிஸ்ட்ரார் அம்மனுக்களின் பிரதிகளை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்புவார்.

3. மேலும் நீதிமன்றத்திற்கு வந்து இவ்வழக்கு சம்பந்தமாக வாதாட உரிமையுள்ள மற்ற ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர்களுக்கும் அனுப்புவார்.

பகுதி 41.

1. சம்பந்தப்பட்ட நாடுகளின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக சில தற்காலிக முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று நீதிமன்றம் சந்தர்ப்பத்தையனுசரித்துத் தீர்மானம் செய்தால், அம்முறைகளைக் கைக்கொள்ளும்படி நாடுகளுக்குச் சொல்ல அதற்கு உரிமையுண்டு.

2. முடிவான தீர்மானத்தை நீதிமன்றம் வெளியிடும்வரையிலும், அவ்வப்போது சொல்லப்படும் முறைகள், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

பகுதி 42.

1. சம்பந்தப்பட்ட நாடுகள் நீதிமன்றத்திற்கு தங்களுடைய ஏஜண்டுகளை நியமித்து அனுப்பும்.

2. ஆலோசகர்களையும் வக்கீல்களையும் நீதிமன்றத்தில் உதவிக்காக அவர்கள் வைத்துக்கொள்ளலாம்.

3. ஏஜண்டுகள், ஆலோசகர்கள், வக்கீல்கள்—இவர்கள் தங்கள் வேலைகளைச் சுதந்திரமாகச் செய்வதற்கு நீதிமன்றத்தில், அவர்களுக்கு வேண்டிய சலுகைகளும் பாதுகாப்புகளும் உண்டு.

பகுதி 43.

1. இங்கு நடக்கும் விசாரணைகள் இரு வகைகளில் நடைபெறும்.—வாக்குகளை பதிவு செய்தல் மூலமாகவும், பதிவு செய்யாமல் விட்டுவிட்டு, முடிவு செய்தல் மூலமாகவும்.

2. பதிவு செய்து முடிவு செய்யும் வழக்குகளில், நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்ட மனுக்களும், செய்திகளும், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பியதற்கு அத்தாட்சியும், அவர்களின் பதில்களும் இருக்கும். மற்ற தஸ்தாவேஜுகளும் வழக்கிற்குச் சம்பந்தப்பட்ட பத்திரங்களும் இருக்கும்.

3. இவைகள் ரிஜிஸ்ட்ரார் குறிப்பிடும் ஒரு கால அளவிற்குள், விசாரணை நடக்கும்போது சுலபமாகத் தெரிந்து கொள்ளும்படியிருக்க, ஒழுங்காக வைத்திருக்க வேண்டும்.

4. ஒரு கட்சிக்காரர் கொடுத்துள்ள பத்திரத்தின் அதிகார பூர்வமான பிரதிகள் மற்றக் கட்சிக்காரர்களுக்கும் கொடுக்கப் படும்.

5. வாக்குகளைப் பதிவு செய்யாமலே தீர்மானிக்கப்படும் வழக்குகள், சாட்சிகளை விசாரிப்பதும், நிபுணர்களின் யோசனைகளைக் கேட்பதும், ஏஜண்டுகள், வக்கீல்கள், ஆலோசகர்கள் இவர்களின் வாதங்களை நீதிமன்றத்தில் கேட்பதும், அதன் பிறகு முடிவு செய்வதுமே ஆகும்.

பகுதி 44.

1. ஏஜண்டுகள், ஆலோசகர்கள், வக்கீல்கள் இவர்கள் தவிர வேறு மனிதர்களின் மீது ' நோட்டீஸ் ' கொடுக்கவேண்டியிருந்தால், அவர்கள் எந்த நாடுகளில் வசிக்கிறார்களோ, அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு நீதிமன்றம் விண்ணப்பித்துக் கொள்ளும்.

2. வழக்கில் தகுந்த சாட்சி சொல்பவர்களை வேறு நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கும்போதும் மேற் சொன்ன முறையையே கடைப்பிடிக்க வேண்டும்.

பகுதி 45.

நீதிமன்றத் தலைவரின் மேற் பார்வையிலேயே விசாரணை நடைபெறும். அவர் தலைமை வகிக்க முடியாத காலங்களில் உப தலைவர் அப் பதவியை வகிப்பார். இவருக்குமே தலைமை வகிக்க முடியாத சமயங்களில், பிரசன்னமாகியிருக்கும் நீதிபதிகளில் அனுபவம் முதிர்ந்தவர் எவரோ அவரே தலைமை வகிப்பார்.

பகுதி 46.

நீதிமன்றம் வேறு விதமாகத் தீர்மானிக்காதபோதும், வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகள் விசாரணையின்போது பொது மக்களை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்ட போதும் தவிர மற்ற சமயங்களில், இந் நீதிமன்றத்தின் விசாரணைகள் பகிரங்கமாகவே நடைபெறும்.

பகுதி 47.

1. ஒவ்வொரு விசாரணையின்போதும், நடவடிக்கைகளின் குறிப்பொன்று தயாரிக்கப்படும். அதில் ரிஜிஸ்ட்ராரும் தலைவரும் கையெழுத்திடுவார்கள்.

2. அப்படி இருவரும் கையெழுத்திட்டுள்ள குறிப்புகளே செல்லுபடியாகும்.

பகுதி 48.

வழக்குகள் நடத்தப்பட வேண்டிய முறைகளையும், ஒவ்வொரு கட்சியும் எவ்வளவு காலத்தை வாதங்களுக்காக எடுத்துக்கொள்ளலாமென்பதையும், சாட்சிகளை விசாரிப்பதும் மற்ற ஏற்பாடுகளையும் செய்வதற்கான உத்திரவுகளை நீதிமன்றம் வெளியிடும்.

பகுதி 49.

விசாரணை ஆரம்பமாகும் முன்பே, பத்திரங்களைப் பரிசீலனைக்காகக் கொடுக்கும்படியோ, விளக்கங்களை எழுதும்படியோ, ஏஜண்டுகளை நீதிமன்றம் கேட்கலாம். அவைகளுக்கு ஒரு

நாடு சம்மதப்பட்டு பதில் கூற மறுத்துவிட்டால், அதுபற்றிய ஒரு குறிப்பை நீதிமன்றம் குறித்துக்கொள்ளும்.

பகுதி 50.

வழக்கைத் தான் விசாரணை செய்யும்போது நீதிமன்றம் ஒரு நபரையோ, குழுவையோ, கழகத்தையோ, கமிஷனையோ, தான் தேர்ந்தெடுக்கும் ஒரு ஸ்தாபனத்தையோ, அவ்வழக்கி லுள்ள ஏதேனும் சிக்கலான பிரச்னைகளைப் பற்றி விசாரணை நடத்தும்படியோ அல்லது, அதனுடைய நிபுணத்வமுடைய முடி வைக் கூறும்படியோ கேட்கலாம்.

பகுதி 51.

30-ம் பகுதியில் குறிப்பிட்ட நீதிமன்றத்தின் நடை முறை சட்டங்களில் சொல்லியுள்ள ஷரத்துக்களின்படி, விசா ரணையின்போது சாட்சிகளையும் நிபுணர்களையும், முக்கியமான கேள்விகளை நீதிமன்றம் கேட்கலாம்.

பகுதி 52.

தான் குறிப்பிட்ட கால அளவிற்குள் நீதிமன்றம் தகுந்த சாட்சிகளையும் ருஜூக்களையும் பெற்றுவிட்டால், அதன் பிறகு ஒரு கட்சி செய்ய விரும்பும் எழுத்து மூலமான எந்த ருஜூக் களையும் அல்லது கூற விரும்பும் எந்த சாட்சியங்களையும், எதிர்க் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளாதபோது, நீதிமன்றம் ஒப்புக் கொள்ள மறுத்துவிடலாம்.

பகுதி 53.

1. சம்பந்தப்பட்ட கட்சிகளில் ஒன்று நீதிமன்றத்தில் ஆஜ ராகி தன் வழக்கைக் கூறத் தவறினால், அவ்வழக்கைத் தன் சார்பில் முடிவு செய்யும்படி எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கலாம்.

2. நீதிமன்றம் அவ்வாறு செய்வதற்கு முன்னால், 36, 37-ம் பகுதிகளில் சொல்லியுள்ளபடி தனக்கு அதிகாரம் இருக் கிறதா என்றும், எதிர்க்கட்சியின் வாதம் சட்டபூர்வமாகவும்

விஷயங்களை ஆலோசித்துப் பார்க்கும் பொழுதும் நியாயமானது தானு என்றும், சிந்தித்துப் பார்த்து முடிவு செய்து கொள்ள வேண்டும்.

பகுதி 54.

1. நீதிமன்றத்தில் ஏஜண்டுகளும், ஆலோசகர்களும், வக்கீல்களும் தங்கள் வாதங்களைக் கூறி முடித்த பிறகு, நீதி மன்றத் தலைவர் விசாரணை முடிந்துவிட்டதென்று அறிவிப்பார்.

2. நீதிபதிகள் தனியறைக்குச் சென்று, தீர்ப்புச் சொல்வதற்காக, யோசிப்பார்கள்.

3. நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் பகிரங்கமாக நடக்காது. அவைகள் ரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கும்.

பகுதி 55.

1. நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கும் நீதிபதிகளில் பெரும்பான்மையோரின் தீர்ப்பின்படியே, எல்லா வழக்குகளும் முடிவு செய்யப்படும்.

2. அங்கு செய்யப்படும் ஓட்டுகள், சாதக பாதகமின்றி, இரு பக்கத்திற்கும் சமமாக இருந்தால், நீதிமன்றத் தலைவரோ அல்லது அவருக்குப் பதிலாக அப்பதவி வகிக்கும் அங்கத்தினரோ, மீண்டுமொருமுறை ஓட்டுச் செய்யலாம்.

பகுதி 56.

1. நீதிமன்றத்தின் தீர்ப்பில், அம்மாதிரி தீர்ப்பு அளிக்கப் பட்டதன் காரணங்கள் சொல்லப்பட்டிருக்கும்.

2. அதில் அம்முடிவிற்குச் சாதகமான நீதிமன்றத்து நீதிபதிகளின் பெயர்களும் இருக்கும்.

பகுதி 57.

ஒரு நீதிபதியின் தீர்ப்பு, மற்ற நீதிபதிகளின் ஒன்றுபட்ட அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாருகவிருந்தாலோ அல்லது

சிறிதேனும் மாறுபட்டிருக்குமானலோ, அந்த நீதிபதிக்கு தன்னுடைய தீர்ப்பை தனியாக வெளியிடும் உரிமையுண்டு.

பகுதி 58.

நீதிமன்றத்தின் தீர்ப்பில், அதன் தலைவரும், ரிஜிஸ்ட்ராரும் கையெழுத்திடுவார்கள். அத்தீர்ப்பு, வழக்கில் சம்பந்தப்பட்ட ஏஜண்டுகளுக்கு நோட்டீஸ் மூலம் முன்பே தெரிவிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட நாளில், பகிரங்கட ரகப் படிக்கப்படும்.

பகுதி 59.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு, அவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளைக் கட்டுப்படுத்தும் பலம் உண்டு. அப்பலத்தை அக் குறிப்பிட்ட வழக்கில்தான் செலுத்த முடியுமே தவிர, வேறு வழிகளில் அந்நாடுகளைக் கட்டுப்படுத்த முடியாது.

பகுதி 60.

இந்த முடிவே கடைசி முடிவாகும். இதற்கு ‘மேல் விசாரணை’ (Appeal) கிடையாது. தீர்ப்பின் வாசகங்களின் அர்த்தமோ, சொற்களோ பற்றி சச்சரவு எழுந்தால், சம்பந்தப்பட்ட கட்சிகளில் எது வேண்டிக்கொண்டபோதிலும். நீதிமன்றம் அது பற்றி ஆராய்ச்சி செய்யும்.

பகுதி 61.

1. ஒரு தீர்ப்பை மாற்ற வேண்டும் என்று ஒரு நாடு விரும்பினுல் அது உடனே ஒரு மனுவை சமர்ப்பிக்க வேண்டும். அம்மாதிரி செய்வதற்கு சில விதிகள் உண்டு. ஏதாவது புதியதொரு விஷயம் கண்டுபிடிக்கப்பட்டு, அதனுல் வழக்கின் முடிவே மாறிவிடும் என்று தெரிந்தால்மட்டுமே மனுச் செய்யலாம். மேலும் அப்புதிய விஷயம், நீதிமன்றம் தன் தீர்ப்பை வெளியிட்டபோது, நீதிமன்றத்திற்கோ அல்லது தீர்ப்பை மாற்ற வேண்டும் என்று கோரும் கட்சிக்கோ, தெரியாமல் இருந்திருக்க வேண்டும். மேலும் அது, அக்கட்சியின் அஜாக்கிரதையினுல் தவறவிடப்பட்டதாய் இருக்கக்கூடாது.

2. ஒரு புதிய விஷயம் வெளியாகியிருப்பதையும் அச்சம்பவத்தினுல் நீதிமன்றத்தின் தீர்ப்பே மாறிப் போவதற்கு சந்தர்ப்பமிருக்கிறதென்றும், அதனுல் அந்த நாடு செய்திருக்கும் மனு ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்றும் நீதிமன்றம் முடிவு செய்த பிறகே, மறு விசாரணைக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

3. தான் முதலில் அளித்த தீர்ப்பை அமுல் நடத்த நீதிமன்றம் விரும்பினுல் அம்மாதிரியே செய்யும். அதன் பிறகே மறு விசாரணை ஆரம்பமாகும்.

4. மறு விசாரணைக்கு செய்யும் விண்ணப்பங்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்கள் தெரிந்த தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் செய்யவேண்டும்.

5. தீர்ப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து வருஷங்கள் கழித்துச் செய்யப்படும் மறு விசாரணைக்கான விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாது.

பகுதி 62.

1. ஒரு வழக்கில் அளிக்கப்படும் தீர்மானம், தன்னுடைய நாட்டின் பொது நலன்களுக்குப் பாதகம் விளைவிக்கும் என்று ஒரு நாடு கருதினுல், தன்னையும் அவ்வழக்கில் அனுமதிக்க வேண்டும் என்று நீதிமன்றத்திடம் ஒரு கோரிக்கையை அது சமர்ப்பிக்கலாம்.

2. இக்கோரிக்கையைப் பற்றி நீதிமன்றமே முடிவான தீர்மானத்தைச் செய்யும்.

பகுதி 63.

1. வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகள் அல்லாது, வேறு சில நாடுகளுக்கும் அவ்வழக்கில் வரும் பிரச்னைகளில் தொடர்புண்டு என்று தெரிந்தால், அந்த நாடுகளுக்கும் ரிஜிஸ்ட்ரார் உடனே செய்தி அனுப்புவார்.

2. அம்மாதிரி செய்தி அனுப்பப்பட்ட நாடுகள், அவ்வழக்குகளில் கலந்து கொள்ளலாம். அவ்வாறு கலந்து கொண்ட நாடுகளையும், அவ்வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பு கட்டுப்படுத்தும்.

பகுதி 64.

நீதிமன்றம் வேறு விதமாகத் தன் தீர்ப்பில் குறிப்பிடாத போது, தங்கள் தங்கள் செலவுகளை ஒவ்வொரு கட்சியினரும் தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்தியாயம் 4

ஆலோசனைகள்

பகுதி 65.

1. ஐக்கிய நாடுகள் சாஸனத்தில் சொல்லியுள்ளபடி அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளபடி, ஒரு வேண்டுகோளைச் செய்துகொள்ளும் உரிமையுள்ள எந்த ஸ்தாபனமும், சட்ட சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றி நீதிமன்றத்திடம் ஆலோசனைகளைக் கேட்கலாம். நீதிமன்றம் அவைகளை ஆலோசித்துத் தன் முடிவுகளை தெரிவிக்கலாம்.

2. எவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனை வேண்டுமோ, அதை சுருக்கமாக எழுதி, அதனுடன் சம்பந்தமுள்ள இதர பத்திரங்களையும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

பகுதி 66.

1. ஆலோசனைக்காக ஒரு வேண்டுகோள் நீதிமன்றத்திடம் வந்தவுடன், நீதிமன்றத்தில் பிரசன்னமாகி வழக்காட உரிமையுள்ள எல்லா நாடுகளுக்கும் ரிஜிஸ்ட்ரார் நோட்டீஸ் கொடுப்பார் (அறிக்கை அனுப்புவார்).

2. மேலும், நீதிமன்றத்திற்கு வந்து அவ்விஷயம் பற்றி உபயோகமான செய்திகளைக் கூறும் என்று கருதப்படும் ஒரு

நாட்டிற்கோ, அல்லது சர்வதேச ஸ்தாபனத்திற்கோ, விசேஷ செய்தியொன்றை நேரடியாக ரிஜிஸ்ட்ரார் அனுப்புவார். அதில் அவ்விஷயம்பற்றி குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் எழுத்து மூலமாக அதனுடைய அபிப்பிராயங்களை ரிஜிஸ்ட்ராருக்கு அனுப் பலாம் என்றும், அல்லது அவ்விஷயம் பற்றி நடக்கும் ஒரு பொது விசாரணையில் அது தன்னுடைய அபிப்பிராயங்களைக் கூறினுல் கேட்கத் தயாராயிருப்பதாயும் எழுதுவார்.

3. அம்மாதிரி நீதிமன்றத்திற்கு வந்து வாதிக்க உரிமை யுள்ள ஒரு நாட்டிற்கு, இப்பகுதியில் இரண்டாம் பாராவில் குறிப்பிட்டுள்ள ரிஜிஸ்ட்ராரின் விசேஷ செய்தி கிடைக்காது போனுல், அந்த நாடு வலுவிலேயே நீதிமன்றத்திற்குத் தன்னை அனுமதிக்கும்படியும் தன் வாதங்களைக் கேட்கும்படியும் எழுத்து மூலமாகத் தெரிவிக்கலாம். அதன் பிறகு நீதிமன்றம் அந்நாட்டை அனுமதிப்பதுபற்றி முடிவு செய்யும்.

4. மேற் சொல்லிய முறைகளில் தங்கள் வாதங்களைச் சொல்ல அனுமதியளிக்கப்பட்ட நாடுகளும் ஸ்தாபனங்களும், மற்ற நாடுகளும் ஸ்தாபனங்களும் வெளியிட்டுள்ள விஷ யங்கள்மீது, நீதிமன்றமோ அல்லது தலைவரோ குறிப் பிடும் ஒரு காலத்திற்குள், தங்களுடைய அபிப்பிராயங்களை யும் எண்ணங்களையும் வெளியிடலாம். அதற்கான திட்டங்கள் ஒவ்வொரு வழக்கைப் பொறுத்தும் நிர்ணயிக்கப்படும். அதன் பிறகு, சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும், மேல் சொல்லிய அபிப்பிராயங்களை ரிஜிஸ்ட்ரார் அனுப்புவார்.

பகுதி 67.

தலைமைக்காரியதரிசிக்கும், ஐக்கிய நாடுகளின் அங்கத்தினர் களின் பிரதிநிதிகளுக்கும், மற்ற நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட சர்வதேச ஸ்தாபனங்களுக்கும், முன் கூட்டியே அறிவித்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட தினத்தில், எல் லோர் முன்னிலையிலும், நீதிமன்றம் தன்னுடைய எண்ணங்களை வெளியிடும்.

பகுதி 68.

தன் முன்வரும் வழக்குகளுக்கு இச்சாஸனத்தில் சொல்லியுள்ள ஷரத்துகள் எவ்வளவு தூரம் பொருந்துமோ, அவ்வளவு தூரம் பொருத்தி, அவைகளை, நீதிமன்றம் முடிவு செய்யும். இவ்வாறே அது தன் காரியங்களைச் செய்யும்.

அத்தியாயம் 5

திருத்தம்

பகுதி 69.

ஐக்கிய நாடுகளின் சாஸனத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்றால் எம்முறையைக் கையாள வேண்டுமோ, அதே முறையில்தான் இந்த சாஸனத்திற்கான திருத்தங்களும் கொண்டு வரப்படவேண்டும். மேலும், ஐக்கிய நாடுகளில் அங்கத்தினர்களாயிராமல், இச்சாஸனத்தில் மட்டும் கையெழுத்திட்டுள்ள நாடுகள இதில் பங்கெடுத்துக் கொள்ளும் முறை பற்றி, பாதுகாப்புக் கௌன்ஸிலின் சிபார்சின் பேரில், பொதுச் சபை ஏற்படுத்தும் விதிகளுக்குட்பட்டே, திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும்.

பகுதி 70.

இச்சாஸனத்திற்கு அவசியமான திருத்தங்களென்று தான் கருதுபவற்றை நீதிமன்றம் கொண்டுவரலாம். அவைகளை ஆலோசிப்பதற்காக, 69-ம் பகுதியில் சொல்லியுள்ள விதிகளுக்கு உட்பட்டு, தலைமைக்காரியதரிசிக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.